உ
சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

## சைவப்புலவர் பொன்மலர்

# சைவநாதம்



## அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்

**1960 - 2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்விழா பொலிவுற
வாழ்த்துகிறோம்...



# Vathsala Trade Center

வத்சலா டிரேட் செண்டர் වත්සලා ට්‍රේඩ් සෙන්ටර්

**Silver Merchants**

182, Sea Street, Colombo-11, Tel/Fax : 2471421
E-mail. Vathsala182@sltnet.lk

Sipping, Aircargo and Door Deliveries can also be arranged

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் நூலகத்துக்கு அன்பளிப்பு
சைவப் புலவர் சி. நந்தகுமார்
(உரும்பிராய் நந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

## சைவப்புலவர் பொன்மலர்

# சைவ நாதம்



அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்
பொன்விழா வெளியீடு 1960 - 2010

**03.10.2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

சைவப் புலவர்கள் சங்கத்தை உருவாக்கி;

அதன் மூலம்

சைவநல் அறிஞர்களாய்ப் புலவர்களை உருவாக்கி;

அவர் மூலம்

சைவப் பணிசிறக்கத் தம்முழைப்பை உரமாக்கிச்

சங்கத்தை உயரவைத்த சான்றோர்கள் அனைவர்க்கும்

சைவப்புலவர் பொன்மலர்

## சைவ நாதம்

சமர்ப்பணமாகும்.

❀ ❀ ❀

கொழும்பு பொன்விழாக் குழுவினர்

**சைவப்புலவர் சு. செல்லத்துரை**

தேர்வுச் செயலாளர்

**சிவத்திரு. க. ஜெகதீசன்**

உப. தலைவர் - கொழும்பு விவேகானந்த சபை

**சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள்**

(தலைவர் - இந்துக்குருமார் அமைப்பு)

**திரு. செல்லையா நவநீதகுமார்**

(திருவாவடுதுறை ஆதீனச் சமயப்பரப்புநர்)

**திரு. தி. சி. அமிர்தலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவநாத ஒலி

## மலர் ஆசிரியர்

### சைவப்புலவர், கலாபூஷணம் சு.செல்லத்துரை

(சங்கத் தேர்வுச் செயலாளர்)



இன்று எமது சமயவாழ்வு மயக்கம் நிறைந்ததாக இருப்பதைப் பலரும் சுட்டிக் காட்டுகின்றார்கள். எங்கள் சமயத்தின் பெயர் என்ன? எங்கள் சமயத்தின் முழுமுதற்கடவுள் யார்? அவரை வணங்கும் முறை எது? நாம் வாழ வேண்டிய வகை என்ன? என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியாதவர்களாக நம்மிற்பலர் திகைப்படைகின்றார்கள்.

மாணிக்கவாசக சுவாமிகள் இப்படியான நிலை முன்பும் இருந்ததைச் சுட்டிக்காட்டித் தன்திருவாசகத்தின் மூலம் தெளிவை ஏற்படுத்தினார். அந்தத் திருவாசகத்தைப் போற்றும் பலர் கூட மயக்கம் தெளியாதவர்களாக இன்றும் இருக்கிறார்கள்.

அவர் போற்றித் திருவகவலில் -

"ஆத்தமானார் அயலவர் கட்டி
**நாத்திகம்** பேசி நாத்தழும் பேறினர்

மிண்டிய **மாயாவாதம்** என்னும்
சண்டமாருதம் சுழித்தடித்து ஆர்த்து
**உலோகாயத**மெனும் ஒண்திறற்பாம்பின்
கலாபேதத்த கடுவிடம் எய்தி..........

என நாத்திகமும், மாயாவாதமும், உலோகாயதமும் மக்கள் வாழ்க்கையில் தாண்டவம் ஆடி அலைக்கழிப்பதாகச் சொல்கிறார். இன்று அந்த நிலை மேலும் அதிகரித்திருப்பதைக் காண்கின்றோம்.

இந்த நிலையில்தான் நமது மன்னோடிகளான சைவச் சான்றோர்கள் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு சைவப்புலவர் சங்கத்தை உருவாக்கினார்கள். சைவ அறிவு விளக்கம் உடையவர்களான சைவப்புலவர்களை உருவாக்கி, அவர்கள் மூலம் நம்மவர்களுக்குச் சைவசித்தாந்த சமய அறிவை ஊட்டி, சைவ ஆசாரமான வாழ்வுக்கு வழிகாட்டி, சிவவழிபாட்டுக்கு நெறிப்படுத்தி, நாத்திக, மாயாவாத, உலோகாயத மயக்கத்தைப் போக்கி, மேன்மை கொள்சைவநீதியை உலகமெல்லாம் விளங்க வைக்க இச்சங்கம் ஓயாது உழைத்துக் கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ வாழ்வும், சைவ சமயப் புலமையும் உடையவர்கள் சைவப்புலவர்கள். இத்தகு சைவப்புலவர்களை மட்டும் அங்கத்தவர்களாகக் கொண்டதே சைவப்புலவர் சங்கம்.

பொன்விழா ஆண்டில் **சென்ற காலத்தின் பழுதிலாத் திறத்தையும், இனி எதிர்காலத்தின் சிறப்பையும்** காட்டும் வகையில் **"சைவ நாதம்"** எனும் சைவப் புலவர்பொன்மலர் ஓங்கி ஒலித்து உதயமாகிறது.

இங்கு சிவபெருமானின் பஞ்சமுக நாதம் போல ஐந்து நாதங்கள் ஒலிக்கின்றன. வாழ்த்தியல் நாதம். வரலாற்று நாதம், தத்துவநாதம், தோத்திரநாதம், வாழ்வியல் நாதம் எனும் ஐந்து நாதமும் ஒன்று கலந்து **சைவ நாதமாய்** உங்கள் முன் ஒலிக்கின்றன.

**வாழ்த்தியல் நாதத்தில்** அருளாளர்கள், சைவச் சான்றோர்களின் வாழ்த்துக்கள் ஒலிக்கின்றன.

**வரலாற்று நாதத்தில்** சைவப்புலவர் சங்கத்தின் ஐம்பது ஆண்டு காலப்பணிகள், சங்கத்தால் உருவாக்கப்பட்ட சைவப்புலவர்களின் அறிமுகம், இலங்கையில் சைவ சித்தாந்தப் பயிர் வளர்த்த சான்றோர்களின் வரலாறுகள் ஒலிக்கின்றன.

**தத்துவநாதத்தில்** சைவத்தின் தொன்மையும், செம்மையும், மேன்மையும், சைவசித்தாந்தத்தின் தனிப்பெரும் தலைமையும் தக்க நல்லறிஞர்களின் சிந்தனைத் தெளிவாக ஒலிக்கின்றன.

**தோத்திர நாதத்தில்** சைவ இலக்கியங்களாய திருமுறைகள், புராணங்கள், காப்பியங்களில் செறிந்து, தெளிந்து கிடக்கும் சைவசித்தாந்தக் கொள்கை விளக்கங்கள் சால்புடைய அறிஞர்கள் மூலம் ஒலிக்கின்றன.

**வாழ்வியல் நாதத்தில்** சைவ சித்தாந்த முத்திக்குரியதான சைவப் பண்பாட்டுச் செந்நெறியில் வாழும் வழிகள் வகைவகையாய் ஒலிக்கின்றன.

மாணவர்கள், பொதுமக்கள், அறிஞர்கள் ஆகிய பல படித்தரங்களில் உள்ளவர்களுக்கும் பயன் தரத்தக்கதான பலதரப்பட்ட படைப்புக்கள் இதில் ஒலிக்கின்றன. எல்லோர்க்கும் இனிதான **நாதத்தை** இதில் அனுபவிக்கலாம்.

ஓம் எனும் பிரணவ நாதமே இந்த உலகத்தை இயக்கிக் கொண்டிருப்பது போல ஓம் என்பதையே மூலமுதலாகக் கொண்ட சைவ சமயத்தவர்க்கு இச் சைவ நாதம் பயன்தரும் என நம்புகிறோம்.

தங்கள் சிந்தனை நாதங்களை எல்லாம் திரட்டித் தந்து **சைவநாதத்தை** ஒலிக்க வைத்த படைப்பாளிகள் எல்லோர்க்கும் சிவனருள் சித்திக்குமாக.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரிடமிருந்து வரும்...

**சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் மு. திருஞானசம்பந்தபிள்ளை**

(சங்கத் தலைவர்)



''பொன்விழா'' ஐம்பது ஆண்டு நிறைவில் நிகழ்வது, அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் ஆரம்பித்து இவ்வாண்டு ஐம்பது வருடங்கள் பணியாற்றிய நிறைவில் ''பொன்விழா'' எடுக்கத் தீர்மானித்து அதற்கமையப் பல்வேறு நிகழ்வுகளை ஒழுங்குசெய்து சிறப்புற ஆற்றுப் படுத்துகின்றது.

பாடசாலை மாணவர்களிடையே பேச்சு, வினாடிவினா, பஞ்சபுராணம் ஓதல், கதாப்பிரசங்கம், அபிநய நடனம், புராணபடனம், இசை நாடகம் என்பவற்றில் சைவ சமயக் கலைப் போட்டிகளை நடத்தி, வெற்றியீட்டிய முதனிலை மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்குகின்றோம்.

ஆண்டுதோறும் சங்கத்தால் நடத்தப்பெறும் தேர்வுகளில் சித்தியடைந்த இளஞ் சைவப்புலவர், சைவப்புலவர்களுக்குச் சைவப்புலவர் மகாநாட்டின் போது பட்டமளித்து பரிசளிப்பு வழங்கும் முறையில் இவ்வாண்டு நடைபெறும் மகாநாட்டில் 2009ம் 2010ம் ஆண்டுகளில் சித்தியடைந்த முப்பத்திருவர்களுக்குப் பட்டமளிப்பும் பரிசில்களும் வழங்கப் பெறுகின்றன.

மகாநாட்டிலே கருத்தரங்கு நிகழ்வதோடு, பாடசாலை மாணவர்களிடையே நடத்தப் பெற்ற சைவ சமயக் கலைப் போட்டிகளுள் முதன்மை நிலை பெற்றவர்கள் விருதுகள் சான்றிதழ் பரிசில்களைப் பெறுகின்றனர்.

பொன்விழா ஆண்டினை முன்னிட்டு அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தால், தேர்வுக்குரிய பாடத்திட்டத்திலமைந்த சாத்திர நூல்களுள் ஒரு பிரிவிற்குரியவற்றை சைவ **சித்தாந்த சாத்திரங்கள்** என்று தொகுத்து வெளியிட்டுள்ளோம்.

மேலும் ''சைவப்புலவன்'' என்ற இதழினை கடந்த 2010.08.19ந் திகதி வியாழக்கிழமை மாலை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் வெளியீடு செய்துள்ளோம்.

கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் 2010.10.03ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் ஐம்பதாவது மகாநாடு, பட்டமளிப்பு விழாவினைக், காலை மாலை இரு அமர்வுகளாக நடத்தத் தீர்மானித்து, காலையில் சைவப்புலவர் **வித்துவான் வ. செல்லையா அரங்கில்** சைவப்புலவர் பட்டமளிப்பும், பொன்விழா மலர் ''சைவ நாதம்'' வெளியீடும் நடைபெறுகின்றது. மாலையில் **''சைவப்புலவர்மணி கா. அருணாசலதேசிகர்''**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரங்கில்** கருத்தரங்கும் சைவ சமயக் கலைப் போட்டிகளுள் வெற்றி பெற்றோர் நிகழ்ச்சிகளும் அவர்க்குரிய பரிசளிப்பும் இடம்பெறும்.

இதே போன்ற விழாக்கள் ஜேர்மனியில் 2010.10.24ந் திகதியும் இலண்டனில் 2010.11.07ந் திகதியும் நடைபெறவுள்ளன.

பொன்விழா மலராகிய **"சைவநாதம்"** கடந்த ஐம்பது ஆண்டுகளில் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் ஆற்றிய குறிப்பிடத்தக்க சில பணிகளையும் சாதனைகளையும் அவற்றுக்குப் பேருதவி புரிந்த பெரியோர்களையும் எமக்கு ஒருவாறு வெளிப்படுத்திக் காட்டும் நாதமாக, ஒலியின் குறியீடாக அமையும் என்பது எமது நம்பிக்கை.

இன்றைய – எதிர்காலச் சமூகம் எம்முன்னோர்களாகிய மாண்புறு சான்றோர்கள் எம்மை வழிப்படுத்திச் செந்நெறி ஒழுகச் செய்த சீர்மையினை அறிவதன் மூலமே நாங்களும் அவ்வழி ஒழுகாநின்று எதிர் காலத்தினருக்கு நிதர்சன முன்னோடிகளாக விளங்குவர் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதே.

"சைவ நாதம்" சங்கத்தின் வரலாற்றையும் பணியையும் மாத்திரம் ஒலிக்கவில்லை. சைவசமயத்தின் அருமையையும் பெருமையையும், தொன்மைச்சிறப்பினையும், பழமைக்குப் பழமையாகவும் புதுமைக்குப் புதுமையாகவும் விளங்கும் ஆன்றவிந்தடங்கிய கொள்கைத் திறத்தினையும் நுண்மாண் நுழைபுலப் பேரறிஞர் பலரின் அகத்தடங்கிய மெய்யுணர்வுகளையும் வெளியிடும் நாத ஒலிச்சாதனமாகவும் மிளிர்கின்றது.

எவர்க்கும் உள்நுழைந்து பார்க்கும் போதும், செவிப்புலனாகக் கேட்கும் போதும் தெவிட்டாமல் இனிக்கும் பல ஓசை, ஒலிகளை உள்ளடக்கியதே இச் "சைவ நாதம்"

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத் தேர்வுச்செயலர் கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் பதிப்பாசிரியராக இருந்து, பன்னாள் முயன்று, நாதஒலிகளை ஒருங்கு சேர்த்து, ஒழுங்குபடுத்தி அமைத்த **"சைவ நாதம்"** எல்லோர் செவிப்புலனூடாகச் சென்று உயிர்க்கு உறுதி பயக்கும் என்பது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

"சைவ நாதம்" வெளிப்படுவதற்கு முன்னின்றுழைத்த மலர் ஆசிரியர், அறிஞர் பெருமக்கள், பதிப்பகத்தார், பயனுறும் சைவப்பெருமக்கள் அனைவருக்கும் சைவப்புலவர் சங்கத்தின் நன்றியும் பாராட்டுகளும் உரித்தாகுக.

"மேன்மைகொள்சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**சைவப்புலவர் சித்தாந்தபண்டிதர் மு. திருஞானசம்பந்தபிள்ளை**
தலைவர் அகில இலங்கைச் சைவப்புலவர்சங்கம் 153, கே கே எஸ் வீதி, கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


சைவநாத ஒலி - மலராசிரியர் 03
தலைவரிடமிருந்து - சங்கத் தலைவர் 05

**வாழ்த்தியல் நாதம்**

1. அருள் வாழ்த்துரை - திருவாவடுதுறை ஆதீனம் 11
2. பணிசெய்து பல்லாண்டு வாழ்க - நல்லை ஆதீனம் 12
3. சிவமணம் கமழ்க - சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் 13
5. நல்வாழ்த்து - சாந்தி நாவுக்கரசன் 16
6. செஞ்சொற் செல்வரின் வாழ்த்துரை - ஆறு. திருமுருகன் 17
7. மலிவளம் சிறக்க - பத்தினியம்மா திலகநாயகம் 18
8. தேமதுரச் சைவநாதம் தித்திக்க - சி. அப்புத்துரை 21
9. பொன்விழா பொலிந்து... - இ. செல்லத்தரை 22
10. தாயகப் பணிபோல் புலத்திலும் பொழிக - செ. நாவரசன் 24

**வரலாற்று நாதம்**

1. அகில இலங்கைச் சைவப்புலவர் சங்க வரலாறு 27
2. சைவப்புலவர்கள் விபர அறிமுகக் குறிப்புக்கள் 45
3. சைவப்புலவர் தேர்வு கடல் கடந்த முதல் யாழ்ப்பாணத் தேர்வாக... 79
ஆய்வாளர், ஆசிரியர் சு.யோ. பற்றிமாகரன் B.A.M.A.
4. இலங்கைத் திருநாடும் திருவாவடுதுறை ஆதீனமும் 83
திரு. செல்லையா நவநீதகுமார்
5. ஈழத்திருநாட்டில் சைவசித்தாந்தப் பயிர்வளர்த்த சான்றோர் சிலர் 86
சிவத்திரு. கா. சிவபாலன் - துர்க்கா தேவஸ்தானம்

**தத்துவ நாதம்**

1. மேன்மைகொள் சைவசமயம் 93
பேராசிரியர், கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்
2. கல்விச் செயல்முறையும் சைவசித்தாந்தக் கருத்தியலின் வளர்ச்சியும் 99
பேராசிரியர் சபா. ஜெயராசா
3. மூவகை ஞானம் 104
சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை
4. அந்தக் கரணங்கள் 109
திரு. ந. சிவபாலகணேசன் B.A.M.A. (சைவசித்தாந்தம்)
5. முத்தியும் முத்திதரும் சிவத்தலங்களும் 115
டாக்டர் ஜெயமனோகரன் M.B.B.S - M.S. FRCS
6. சிவாகமங்களின் சாரம் சைவசித்தாந்தம் 126
சைவப்புலவர் சு. துஷ்யந் B.A., M.A.
7. முதல் தேவாரமும் முதல் சூத்திரமும் 129
சைவப்புலவர் சு. செல்லத்துரை
8. நடராசப் பெருமானின் ஆடல் உணர்த்தும் தத்துவம் 133
சைவப்புலவர் சா. தில்லைநாதன்
9. ஆலய அமைப்பு 138
சைவப்புலவர் தயாளினி செந்தில்நாதன் B.A.M.A.
10. திருக்குறளில் சைவசித்தாந்தம் 142
சைவப்புலவர் அ. அரன்மகன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோத்திர நாதம்


1. சைவம் வளர்க்கும் புராண படனக்கலை 147
சைவப்புலவர் சி. வேலாயுதம்
2. பெரியபுராண சூசனம் 151
சைவப்புலவர் கு. றஜீபன் B.A.M.A. (சைவ சித்தாந்தம்)
3. இறையனுபவ இன்பத்திருவாசகம் 154
சைவப்புலவர் வைரவன் கோகுலன் - ஜேர்மனி
4. சித்தர் நெறி நின்று நாமும் நலம் பெறுவோம் 159
சைவப்புலவர் சி. தங்கரத்தினராசா B.A. ஜேர்மனி
5. முருக வழிபாட்டில் சைவசித்தாந்தம் 165
இளஞ்சைவப்புலவர் ஞா. சிவானந்தஜோதி
6. திருவாசகத்தில் அச்சோப்பதிகம் 171
சைவப்புலவர் சந்திரா கோகிலன் - ஜேர்மனி


## வாழ்வியல் நாதம்


1. சைவப்புலவர் கடன் இதுவே 175
பேராசிரியர் இ. குமாரவடிவேல்
2. சைவ விழுமியங்கள் 181
கலாநிதி கு. சோமசுந்தரம்
3. சமய தீட்சை பெற்றுச் சைவ சமயத்தவராக வாழ்வோம் 190
சைவப்புலவர் ஆனந்தி ஜெயரட்ணம் B.A.
4. சிலப்பதிகாரம் புலப்படுத்தும் சைவநெறி 192
டாக்டர் மா. வேதநாதன் M.A.Ph.D
5. சிவநெறி வழிவந்த கவினுறு கலைகள் 198
சைவப்புலவர் கலைமாமணி பொன். தெய்வேந்திரன்
6. இடபக்கொடியே சைவக்கொடி 200
விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா
7. சோதிடம் 205
சைவப்புலவர் கோ. சொ. கோவிந்தராஜன்
8. மலையகத்தில் சைவசமயம் 206
சைவப்புலவர் சு. தேவமனோகரன் B.A. M.A.M.Ed
9. புலத்தில் சித்தாந்த நெறி நிற்போம் 208
சைவப்புலவர் ஜோ. விஜயதர்சினி, இலண்டன்
10. சைவவாழ்வு வாழ்வோம் 213
சைவப்புலவர் கந்த சத்தியதாசன் B.A.M.A.


## பின் இணைப்பு


1. சங்கம் வளர்த்த சான்றோர்கள் 216
2. சங்கம் கௌரவித்த சான்றோர்கள் 217
3. சங்க அமைப்பு விதிகள் 218
4. பரீட்சைகளும் பாடத்திட்டமும் 220
5. தேர்வு விண்ணப்பப் படிவம் 224
6. பொன்விழாவில் பட்டம் பெறுவோர் 225
7. பொன்விழாப் போட்டிகளில் பரிசு பெற்றோர். 227
8. பொன்விழா நிகழ்ச்சி நிரல் 228





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்தியல் நாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருத்தாண்டகம்

முந்தைகாண், மூவரினும் முதலா னான்காண்,
மூவிலைவேல் மூர்த்திகாண், முருக வேட்குத்
தந்தைகாண், தண்கடமா முகத்தி னாற்குத்
தாதைகாண், தாழ்ந்தடியே வணங்கு வார்க்குச்
சிந்தைகாண், சிந்தாத சித்தத் தார்க்குச்
சிவனவன்காண், செங்கண்மால் விடையொன் றேறும்
எந்தைகாண், எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண், அவனென் எண்ணத் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
His Holiness Thirukayilaya Parambarai
23rd Guru Maha Sannidhanam Sri-La-Sri
**Sivaprakasa Desika Paramacharya Swamigal**
Aadheenakarthar, Thiruvavaduthurai Aadheenam
**THIRUVAVADUTHURAI - 609 803, NAGAI DISTRICT 04364 - 232021**





# அருள் வாழ்த்துரை

**சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

(தலைவர்) - திருவாவடுதுறை ஆதீனம்



சம்பந்தர் நாவரசர் பாற்கண்டோம் சார்ந்துவப்ப
தம்பிரிவின் உள்ளுவதுஞ் சோமேசா – நம்பி
உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில் ~சோமேசர் முதுமொழி வெண்பா~40

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் பொன்விழாவானது வருகின்ற 03.10.2010 அன்று கொழும்பு நகரில் சிறப்புற நடைபெற உள்ளமை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

**கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்** என்னும் குறள் வாக்கிற்கு இணங்கச் சிவபெருமானுடைய திருவருள் விளக்கமாகத் திகழக்கூடிய நூல்களை அவசியம் பயிலவேண்டும். அதன்பொருட்டுத் தமிழறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இந்த உயரிய நோக்கில் சைவ சித்தாந்த வகுப்புகளையும், தேர்வுகளையும் நடத்திப் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கிச் சீரிய முறையில் பணியாற்றிவரும் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் பணிகள் பாராட்டுக்குரியன. இந்த பொன்விழாவானது எதிர்காலத்தில் இன்னும் திறம்படச் செயலாற்றும் வல்லமையினை ஊட்டும்.

சிறந்த சிவநேயச் செய்திகளைத் தாங்கிச் சைவக் களஞ்சியமாக வெளிவரும் பொன்விழா மலரை மக்கள் பயன்கொள்ள வேண்டும்.

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் பணிகள் மேன்மேலும் சிறப்புற்றுத் தழைக்கவும். எங்கும் அரன்நாமமே சூழ்ந்து வையகம் துயர்தீர்ந்து நிம்மதியும் மகிழ்ச்சியும் நிலைக்கவும் வேண்டி நமது வழிபடுகடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபர் : **ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்
ஆதீன முதல்வர் : **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

## பணிசெய்து பல்லாண்டு வாழ்க

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**

அன்புசார் பெருந்தகையீர்,



அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் இன்று தனது 50வது ஆண்டு பொன்விழாவைக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். 50 ஆண்டுகள் இந்நாட்டில் அனைவரும் சைவ சமய பண்பாட்டுடனும் தமிழ் மொழி நெறியுடனும் வாழ வேண்டும் என்பதற்காகப் பணியாற்றித் தலைநிமிர்ந்து நிற்பது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. நிறைவான சைவப்பாரம்பரியத்துடன் வாழ்ந்த சைவ சமய மக்களால் ஆரம்பிக்கப்பட்ட சங்கம் சைவநல் அறிஞர்களாகச் சைவப் புலவர்களை உருவாக்கிச் சைவப்பணி செய்ய வைத்தல், சிவதீட்சையுடன் சைவ ஆசார அனுட்டானங்களை மக்கள் மத்தியில் நடைமுறைபடுத்தல், சைவத் திருமுறைகளை, சைவ சித்தாந்த சாத்திரங்களைக் கற்பித்துப் போற்றுதல், சைவ மாநாடுகளை நடத்துதல், சைவசமய கலைகளை போற்றி வளர்த்தல். முதலான பணிகளை இவர்களின் வழிநின்று பின்நாளில் ஆற்றிவருகின்ற சைவப்புலவர் சங்கம் இன்று உலகளாவிய ரீதியில் சைவத்தமிழ் மக்களுக்குப் பணியாற்றுவது மகிழ்ச்சியைத் தருவதாகும். இப்புனிதப் பணி தொடர வேண்டும் என்பது அனைவருடைய விருப்பமுமாகும். இப்பணியில் சேவையாற்றிவரும் தலைவர், செயலாளர், தேர்வுச் செயலாளர் அனைவரையும் வாழ்த்துகின்றோம். அனைவருக்கும் இறையருள் கிடைக்க அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

***"என்றும் வேண்டும் இன்ப அன்பு"***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவமணம் கமழ்க....

**கலாநிதி க. வைத்தீஸ்வரக்குருக்கள்**

ஈழத்துச்சிதம்பரம்



மக்கள் அனைவரும் ஒரே படியினராக இல்லை. அவர்கள் வாழும் இடம் அதன் தட்ப வெப்பநிலை என்பவற்றால் ஏற்படும் மாற்றங்கள், அவர்களின் வளர்ச்சி பல்வேறு தரத்தில் இருத்தல் என்பன காரணமாக அவர்கள் அனைவருக்கும் ஒரே சமயம் பயன்படுமாறில்லை. ஆகவே தான் ஒவ்வொரு கருத்தை வலியுறுத்திக் கூறும் பல்வேறு சமயங்கள் அவ்வக்காலத்துக்கு ஏற்றனவாகவும், இடத்துக்கு ஏற்றனவாகவும் தோன்றலாயின.

உலகில் வழங்கும் பல்வேறு சமயங்களும், இனித்தோன்றும் சமயங்கள் உளவேல் அவையும் தன்னுள் அடங்குமாறு அவற்றுக்கெல்லாம் தலைமைத்தாய் விளங்குவது சித்தாந்த சைவம். உண்மைகளை வெறும் நம்பிக்கைக்கு உரியனவாக மட்டும் கூறாமல், ஆராய்ந்து காணும் அறிவுக்கும் பொருத்தமான முறையில் அவற்றைக் கூறி நிறுவுவது இச்சமயம். சமயம் வெறும் குறிகளும் அடையாளங்களுமன்று, சமயம் இவற்றையெல்லாம் கடந்து நிற்பது. குறிகள் அடையாளங்கள் ஒன்றையும் போற்றாமல் சிறந்த சமயி ஆக வாழ முடியும். இவைகள் அனைத்தையும் மேற்கொண்டும் சமய விரோதியாக வாழ முடியும்.

மனித மனத்தின் மாசை அகற்றிப் பண்புடையவனாகவும், ஒழுக்கமுடையவனாகவும், பிறர்க்குப் பயன்படுபவனாகவும் வாழமுற்படுவதே சமய வாழ்க்கையாகும். இதற்கு அப்பால். அனைத்தையும் கடந்து நின்ற ஒன்றைக் ~ கடவுள் என்ற ஒற்றை மனத்தில் ஏற்றுக் கொண்டவனாய் வாழ்பவனே சமயவாதியாவான்.

சைவ சமயத்திற்குரிய நூல்களாகத் தோத்திரம், சாத்திரம் என இரண்டுவகை உண்டு. திருமுறைகளைத் தோத்திரம் என்றும் மெய்கண்ட நூல்களைச் சாத்திரம் (மெய்கண்ட சாத்திரம் ~ சித்தாந்த சாத்திரம்) என்றும் கூறுவது ஆன்றோர் வழக்கு. இவைகள் சைவ சமயத்துக்குக் கண்போன்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறைகள், சிவபெருமானது முழுமுதற்றன்மையையும், அடியவர்களுக்கு அப்பெருமான் அவ்வப்போது தோன்றிச் செய்த பேரருளையும் இனிது விளக்கி அவனிடத்தில் அன்பு விளையச் செய்வன. ஆகவே அவை தோத்திரங்களாகும்.

தோத்திரங்களில் அமைந்திருக்கும் தத்துவக்கொள்கைகளைத் தருக்க அடிப்படையில் வகைப்படுத்திக் கூறுவன சாத்திரங்கள்.

சைவ சமயத்துக்குத் தோத்திரம், சாத்திரம் என்னும் இரண்டும் இரண்டு கண்களாக அமைந்துள்ளன. சிவபிரானார், தோத்திரமாகவும், சாத்திரமாகவும் விளங்குகிறார் என்பது சைவ நூற்றுணிபு.

"அல்லும் பகலுமாய் நின்றார் தாமே ..............OO....................................
தோத்திரமும் சாத்திரமுமானார் தாமே .......................................................
திருவாலங் காடுறையும் செல்வர்தாமே" ..................................................

என்பது அப்பர் சுவாமிகள் தேவாரம்.

திருமுறை என்னும் பெயரில், திரு என்பது சிவத்தையும் சிவனருளையும் அவ்வருளால் எய்தும் பேரின்பத்தையும், முறை என்பது நூலையும் குறிக்குமாதலின், திருமுறை என்பதற்குச் சிவநூல், அருள்நூல், பேரின்பநூல் என்று பொருளுரைப்பதே பொருத்தமான தென்பது சைவநூற் பயிற்சிமிக்க பேரறிஞரின் கருத்தாகும்.

வாழ்க்கைச் சிக்கலில் வீழ்ந்து சுழலும் மக்களுக்கு மனக்கவலை போக்கும் மாமருந்தாகத் திருமுறைகள் விளங்குகின்றன.

வேதம் பசு எனவும், ஆகமம் பால் எனவும், திருமுறை நெய் எனவும் கூறப்படுவது திருமுறைகளின் சிறப்பை எடுத்துக் காட்டும்.

வினை என்பதற்குச் சிறந்த மருந்து திருமுறைகளாகும். **திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்த்தல் எளிதாமே** என்பது சம்பந்தப் பெருமான் திருவாக்கு.

வேண்டுவார் வேண்டுவதை உதவுதலின் திருமுறைகள் கற்பகதருவை நிகர்ப்பன

அற்புதங்கள் பலவற்றை நிகழ்த்திய பெருமையும் திருமுறைகளுக்கு உண்டு.

சைவசமயத்தின் தத்துவக் கொள்கையே சைவ சித்தாந்தம் எனப்படும். இவ்வுலகில் உண்மைத் துறையில் முடிந்த முடிவாக உள்ளது சைவ சித்தாந்தம். சைவ சித்தாந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்துச் சான்றோர்கள் அறிவாராய்ச்சியால் உருவாக்கி வழங்கிய உயர்தனிக் கோட்பாடு. முப்பொருளின் இயல்பு, இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் முதலான பல தலைப்புகளின் கீழ் வைத்துப் பலமேற்கோள்களோடு, பன்னிருதிருமுறை, பதினான்கு சாத்திரங்களின் துணை கொண்டு போதிக்கப்படுவது சைவ சித்தாந்தம்.

சித்தாந்த சாத்திரங்களுக்கு மூலநூல்களாகத் திருமுறைகள் திகழ்கின்றன. ஆகவே தோத்திரத்தையும், சாத்திரத்தையும் கற்பவரே சமயத்தைப் பற்றி நன்கு அறிந்து கொள்ள முடியும்.

இதனைக் கருத்திற்கொண்ட சைவப்புலவர் வித்துவான் வ. செல்லையா, சைவப்புலவர் வித்துவான் ச. சச்சிதானந்தசிவம், சைவப்புலவர் பண்டிதர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, சைவப்புலவர் பண்டிதர் இ. செல்லத்துரை முதலான நல்லறிஞர்களால் நிறுவப்பட்ட அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் ஐம்பது ஆண்டுகளாகச் சோர்வின்றித் திறம்படச் சைவப்பணி செய்து வருவது மிகுந்த பாராட்டுக்குரியது.

இச்சங்கம், திருமுறைகள் சைவசித்தாந்த சாத்திங்களைக் கற்பித்துத் தேர்வு நடத்தி விருது வழங்கி வருகிறது. சைவப்புலவர் விருது பெற்றோர் பலர் இலங்கையின் பலபாகங்களிலும், இலண்டன், ஜெர்மனி, முதலான வெளிநாடுகளிலும் சைவப்பணி செய்து வருகின்றனர்.

கங்கத்தினர் ஆலயங்களில் நிகழ்த்தி வரும் சொற்பொழிவுகளைச் செவிமடுத்தபலர், திருமுறைகளையும், சைவ சித்தாந்த சாத்திரங்களையும் தேடித்தேடி வாங்கிப் படித்து இன்புற்று வருகின்றார்கள் என்பது மிகையாகாது.

யாழ். பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்த பீடம் அமைப்பதற்குக் காரணமாக இச்சங்கமும் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

சைவப்புலவர் சங்கம், பொன்விழாவை நடத்த விருப்பதும், விழா நினைவாக சைவ நாதம் என்னும் மலரொன்று வெளியிடவிருப்பதும் பாரிய மகிழ்ச்சியை உண்டாக்குகிறது. மலர் சிவமணமும் பொருளழகும், தமிழ்ச்சுவையும் பொருந்தித் திகழ வேண்டுமெனக் கூத்தப்பிரானைச் சிந்தித்து என் வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Hindu Religious and Cultural Affairs

# நல்வாழ்த்து

**திருமதி. சாந்தி நாவுக்கரசன்**
பணிப்பாளர், இந்து சமய கலாசாரத் திணைக்களம்



அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் தோற்றம் பெற்று ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு நடைபெறவுள்ள பொன் விழாவிற்கும் அதன் நினைவாக வெளியிடப்படும் சிறப்பு மலருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கையின் சைவசமய வளர்ச்சியில் சைவப்புலவர் சங்கமானது பாரிய தொண்டாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். சிவதீட்சை அளித்தல், திருமுறை வகுப்புக்கள், சித்தாந்த சாத்திர வகுப்புக்களை நாடாத்துதல், சைவ மாநாடுகளை நடாத்துதல், தமிழர் கலைகளைப் போற்றி வளர்த்தல் போன்ற அரிய பணிகளைச் செய்து வருகின்றமை பாராட்டிற்குரியதாகும். இத்தகைய பணிகள் சிறந்த சமய பண்பாடுடைய சமுதாயத்தை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

இச்சங்கத்தின் பணிகள் இலங்கையில் மட்டுமில்லாது உலகின் பல நாடுகளிலும் பரந்து விரிந்துள்ளமை சிறப்புடையதாகும். இவர்களின் பணிகள் மென்மேலும் சிறந்து விளங்கி நூற்றாண்டைக் காணவேண்டுமென மனமார வாழ்த்துகின்றேன்.

இச்சங்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று செயற்பட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் சைவப்புலவர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன், சங்கத்தின் ஐம்பதாண்டு காலப் பூர்த்தியை முன்னிட்டு வெளியிடப்படும் பொன்விழாச் சிறப்பு மலரான சைவநாதம் நல்லாக்கங்கள் அடங்கிய ஓர் தொகுப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

பொன்விழா மிகச்சிறப்பாக நடைபெறுவதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை.

# Sri Durgadevi Devasthanam

*Tellippalai, Sri Lanka. Tel : 0602 - 213151*

## செஞ்சொற்செல்வரின் வாழ்த்துரை

**ஆறு. திருமுருகன்**
தலைவர் - ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை
தலைவர் - சிவபூமி அறக்கட்டளை



ஈழத்திருநாட்டில் சைவமும் தமிழ் மொழியும் நிலைபெற்று வாழ உழைத்தவர்கள் வரிசையில் புலவர்பணி போற்றுதலுக்குரியது. கடந்த ஐம்பது ஆண்டுகளாக சைவப்புலவர் சங்கம் நிலைபெற்று மிளிர உழைத்த உத்தமர்கள் திருவடிக்கு என் இனிய வணக்கங்கள்.

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில் - வள்ளுவர்

கற்றவர் மேன்மையை எடுத்துரைத்த வள்ளுவப் பெருந்தகை இனி இவரை யாம் எங்ஙனம் கூடுதும்? என நினையுமாறு சொல்லாலும் செயலாலும் உறுதி செய்யும் பெரியாரை புலவர் என்று பெருமைப் படுத்தினார், எங்கள் நாட்டில் வாழ்ந்த சைவப்புலவர் பாரம்பரியம் மேற்குறித்த குறளுக்கு இலக்கணமாக நிலைபெற்ற மேன்மை பெருமைக்குரியது. இன்றும் எம்மண்ணில் வாழும் சைவப்புலவர்களின் ஆற்றலும், ஆளுமையும் தனித்துவமானது. ஒழுக்கமும் பண்பாட்டுடையும் சொல்வன்மையும் தொடர்கிறது. பண்டிதர்கள் புலவர்கள் எம்மினத்தின் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய மகத்தான தொண்டு மறக்க முடியாதது. அவ்வகையில் எங்கள் அன்னை, சிவத்தமிழ்ச்செல்வி, சைவப்புலவர் பண்டிதை, தங்கம்மா அப்பாக்குட்டி போன்ற பெருமைக் குரியவர்கள் அணிசெய்த சைவப் புலவர் சங்கம் பொன்விழாக் கண்டு பொலிவு பெறுவது பெருமைக்குரியது. இச்சங்கத்தின் பணிகள் தொடர்வதற்கு அர்ப்பணிப்புடன் அயராது உழைக்கும் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். சைவப்புலவர்கள் திரு. சு. செல்லத்துரை ஐயா திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை ஐயா போன்ற மூத்தோரின் வழிகாட்டலில் இச்சங்கம் தன்பணி தொடர வாழ்த்தி அமைகிறேன். துர்க்காதேவியின் திருவருளால் சைவப் புலவர் சங்கத்தின் பொன்விழா சிறக்கப் பிரார்த்தித்து, இச்சங்கம் சூரியர் சந்திரர் உள்ளவரை நிலைபெற வேண்டி அமைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலிவளம் சிறக்க

சைவப்புலவர் பத்தினியம்மா திலகநாயகம்
மேலதிக அரச அதிபர், ஓய்வு



"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" எனப் பகர்ந்த திருமூலர் அன்பே சிவம் என்றும் ஆணித்தரமாகக் கூறியுள்ளார். சிவம் என்பதற்கு நன்மையைச் செய்வது என்றும் பொருளுண்டு. இந்தச் சிவத்தின் வழி தோன்றியதே சைவம். கடல்கோள் கொண்டதன் முன்னைய தமிழின் தோற்றத்தை அறிய முடியாதது போலச் சைவத்தின் தோற்றத்தை அறிவதும் இலகுவானதல்ல. தமிழ் நாம் பேசும் மொழி. சைவம் நாம் வாழும் வழி. தமிழும் சைவமும் பின்னிப் பிணைந்து இரண்டறக் கலந்தவை. இணை பிரியாதவை, தமிழர் பிறந்தபொழுதே சைவமும் கூடப் பிறந்தது போல, பிறந்ததிலிருந்து வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் சைவம் வாழ்வோடு பிணைந்து வழிநடத்துகின்றது. ஆனால் இடையில் அந்நியர் படையெடுப்பால், அந்நியர் ஆட்சியால் தமிழும் நலிந்தது. சைவமும் நலிந்தது. ஆனால் அவன் அருளாலும், அவன் அடியாராகிய தொண்டர்தம் பெருமையாலும் மீண்டும் இரண்டும் தழைக்கத் தொடங்கின. சைவப் பற்றுள்ள பல பெரியோரின் ஆத்மார்த்தமான முயற்சியாலும், தீரா வேட்கையாலும் அந்நியமோகமும், ஆங்கில மோகமும் தளர்ந்து சைவமும் தமிழும் மீண்டும் புத்துயிர் பெற்றன. இந்தியாவில் சைவப்புலவர், சைவ சித்தாந்தப் புலவர் முதலிய கல்வி முறைகள் இருந்தபோதும் இலங்கையில் பாடசாலை மட்டத்துடனும், விவேகானந்த சபைப் பரீட்சைகளினாலுமே சைவம் போதிக்கப்பட்டது. பரீட்சைகள் நடாத்தப்பட்டது. பரிசில்களும் வழங்கப்பட்டது. எனினும் பாடசாலைக் கல்வித் திட்டங்கட்கு அமையவே பரீட்சைகள் நடாத்தப்பட்டது. பரீட்சைகள் நடாத்தப்பட்டதால் சைவ நெறியை விரிவாக அறியவும், புரியவும் ஆவலுள்ளோர் தம் ஆழ் மனதிலெழும் சந்தேகங்களை, தேடல்களை தணித்துக் கொள்வதற்கு வழியற்று ஏக்கத்துடன் வாழ்ந்தது உண்மையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960ம் ஆண்டு விஜயதசமியன்று இலங்கை வாழ் சைவர்களைப் பொறுத்தவரை ஒரு விசேட முக்கியத்துவமுள்ள நாளாகும். இலங்கையிலே அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் தோன்றிய பொன்னாள் இது தான். இளம் சந்ததியினரின் தேவையும், நன்மையும் கருதி நான்கு சைவப் பெரியார்களான சைவப்புலவர் வித்துவான் வ. செல்லையா, சைவப்புலவர் வித்துவான் ச. சச்சிதானந்தசிவம், சைவப்புலவர், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, சைவப்புலவர் பண்டிதர் இ. செல்லத்துரை ஆகியோர் மனதில் உதித்து நிலையாக ஆரம்பிக்கப்பட்டது தான் இந்தச் சங்கம். அச்சங்கம் தோன்ற முதற்காரணமான அந்நான்கு பெரியார்களையும் சிரம் தாழ்த்தி, வாழ்த்தி அவர்கட்கு நன்றி சொல்ல வேண்டியது நம் தலையாய கடமையாகும். இன்று இச்சங்கம் தளர்வின்றி 50 ஆண்டுகளை நிறைவாகக் கழித்துப் பொன் விழாக் கொண்டாடிப், பொன்மலர் வெளியிடவும் அவர்களே காரணம் என்பதையாரும் மறக்கவோ மறுக்கவோ முடியாது.

சைவப்புலவர் சங்கம் புலவர்களை தோற்றுவிப்பதுடன் மட்டும் நின்று விடாது. மேலும் பல விடயங்களைச் செய்தும், செய்வித்தும் வந்துள்ளது. சைவப் புலவர்கள் கற்றபடி ஒழுகி கற்றதை ஏனையோர்க்கு கற்றுத்தரும் நோக்குடன் சைவ ஆசார அனுட்டானங்களை நடைமுறைப்படுத்தியும் வந்துள்ளனர், பாமர மக்களுக்கு இம்முறைகள் சற்றுக் கடினமாகவே தென்படும். எனவே, மக்களை இலகுவாக இறைவன்பால் ஈர்க்கும் பக்தி மார்க்கத்திலும் வழிநடத்த வேண்டும், ஏனெனில் சிவகோசாரியாரின் ஆசாரங்களை விடக் கண்ணப்பரின் முரட்டுத்தனமான உண்மை அன்புதான் சிவனுக்குப் பிடித்தது. பண்ணோடு பாட முடியாதவர்கட்கு இலகுவாகப் பாடக்கூடிய பஜனைப் பாடல்களைப் பாடவைத்தாவது பக்தியை ஏற்படுத்த வேண்டும். தேவாரம், திருவாசகம், திருமுறைகள் என்பன பண்ணோடு பாட வேண்டியவை. இதனாற்றான் "பண்ணோடிசை பாடல் மறந்தறியேன்" என்று நாயன்மார் பாடியுள்ளனர். திருமுறை முற்றோதுவது உண்மையில் பண்ணோடுதான் பாடி முடிக்க வேண்டும். நம்மில் எத்தனை பேருக்குப் பண்ணோடு பாடத்தெரியும்? பண்ணிசை வகுப்புக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்தப் படவேண்டியது அவசியம். இதனால் தான் இலகுவாகப் பக்தியை ஊட்டும் பஜனைப் பாடல்களையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். இசையினால் பக்தி வளரும். இசை மனிதரை மட்டுமல்ல இறைவனையும் இசைவிக்கும். என்னதான் சமய அறிவு இருந்தாலும் இறைவனைத் துதிக்க மனம் ஒடுங்க வேண்டும். மனதை ஒடுங்க வைப்பதில் இசை முதன்மை பெறுகின்றது.

நிறைவாகக் கடந்த 50 ஆண்டுகளாக இச்சங்கத்தையும் தளரவிடாது தாமும் சோர்வடையாது வழிநடத்தியவர்கள் அத்தனைபேரும் பாராட்டுக்குரியவர்கள். திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும், கருணைபூக்கவும், தீமையைக் காய்க்கவும், பருவமாய் நமது உள்ளம் பழுக்கவும் இனிதே சைவப் புலவர் சங்கம் வளரவும் எல்லாம் வல்ல சிவனை வேண்டுகிறேன்.

கடல்கோள் காரணமாக ஒதுங்கிய அல்லது காவிச் செல்லப்பட்ட தமிழ் சைவ நூல்கள், சைவக் கோவில்கள், சைவச்சின்னங்கள் பல நேபாளம். சுமத்ரா. இந்தோனேசியா, எகிப்து, தென்னாபிரிக்கா போன்ற பலநாடுகளில் இன்றும் காணப்படுகின்றன. இன்று கூடப் புலம் பெயர்ந்த தமிழர்கள் வாழ்கின்ற உலக நாடுகள் அனைத்திலும் சைவக்கோவில்களும், சைவமும் தழைத்தோங்கி வருவது கண்கூடு. சைவத்தால் ஈர்க்கப்பட்ட மேலைத்தேயத்தார் பலர் கீழைத்தேயம் நோக்கிப் படையெடுக்கின்றனர். எனவே எந்நாட்டவர்க்கும் இறைவனான ஈசனிடம் பொன்மலர் மலர்ந்து மணப்பரப்பவேண்டும் என்றும் மேன்மைகொள் சைவ நீதி உலகெலாம் என்றென்றும் நிலைபெற வேண்டுமென்றும் மனமார பிரார்த்தித்துப் பொன்மலரையும் வாழ்த்துகின்றேன்.

**பொன் மலர் வாழ்க!**
**தமிழும் சைவமும் வளர்க!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேமதுரச் சைவநாதம் தித்திக்க

சைவப்புலவர், பண்டிதர், கலாபூஷணம் சி. அப்புத்துரை



### வெண்பா

சைவப் புலவர்கள் சங்கத்தின் பொன்விழா
மெய்யாம் பயன்தந்து மேன்மையுற ~ மெய்யொளிசேர்
தேமதுரச் சைவநாதம் திக்கெல்லாம் தித்திக்க
நாம்வாழ்த்து கின்றோம் நயந்து

முடிந்த முடிவாக மூதறிஞர் சொன்ன
முடிவுசைவ சித்தாந்தம் என்றுநாம் ~ திடமாகச்
சொல்லினிக்கப் பாடிடுவோம் தூயசைவப் புலவர்கள்
எல்லோரும் வாழ்க இனிது.

மெய்கண்ட சாத்திரத்தின் மேன்மை யுணராமல்
பொய்கொண்ட சமயப் புறஞ்செல்வார் ~ உய்திபெற
சித்தாந்தச் செந்நெறியின் செம்மையெலாம் நாமெடுத்து
இத்தரைக்குச் சொல்வோம் இனிது.

### விருத்தம்

சைவப்புலவர் சங்கம் சாதனைகள் பலபடைத்து
சதங்காண வேண்டும் சங்கரனார் அருளோடு
கைவரப் பெற்ற வெற்றி காலத்தில் நிலைக்க வேண்டும்
வையகம் வாழும் சைவத் தமிழர்கள் போற்றவேண்டும்
ஐயங்கள் அகல வேண்டும் அன்பகம் நிறைய வேண்டும்
மெய்யுணர்வோடு தொண்டர் மேன்மேலும் கூடவேண்டும்
பைந்தமிழ்ச் சைவச் சான்றோர் பன்மடங்காக வேண்டும்
சிந்தையில் சிவனின் நாமம் செழித்திட வாழி வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம், பொன்விழா பொலிந்து மலராய்ப் பயன்பெற்று மன்னுக!"

**சைவபூஷணம், சைவப்புலவர்மணி இ. செல்லத்துரை**



## (''சித்திர'' மண்டல ஆசிரியப் பா)

''**அ**ரன்அருள் முன்னால் ஆன்மாத் 'தளை' எலாம்,
''**கிலம்**'' உறச் செய்யுவான், கீழ்இலாப் பிறப்பின்
**இலங்**குயர் மனிதனாய், ஈர்மூன்(று) அறிவால்
**கைச்சித்தி** ஆயினம்! மெச்சுமோர் நாற்பொருட்
**சைவப்** பணிபல, தைவமே தந்தது!!
**புல**மையும் வளர்ந்து பூரித்த தாயினும்...
**வர்**மமும் நமக்குள் வளர்ந்ததே!... வாடினோம்!!
''**சங்**கடம்'' தாமும் சார்ந்தன!~ இத்தகைக்
''**கம்,** பலை'' ''இன்பமும்'' : ''இருவினை'' ~ கலந்ததால்,
''**பொன்**னை உருக்கினும், போற்றுமோர் பொன்போல்''
**விழா**த ''நன்னெறி'' 'விநாயகம்' பெற்றுப்
**பொலிந்**த பெருநெறிப் ''பொலம்'' என நின்று,
**து**,ய்த்தன துய்த்துத், தூய்மையோர் ஆக்கும்
**மலராய,** அவற்றின்: மணமாய், சுவையாய்ப்
**பயன்**தந் தெவர்க்கும் பாதகம் தராமல்,
**பெற்று**யர் கீர்த்தியும், பெட்புமாய் அமைந்த,
''**மன்னு**று சைவப் புலவர் சங்கம்''
''**க**!ற்பகத் தருபோல்'' வாழ்கபல் லாண்டே!!

**வாணியகம், சிறுப்பிட்டி,**
**30.05.2010**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரும் சொற் பொருள்

1. அரன் - சிவபெருமான்
2. முன்னூல் - வேதம், ஆகமம்
3. ஆன்மா - உயிர்
4. 'தளை' - மும்மலக்கட்டு
5. "கிலம்" உற - அழிவு உண்டாக
   செய்யுவான் - செய்யும் பொருட்டு
6. கைச்சித்தி - கைவாசி
7. ஈர்மூன்று அறிவு - ஆறறிவு, அஃது ஆறாம் அறிவு, பகுத்தறிவு
8. தைவம் - கடவுள்
9. புலமை - கல்வி, வித்தாண்மை
10. பூரித்தல் - நிறைதல், உவத்தல்
11. நாற்பொருள் - அறம், பொருள், இன்பம், வீடு
12. வர்மம் - வன்மம், வைராக்கியம், வெறுப்பு, பகை, ஆணவச் செருக்கு
13. சங்கடம் - தொந்தரவு, வருத்தம்
14. சார்ந்தன - அணைவாகச் சேர்ந்து பெற்றன
15. கம்பலை - வருத்தம், துன்பம், அச்சம்
16. இருவினை - நல்வினை, தீவினை ஆகிய இருவினை
17. "பொன்னை உருக்கினும் போற்றுமோர் பொன் போல்"
   - "பொன்னைத் தீயினால் உருக்கிப் பார்த்தாலும், அதிற்சேர்ந்த வேறு பொருள்யாவும் அகன்று அழிந்து ஒழிய, பொன் அழியாமல், தானே நிலைத்து நின்று, போரொளியாய்ச் சிறந்து நிற்பது போல.....
18. விழாத - விழுந்து போகாத
19. "விநாயகம்" - சிறந்த தலைமை
20. பெருநெறி - சைவ நெறி
21. தூய்மை - சுத்தம்
22. பொலம் - அழகு, மேன்மை
23. துய்த்தல் - அனுபவித்தல்
24. துய்த்தன - அனுபவிக்கத்தக்கவை
25. பெட்பு - அன்பு, பெருமை
26. மன்னுறு சைவம் - நிலை பெற்று நிற்கும் நன்நெறி
27. கற்பகத்தரு - நல்லன வேண்டுதற்கு எல்லாம் தரும் மரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

ஐரோப்பிய சிவ நெறிக் கழகம்
SIVA NERI KAZHAGAM - EUROPE

பதிவு இலக்கம் : Uk-6921119
முகவரி : 44, Iphall Road, Ilford, Essex, IG1 2JF,UK
மின்னஞ்சல் : sivaneri@gmail.com தொலைபேசி : 00447529318840

# தாயகப் பணிபோல் புலத்திலும் பொலிக!

**செல்லத்துரை நாவரசன்**
(சைவப்புலவர் சங்க ஐரோப்பிய இணைப்பாளர், ஐரோப்பிய சிவநெறிக் கழகத் தலைவர்)



சைவசித்தாந்தப் பயிர் வளர்த்த பூமி யாழ்ப்பாணம்; ஆதலால் இன்றும் யாழ். மண் சைவகலாசார வாழ்வின் விளைநிலமாகத் திகழ்கிறது. சைவசித்தாந்தக் கல்விப்புலமாகவும் அன்று முதல் இன்று வரை விளங்குகின்றது.

நாவலர் வழிவந்த இப்பாரம்பரியத்திலிருந்து முளைத்தெழுந்ததே சைவப்புலவர் சங்கம், கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஈழத்திருநாட்டில் வன்னி, திருமலை, மட்டக்களப்பு, மலையகம், கொழும்பு முதலாம் சைவர்கள் வாழும் இடங்களில் எல்லாம் சைவசித்தாந்தக் கல்வியை முன்னெடுத்துப் பல சைவப்புலவர்களை உருவாக்கியுள்ளது. அவர்கள் மூலமாகச் சைவச் செந்நெறியை வாழ்வியலாக வளம்படுத்திக் கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே.

ஈழத்தமிழர் புலம் பெயர்ந்து வாழும் ஐரோப்பிய நாடுகளிலும் இந்த வாய்ப்பை ஏற்படுத்தித்தர வேண்டுமெனும் ஐரோப்பிய சிவநெறிக் கழகத்தினரின் வேண்டு கோள் பயனளித்தது. 2007 தொடக்கம் சைவப்புலவர் சங்கத்தினர் இங்கும் தம்பணியை விரிவுபடுத்தினர். இலண்டனிலும், ஜெர்மனியிலும் பல சைவப்புலவர்கள் உருவாகினர். பட்டமளிப்பு விழாக்களும் ஆங்காங்கு நிகழ்த்தப்பட்டன. இப்பணிக்கு விரிவுரையாளர் திரு. சூ. யோ. பற்றிமாகரன் அவர்களின் கற்பித்தலும் வழிகாட்டலும் உறுதுணையாயுள்ளது.

இங்குள்ள மாணவர்களுக்கும் சைவநெறிக் கல்வியை ஊட்டிச் சிவநெறித் தேர்வுகளை நடத்தி ஊக்குவித்து அவர்களை வளர்த்தெடுக்கும் வாய்ப்பும் கைகூடியது. சைவப்புலவர் சங்கம் தூரநோக்குடன் இப்பணிகளுக்குப் பின்புலமாயிருந்து சிவநெறிப் பாடநூலைத் தயாரித்துத் தந்து சிவநெறித் தேர்வுகளை நெறிப்படுத்தி வருகின்றது.

இப்பணிக்கு இங்குள்ள சைவப்பிரமுகர்களும், சிவாசாரியார்களும் நிறுவனங்களும் தோன்றாத்துணையாய் இருக்கின்றனர். சைவப்புலவர் சங்கப்பணிகள் ஈழத்திருநாட்டில் மட்டுமன்றி ஐரோப்பாவிலும் செழித்துவளர்ந்து சைவநெறியை வளம்படுத்துவது கண்டு மனம் பூரிக்கின்றது **தாயகப் பணிபோல் புலத்திலும் பொலிக** எனச் சிவனருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயகுரவர்கள் நால்வர்



சம்பந்தர் அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருந்தாள் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தலைவர்
சைவப்புலவர் வித்துவான்
அமரர் வ. செல்லையா
இளவாலை



செயலாளர்
சைவப்புலவர் வித்துவான்
அமரர் ச. சச்சிதானந்தசிவம்
ஏழாலை



பொருளாளர்
சைவப்புலவர் கலாநிதி
அமரர் தங்கம்மா அப்பாக்குட்டி
மல்லாகம்



உபதலைவர்
சைவப்புலவர் வித்துவான்
அமரர் இ. திருநாவுக்கரசு
இணுவில்

**அகில இலங்கைச் சைவப்புலவர்கள் சங்கத்தை உருவாக்கி வளர்த்த மூத்த சைவப்புலவர்கள்**



உப தலைவர்
சைவப்புலவர் கலாநிதி
அமரர் வ. கந்தசாமி
கந்தர்மடம்



தேர்வுச் செயலாளர்
சைவப்புலவர் பண்டிதர்
இ. செல்லத்துரை
சிறுப்பிட்டி



போஷகர்
சைவப்புலவர்மணி
அமரர் கா.அருணாசலதேசிகமணி
மட்டக்களப்பு



போஷகர்
சைவப்புலவர்மணி
அமரர் த.குமாரசுவாமிப்பிள்ளை
கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அகில இலங்கைச் சைவப்புலவர்கள் சங்கச் செயற் குழுவினர்**

இருப்போர் - இடமிருந்துவலம் :- சைவப்புலவர்கள் திருமதி. பா.மீனலோஜினி, செல்வி. இ.சியாமினி, திரு. வை.சி.சிவசுப்பிரமணியம் (உபதலைவர்) திரு. கந்த சத்தியதாசன் (செயலாளர்) திரு. மு. திருஞானசம்தபிள்ளை (தலைவர்) திரு. சு.செல்லத்துரை (தேர்வுச் செயளாலர்) திரு. ந. புகன்ரீந்திரன், திரு. ஆ.சிவகுமார், திருமதி. ப.உருத்திராதேவி,

நிற்போர் - இடமிருந்துவலம் :- சைவப்புலவர்கள் திரு. கா.கமலநாதன் (பிரசார அமைச்சர்) திரு சு.நித்தியதசீதரன் (உதவித் தேர்வுச் செயளாலர்) திரு. ச.முகுந்தன் (உப செயலாளர்) திரு. வெ.வரதிதாசன், திரு த.குமரன், திரு. கு.சுமுகலிங்கம், திரு. சி.நந்தகுமார் (பொருளாளர்) திரு சா.தில்லைநாதன் (உபதலைவர்) திரு. ந.திருக்குமரன், திருமதி. செ.தயாளினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லைக் குருமகா சன்னிதானம்
சைவப்புலவர் இ. செல்லத்துரை அவர்களுக்கு
"சைவபூசணம்" பட்டம் வழங்கிக் கௌரவித்தல்
1999-12-26



பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள்
பட்டமளிப்புப் பேருரை நிகழ்த்துகின்றார்.
2002-07-22



அதிபர் ந. சிவராசா அவர்கள்
சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்களுக்கு
"சைவபூசணம்" பட்டம் வழங்கிக் கௌரவித்தல்



கலாநிதி மா. வேதநாதன் அவர்கள்
பட்டமளிப்புப் பேருரை நிகழ்த்துகிறார்
2008-02-10



பட்டமளிப்பு
முதன்மை
விருந்தினர்
பேராசிரியர்
சி.குமாரவடிவேல்
நந்திக்கொடி
ஏற்றி வைக்கிறார்
2006-04-23




நாவலர் விழாவில் முதன்மைவிருந்தினர்
கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வன் அவர்கள்
பரிசளிப்புரை நிகழ்த்துகிறார்
2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பட்டமளிப்பு விழாவில் நல்லையாதீன
சுவாமிகளும் பிரமுகர்களும்
2008-02-10



பட்டமளிப்பு விழாவில்
நாவலர் மகா வித்தியாலய அதிபர்
சி. சிவபாதசுந்தரம் தொடக்கவுரை நிகழ்த்துகிறார்.



பட்டமளிப்பு விழாவில் சைவப்பெரியார் ஆ.
சபாரத்தினம் அவர்களுக்கு "சித்தாந்தவித்தகர்"
பட்டமளித்துக் கௌரவித்தல்



இலண்டன் சைவமுன்னேற்றச் சங்க மண்டபத்தில்
நடைபெற்ற பட்டமளிப்பு விழா.
2008-03-28





ஜேர்மனி கும்மர்ஸ்சார்க் குறிஞ்சிக் குமரன்
ஆலய மண்டபத்தில் நடைபெற்ற
பட்டமளிப்பு விழா.
2008-03-27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கைச் சைவப்புலவர் சங்க வரலாறு (1960–2010)

**"சிவமயம்"**

**"கல்லால் நிழல்மலை வில்லாரருளிய**
**பொல்லா ரிணைமலர் நல்லார் புனைவரே"**

சென்னையில் சைவ சித்தாந்தப் பேரறிஞர் களைக் கொண்ட 'சைவ சித்தாந்த மகாசமாஜம்' ஒன்று இயங்கி வருகின்றது. இச் சமாஜம் 1905ஆம் ஆண்டு 7ஆம் மாதம் 7ஆம் நாள் திருப்பாதிரிப்புலியூர் ஞானியா ரடிகள் திருமடத்தில் தொடங்கப் பெற்றது.

ஞானியார் சுவாமிகள், மறை மலை யடிகள் முதலிய பெரியார்களால் தொடங்கப் பெற்ற அச்சமாஜம், சைவ சித்தாந்த சமயத்தின் உயர்ந்த தத்துவ உண்மை களையும் சிவவழிப்பாட்டின் சிறப்பினையும் இவ்வுலகில் நல்ல வண்ணம் வாழும் முறைமைகளையும் உட்கோளாகக் கொண்டு, தென்னிந்தியா, மலேசியா, இலங்கை முதலான இடங்கள் தோறும் சைவ சித்தாந்த சமயப் பிரசாரம் செய்தும், "சித்தாந்தம்" என்னும் தமிழ் - ஆங்கிலச் சஞ்சிகைகளையும் "சைவ சித்தாந்தம்" "சைவத்திருமுறை", "திருக் கோவில் அமைப்பு", "கோவில் வழிபாட்டு முறை", "நாயன்மார் வழி" முதலியனவற்றை ஆராய்ந்து தெளிவு படுத்தி நூல்களை வெளியிட்டும், சைவ சித்தாந்தநெறி வகுப்புக்களையும் சைவப் புலவர் தேர்வுகளையும் நடாத்தி மகாநாட்டுப் பேரவைகளில் பட்டங்களும் பரிசுகளும் அளித்தும், திருவாவடுதுறை, தருமபுரம், மதுரை முதலான ஆதீனங்களின் தொடர்பு கொண்டும், சைவத் தமிழ்ச் சான்றோர் மூலம் நன்குணர்ந்து பயன்பட்டு வருவதை அறிந்து கொள்ளலாம். இங்கே குறிப்பிட்ட சென்னைச் சமாஜம் - "தாய்ச் சங்கம்" ஆகவும், எமது இலங்கைச் சைவப்புலவர் சங்கம், அதற்குச் "சேய்ச் சங்கம்" ஆகவும் அமையப்பெற்றதைப் பின்வருமாறு தெளி விக்கப்படும்.

மேலே காட்டிய நிலைமைகளை அறிந்த காலத்தில், 1960 ஆம் ஆண்டு சித்திரை மாதம், 'சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த நான்மாடக் கூடற்பதி' யாகிய மதுரையம் பதியில், அங்கயற்கண்ணி தன்னோடு அமர்ந்த ஆலவாய்ப் பெருமானின் திருவருள் கூட்ட, தமிழ் வித்துவான் தேர்வுக்குத் தோற்று வதற்காகச் சென்றிருந்த திருவாளர் வ. செல்லையா, ச. சச்சிதானந்தசிவம் ஆகிய "ஆசு - இரிய" அன்பர் இருவர் சந்திப்பு ஏற்பட்டது. அப்பொழுது, சென்னைச் சைவசித்தாந்த சமாசத்தின் சைவப்புலவர் தேர்விலும் சித்தியடைந்திருந்த அவ்விரு வரின் உள்ளத்திலும் அகில இலங்கைச் சைவப் புலவர்களை ஒன்று சேர்த்துச் சங்கம் அமைத்து நாவலர் பெருமானின் வழிநின்று சைவப் பணியாற்றுதல் காலத்தின் தேவைக்கு ஏற்றதென்ற நல்ல சிந்தனை உதயமாகியது. இறைவனருள் தூண்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்த இச்சிந்தனை, இலங்கைக்கு வந்து சேர்ந்ததும், அந்த 'இலக்கு' என்னும் தன்மையை நோக்கிச் செயற்பட ஆரம்பித்தது. சமய, சமூகப் பணிகளில் முன்னின்று உழைக்கும் தினசரிப் பத்திரிகைகள் மூலம் சைவப்புலவர்களைத் தொடர்புறுமாறு வேண்டிய போது, ஒன்பதின்மர் வரை தொடர்பு கொண்டனர். அவர்களைக் கொண்டு சங்க உறுப்பினர் களாக்கி, சைவப்புலவர் சங்க உதயத்தின் மூலகாரணத்துக்குக் 'கரு' வாகவும் ஆக்கிக் கொண்டது.

இந்த வகையில், சார்வரி வருடம் புரட்டாதி மாதம் 'கரு'ஆம் நாள் வெள்ளிக்கிழமை விஜயதசமித் திருநாளில் (1960.09.30)இல் மல்லாகம் இந்துக் கல்லூரியில் சைவப் புலவர் சங்க அமைப்புக்கூட்டம், இந்து சாதனப் பத்திராதிபர் சைப்பெரியார் நம் சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது இதில் - சைவப் புலவர் வித்துவான் திரு.வ. செல்லையா அவர்கள் தலைவராகவும், சைவப்புலவர் வித்துவான் ச. சச்சிதானந்த சிவம் செயலாள ராகவும், சைவப்புலவர் பண்டிதை செல்வி அப்பாக்குட்டி தங்கம்மா அவர்கள் பொருளாளர் ஆகவும், ஏகமனதாகச் சபையினரால் தெரிவுசெய்யப் பட்டார்கள். சைவப்புலவர்களான திரு. சி. வல்லிபுரம், திரு. ஆ. பாலகிருஷ்ணர், திரு. ஐ. இராசரத்தினம், திரு. இ. திருநாவுக்கரசு, திரு. இ. செல்லத்துரை ஆகியோர் 'நிர்வாக சபை உறுப்பினர்களாக - ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்."

இதற்குப் பின்னர் - காலப்போக்கில், அங்கத்தவர்கள் ஓரளவு அதிகரித்தனர். சைவசித்தாந்த மகாசமாஜத்தின் தேர்வு களால் வரும் சைவப்புலவர் பட்டங்களின் அதிகரிப்பும் சைவச்சான்றோர் ஆசியும் ஆதரவும் இச்சங்க வளர்ச்சிக்கு உறுதுணை யாக உதவின. அதனால், சென்னைச் சமாஜமே நற்றாய் ஆகவும், 'மலாயா' யின் சைவ சித்தாந்த சங்கம் 'செவிலி' ஆகவும் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கமே 'சேய்' ஆகவும் அமைந்ததோடு, "பணிச் சந்தானத் தொடர்பு" களையும் இயல்பாகவே பெற்றுக் கொண்டன. இவற்றின் தாய் அன்புத் தொடர்பின் சான்றாக சமாஜம் வெளியிட்டு வரும் 'சித்தாந்தம்' என்னும் சஞ்சிகை (குரோதி, சித்திரை, 1964 ஏப்ரல்) இதழில் இச்சங்கத்தார், சமாஜத்தின் உறுப் பினரும் 'மலாயா - சைவசித்தாந்த சங்கத் தலைவருமான திரு. க. இராமநாதன் செட்டியார் B.A., B.L. அவர்களை வரவேற்று அளித்தமையை,

"சென்னைச் சமாஜமே நற்றாயாய் எம் 'மலாயா'
பின்னைச் சமாஜம் 'செவிலியாய்' அன்புதவச்
சைவப் புலவர்சேர் சங்கமெனும் இக்குழந்தை
உய்யுநெறி காட்டும் உவந்து"

- என்று மன மகிழ்ச்சி நிலவ ஏற்றுக கொண்டதையும், பெருமைப்படுத்தி இருப்பதையும் அறிந்து கொள்ளலாம்.

1960.09.30 இல் இச் சங்கம் நிறுவப்பட்டபின், வரும் "மார்கழியில்", சைவ சித்தாந்த மகாநாடு திருக்கேச்சரத்தில், சைவ சித்தாந்த சமாஜத்தினர், 'சேர்' கந்தையா வைத்தியநாதரின் ஆதரவுடன் நடத்தினர், அதில் தொடர்பு கொண்ட வித்துவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப்புலவர் திரு. வ. செல்லையா அவர்களும், கௌரவ செயலாளர் வித்து வான், சைவப்புலவர் திரு. ச. சச்சிதானந்த சிவம் அவர்களும் பங்கு பற்றினர். அம் மாநாட்டுக்கு வந்திருந்த முருகவேள் அவர்களிடம், இலங்கையில் சைவப்புலவர் பரீட்சையை இச்சங்கம் நடாத்திக் கொடுக்கும் உரிமையைப் பெற்றதோடு, சமாஜத் தாரிடமும் தொடர்பு கொள்ளும் வாய்பி னையும் பெற்றுக் கொண்டனர். அத்துடன் சைவப் புலவர் பரீட்சைப் பாடத்திட்டத்தையும் விரிவாகவும் (இப்போதுள்ள பாடத் திட்டத்தைப் போல்) செய்யும் படியும் கேட்டு ஒத்துக்கொள்ளச் செய்தனர். இந்நிலையில், சிறுப்பிட்டிச் சைவப்புலவர் செல்லத்துரை அவர்களைப் பரீட்சைக் காரியதரிசியாக நியமித்துப் பணிபுரிய வைத்தனர்" இவர், 21.05.1964 இல் தஞ்சாவூரில் உள்ள அந்தணப் பேட்டை என்னும் பஞ்சுக் கொல்லையில் திரு. வச்சிரவேலு முதலியார் நிகழ்த்தும் கோடைக் காலத்துச் சித்தாந்த வகுப்பிற் பங்குபற்றியும், இச்சங்கம் வெளியிட்ட "உண்மை விளக்கம்" என்ற சித்தாந்த நூல்கள் இருநூற்றைம்பதை அம் மாணவர்க்கும் சமாஜ அங்கத்தவர் களுக்கும் விநியோகம் செய்தும், அதன் மூலம் வரும் கிரயத்தை அச் சமாஜத்தின் கௌரவ செயலாளரான திரு. மு. நாராயண சாமி முதலியாரது சமாஜக் கணக்கு ஏட்டில் வரவு செய்யுமாறு வேண்டியும், தமது சங்கத்தின் பாடத்திட்டம், தேர்வு என்ப வற்றை முன்பு ஒத்துக் கொண்டது போல, அவற்றுக்கான தராதரப்பத்திரங்களையும் பட்டமளிப்பு களையும் நாமே அமைக்குமாறு செயலாளரிடம் கேட்ட போது, "நீங்கள் 'சேய்'ச் சங்கமாய் அமைவதால், இன்னும் சில ஆண்டுகளாய் அனுபவ முதர்வு பெற்ற காலத்தில் அங்ஙனம் செய்யுங்கள், அவற்றை அனுமதிக்கிறோம்" என்று உறுதியைப் பெற்றுக் கொண்டு எஞ்சிய பணிகளான அவற்றையும் நிறை வேற்றினர். இதனால், 1972ஆம் ஆண்டுக்குப் பின், இச்சங்கத்தின் முழுமை யான சுயநிர்ணய உரிமைகளுக்கு, அனுமதியான நிம்மதியையும் பெற்றுக கொண்டது.

சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர் தேர்வுகளுக்கும், சைவப் பாடசாலை மாணவர் தேர்வுகளுக்கும் ஏனைய சைவ சமயிகளுக்கும் ஆன சைவ சித்தாந்த நூல்கள், அவற்றின் சார்பான சைவ நூல்கள் என்பவற்றை, இலங்கையில் பெரிதும் பெறுதற்கு இயலாமையினாலும், தாய் நாட்டிலிருந்து வரவழைத்தற்குப் பல தடைகள் குறுக்கே நிற்றலினாலும், சைவமக்கள் வருந்துவது கண்ட இச்சங்கத் தாரும் - அவர்களது சார்புடை யோரும், அவற்றின் குறை நீக்கற் பொருட்டுப் பின்வரும் நூல்களை வெளியிட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப்புலவர் இ. செல்லத்துரை அவர்கள் உரை எழுதிய

1. உண்மை விளக்கம்
2. வினா வெண்பா
3. உண்மை நெறி விளக்கம்
4. கொடிக்கவி
5. திருவுந்தியார்
6. கோயிற் பதிகவுரை
7. திருவருட்பயன் வினாவிடை
8. சைவசமய வினாவிடை

என்னும் நூல்களும்,

சைவப்புலவர் ஸ்ரீ. வை. இராமக் கிருஷ்ண ஐயர் உரை எழுதிய திருவந்தியாரும், நமசிவப்பிரகாசம் அவர்கள் எழுதிய "சைவம்" எனும் வெண்பாநூலும் சைவப்புலவர்கள் சு. செல்லத்துரை தொகுத்த "நாவலர் வரலாற்றுக் குறிப்பு எனும் நூலும், சைவப்புலவர் சி. திரு. நாவுக்கரசு ஆக்கிய "வரலாற்றுப்பாமாலை" எனும் நூலும் வெளியிடப்பட்டன.

2002 இல் "சங்க வரலாறும் சைவப் புலவர் அறிமுகமும் எனும் வரலாற்று மலர் 42 வது ஆண்டு நிறைவு விழாவில் வெளியிடப்பட்டது.

2009இல் இளஞ் சைவப்புலவர் தேர்வுக்குரிய சாத்திர நூல்களான திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், உண்மை நெறிவிளக்கம், திருவருட்பயன் கொடிக்கவி, வினா வெண்பா ஆகியன உரையுடன் கூடிய தொகுப்பாக "சைவ சித்தாந்த சாத்திரங்கள்" எனும் பெயரில் ஒரே நூலாக வெளியிடப்பட்டன.

சைவப்புலவர் மு. திருஞான சம்பந்த பிள்ளை அவர்கள் எழுதிய "சைவ சித்தாந்த அளவைகள்" எனும் நூலும் வெளியிடப் பட்டது.

இச்சங்கத்தின் ஆரம்பத்தில் நியமிக்கப் பட்ட தலைவர், பொதுச் செயலாளர் முதலானவர கனோடு, காலப் போக்கிலே மேலும் நியமிக்கப்பட்ட கௌரவ செயலாளர் சைவப்புலவர் சைவசித்தாந்த பாலபண்டிதர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை, பணியமைப்பாளர்களான சைவப்புலவர் திரு. V.S. சுந்தரலிங்கம், சைவப்புலவர் சித்தாந்த பாலபண்டிதர் திரு.சு. செல்லத் துரை ஆகியோரையும் சேர்த்து, 'திருமுறை மனனப் போட்டி, பண்ணிசைப் போட்டி, சைவ சமயப் பேச்சுப் போட்டி, சைவ சமய நாடகப் போட்டி, சைவ சித்தாந்த வகுப்பு, சைவச் சான்றோர் வரவேற்பு உபசாரம், அவர்கள் தொடர்பு, சைவ சித்தாந்தப் பேருரை, அவற்றின் பிரசாரம், சைவக்கலை விழாக்கள், சைவ சித்தாந்த மகாநாடுகள், சமாஜச் சைவப்புலவர் பட்டமளிப்புகள், சைவ நெறியின் நிறைவுற்ற சான்றோர்க்கு கௌரவ பட்டமளிப்புகள் முதலான சகல கைங் கரியங்கள் செய்த நிகழ்வுகளை அதன் 1960 - 1973 வரையான தொகுப்புகளை சங்கத் தலைவரான வித்துவான் சைவப்புலவர் திரு.வ. செல்லையா அவர்கள், தமது (விரிவு) உரையான எழுத்தின் மூலம் பின்வருமாறு விளக்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சைவப்புலவர் மாநாடும் விழாக்களும்**

1961இல் பாடசாலை மாணவர்களுக்கு இடையே திருவெம்பாவை, திருப்பள்ளி யெழுச்சி மனனப் போட்டி நடத்தப்பட்டது. இது மல்லாகம் மகா வித்தியாலயத்திலும் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் தெரிவுப் போட்டிகள் நடத்தித் தெரிவு செய்யப் பட்டோருக் கிடையில் இறுதிப் போட்டி நடத்திச் சைவசமய எழுச்சி விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன. இவ்விழாவில் அக் காலத்தில் வடமாநில வித்தியாதிபதியா யிருந்த திரு.எஸ்.யு. சோமசேகரம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். அன்று தொடக்கம் அவர் சைவப்புலவர் சங்கத்துடன் இணைந்து சங்க வளர்ச்சிக்கு பேராதரவு தந்தார்.

1962இல் சைவப்புலவர் மாநாடு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்டது. சென்னைச் சைவசித்தாந்த மகா சமாசம் நடத்திய சைவப்புலவர், இளஞ் சைவப்புலவர் தேர்வுகளில் சித்தியடைந் தோர்க்குச் சைவத்தமிழ் அறிஞர் திரு.சு. நடேசபிள்ளை அவர்கள் முதன்மை விருந்தினராக வந்து பட்டமளித்துச் சிறப்பித்தார். சைவப் பெரியார்கள் நம, சிவப்பிரகாசம் அவர்களுக்குச் சைவ பூஷணம் பட்டமும், திரு. எஸ். ஞானப்பிரகாசம், திரு.மு.வயிரவப் பிள்ளை ஆகியோருக்குச் "சித்தாந்த வித்தகர் பட்டமும், சைவப்புலவர் த.குமாரசாமிப் பிள்ளை அவர்களுக்கு "சைவப் புலவர்மணி" பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

1962 விஜயதசமி நன்னாளில் கீரிமலை சிறாப்பர் மடத்தில் சைவப்புலவர் ச. சச்சிதானந்தம் தலைமையிலும் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் சைவப் புலவர் இ.திருநாவுக்கரசு தலைமையிலும் சைவப் புலவர் வகுப்புக்கள் தொடங்கி நடத்தப்பட்டன. இதன் பேறாக 1963 இல் பலர் சைவப் புலவர் தேர்வில் சித்திபெற்றமை குறிப்பிடத்தக்கது.

**மட்டக்களப்பில் .....**

1964 ஆவணிமாத விடுமுறையில் மட்டக்களப்பு நகர மண்டபத்தில் சைவப் புலவர் மாநாடு நடாத்தப்பட்டது. இதில் சைவப்புலவர் கா. அருணாசலதேசிகர் அவர்கள் முதன்மை விருந்தினராக வந்து சிறப்பித்தார். அவருக்குச் 'சைவ சித்தாந்த சிகாமணி ' எனும் பட்டம் வழங்கப்பட்டது. இங்கு சைவப்புலவர் தேர்வில் முதலாம் பிரிவில் சித்திபெற்றமைக்காக திரு.மு. திருஞானசம்பந்தபிள்ளை அவர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது.

**சென்னையில் ......**

1965 மார்கழியில் சிதம்பரத்தில் சைவ சித்தாந்த மகா சமாசத்தின் வைரவிழா நடைபெற்றது. இதில் ஒரு அங்கமாக சைவப்புலவர் மாநாடும் இணைத்து நடத்தப்பட்டது. அவ்வைரவிழாவில் பிரதம விருந்தினராக திரு. முருக கிருபானந்த வாரியாரும், பெருந்தலைவராகச் சைவப் பேரறிஞரும் சென்னைச் சர்வகலாசாலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவாளருமாகிய திரு.பெ. திருஞானசம்பந்த பிள்ளையும் பங்கு கொண்டனர். ஈழத்தின் சார்பில் சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் வித்துவான் வ. செல்லையா தலைமையில் மட்டக்களப்பு பண்டிதர் சைவப்புலவர் இ. கிருஷ்ணபிள்ளை, பண்டிதை சைவப்புலவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, புரவலர் இ. வைத்திலிங்கம் (எஞ்சினியர்) சைவப்புலவர்கள் மு. திருஞானசம்பந்தபிள்ளை, சு. செல்லத்துரை ஆகியோர் பேச்சாளர்களாகக் கலந்து கொண்டனர். இதில் சிறப்பு அம்சமாகச். சைவப்புலவர் தேர்வில் சித்தியடைந்த திரு. க. சிற்றம்பலம் அவர்களுக்கு திருமுருக கிருபானந்தவாரியார் "சிற்றம்பலத்தில் சிற்றம்பலம் சைவப்புலவர் பட்டம் பெறுகிறார்" என வாழ்த்திப் பட்டம் வழங்கினார்.

**மலாயாவில்.....**

1966ஆம் ஆண்டு சித்திரை மாதம் மலாயாத் தலை நகரில் நடந்த முதலாம் அகில உலகத் தமிழ் மாநாட்டுக்குச் சைவப்புலவர்கள் சங்கச் சார்பில் தலைவர் சைவப்புலவர் வ. செல்லையா அவர்களும், புரவலர் இ. வைத்திலிங்கம் அவர்களும் சென்று கலந்து கொண்டனர். அகில உலக மட்டத்தில் சைவப்புலவர் சங்கம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜெகந்நாதன் முதலான பலபெரியார் களின் தொடர்பு ஏற்பட இது வாய்ப்பானது.

**கண்டியில்.....**

1966இல் சைவப்புலவர் மாநாடு கண்டியில் நடைபெற்றது. இம் மாநாட்டுக்கு முதன்மை விருந்தினராக வாகீசகலாநிதி கி.வா. ஜெகந்நாதன் அவர்கள் கலந்து கொண்டு சைவப்புலவர் பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தார். இம்மாநாட்டினால் வாகீச கலாநிதி கி.வா.ஜகந்நாதன் அவர்களுக்கு "சைவ பூஷணம்" பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இம் மாநாட்டில் வேதாகமபூஷணம் சிவஸ்ரீ பாலசுந்தரக் குருக்கள் அவர்களும் மாவை அதீன கர்த்தா மகாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்களும் சமுகந்தந்து வேதபாராயணம் செய்து ஆசிவழங்கினர். சிறப்பு விருந்தினர் களாகப் பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் கைலாச நாதக்குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். நாவலப் பிட்டியில் சைவப்புலவர் பிரமஸ்ரீ இராம கிருஷ்ண ஐயரால் நடத்தப்பட்ட சைவப் புலவர் வகுப்பிலிருந்து பலர் பட்டம் பெற்றனர்.

சங்கத்தின் செயற்பாடுகளுக்காக யாழ். ஸ்ரான்லி வீதியில் சிவம்ஸ் கட்டத்தில் ஒரு அலுவலகத்தைத் தந்த எஞ்சினியர் இ. வைத்திலிங்கம் அவர்களுக்கு முன்பே புரவலர் பட்டம் வழங்கப்பட்டது. அதே போலச் சங்கத்துக்கு உபகாரிகளாயிருந்த இளவாலை க.வேலுப்பிள்ளை மட்டக்களப்பு P.T. அரசன், வேலணை எஸ். அருணகிரி ஆகியோருக்கும் "புரவலர்" பட்டம் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாவலர் விழாக்கள்**

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய மண்டபத்தில் இரண்டு ஆண்டுகள் (1966 - 1967) பெரிய ஊர்வலத்துடன் கூடிய நாவலர்விழா நடத்தப்பட்டது. இதில் சைவப்புலவர் சு. செல்லத்துரையால் எழுதப்பட்ட நாவலர் வாழ்க்கைக் குறிப்பு நூலும் நாவலர் நற்சிந்தனை துண்டுப்பிரசுரமும் புரவலர் க. வேலுப்பிள்ளை அவர்களது செலவில் இலவசமாக வழங்கப்பட்டது.

**ஹற்றனில் .....**

ஹற்றன் சைவமகாசபையின் ஆதரவுடன் நாவலர் விழா சிறப்பாக நடாத்தப்பட்டது. இவ்விழாவை அங்கு தபாலதிபராயிருந்த திரு. செல்லையா அவர்கள் முன்னின்று ஒழுங்கு செய்து உதவினார். இவ்விழாவில் ஈழநாடு பத்திராதிபர் கே.பி.ஹரன், புரவலர் இ. வைத்திலிங்கம், ஆத்மஜோதி நா. முத்தையா ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாளர் களாகக் கலந்துகொண்டனர்.

**திருக்கேதீஸ்வரத்தில்**

1968இல் திருக்கேதீஸ்வரம் நாவலர் மடத்தில் நாவலர் படம் யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டுபோய்த் திரை நீக்கம் செய்யப்பட்டது. இவ்விழாவில் சைவபூஷணம் நம. சிவப்பிரகாசம், புரவலர் இ. வைத்திலிங்கம், வடஇலங்கை இந்து இளைஞர் மகா சங்கத்தினர், சைவப்புலவர் சங்கத்தினர், மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்கத்தினர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியிலும் சைவப்புலவர் சு. செல்லத் துரையின் ஆதரவோடு நாவலர் விழா நடத்தப்பட்டது.

**நாவலப்பிட்டியில் .....**

நாவலப்பிட்டி இந்து இளைஞர் சங்க ஆதரவோடு சைவ மாநாடு நடத்தப்பட்டது. ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் இவ்விழாவுக்குப் பேருபகாரமாயிருந்தார். பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, புரவலர் இ. வைத்திலிங்கம் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாளர்களாகக் கலந்துகொண்டனர். யாழ்ப்பாணத்திலிருந்து சைவக்குருக்களை அழைத்துச் சென்று அங்கு சமயதீட்சையும் வைக்கப்பட்டது.

**கொழும்பில் ......**

1968இல் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலைநாட்டிலுள்ள சைவப்புலவர்கள் கலந்துகொள்ளக்கூடிய வகையில் சைவப் புலவர் மாநாடு சிறப்பாக நடத்தப்பட்டது. இதில் பெரும்புலவர் சிவம், கருணாலய பாண்டியனார் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பட்டங்களை வழங்கினார். அவருக்கும் 'சித்தாந்த வித்தகர்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

1971இல் சங்கத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா கொழும்பு. மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் சிறப்பாக நடத்தப்பட்டது. மூன்று இடங்களிலும், சைவசமய நாடகம், சைவசமய நடனம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறைப் பண்ணிசை, சைவசமய ஓவியம் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு ஆங்காங்கு பரிசு வழங்கப் பட்டது.

**யாழ்ப்பாணத்தில் ......**

ஒவ்வொரு இடத்திலிருந்தும் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்கு இறுதிப் போட்டி யாழ்ப்பாணத்தில் நடந்த இரண்டு நாள் விழாவில் நடத்தப்பட்டுத் தங்கப்பதக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டன. இப்போட்டிகளை சங்கப்பணி அமைப்பாளர் சைவப்புலவர் சு. செல்லத்துரை ஒழுங் கமைத்து நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

வெளி மாவட்டங்களில் இருந்து வந்த கலைஞர்களுக்கு யாழ். மத்திய கல்லூரியில் தங்குமிட வசதியும், உணவு வசதியும் செய்துகொடுக்கப்பட்டது. இதற்கு வேலணை நாவலர் மடத்து மடாதிபதி செல்லப்பா சுவாமிகள் பெரிதும் உதவினார்.

**வேலணையில் .....**

1972இல் சைவப்புலவர் மாநாடு வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச் சாமி மத்திய மகா வித்தியாலயத்தில் மிகக் கோலாகலமாக நடத்தப்பட்டது. இவ்விழா வில் திருமுறைப் பண்ணிசை, நடனம், நாடகம் என்பன சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெற்றன. இதில் ஓய்வுபெற்ற வடமாநில வித்தியதிபதி எஸ்.யு. சோமசேகரம், சைவப் புலவர்மணி த. குமாரசுவாமிப்பிள்ளை, முகாந்திரம் முத்துத்தம்பி என்போர் சிறப்பு விருந்தினர் களாகக் கலந்து சிறப்பித்தனர். இளவாலை திரு. சி. கார்த்திகேசு அவர் களும், வேலணை திரு.வே.பேரம்பலம் அவர்களும் "சைவ பூஷணம்" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். நீண்ட காலம் சைவப்புலவர் சங்கத்துக்குச் சேவை செய்தமையைப் பாராட்டிச் சைவப் புலவர் ச. சச்சிதானந்தம், சைவப்புலவர் இ. கிருஷ்ண பிள்ளை என்போர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். இவ் விழாவுக்குப் 'புரவலர்' அருணகிரி, திரு. இராசசேகரம், சைவப்புலவர் செல்வி சின்னத்தம்பு ஆகியோர் தம்மாலான உதவியெல்லாம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

ஆண்டுதோறும் நடைபெறும் சைவப் புலவர் மாநாட்டைத் தொடர்ந்து ஆண்டுப் பொதுக் கூட்டமும் புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடைபெறுவது வழமை. 25.08.1973 இல் யாழ் பெரியகடை கதிரேசன் கோயிலில் விசேட பொதுக் கூட்டமும் நடைபெற்றது. இக் கூட்டத்திற்குச் சைவப்புலவர்மணி த. குமாரசாமிப்பிள்ளை, திரு.எஸ்.யு. சோம சேகரம் என்போரும் சமூகம் தந்திருந்தனர். 1960 - ஆரம்பகாலம் முதல் தலைவராயிருந்த சைவப்புலவர் வ. செல்லையா அவர்கள் தனது தனிப்பட்ட வசதியீனம் காரணமாகத் தொடர்ந்து அப்பதவியில் இருக்க முடியாமையைத் தெரிவித்தார். அவரைச் சங்கப் போஷகராகச் சபை தெரிவுசெய்தது. சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்கள் தலைவராயும் சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளராயும் சைவப்புலவர் செல்வி சி. சின்னத்தம்பு பொருளாளராயும் தெரிவு செய்யப்பட்டனர். ஏனைய உத்தியோகத் தர்கள் பழையபடி தொடர்ந்து சேவை செய்யத் தெரிவுசெய்யப்பட்டனர்.

**யாழ்ப்பாணத்தில்.....**

1972 வரை சென்னை சைவசித்தாந்த மகா சமாசம் சைவப்புலவர் தேர்வுகளைச் சைவப்புலவர் சங்கத்தினூடாக இலங்கை யில் நடத்திவந்தது. 1972இல் இலங்கை அரசின் கெடுபிடிகளால் இங்கிருந்து விண்ணப்பப் பணம் அனுப்புதல், தொடர்பு கொள்ளல், போக்குவரத்துச் செய்தல் என்பவற்றில் தடைகள் ஏற்பட்டன. அதன் காரணமாகச் சமாசத்தின் சம்மதத்துடன் இலங்கையில் சைவப்புலவர் சங்கமே தொடர்ந்து தேர்வை நடத்த முடிவு செய்யப்பட்டது.

1974 ஐப்பசியில் சைவப்புலவர் மாநாடு யாழ். நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் இரு நேரமாக நடைபெற்றது. காலை நிகழ்ச்சிகள் சைவப்புலவர் வ. செல்லையா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தொடக்கவுரையைச் சைவ பூஷணம் நம. சிவப்பிரகாசமும் சிறப் புரையைத் திரு.ச. விநாயகமூர்த்தி அவர்களும் நிகழ்த்தினர்.

மாலை நிகழ்ச்சி தலைவர் சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. கல்விப் பணிப்பாளர் எஸ்.யு.சோமசேகரம் அவர்கள் தொடக்க வுரை நிகழ்த்தினார். கல்வி அதிபதி கி. இலட்சுமணன் அவர்கள் பட்டங்களை வழங்கிப் பாராட்டுரை நிகழ்த்தினார்.

1981.11.15 இல் சைவப்புலவர் மாநாடு வழமைபோல நாவலர் மகா வித்தியா லயத்தில் நடைபெற்றது.

1985.07.07இல் நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற சைவப்புலவர் மாநாட்டைத் தொடர்ந்து நடந்த பொதுக் கூட்டத்தில் புதிய உத்தியோகத்தர தெரிவில் தலைவராகச் சைவப்புலவர் இ. திருநாவுக் கரசு அவர்களும், செயலாளராகச் சைவப் புலவர் வ. கந்தசாமி அவர்களும், பொருளாளராகச் சைவப்புலவர் நா.க. தங்கரத்தினம் அவர்களும் தெரிவுசெய்யப் பட்டனர்.

1985 - 1996 காலப்பகுதிகளில் போர்ச்சூழ்நிலைகள் இடம்பெயர்வுகள் காரணமாக சங்கம் ஒழுங்காகச் செயற்பட முடியாதிருந்தது.

1997 தொடக்கம் ஓரளவு செயற்பாடு வழமைக்குத் திரும்பின. ஆண்டுதோறும் சைவப்புலவர் வகுப்புகள் நடத்தப்பட்டன. தேர்வுகள் ஒழுங்காக நடந்தன. பட்டமளிப்பு விழாக்களும் சித்திரை மாதம் தோறும் நாவலர் மகாவித்தியாலயத்தில் நடை பெற்றன.

1999 தொடக்கம் சைவப்புலவர் தேர்வுகளுடன், மாணவர்களுக்கிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணபடனப் போட்டிகளும் ஆண்கள் பெண்களுக்கிடையில் வெவ்வேறாக நடாத்தி பட்டமளிப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும் நடைபெற்றன.

சங்கத் தேர்வுச்செயலாளர் சைவப்புலவர் வ. கந்தசாமி தலைமையில் யாழ். நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில் 26.12.1999 இல் நடைபெற்ற சைவப்புலவர் மாநாட்டில் சைவப்புலவர் பட்டமளிப்புடன் ஆரம்பகாலம் முதல் சங்க வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட சைவப்புலவர், சைவ சித்தாந்த பண்டிதர் இ. செல்லத்துரை அவர்களுக்கு "சைவ பூஷணம்" பட்டமளித்துப் பொன்னாடை போர்த்தி சைவப்புலவர் சி. திருநாவுக்கரசு அவர்களால் ஆக்கப்பெற்ற அவரைப் பற்றிய பாராட்டு நூலாகிய "சிறுப்பிட்டி தந்த செம்மல் வரலாற்றுப்பாமாலை" நூலும் வெளியிட்டுக் கௌரவம் வழங்கப்பட்டது. இவ்விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள் சமூகந்தந்து சிறப்பித்தார்.

2000.04.23இல் 40ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பட்டமளிப்பு விழாவும் நாவலர் மகாவித்தியாலயத்தில் உப தலைவர் சைவப்புலவர் சு. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது. வழமைபோல நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமசாரிய சுவாமிகளின் ஆசியுடன் பேராசிரியர் ப. கோபால கிருஷ்ண ஐயர் அவர்கள் பட்டமளித்துப் பாராட்டுரை வழங்கினார். பண்டிதர் வ.பேரின்பநாயகம் அவர்களின் "உவமையிலாக் கலைஞானம்" எனும் சிறப்புரையும் இடம் பெற்றது. புராணபடனப் போட்டியில் வெற்றி பெற்றோர்க்குப் பரிசும் வழங்கப்பட்டது.

2001.07.22இல் சைவப்புலவர் சங்க 41 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பட்டமளிப்பும், பாராட்டும், பரிசளிப்பும் யாழ். நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் சங்கத் தலைவர் மு. திருஞானசம்பந்த பிள்ளை தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஆசியுடன் விழா ஆரம்பமானது. பேராசிரியர் ப. கோபால கிருஷ்ண ஐயர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

எத்தனையோவித இடர்களுக்கு மத்தி யிலும் மனம் தளராமல் சைவ சமய சேவையேதன் உயிர்மூச்சு என இடை யறாது செய்துவரும் சைவப்புலவர் சங்கத்தின் பரீட்சைச் செயலாளர் சைவப் புலவர், சைவ சித்தாந்த பண்டிதர் வ. கந்த சாமி அவர்களுக்குச் "சைவபூஷணம்" எனும் பட்டமளித்துப் பொன்னாடை போர்த்தி, வாழ்த்துப்பாடிக் கௌரவம் வழங்கப்பட்டது.

சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் பட்டமளிப்பும் புராணபடனப் போட்டிப் பரிசளிப்பும் நடைபெற்றன. சைவப்புலவர் வகுப்பில் பயின்ற சைவச் சான்றோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லிபுரம் வரதராசா (கொக்குவில்) அவர்கள் சைவப்புலவர் சங்கத்திற்கு சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக் கைலாயமலைப் படமும் (கண்ணாடி போடப்பட்ட பெரியபடம்) கற்பித்த ஆசிரியர் களுக்கு உமாதேவியார் சமேத சிவ பெருமான் படங்களும் குருதட்ஷணையாக வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

**43ஆவது ஆண்டு நிறைவு விழா**

2003.04.06 சித்திரபானு வருடம் பங்குனி 23ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் சங்கத்தின் 43வது ஆண்டு நிறைவும் சைவப்புலவர் எழுச்சி விழாவும், பட்டமளிப்பும் நடை பெற்றன. விழா வண்ணை நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் சங்கத் தலைவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. முதன்மை விருந்தினராக கௌரவ இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் தியாகராசா மகேஸ்வரன் அவர்களும் கௌரவ விருந்தினர்களாக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் சைவப்புலவர் பத்தினியம்மா திலகநாயகம் அவர்களும், யாழ். பல்கலைக் கழக கலைபீடாதிபதி பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயிலில் விசேடபூசை வழிபாடும், பாடசாலை முன்னிலையில் உள்ள நாவலர் சிலை வழிபாடும் நடைபெற்றன. பாடசாலை அதிபர் ந. சிவராசா அவர்களும், சிவநெறிக் காவலர் கு. கங்கைவேணியன் அவர்களும் மங்கல விளக்கு ஏற்றி வைத்தார்கள். சைவப்புலவர் சங்கீத பூஷணம் அ.கி. ஏரம்பமூர்த்தி அவர்கள் திருமுறை ஓதினார்கள்.

தேர்வுச் செயலாளரான சைவப்புலவர், சைவபூஷணம் வ.கந்தசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். நல்லை ஞானசம்பந்தர் ஆதீன சுவாமிகள் அருளுரை வழங்கினார்கள். கௌரவ விருந்தினர் பத்தினியம்மா திலகநாயகம் அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தினார்கள்.

"சைவத்தின் தொன்மையும் செம்மையும்" எனும் பொருள் பற்றி கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி சைவப்புலவர் செ. திருநாவுக்கரசு அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார் புராணபடனப் போட்டியில் ஆண்கள் பிரிவில் முதற்பரிசு பெற்ற யாழ், சுதுமலை சின்மய பாரதி வித்தியாலய மாணவர்களும், பெண்கள் பிரிவில் முதற்பரிசு பெற்ற வட்டு. இந்துக் கல்லூரி மாணவிகளும் புராணபடனம் நிகழ்த்தினர்.

புராணபடனப் போட்டியில் ஆண்கள் பிரிவில் முறையே முதலாம் இரண்டாம் 3ம் பரிசுகள் பெற்ற சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயம். மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை தெல்லிப்பழை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூனியன் கல்லூரி மாணவர்களுக்கும், பெண்கள் பிரிவில் முறையே முதலாம் இரண்டாம் மூன்றாம் பரிசுகள் பெற்ற வட்டு இந்துக்கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை மாணவர் களுக்கும் முதன்மை விருந்தினர் கௌரவ அமைச்சர் தி. மகேஸ்வரன் அவர்கள் பரிசுகளை வழங்கிப் பரிசளிப்புப் பேருரையும் நிகழ்த்தினார்கள்.

தொடர்ந்து சிறப்பு நிகழ்ச்சியாக "சைவப் பண்பாடுகளைக் கைநழுவ விடலாமா? செய்வதெது என்றின்றே சிந்தித்து எழுந் திருங்கள்" எனும் தலைப்பில் கவியரங்கள் நடைபெற்றது. இதற்குச் சைவப்புலவர் சு. செல்லத்துரை தலைமை தாங்கினார். சபை யோரைக் கவர்ந்த இக்கவியரங்கில் கவிஞர் களான சைவப் புலவர்கள் ஆ.வ. தங்கமயில் சி. நந்தகுமார், ம. சிவலிங்கம், கு. றஜீபன் ஆகியோர் கவிதை சொன்னார்கள்.

2002இல் நடைபெற்ற சைவப்புலவர், இளஞ்சைவப் புலவர் தேர்வுகளில் சித்தி அடைந்தோர்க்குக் கௌரவ விருந்தினர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள் பட்டமளித்தார். அவரது பட்டமளிப்புப் பேருரையைத் தொடர்ந்து சபையோர் நிகழ்ச்சியான ஐயந்தெளிதல் நிகழ்ச்சி நடந்தது. இதில் சபையோர் மிக ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். மிகுந்த பயன் பெற்றதாகப் பலரும் பாராட்டினர்.

சங்கப் பொருளாளர் கந்த. சத்திய தாசனுடைய நன்றியுரையைத் தொடர்ந்து சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரனின் தேவாரத்துடன் விழா இனிதே நிறை வெய்தியது.

விருந்துபசாரத்தை தொடர்ந்து ஆண்டுப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில்

தலைவர், மு. திருஞானசம்பந்தபிள்ளை
செயலாளர் சு. செல்லத்துரை
பொருளாளர் சி. நந்தகுமார்
தேர்வுச் செயலாளர் வ. கந்தசாமி
பிரசார அமைச்சர் கந்த. சத்திதாசன் ஆகியோருடன் எட்டுச் செயற்குழு உறுப் பினர்களும் தெரிவு செய்யப் பெற்றனர்.

### 46ஆவது ஆண்டு நிறைவு விழா

2006.04.23 விய வருடம் சித்திரை மாதம் 10ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30க்கு 46வது ஆண்டு நிறைவுப் பொதுக் கூட்டமும், சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் யாழ். நாவலர் மகாவித்தியால யத்தில் ஆரம்பமாயின.

சைவப்புலவர் மு. திருஞானசம்பந்த பிள்ளை தலைமையில் முதன்மை விருந்தி னராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமார வடிவேல் அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

சாந்தையர் மடம் கற்பகவிநாயகர் கோயிலில் விசேடபூசை வழிபாடுகள் நடை பெற்றுப் பாடசாலை முன்றலில் உள்ள நாவலர் சிலைக்கு மலர்மாலை சூட்டி அஞ்சலி செய்து, மண்டபத்துள் வித்தியாலய அதிபர் சு. சிவபாத சுந்தரம் அவர்கள் மங்கல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கேற்றத் திருவாவடுதுறை ஆதீனப் பிரசாரகர் சைவப் புலவர் ஏ. அனுசாந்தன் திருமுறை ஓதினார். சங்கப் பொருளாளர் சி. நந்தகுமார் வரவேற்புரை நிகழ்த்தினார்.

நல்லைஞானசம்பந்தர் ஆதீன சுவாமிகள் அருளாசி வழங்கினார். சங்கத் தேர்வுச் செயலாளர் சைவப்புலவர், கலாபூஷணம், கலாநிதி வ. கந்தசாமி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்

புராணபடனப் போட்டியில் ஆண்கள் பிரிவில் முதற்பரிசு பெற்ற சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்களும் பெண்கள் பிரிவில் முதற்பரிசு பெற்ற பண்டத்தரிப்பு பெண்கள் உயர் தர பாடசாலை மாணவிகளும் புராணபடனம் செய்தனர்.

தொடர்ந்து பட்டமளிப்புப் பேருரை நிகழ்த்திய பேராசிரியர் இ. குமாரவடிவேல் அவர்கள் சைவப்புலவர்கள் சமூகத்துக்கு ஆற்ற வேண்டிய பணிகளைச் சுட்டிக் காட்டிப் பாராட்டி 2005இல் இளஞ் சைவப்புலவர், சைவப்புலவர் தேர்வுகளில் சித்தியடைந்தோருக்குப் பட்டங்களை வழங்கினார். தொடர்ந்து புராணபடனப் போட்டியில் ஆண்கள் பிரிவில் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளைப் பெற்ற சாவகச்சேரி இந்துக்கல்லூரி, இணுவில் இந்துக்கல்லூரி, உடுப்பிட்டி அ.மி. கல்லூரி மாணவர்களுக்கும், பெண்கள் பிரிவில் முறையே முதலாம் இரண்டாம், மூன்றாம், இடங்களைப் பெற்ற பண்டத்தரிப்பு பெண்கள் உயர் தரப்பாடசாலை, இணுவில் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவிகளுக்கும் பேராசிரியர் பரிசுகளை வழங்கினார்.

சந்தான குரவர் படவெளியீட்டைச் சங்கப் போஷகர், இ. செல்லத்துரை அவர்கள் நிகழ்த்திச் சபையோர்க்கு வழங்கினார். தொடர்ந்து சிறப்புரைகள் நடைபெற்றன. "மிகுசைவத் துறை விளங்க" எனும் பொருளில் மட்டக்களப்பு உதவிக்கல்விப் பணிப்பாளர் சைவப்புலவர் சாமித்தம்பி தில்லைநாதன் அவர்கள் சிறப்புரை யாற்றினார். "சைவப்புலவர்களும் சமூகப் பணியும்" எனும் தலைப்பில் ஊர் காவற்றுறைக் கலாசார உத்தியோகத்தர், சைவப்புலவர் இ. நித்தியானந்தன் சிறப்புரை நிகழ்த்தினார்.

சங்கச் செயலாளர் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் நிறைவுரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் இதுவரை இலங்கையில் மட்டும் நடைபெற்று வந்த இளஞ் சைவப்புலவர், சைவப்புலவர் தேர்வுகள் இவ்வாண்டு முதல் புலம் பெயர் நாடுகளான இலண்டன், ஜெர்மனி, ஆகிய இடங்களிலும் நடை பெறவுள்ளதாகத் தெரிவித்தார். சபையோர் கரகோசம் செய்து வரவேற்றனர்.

சங்கப் பிரசார அமைச்சர் கந்த சத்தியதாசனின் நன்றியுரையைத் தொடர்ந்து சைவப்புலவர் வி. ஏரம்பமூர்த்தி அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறையோதலுடன் விழா நிறை வெய்தியது.

தொடர்ந்து விருந்துபசாரத்தின்பின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் பின்வருவோர் உத்தியோகத்தர் களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் - மு. திருஞானசம்பந்தப்பிள்ளை
உபதலைவர் - சாமித்தம்பி தில்லைநாதன்
செயலாளர் - சு. செல்லத்துரை
பொருளாளர் - சி. நந்தகுமார்
சைவப்பிரசார அமைச்சர் கந்த சத்தியதாசன்
உதவிச் செயலாளர் - ஏ. அனுசாந்தன்
உதவித் தேர்வுச் செயலாளர் - நித்தியதசீதரன்

மேலும் எட்டுப்பேர் செயற்குழு உறுப் பினர் களாகத் தெரிவு செய்யப்பட்டனர். புலம்பெயர் நாடுகளில் சைவப்புலவர் வகுப்பு களையும், தேர்வுகளையும் முன்னெடுப் பதற்கு லண்டனிலுள்ள செல்லத்துரை நாவரசன் இணைப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

## 47 ஆவது ஆண்டு நிறைவுவிழா

2008.02.10 சர்வசித்து வருடம் தை மாதம் 27ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30க்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில் 47ஆவது ஆண்டு நிறைவுப் பொதுக்கூட்டமும் பட்டமளிப்பு விழாவும் ஆரம்பமாகின.

சங்கத்தலைவர் மு. திருஞான சம்பந்த பிள்ளை தலைமையில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத்தலைவர் கலாநிதி மா. வேதநாதன் அவர்கள் கலந்துகொண்டார்.

சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய விசேட பூசை வழிபாட்டைத் தொடர்ந்து வித்தியாலய முன்றலிலுள்ள நாவலர் சிலைக்கு மாலை போட்டு அஞ்சலி செய்யப்பட்டது. தொடர்ந்து நாவலர் மகா வித்தியாலய அதிபர் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் மங்கல விளக்கேற்ற உதவிச் செயலாளர் சைவப்புலவர் ஏ. அனுசாந்தன் திருமுறை ஓதினார். நல்லையாதீன சுவாமிகள் அருளாசி வழங்கினார்கள்.

தலைமையுரையைத் தொடர்ந்து முதன்மை விருந்ினர் கலாநிதி வேத நாதனின் பட்டமளிப்புப் பேருரை நடை பெற்றது. அதன்போது **யாழ். பல்கலைக் கழகம் சைவப்புலவர் பட்டத்தைப் பல் கலைக்கழக முதற்பட்டமாக அங்கீகரித்து எம். ஏ. சைவசித்தாந்தக் கற்கை நெறிக்குச் சைவப்புலவர்களை அனுமதித்துள்ளது.** என்ற நற்செய்தியைத் தெரிவித்தார். இதன் மூலம் சைவப்புலவர் சங்கம் நீண்டகாலமாக முயற்சித்து வந்த பல்கலைக்கழக அங்கீ காரம் கிடைத்த மைக்குச் சம்பந்தப் பட்டோர்க்குத் தலைவர் நன்றி தெரிவித்தார்.

2006, 2007ஆம் ஆண்டுகளில் சித்தியடைந்த 13 சைவப் புலவர்களுக்கும் 05 இளஞ் சைவப்புலவர்களுக்கும் பட்டங் களை வழங்கிக் கௌரவித்தார். செயலாளர் சைவப்புலவர் சு. செல்லத்துரை தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவுரையின்போது இங்கு வந்து பட்டம் பெற முடியாதுள்ள கொழும்பு, கண்டிப் பகுதிகளைச் சேர்ந்தோர்க்கு கொழும்பிலும் இலண்டன், ஜேர்மனியைச் சேர்ந்தோர்க்கு அவ்வவ் இடங்களிலும் பட்டமளிப்பு விழா நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்தார்.

உதவிப்பரீட்சைச் செயலாளர் நித்திய தசீதரனின் நன்றியுரையைத் தொடர்ந்து சைவப்புலவர் வி. ஏரம்பமூர்த்தியின் தேவாரத்துடன் கூட்டம் நிறைவுற்றது.

நண்பகல் விருந்துபசாரத்தைத் தொடர்ந்து பொதுக்கூட்டம், நடைபெற்றது. பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் உத்தியோகத்தர் களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் -

சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை

உபதலைவர் -

சைவப்புலவர் சாமித்தம்பி தில்லைநாதன்

சைவப்புலவர் வை. சி. சிவசுப்பிரமணியம்

செயலாளர் - சைவப்புலவர் கந்தசத்தியதாசன்

உ.செயலாளர் - ச.முகுந்தன்

பொருளாளர் - சி. நந்தகுமார்

தேர்வுச் செயலாளர் - சு. செல்லத்துரை

உ.தேர்வுச் செயலாளர் - நித்தியதசீதரன்

சமயப் பிரசார அமைச்சர் கா. கமலநாதன், பொன். சுகந்தன் செயற்குழு உறுப்பினர்கள் 8 பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## முதல் முறையாக ஜேர்மனியில் சைவப்புலவர் பட்டமளிப்பு விழா

2008.03.27 மாலை 6.30 மணிக்கு கும்மர்ஸ்பாக் குறிஞ்சிக் குமரன் ஆலய மண்டபத்தில் ஹம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சந்திரசேகர ரவீந்திர நாதக்குருக்கள் தலைமையில் இந்து நாகரிக சமஸ்கிருத விரிவுரையாளரும், திருமலை வில்லூன்றிக் கந்தசாமி தேவஸ் தான பிரதம குருவுமான வியாகரண சிரோன்மணி சிவஸ்ரீ பூர்ண - தியாகராஜக் குருக்கள் (B.A. Hons) அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

விசேட பூசை வழிபாட்டைத் தொடர்ந்து விருந்தினர்களால் மங்கல விளக்கேற்றப் பட்டது. திருமதி சந்திரா கோகிலன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். தலைமை யுரையின் பின் சிவஸ்ரீ வாகீஸ்வரக் குருக்களும் சிவஸ்ரீ பஞ்சாட்சர குருவாயூரக் குருக்களும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

ஆய்வாளர் திரு. சூ. யோ. பற்றிமாகரன் அவர்கள் பட்டமளிப்புரை நிகழ்த்த முதன்மை விருந்தினர் பட்டங்களை வழங்கினார். சைவப்புலவர் சின்னத்தம்பி தங்கரத்தினராசா அவர்களும் இளஞ் சைவப்புலவர் வைரவன் கோகிலன் அவர்களும் பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

சைவப்புலவர் சங்கத்தின் ஆதரவுடன் ஐரோப்பிய சிவநெறிக்கழகம் நடத்துகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ நெறித் தேர்வுக்குத் துணை நூலாகச் சைவப்புலவர் சு. செல்லத்துரையால் தொகுக்கப்பட்ட சிவநெறி எனும் நூல் வெளியீடும் நடைபெற்றது. ஆய்வாளர் சூ. பற்றிமாகரன் வெளியீட்டுரை நிகழ்த்தினார். சிவநெறி எனும் இந்நூல் பாலர்பிரிவு தொடக்கம் அதிஉயர் பிரிவு மாணவர்க்கும் பெரியவர்களுக்கும் உதவக்கூடிய படி முறையில் ஆக்கப்பட்டிருப்பதைப் பாராட்டினார். சிவநெறித் தேர்வுப் பரிசளிப்பும் சான்றிதழ் வழங்கலும் நடைபெற்றது. திருமதி கலாஸ்ரீ தங்கரத்தினராசாவின் நன்றியுரையுடனும், தேவாரத்துடனும் விழா நிறைவுற்றது. விழாவை சங்கத்தின் புலம்பெயர் நாடுகளின் இணைப்பாளர் செல்லத்துரை நாவரசன் அவர்கள் ஒழுங்கமைத்திருந்தார்கள்.

### முதல் முறையாக இலண்டனில் சைவப்புலவர் பட்டமளிப்புவிழா.

2008.03.28 மாலை 6.00மணி தொடக்கம் இலண்டன் சைவமுன்னேற்றச் சங்க நால்வர் மண்டபத்தில் பட்டமளிப்பு விழா நடை பெற்றது.

வோல்த்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலய பிரதமகுரு சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ பால சர்வேஸ்வரக் குருக்கள் B.A. (Hons) அவர்கள் தலைமையில் முதன்மைவிருந்தினராகச் ஸ்ரீலங்கா கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய ஆதீனகர்த்தாவும் பிரதம குருவுமான இராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள் அவர்களும், சிறப்பு மதிப்பளிப்புக்கு உரியவராக இலண்டன் ஈஸ்ராம் முருகன் ஆலய பிரதகுரு சிவஸ்ரீ கைலை நாகநாத சிவக்குருக்கள் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

விசேட பூசை வழிபாட்டைத் தொடர்ந்து பஞ்சபுராணம் ஓதப்பட்டது. திருமதி வேதநாயகி நகுலேஸ் வரக்குருக்கள் மங்கல விளக்கேற்றினார். சைவப்புலவர் சங்க இணைப்பாளரும், விழா அமைப்பாளருமான செல்லத்துரை நாவரசன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தலைமையுரையைத் தொடர்ந்து சட்டத்தரணி செ. சீறிக்கந்தராசா தொண்டர் திலகம் வ.இ. இராமநாதன், ஒலிபரப்பாளர் சீறீரங்கன், ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இவர்கள் தங்கள் உரையில் சைவப்புலவர் கற்கை நெறியையும் சிவநெறித் தேர்வையும் வரவேற்றுப் பாராட்டிப் பேசினார். பட்ட மளிப்பு விழாச் சிறப்பிதழ் ஒன்றும் வெளியிடப்பட்டது.

பட்டமளிப்புரையை ராஜராஜஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் வழங்கிப் பட்டங்களையும் வழங்கினார். இளஞ்சைவப் புலவர் பட்டத்தை விஜயதர்சினி ஜோதிநாதன் அவர்களும் சைவப்புலவர் பட்டத்தைக் கதிரித்தம்பி சிவானந்தன் அவர்களும் பெற்றுக் கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநெறித் தேர்வுத்திட்டமும், சிவநெறி நூல் வெளியீடும் நடைபெற்றன. "மேன்மை கொள்சைவநீதி" எனும் கவியரங்கிற்கு கவிஞர் அ. வேணு கோபாலன் தலைமை வகிக்க நியந்தன், லகரி, கஜிநாத் ஆகியகவிஞர்கள். கவிபாடினார்.

ஆசிரியர் நாகன் சூரி அவர்களின் நன்றியுரையுடனும் தேவாரத்துடனும் விருந்துபசாரத்துடனும் விழா நிறைவுற்றது.

**கொழும்பில் பட்ட மளிப்பு விழா**

2008.04.19 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் திருநெறித் தமிழ் மன்றம் நடத்திய உமாபதி சிவாசாரியார் குரு பூசையின் போது சைவப்புலவர் சங்கச் செயலாளர் சு. செல்லத்துரை "வந்தவா றெங்ஙனே போமாறேதோ" எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். அவ் விழாவுவில் இந்து சமய கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அவர்கள் சைவப்புலவர் பட்டங்களை வழங்கினார். திரு.அ. அரன்மகன் திருமதி. கேமலோசினி குமரன் ஆகியோர் சைவபுலவர் பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

**48வது ஆண்டு நிறைவு விழா**

2009.03.01 சர்வதாரி வருடம் மாசி மாதம் 17 ம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில் சங்கத்தின் 48 வது ஆண்டு நிறைவு விழாவும் பட்டமளிப்பும் பொதுக்கூட்டமும் ஆரம்பமாகின. அதற்கு முன்னர் சாந்தையர் மடம் கற்பக விநாயகர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடும் வித்தியாலய முன்றலில் உள்ள நாவலர் சிலைக்கு மாலை சூட்டி அஞ்சலியும் செய்யப்பட்டது.

விழாவுக்கு சங்கத்தின் தலைவர் மு.திருஞான சம்பந்தபிள்ளை தலைமையில் முதன்மை விருந்தினராக யாழ் பல்கலைக் கழக இந்து நாகரீகத்துறைத்தலைவரும் சைவசித்தாந்த முதுகலை மாணி க்கற்கை நெறி இணைப்பாளருமான கலாநிதி மா.வேதநாதன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

வித்தியாலய அதிபர் சு. சிவபாலசுந்தரம் அவர்கள் மங்கலவிளக்கேற்ற சைவப்புலவர் ஏ.அனுசாந்தன் அவர்கள் திருமுறை பாடினார்கள். செயலாளர் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் அவர்கள் வரவேற்புரை கூறினார்கள். நல்லை ஞானசம்பந்தர் ஆதீன சுவாமிகள் அருளுரை வழங்கினார். தலைமையுரையைத் தொடர்ந்து முதன்மை விருந்தினர் கலாநிதி மா. வேதநாதன் அவர்களின் பட்டமளிப்புப் பேருரை நடை பெற்றது. சைவப்புலவர்கள் பலர் யாழ்பல் கலைக் கழக சைவசித்தாந்த முதுகலை மாணிக் கற்கை நெறியைச் சிறப்பாகப் பூர்த்தி செய்திருப்பதைப் பாராட்டி இந்த வழியில் மேலும் பல சைவப்புலவர்கள் உருவாக வேண்டுமெனக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப்புலவர்கள் 5வேரும் இளஞ் சைவப்புலவர்கள் 5பேரும் பட்டம் பெற்றனர். முதுபெரும் சைவத்தமிழ் அறிஞரும் யாழ். பல்கலைக் கழகத்தால் கௌரவமுதுகலை மாணிப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டவருமான திரு. ஆ. சபாரத்தினம் எம். ஏ அவர்களுக்கு "சித்தாந்த வித்தகர்" பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்தி மாலை மரியாதையும் பாராட்டும் செய்யப்பட்டது.

"சித்தாந்தச் செந்நெறி செல்வோம்" எனும் தலைப்பில் சிறப்புக் கவியரங்கம் சைவப் புலவர் சு.செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது. இதில் சைவப்புலவர்கள் சியாமினி இராசரத்தினம், நித்தியதசீதரன், கு.சுமுகலிங்கம், பா.மீனலோஜினி, ச.முகுந் தன், கந்த சத்தியதாசன் ஆகிய கவிஞர்கள் கவிதை பாடினர்.

தேர்வுச் செயலாளர் சு. செல்லத்துரையின் நிறைவுரையுடனும் சைவப்புலவர் ச.முகுந் தனின் நன்றியுரையுடனும் திருமுறை யோதலுடன் விழா நிறைவுற்றது. விருந்துப சாரத்தைத் தொடர்ந்து பொதுக் கூட்டம் நடைபெற்றது.

2010 பொன்விழா ஆண்டு (1960-2010) ஆதலால் பொன்விழாவையும், விழா மலரையும் சிறப்பாகத் திட்ட மிட்டுச் செயற்படுத்த வேண்டுமென ஏகோபித்த கருத்து முன் வைக்கப்பட்டது. இதன்படி பொன்விழாமலரில் சங்கவரலாறு, சைவப்புலவர் அறிமுகம், சைவத்தின் தொன்மையையும், பேண்மை யையும், சைவ வாழ்வியலையும், சித்தாந்தத் தத்துவ விளக்கத்தையும், தெளிவாகக் கட்டக்கூடிய துறைசார்ந்த அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள் ஆகிய அம்சங்கள் இடம் பெறச் செய்ய வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

பொன்விழாப் போட்டிகளாக, பேச்சு, பண்ணிசை, நாடகம், வில்லிசை, புராண படனம், திருமுறைப்பாடல், அபிநய நடனம், கதாப்பிர சங்கம், சித்தாந்த அறிவுப் போட்டிகளை நாடளாவிய மட்டத்தில் நடத்திப் பிரிசு வழங்கவேண்டும். எனவும். முடிவு செய்யப்பட்டது.

பொன்விழா, மலர் வெளியீடு, சைவப் புலவர் பட்டமளிப்பு ஆகியவை இணைந்த விழாக்களை கொழும்பில் சங்கத்தின் ஸ்தாபகத்தலைவர் அமரர் சைவப்புலவர் வ. செல்லையா அரங்கிலும், மட்டக்களப்பில் ஸ்தாபகப் போசகர் அமரர் கா. அருணாசல தேசிக மணி அரங்கிலும், யாழ்ப்பாணத்தில் ஸ்தாபகச் செயலாளர் அமரர் சைவப்புலவர் ச. சச்சிதானந்த சிவம் அரங்கிலும். இலண்டனில் ஸ்தாபப் பொருளாளர் அமரர் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அரங்கிலும் நடத்துவதாக முடிவு செய்யப்பட்டது.

2010.10.03 இல் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறும் சைவப்புலவர் பொன்விழாச் சைவமாநாட்டு நிகழ்ச்சி நிரல் பின் இணைப்பில் உளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப்புலவர்கள் அறிமுகம்

**இதன் கீழ் உள்ள படங்களுக்குரியவர்களின் விபரங்களை இதனைத் தொடர்ந்து வரும் சைவப்புலவர்கள் விபரக் குறிப்பு எனும் பகுதியில் இப்படத்தில் உள்ள இலக்கத்தில் பார்க்கலாம்.**


01
சைவப்புலவர்
வ. செல்லையா


02
சைவப்புலவர்
ச. சச்சிதானந்தசிவம்


03
சைவப்புலவர்
தங்கம்மா அப்பாக்குட்டி


04
சைவப்புலவர்
இ. திருநாவுக்கரசு


05
சைவப்புலவர்
இ. செல்லத்துரை


06
சைவப்புலவர்
வ. கந்தசுவாமி


07
சைவப்புலவர்
கா. அருணாசல தேசிகமணி


14
சைவப்புலவர்
சு. செல்லத்துரை


18
சைவப்புலவர்
மு. திருஞானசம்பந்தபிள்ளை


21
சைவப்புலவர்
சி. அப்புத்துரை


23
சைவப்புலவர்
இரத்தினம் அப்புத்துரை


28
சைவப்புலவர்
த. இராசரத்தினம்


32
சைவப்புலவர்
சி. வேலாயுதம்


34
சைவப்புலவர்
பொன். தெய்வேந்திரன்


46
சைவப்புலவர்
சி. திருநாவுக்கரசு


47
சைவப்புலவர்
அ.கி. ஏரம்பமூர்த்தி


48
சைவப்புலவர்
தி. பத்தினியம்மா


52
சைவப்புலவர்
மு.சி. ஸ்ரீதயாளன்


54
சைவப்புலவர்
இராசையா ஸ்ரீதரன்



55
சைவப்புலவர்
செ. குணபாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப்புலவர்கள் அறிமுகம்




சைவப்புலவர்
செ. திருநாவுக்கரசு



சைவப்புலவர்
ஆ. கனகரத்தினம்



சைவப்புலவர்
சா. தில்லைநாதன்



சைவப்புலவர்
கார்த்திகேசு கமலநாதன்



சைவப்புலவர்
க. சத்தியதாசன்



சைவப்புலவர்
இ. நித்தியானந்தன்



சைவப்புலவர்
சி. நந்தகுமார்



சைவப்புலவர்
கோ.சொ. கோவிந்தராஜன்



சைவப்புலவர்
ப. ருத்ராதேவி



சைவப்புலவர்
செ. தயாளினி



சைவப்புலவர்
அ. நாகேஸ்வரி



சைவப்புலவர்
பா. மீனலோஜினி



சைவப்புலவர்
ம. ஜமுனா



சைவப்புலவர்
நி. தசீதரன்



சைவப்புலவர்
கோ. ஜெயந்தி



சைவப்புலவர்
வே. கமலேஸ்வரன்



சைவப்புலவர்
தி. தீபன்



சைவப்புலவர்
தி. றூபி



சைவப்புலவர்
பொ. சந்திரவேல்



சைவப்புலவர்
வை. பாலகிருஸ்ணன்



சைவப்புலவர்
வெ. சக்திவேல்



சைவப்புலவர்
கு. ஹேமலோஜினி



சைவப்புலவர்
கி. சிவமணி



சைவப்புலவர்
ச. முகுந்தன்



சைவப்புலவர்
ம. சிவலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப்புலவர்கள் அறிமுகம்



சைவப்புலவர்
லி. ரமணன்



சைவப்புலவர்
வை.சி. சிவசுப்பிரமணியம்



சைவப்புலவர்
கு. றஜீபன்



சைவப்புலவர்
சு. மகேஸ்வரி



சைவப்புலவர்
சு. விஜிதா



சைவப்புலவர்
ஆ. சிவகுமார்



சைவப்புலவர்
வை. துளசிமலர்



சைவப்புலவர்
தி. கலைச்செல்வி



சைவப்புலவர்
ஜெ. சிவக்கொழுந்து



சைவப்புலவர்
க. கவிதா



சைவப்புலவர்
ஜெ. ஆனந்தி



சைவப்புலவர்
அ. பிருந்தகுமாரி



சைவப்புலவர்
க. சிவாஜினி



சைவப்புலவர்
சு. தேவமனோகரன்



சைவப்புலவர்
க. சசிலேகா



சைவப்புலவர்
கு. சுரேஸ்குமார்



சைவப்புலவர்
கு. சுமுகலிங்கம்



சைவப்புலவர்
அ.து. சடாட்சரசிங்கம்



சைவப்புலவர்
இ. இராசேந்திரமலர்



சைவப்புலவர்
செ. பரமேஸ்வரன்



சைவப்புலவர்
த. குமரன்



சைவப்புலவர்
வெ. வரதிதாசன்



சைவப்புலவர்
த. சரோஜினிதேவி



சைவப்புலவர்
க. கஜரூபன்



சைவப்புலவர்
சா. ஜெயசித்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப்புலவர்கள் அறிமுகம்



சைவப்புலவர்
மு. மதிவதனி



சைவப்புலவர்
இ. சியாமினி



சைவப்புலவர்
ச. தையல்நாயகி



சைவப்புலவர்
ச. சிறிகாந்தன்



சைவப்புலவர்
ந. திருக்குமரன்



சைவப்புலவர்
சி. ஜனகா



சைவப்புலவர்
ந. புகன்ஸ்ரீந்திரன்



சைவப்புலவர்
பொன். சுகந்தன்



சைவப்புலவர்
க. சிவாநந்தன்



சைவப்புலவர்
பா. இந்திரசர்மா



சைவப்புலவர்
அ. அரன்மகன்



சைவப்புலவர்
சி. தங்கரத்தினராசா



சைவப்புலவர்
வை. தேவகி



சைவப்புலவர்
ஆ.சி. ராதாகிருஸ்ணன்



சைவப்புலவர்
த. சக்திவேல்



சைவப்புலவர்
சி. ரமணராசா



சைவப்புலவர்
த. வினோ



சைவப்புலவர்
சு. துஷ்யந்



சைவப்புலவர்
வை. கோகிலன்



சைவப்புலவர்
கோ. சந்திரா



சைவப்புலவர்
ஜோ. விஜயதர்சினி



சைவப்புலவர்
ச. ஜெயலட்சுமி



சைவப்புலவர்
ந. பிருந்தாவனிதை



சைவப்புலவர்
செ. கலாவாணி



சைவப்புலவர்
ஆ. தங்கமயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப்புலவர்கள் விபர அறிமுகக்குறிப்பு

இப்பொன்மலரில் சைவப்புலவர்கள் எல்லோருடைய விபரங்களையும் படத்துடன் வெளியிட வேண்டும் என்று தீர்மானித்திருந்தோம். அவரவர் முகவரிகளுக்குக் கடிதங்கள் அனுப்பியும், இலங்கையில் வெளிவரும் எல்லாத் தினசரிப் பத்திரிகைகளிலும் பலமுறை அறிவித்தல்கள் கொடுத்தும் தகவல் திரட்ட முயற்சித்தோம்.

இடம் பெயர்வுகள், புலம் பெயர்வுகள், முகவரி மாற்றங்கள் முதலான பல காரணங்களால் எல்லோருடைய விபரங்களும் கிடைக்கவில்லை.

கிடைத்த விபரங்களையும், படங்களையும், 2002இல் வெளியிடப்பட்ட சைவப்புலவர் அறிமுக நூலில் உள்ள விபரங்களையும் சேர்த்து 188 சைவப்புலவர்களின் விபரக் குறிப்புகள் இங்கு தரப்படுகின்றன.

### 1. சைவப்புலவர் வயிரவப்பிள்ளை செல்லையா (1920.04.15 - 2004.03.06)

யாழ். சித்திமேழி, இளவாலையை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர், வயிரவப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுதல்வன். 1952 இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சென்னைச் சர்வகலாசலையில் வித்துவான் பட்டம் பெற்றவர். பயிற்றப்பட்ட ஆசிரியராயும் அதிபராயும் (S.L.P.S. 11) சேவை செய்து ஓய்வு பெற்றவர். அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தை நிறுவி 1960 - 1973 காலப்பகுதியில் தலைவராயும், அதன்பின் போஷகராயும் இருந்த பெருமைக்குரியவர்.

சைவப்புலவர்மணி, ஞானசிரோன்மணி முதலான பத்துக்கு மேற்பட்ட கௌரவப் பட்டங்களைப் பெற்றவர். மெய்கண்டார் ஆதீன மேலாளராயும் சைவ நீதி சஞ்சிகையின் கௌரவ ஆசிரியராயும் தொண்டாற்றியவர்.

நாவலர் நெறியில் நால்வர், ஈழத்துச் சித்தர் சிரோன்மணிகள் முதலான பல நூல்களின் ஆசிரியர் 06.03.2004 இல் அமரர் ஆகிவிட்டார்.

### 2. சைவப்புலவர் சண்முகம் சச்சிதானந்தசிவம் - 1920.06.26

யாழ். ஏழாலை மேற்கு ஏழாலையை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர். 1952 இல் சைவப் புலவர் பட்டம் பெற்றவர். சென்னைச் சர்வகலாசாலை வித்துவான் பட்டமும், மதுரைப் பண்டிதர் பட்டமும் பெற்றவர். பயிற்றப்பட்ட ஆசிரியராயும் அதிபராயும் சேவை செய்து ஓய்வு பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தை நிறுவியவர்களில் ஒருவர் 1960 - 1973 வரை செயலாளராயும் 1997 - 1998 இல் தலைவராயும் இருந்த பெருமைக்குரியவர்.

கதாப்பிர சங்கம், புராணபடனம், பண்ணிசை, சொற்பொழிவுகள் மூலம் சைவப்பணி செய்தவர், அமரராகிவிட்டார்.

**3. சைவப்புலவர் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி (1925.01.07 - 2008.06.15)**

யாழ் தெல்லிப்பழையைச் சொந்த இடமாகக் கொண்டவர். அப்பாக்குட்டி தையற்பிள்ளை தம்பதிகளின் அருந்தவப் புதல்வியாகப் பிறந்தவர். 1958இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். பண்டிதர் பட்டத்துடன் யாழ். பல்கலைக்கழகத்தின் கௌரவ கலாநிதிப்பட்டமும் பெற்ற பெருமைக்குரியவர். சைவப்புலவர் சங்கத்தை நிறுவியவர்களில் ஒருவர். 1960 - 1973 வரை பொருளாளராயும் அதன்பின் போஷகராயும் இருந்த பெருமைக்குரியவர். பண்டிதர் பட்டத்துடன் பயிற்றப்பட்ட ஆசிரியராய்ப் பணிசெய்து ஓய்வு பெற்றவர்.

அகில உலகத்திலும் நன்கறியப்பட்ட சைவத் தமிழ்ப் பேரறிஞரான இவர் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராயிருந்து ஒரு தலைமுறைக்கு மேலாகச் செய்த அறப்பணிகள் அளவிடற்கரியன.

சிவத்தமிழ்ச் செல்வி தெய்வத்திருமகள் முதலாக இவர்பெற்ற கௌரவப்பட்டங்கள் எண்ணிலடங்க. பெருமைக்குரிய பல நூல்களின் ஆசிரியராயும், பலநூல்களின் கதாநாயகியாகவும் பெருமை பெற்றவர். ஆனி மாத விசாக நட்சத்திரம் இவருடைய குருபூசைத் தினமாகும்.

**4. சைவப்புலவர் இராமுப்பிள்ளை திருநாவுக்கரசு. (1923.03.17 - 1996.07.09)**

யாழ் இணுவிலைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1958இல் சைவப் புலவர் பட்டம் பெற்றவர். சென்னைச் சர்வகலாசாலை வித்துவான் பட்டமும், மதுரைப் பண்டிதர் பட்டமும் பெற்றவர். சங்கீதத்திலும் சங்கீத கலாவித்தகர் பட்டம் பெற்றவர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் சைவப்பிரகாச வித்தியாலயத்தின் புகழ் பூத்த அதிபராயிருந்து ஓய்வு பெற்றவர். சைவப்புலவர் சங்கத்தின் தலைவராய் 1985 முதல் பல ஆண்டுகள் பணிசெய்தவர். 1962 தொடக்கம் நாவலர் தர்மகர்த்தா சபையின் செயலாளராயிருந்தவர்.

கதாப்பிரசங்கம், சொற்பொழிவு, செய்யுள் இயற்றலில் புகழ் பெற்றவர். பல சமய சமூக நிறுவனங்கள் ஊடாகக் காத்திரமான பணிகள் பல செய்தவர். 09.07.1996 இல் அமரராகிவிட்டார்.

**5. சைவப்புலவர் இளையதம்பி செல்லத்துரை 1927.06.03**

யாழ் 'வாணியகம்' சிறுப்பிட்டி, நீர்வேலியைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1959இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். மதுரைப் பண்டிதர், சித்தாந்த பண்டிதர் பட்டங்களுடன் நல்லாசிரியராகப் பணி புரிந்து ஓய்வு பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப்புலவர் சங்கத்தை நிறுவியவர்களில் ஒருவர். 1960 - 1995 வரை பரீட்சைச் செயலாளராயிருந்து தொடர்ந்து போஷகராகப் பணியாற்றுகின்றார். இன்று சைவப்புலவர் சங்கத்தின் பிதாமகராகப் போற்றப்படுகின்றார்.

சைவசித்தாந்த நூல்களான உண்மை விளக்கம், கொடிக்கவி, வினா வெண்பா, உண்மை நெறிவிளக்கம், திருவுந்தியார் முதலான நூல்களுக்கு உரையெழுதி வெளியிட்டுச் சைவ சித்தாந்தம் படிப்போர்க்குப் பேருதவி புரிந்தனர். அத்துடன் தாமோதரம், செந்தமிழ் வளர்த்த சி.வை. தாமோதரம் பிள்ளை ஆறுமுகத்தம்பிரான் இருவர், திருவிழாவாற்றுப்படை, இனியார் இருபா இருபது, காதலால் நோதல் முதலான நூல்களின் ஆசிரியரும் ஆவார். அரசினர் நூல்பதிப்புத் திணைக்களத்தில் எழுத்தாளராகப் பணியாற்றிய இவர், பல சைவ சமயப் பாட நூல்களையும் எழுதியுள்ளார். சைவப்புலவர் சங்கத்தால், சைவ பூஷணம், சைவப் புலவர் மணி ஆகிய பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றவர்.

**6. சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமி - 1931.01.18**

யாழ். 125, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்டவர். 1961 இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். அத்துடன் சித்தாந்த பண்டிதர் பட்டமும், சைவ சமய விசேட பயிற்சியும் பெற்றவர். நல்லாசிரியராயும், உப அதிபராயும் இருந்து ஓய்வு பெற்றவர்.

சைவப்புலவர் சங்கத்தின், தலைவராகவும், செயலாளராகவும், பரீட்சைக் காரியதரிசியாகவும் பல ஆண்டு காலம் பணியாற்றியவர்.

யாழ். சைவபரிபாலன சபையின் பரீட்சைக் காரியதரிசியாகவும், தலைவராகவும் பல்லாண்டுகள் பணிசெய்து அரும் பெரும் சாதனைகள் படைத்தவர். நாவலர் தர்மகர்த்தா சபையின் உறுப்பினராகவும் நாவலர் ப. நோ. சங்கம் முதலான பல சமய சமூக நிறுவனங்களின் தனிப் பெருந்தலைவராயிருந்தவர். யாழ். பல்கலைக்கழகத்தால் கலா நிதிப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். பவளவிழாக்கண்டு கந்தபவள மலர் நாயகனாகப் போற்றப்பட்டவர்.

சிவநெறிச் செம்மல், சிவனடியார் மணி, சிவநெறிக்காவலர், சமூக திலகம், சித்தாந்த சிரோமணி முதலான கௌரவப்பட்டங்களுடன் சைவப்புலவர் சங்கத்தால் சைவபூஷணம் எனும் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். அமரராகிவிட்டார்.

**7. சைவப்புலவர் கா. அருணாசலதேசிகமணி (மூத்த சைவப்புலவர்) 1988 - 1969**

மட்டக்களப்பு ஆனைப்பந்தியில் பிறந்து செயற்கரும் சைவத்தமிழ்ப் பணிகள் செய்த பெருமைக்குரியவர். காசிநாதசாஸ்திரியார் அன்னப்பிள்ளை அம்மையார் தம்பதிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதல்வன், பொன்னம்மா அம்மையாரை வாழ்க்கைத் துணையாகக் கொண்டு ஐம்பது ஆண்டு காலம் இல்லற வாழ்வில் சைவவாழ்வு வாழ்ந்து காட்டியவர்.

மட்டக்களப்பு சுதேச இயக்கத்தால் தோற்றுவிக்கப்பட்டவராயும் அதன் பங்காளராயும் பெரும் பணி புரிந்தவர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் வழியில் நின்று கிழக்கு மாகாணத்தில் பெரும் பணி புரிந்தவர். சிறந்த சொற்பொழிவாளராக மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒவ்வொரு ஊரிலும் தனது 15 வயது முதல் இறக்கும் வரை 65 ஆண்டுகள் தொண்டு செய்து மறுமலர்ச்சி ஏற்படுத்தியவர், வித்துவான் சரவணமுத்தன், பண்டிதர் மயில்வாகனனார் ஆகியோருடன் இணைந்து மரபுவழிப் புலமையாளராய் சைவத் தமிழ்ப் பணிபுரிந்தவர்.

இவர் சைவசமய போதினிகள், சைவ இலக்கிய கதா மஞ்சரி, இந்து சமய மாதமகத்துவ மான்மியம், சைவசிந்தாமணி, சித்தாந்த சிரோமணி, முருகன் மகத்துவ நுட்பம் முதலான பதினைந்துக்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். சைவக் களஞ்சியம் 12 பாகங்களாக எழுதியுள்ளார். தனது சைவத்தமிழ்ப் பணிக்குப் பொருத்தமாக ஆசிரியத் தொழிலை மேற்கொண்டு ஆனைப்பந்தி சைவப் பாடசாலைத் தலைமை ஆசிரியராக அர்ப்பணிப்புடன் சேவை செய்து 1949இல் ஓய்வு பெற்றவர்.

1964 ஆவணியில் மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெற்ற சைவப்புலவர் மாநாட்டில் இவர் முதன்மை விருந்தினராகக் கௌரவிக்கப்பட்டார். "சைவ சித்தாந்த சிகாமணி" எனும் கௌரவப் பட்டம் வழிக்கிப் பாராட்டப் பெற்றார். 1969இல் அமரத்துவம் அடைந்தார்.

### 8. சைவப்புலவர் இ. கிருஷ்ணபிள்ளை

மட்டக்களப்பு, கல்லடியைச் சொந்த இடமாகக் கொண்டவர். மதுரைப் பண்டிதர் பட்டம் பெற்றவர். அதிபராயிருந்து ஓய்வு பெற்றவர். 1960இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். 1963 - 1973 வரை சங்கத்தின் உபதலைவராக இருந்துள்ளார், அமரராகிவிட்டார்.

### 9. சைவப்புலவர் வ. சித்திவிநாயகம்

மட்டக்களப்பு மத்தியைச் சேர்ந்தவர். 1960இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். 1960 - 1973 வரை சங்கத்தின் உபதலைவராயிருந்தவர். ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர், அமரராகிவிட்டார்.

### 10. சைவப்புலவர் வ. செல்லத்துரை

மட்டக்களப்பு குருக்கள் மடத்தைச் சேர்ந்தவர். சைவப்புலவர் பட்டத்துடன் பண்டிதர் பட்டமும் பெற்றவர். அதிபராயிருந்து ஓய்வு பெற்றவர். அமரராகிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. **சைவப்புலவர் இ. வடிவேல்**

திருகோணமலை நகரைச் சொந்த இடமாகக் கொண்டவர். சைவப்புலவர் பட்டத்துடன் பண்டிதர் பட்டமும் பெற்றவர் 1960 - 1973 வரை சங்கத்தின் உபதலைவராயிருந்துள்ளார். பலநூல்களின் ஆசிரியர். பிரபலமான சமய, சமூக சேவை செய்தவர். அமரராகிவிட்டார்.

12. **சைவப்புலவர் இ. நவரத்தினம்**

யாழ். உரும்பிராயைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1960 இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். பண்டிதர் பட்டத்துடன் பயிற்றப்பட்ட ஆசிரியராயிருந்து ஓய்வு பெற்றவர். அமரராகிவிட்டார்.

13. **சைவப்புலவர் வி.எஸ். சுந்தரலிங்கம்**

யாழ். கோப்பாயைச் சேர்ந்தவர். 1963இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். அதிபர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர். அமரராகிவிட்டார்.

14. **சைவப்புலவர் சுப்பிரமணியம் செல்லத்துரை - 1938.03.28**

யாழ். பத்தாவத்தை இளவாலையைச் சொந்த இடமாகக் கொண்டவர். சுப்பிரமணியம் பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் மகனாவார். 1963இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். அதிபர் (S.L.P.S.I) சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர். சைவப்புலவர் சங்கத்தில் 1964 முதல் பணி அமைப்பாளர், உப தலைவர், செயலாளர் பதவிகள் வகித்து 2006 முதல் தேர்வுச் செயலாளராகப் பணிபுரிகின்றார்.

வாக்கும் வாழ்வும், கோமாதா, வள்ளல் ஏழூர், சிவநெறி, அரங்கப் படையல் முதலான பலநூல்களின் ஆசிரியர், புராணபடனம், சொற்பொழிவு செய்பவர், நாடகக்கலைஞரும் உரையாசிரியருமாவார். கலாபூஷணம், கலை ஞானகேசரி, சிவநெறிப்புரவலர் முதலான பல கௌரவப் பட்டங்களைப் பெற்றவர். தற்போது தேர்வுச் செயலாளராகப் பணிபுரிகின்றார்.

15. **சைவப்புலவர் செல்வி சி. சிந்தாமணி B.A**

யாழ். ஐயனார் கோயிலடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர், 1963 சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார்.

16. **சைவப்புலவர் செல்வி. கு. மனோன்மணி**

யாழ். அளவெட்டி மத்தியைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1963 இல் சைவப்புலவர் தேர்வில் முதற் பிரிவிற் சித்தியடைந்து தங்கப் பதக்கப் பரிசு பெற்றவர். பண்டிதர் பட்டமும் பெற்று ஆசிரியராயிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. சைவப்புலவர் நாகமுத்தர் விசுவலிங்கம் J.P. - 1921.08.01

யாழ். நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1964இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர். பிரசித்த நொத்தாரிஸ் ஆகவும், சமாதான நீதவானாகவும் சேவை செய்தவர். நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காலர் சபை உறுப்பினராகவும், செயலாளராகவும் பணி புரிந்தவர்.

நயினாதீவு பிரசைகள் குழுத்தலைவர், மோட்டார்வள்ள ஐக்கிய சங்கச் செயலாளர் முதலான பதவிகளில் இருந்து சமூகப்பணியும் ஆற்றியவர்.

18. சைவப்புலவர் முத்துக்குமாரசாமி திருஞானசம்பந்தபிள்ளை - 1938.12.25

யாழ். வேலிணையைப் பிறப்பிடமாகவும், 153 கே.கே.எஸ் வீதி, கொக்குவிலை வாழ்விடமாகவும் கொண்டவர். 1964இல் சைவப்புலவர் தேர்வில் முதற்பிரிவில் முதலாவதாகச் சித்தியெய்தித் தங்கப் பதக்கப் பரிசு பெற்றவர். அதிபர் சேவை (S.L.P.S. - 1) யில் இருந்து ஓய்வு பெற்றவர். சைவப்புலவர் சங்கத்தில் 1985 - 1999 வரை செயலாளராயும் 1999 முதுல் இற்றைவரை தலைவராயும் இருந்து அளப்பரும் பணிசெய்து வருகின்றார். சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றவர். சைவ சமயபாட ஆசிரிய ஆலோசகராயும் இருந்தவர். சமயச் சொற்பொழிவாளராயும் வானொலிப் பேச்சாளராயும் விளங்குகின்றார்

சைவ சித்தாந்த விளக்கம், சைவ சித்தாந்த அளவைகள் முதலான பல நூல்களின் ஆசிரியர். யாழ். பல்கலைக்கழக எம்.ஏ. சைவ சித்தாந்த வருகை விரிவுரையாளராகவும் விளங்குகிறார்.

19. சைவப்புலவர் ச. கனகசபாபதி

யாழ். அச்சுவேலியைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1964 இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார்.

20. சைவப்புலவர் த. சுவாமிநாதன்

யாழ். மிருசுவிலைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1964இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார்.

21. சைவப்புலவர் ஸ்ரீரங்கம் அப்புத்துரை 1928.04.23

யாழ். மயிலங்கூடல், இளவாலையைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1965இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். பண்டிதர் பட்டமும் பெற்றவர். அதிபர் சேவையில் (S.L.P.S. - 1) இருந்து ஓய்வு பெற்றவர்.

நற்சிந்தனை நாற்பது, தமிழர் திருமணம், அமுதமொழி, நகுலேசர் நான்மணிமாலை முதலான இருபத்தைந்துக்கு மேற்பட்ட நூல்களுக்கும் பல மலர்கள், சஞ்சிகைகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியராவார். இலங்கை அரசால் கலாபூஷண விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். இவரது பல நூல்கள் பரிசு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**22. சைவப்புலவர் க. சிற்றம்பலம்**

யாழ். வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1965இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். அதிபர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். சைவப் புலவர் சங்கத்தில் உபதலைவராயிருந்துள்ளார். புகழ்பெற்ற விஷகடி வைத்தியராவார்.

**23. சைவப்புலவர் திருமதி இரத்தினம் அப்புத்துரை 1937.03.17**

யாழ். புன்னாலைக் கட்டுவனைப் பிறப்பிடமாகவும், மயிலங்கூடல் இளவாலையை வாழ்விடமாகவும் கொண்டவர். 1965இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவராவார். பண்டிதர் பட்டத்துடன், சைவ சமய விசேட பயிற்சியும் பெற்ற நல்லாசிரியையாயிருந்து ஓய்வு பெற்றுள்ளார். பரிசு பெற்ற பல குழந்தைப்பாடல் நூல்கள் மற்றும் சைவசமய பாடப்பயிற்சி நூல் ஆசிரியராவார்.

**24. சைவப்புலவர் சி. அன்னலட்சுமி**

யாழ். அளவெட்டியைச் சேர்ந்தவர்

**25. சைவப்புலவர் சி. பொன்மணி**

யாழ். ஏழாலையைச் சேர்ந்தவர்

**26. சைவப்புலவர் க. தங்கராசா**

யாழ். ஏழாலையைச் சேர்ந்தவர். பண்டிதருமாவார். அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர். அமரராகிவிட்டார்.

**27. சைவப்புலவர் க. ஜெயமணி**

யாழ். தெல்லிப்பழையைச் சொந்த இடமாகக் கொண்டவர்.

**28. சைவப்புலவர் தம்பிப்பிள்ளை இராசரத்தினம் 1937.07.08**

யாழ். இருபாலை. கோப்பாயைச் சொந்த இடமாகக் கொண்டவர் 1965இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். பண்டிதர் பட்டமும் பெற்றுச் சைவ சமய விசேட பயிற்சியும் பெற்றுள்ளார். ஆசிரியராகச் சேவை செய்து ஓய்வு பெற்றபின் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராகவும் (1998 - 2004) பணிபுரிந்துள்ளார்.

**29. சைவப்புலவர் சி. இராசேஸ்வரி**

யாழ். நகரைச் சொந்த இடமாகக் கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 30. சைவப்புலவர் நாகம்மா சீவரத்தினம் 1939.02.12

யாழ். கரவெட்டியைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1966இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். சைவப்புலவர் தேர்வில் முதற்பிரிவில் முதலாவதாகச் சித்தியடைந்து தங்கப் பதக்கப் பரிசு பெற்றவர்.

### 31. சைவப்புலவர் பிரமஸ்ரீ வை. இராமகிருஷ்ணஐயர்.

யாழ். புளியங்கூடலைச் சொந்த இடமாகக் கொண்டவர் 1966 சைவப்புலவர் பட்டம் பெற்றவர். ஆசிரியர் சேவை செய்தவர். நாவலப் பிட்டியில் சைவப்புலவர் வகுப்பு நடத்திப் பல சைவப் புலவர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். திருவுந்தியாருக்கு உரை எழுதி வெளியிட்டுள்ளார்.

### 32. சைவப்புலவர் சிதம்பரப்பிள்ளை வேலாயுதம் 1936.11.08

யாழ். திருத்தணிகை பாடசாலை வீதி, வதிரி, கரவெட்டியைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1966இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். ஆசிரியராயும், ஆசிரிய ஆலோசகராயும் அதிபராயும் (S.L.P.S. - 1) இருந்து ஓய்வு பெற்றவர். சிறந்த இசைச் சொற்பொழிவாளர்

புராணபடனம், சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவதுடன் புராணபடனம் பழக்குவதிலும் வல்லவர். கவிதை, கட்டுரை எழுதல் முதலான ஆற்றலும் படைத்தவர்.

### 33. சைவப்புலவர், வேலுப்பிள்ளை முத்துலிங்கம் 1941.05.05

யாழ். வட்டுகிழக்கு, சித்தங்கேணியை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர். 1967ல் சைவப்புலவர் பட்டம் பெற்றர். பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். புராணபடனம் சைவப்பிரசங்கம் செய்பவர்.

### 34. சைவப்புலவர் பொன். தெய்வேந்திரன் B.A. (S.L.E.A.S. - 2) - 1933.01.10

யாழ். பன்னாலை தெல்லிப்பழையைச் சொந்த இடமாகக் கொண்ட பொன்னம்பலம் பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் புத்திரரும் ஜெயமணியின் கணவரும் ஆவார். 1966 இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சங்கீத நுண்கலை மாணிப்பட்டத்துடன் விசேட ஆங்கிலப் பயிற்சியும் பெற்றவர். ஆசிரியராயும், கோப்பாய் ஆசிரிய கலாசாலை சங்கீத விரிவுரையாளராயும், உப அதிபராயும் இருந்து ஓய்வு பெற்றவர். அரச பரீட்சைத்திணைக்கள பிரதான கட்டுப்பாட்டுப் பரீட்சகராக (நுண்கலை) இருந்தவர் மாணவப் பருவம் முதலாக சங்கீதம், பண்ணிசை, நாடகம், முதலானவற்றில் பல தங்கப்பதக்கப் பரிசுகளைப் பெற்றவர். கர்நாடக சங்கீதம் - பண்ணிசைக் கச்சேரிகள் செய்பவர். கலாபூஷணம், பண்ணிசை வேந்தன். கலை மாமணி முதலான கௌரவப் பட்டங்களைப் பெற்றவர். பிரபல பத்திரகை எழுத்தாளரும் பல நாடக, இலக்கிய நூல்களின் ஆசிரியரும் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. **சைவப்புலவர் க. தங்கேஸ்வரியம்மா** - நாவலப்பிட்டி

36. **சைவப்புலவர் க. நல்லரத்தினம்** - மண்டூர்

37. **சைவப்புலவர் த. சுந்தரலிங்கம்** - நாவலப்பிட்டி

38. **சைவப்புலவர் பொன். தங்கவேலு** - நாவலப்பிட்டி

39. **சைவப்புலவர் வெ. தம்பிராசா** - காத்தான்குடி

40. **சைவப்புலவர் சி. பொற்பதி** - சரசாலை

41. **சைவப்புலவர் செ. விஜயம்** - நாவலப்பிட்டி

42. **சைவப்புலவர் வே. இராசலட்சுமி** - நாவலப்பிட்டி

43. **சைவப்புலவர் சி. கந்தையா** - ஏழாலை

44. **சைவப்புலவர் க. வேல்முருகு** - மட்டக்களப்பு

45. **சைவப்புலவர் க. பரமேஸ்வரி** - தெல்லிப்பழை

46. **சைவப்புலவர் சிவசிதம்பரம் திருநாவுக்கரசு - 1936.09.14**

யாழ். சித்திமேழி, இளவாலையைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1969 இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். அரச கணக்காளர் பதவி வகித்து ஓய்வு பெற்றவர். தமிழ், ஆங்கிலம், சிங்களம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் 1, 2, 3, 4 எனும் நூல்களின் ஆசிரியர் ஆவார். சொற்பொழிவு, கதாப் பிரசங்கம், பண்ணிசை செய்ய வல்லவர்.

47. **சைவப்புலவர் அ. கிருஷ்ணசாமி, ஏரம்பமூர்த்தி**

யாழ், மீசாலை மேற்கு, மீசாலையைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1969இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சங்கீதபூஷணம் பட்டம் பெற்று இசையாசிரியராகச் சேவை செய்து ஓய்வு பெற்றவர். சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். இவரது தெய்வீக இசைப்பாடல்கள் எனும் நூல் பரிசும் பாராட்டும் பெற்றுள்ளது. சங்கீத பண்ணிசைக் கச்சேரி, இன்னிசைக் கதாப்பிரசங்கம் செய்ய வல்லவர், அரசின் கலாபூஷணம் விருதும் பெற்றுள்ளார்.

48. **சைவப்புலவர் பத்தினியம்மா திலகநாயகம் B.A. (Hons) (S.L.A.S. - 1)**

சிதம்பரப்பிள்ளை பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் புத்திரி. யாழ், கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் பிடாரியம்மன் கோயிலடி ஆனைக்கோட்டையை வாழ்விடமாகவும் கொண்டவர். 1965இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். இலங்கை நிர்வாக சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 1இல் யாழ். மேலதிக அரசாங்க அதிபராயிருந்து ஓய்வு பெற்றுள்ளார். பால பண்டிதர் பட்டமும் பெற்றவர். நிஜத்தின் நிழல் (சிறுகதைத் தொகுதி) மழலை அமுதம், தேன்வதை (கவிதை நூல்கள்) வலிகாமம் வடக்குப் பிரதேசமலர் ஆகியவற்றின் ஆசிரியர் ஆவார். தனது கணவர் நினைவாக - "இசையின் இமயம் திலக நாயகம்" எனும் இசை நூலையும் வெளியிட்டுள்ளார். வறியோர்க்கு உதவுதல், சிறுவர்களைக் கற்க வைத்தல் முதலான பல அறப்பணிகள் செய்து வருகிறார்.

**49. சைவப்புலவர் மரகதவல்லி** - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

**50. சைவப்புலவர் சி. கண்மணி** - தையிட்டி, காங்கேசன்துறை

**51. சைவப்புலவர் சி. வைத்தியலிங்கம்** - கொழும்பு 12.

**52. சைவப்புலவர் சின்னத்தம்பி ஸ்ரீதயாளன் B.A. PGDE M. Phil - 1948.02.28**

யாழ். கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சின்னத்தம்பி பாக்கியம் தம்பதிகளின் மகனும் வசந்தாவின் கணவரும் ஆவார். 1988இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். ஆசிரியராகவும் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் கல்விச் சேவை செய்தவர். இந்து கலாசாரத்திணைக்கள உதவிப் பணிப்பாளராகவும் சேவை செய்துள்ளார். தற்போது மதுரை காமராசர் பல்கலைக்கழக இலங்கைக் கிளையின் நிர்வாகப் பணிப்பாளராகப் பணிபுரிகின்றார்.

கதாப்பிர சங்கம் செய்வதில் தனக்கெனத் தனிமுத்திரை பதித்தவர். பல்துறைக் கலைவிற்பனர். அர்த்தமுள்ள சம்பிரதாயங்கள், கட்டுரைக்கலசம் முதலான பல நூல்களின் ஆசிரியர், புலம்பெயர் நாடுகளில் பல நிகழ்ச்சிகளைச் செய்துள்ளார். இலங்கை அரசின் கலாபூஷணம் விருதுடன், சிவஞானதுரந்தரர் அருட்கலை அரசு, முதலானபல கௌரவப்பட்டங்களையும் பெற்றுள்ளார்.

**53. சைவப்புலவர் நாகர். கந்தையா தங்கரத்தினம் (1935.06.08 - 1999.04.09)**

யாழ். கலை நகர், சித்தங் கேணியைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1969இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். நல்லாசிரியராகவும் அதிபராகவும் இருந்து ஓய்வு பெற்றவர். 1985 - 1995 காலப்பகுதியில் சைவப்புலவர் சங்கத்தின் பொருளாளராயிருந்து பணிபுரிந்தவர். சைவ சித்தாந்த நல்லறிஞர், சைவ சித்தாந்த வித்தகர் முதலாய கௌரவப் பட்டங்களைப் பெற்றுள்ளார். நகுலன் எனும் புனைபெயரில் ஆக்க இலக்கிய எழுத்தாளராகவும் விளங்கியவர். கன்னிப்பெண், இப்படி எத்தனை நாட்கள் ஆகிய சிறுகதைத் தொகுதிகளின் ஆசிரியருமாவார். அமரராகிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 54. சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் - 1950.01.15

யாழ். நாச்சிமார் கோயிலடி வண்ணார் பண்ணையைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1972இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். உதயன் பத்திரிகையில் கடமையாற்றியவர். கட்டுரை கவிதைகள் செய்திகள் எழுதுவதன் மூலம் சைவத்தமிழ்ப் பணி ஆற்றுபவர். சைவப்புலவர் சங்கப் பொருளாளராக 1998 - 2002 காலப்பகுதியில் கடமையாற்றியவர். அறநெறிப்பாடசாலை ஆசிரியர், பாலர் கல்விக்கழக உபதலைவர் முதலான சமூகப்பணிகளும் செய்து வருபவர். சிறந்த வில்லிசைக் கலைஞனுமாவர். வில்லிசை நூலின் ஆசிரியரும் திருவாசகம் முதலான பல நூல்களின் பதிப்பாசிரியரும் ஆவார். கவிமணி, சிவநெறிக்கலாநிதி, முதலான கௌரவப் பட்டங்களும் பெற்றுள்ளார்.

## 55. சைவப்புலவர் செல்லத்துரை குணபாலசிங்கம் B.A. - JP - 1949.09.05

யாழ் மடத்தடி தெல்லிப்பழையைச் சொந்த இடமாகக் கொண்டவர். செல்லத்துரை சின்னம்மா தம்பதியரின் புத்திரரும் இந்திராணியின் கணவரும் ஆவார். 1972இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். ஆசிரியராயும் அதிபராயும் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். வீரகேசரிப் பத்திரிகையில் உதவி ஆசிரியராகப் பணிபுரிகின்றார். இசைச் சொற்பொழிவு, இசை நாடகம் முதலாம் கலைத்துறைகளில் புகழ் படைத்தவர். கதாகானமணி, முத்தமிழ் வித்தகன், நாடகமணி முதலான பல கௌரவப்பட்டங்களைப் பெற்றுள்ளார்.

## 56. சைவப்புலவர் செல்லையா திருநாவுக்கரசு B.A., M.A, Ph.D, MEd - 1950.09.24

யாழ். அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தைச் சொந்த இடமாகக் கொண்டவர். செல்லையா இலட்சுமி தம்பதிகளின் புத்திரரும், விஜயலட்சுமியின் கணவருமாவார். 1991 இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராக (S.L.E.A.S. - III) பணி புரிகின்றார். கவிதை, கட்டுரை, நூலாக்கம், நாடகம், கலைத்துறை, சமயச் சொற்பொழிவு, சைவ சமயக்கல்வி, யூட்டல், இலவசக் கல்விச் சேவை, உள்ளூர்க்கிராம மன்றச் செயற்பாடுகளில் முன்னணியிற் திகழ்கின்றார். செய்யுள் தொகுப்பு (1995) தமிழ் பாடநூல் (2010) க.பொ.த உயர்தரம், டானியலின் எழுத்துக்கள் (2004) முதலான நூல்களை எழுதியுள்ளார். அத்துடன் பல கனதியான ஆய்வுக் கட்டுரைகளையும் ஆக்கியுள்ளார். 'கலைவாரிதி" எனும் கௌரவப்பட்டம் பெற்றுள்ளார்.

## 57. சைவப்புலவர் செல்லத்துரை கலாவாணி 1955.10.10

யாழ். வாணியகம் சிறுப்பிட்டி, நீர்வேலியைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1995 இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார் பயிற்சி பெற்ற இந்து சமய ஆசிரியராகப் பணிபுரிகின்றார். ஆலயத் தொண்டுகள், மாதர் சங்கப் பணிகளில் ஈடுபாடு உள்ளவர். மனைப் பொருளியலிலும் திறமை படைத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 58. சைவப்புலவர் ஆறுமுகம் கனகரத்தினம்

யாழ். சுழிபுரம் கிழக்கைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1992 இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சைவசமய விசேட பயிற்சி பெற்ற ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். சைவ சமயச் சொற்பொழிவு, புராணபடனம், திருமுறை ஓதல் முதலான பணிகளைச் செய்து வருகின்றார். சுழிபுரம் ஐம்பு நாதேஸ்வர தேவஸ்தானச் செயலாளராகவும் சேவை செய்கின்றார்.

## 59. சைவப்புலவர் சாமித்தம்பி தில்லைநாதன் B.A. Dip 1948.07.24

மட்டக்களப்பு மண்டூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சாமித்தம்பி மாரிமுத்து தம்பதிகளின் மகனும் தவமணியின் கணவரும் ஆவார். தற்போது 35/10, புது முகத்துவார வீதி, கல்லடியில் வசிக்கின்றார். 1973இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். ஆசிரியராயும், அதிபராயும் கொத்தணி அதிபராயும் கோட்டக்கல்விப் பணிப்பாளராயும் இருந்து ஓய்வு பெற்றவர். சைவப்புலவர் சங்க உபதலைவராகவும் கிழக்கு மாகாண இணைப்பாளராகவும் 2006 தொடக்கம் இற்றை வரை பணிபுரிந்து வருகிறார்.

சைவமும் நாமும், தமிழ்மொழி இலக்கியமும் இலக்கணமும், மண்டூர் முருகன் திருவிருத்தப் பாமாலை, மடடக்களப்பில் இந்து சமய கலாசாரம், சைவ சித்தாந்த எட்டு விரதங்கள், மட்டக்களப்புக் கோயில்களும் தமிழர் பண்பாடும் முதலான பலநூல்களின் ஆசிரியர். பத்திரிகைளிலும், சஞ்சிகைகளிலும் முப்பதுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். வானொலி நிகழ்ச்சிகளிலும், கவியரங்குகளிலும் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகப் பங்களிப்புச் செய்து வருகின்றார்.

கி.மு. சங்கம், கிராமோதய சபை, தர்மகர்த்தா சபை முதலானவற்றினூடாகச் சமூக சேவையும் செய்து வருகின்றார். மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர், ஈழத்துப்பூதந் தேவனார் புலவர் உபதலைவர், பத்ததி விதிமுறை ஆலோசகர் முதலிய பதவிகள் மூலமும், அளப்பிலாத் தமிழ், சைவப் பணிபுரிந்து வருகின்றார். வித்தியா கலாபமணி , இலக்கிய மணி, முதலான பல கௌரவப் பட்டங்களும் வழங்கிப் பாராட்டப்பட்டுள்ளார்.

## 60. சைவப்புலவர் காரத்திகேசு கமலநாதன் B.A. (Hons) M.A. 1971.09.29

யாழ் மாசேரி வரணியைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1997இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். ஆசிரியராகப் பணிபுரிகின்றார். சைவசமய ஆசார அனுட்டானம் மிக்கவராகவும், ஆலய பூசகராகவும் விளங்கும் இவர். சமயச் சொற்பொழிவு, புராணபடனம், பட்டிமன்றம், நாடகம், கவிதை, வில்லுப்பாட்டு முதலான பல்துறைக் கலைஞர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவச்செல்வன், அருளுரை அமுதன், திருவருள்வாசகர், சித்தாந்த வித்தகர், சிவநெறிச் செல்வன் முதலான பல கௌரவப்பட்டங்கள் பெற்றுள்ளார். சிறந்த சமய, சமூகப் பணியாளராய் விளங்குவதுடன் சமாதான நீதவான் கௌரவமும் பெற்றுள்ளார்.

### 61. சைவப்புலவர் முருகேசு முரளிதரன் B.A. Dip 1962.11.30

யாழ். சீதாபதி பிள்ளையார் கோயிலடி, கோப்பாய் மத்தியைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1997 இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். பயிற்சி பெற்ற இசையாசிரியராகச் சேவை செய்கின்றார். சைவப் பிரசங்கம் செய்தல், சமயப் போட்டிகள் நடத்துதலுடன் ச.ச. நிலையம், விவசாயம் மேளனம் ஆசிரியர் சங்கம் மூலமாகவும் பல பணிகள் செய்கின்றார்.

### 62. சைப்புலவர் கந்தையா சத்தியதாசன் B.A. (Hons) M.A.

யாழ். மாவிட்டபுரம், தெல்லிப்பழையைச் சொந்த இடமாகக் கொண்டவர். கந்தையா சின்னமணி தம்பதிகளின் மகனாவார். 1997 இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். விஞ்ஞானப் பயிற்சி பெற்ற ஆசிரியராகிய இவர், கலைமாணி சிறப்புப்பட்டத்துடன் முதுநிலைமாணி சைவ சித்தாந்தப் பட்டமும் பெற்றுச் சமயபாட ஆசிரிய ஆலோசகராகச் சேவை செய்கின்றார். சைவசமயச் சொற்பொழிவு, பட்டிமன்றம், வானொலி நேர்முக வர்ணனை முதலான துறைகள் மூலம் சமயப்பணி செய்வதுடன் பல இளைஞர்களையும் இத்துறைகளில் உருவாக்கியுள்ளார். 1999 முதல் சைவப்புலவர் சங்கச் செயலாளராகப் பணிபுரிகின்றார். அருட் சொல்வாரி, அருள் நெறித்தமிழருவி, சித்தாந்த கலாநிதி, அறநெறிக்குரு முதலான பல கௌரவப்பட்டங்களையும் பெற்றுள்ளார்.

இந்து சமய வினாவிடை, இந்து நாகரிக வினாவிடை, இந்து சமயக் கட்டுரை வினாவிடை. நலத்தரும் தோத்திரம், சைவசித்தாந்த வினாவிடை முதலான பல நூல்களையும், பல ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். நாடளாவிய மட்டத்தில் பல சைவ, தமிழ், சமூகப் பணிகளை மிகச் சிறப்பாகச் செய்து வருகின்றார்.

### 63. சைவப்புலவர் சிவபாதசுந்தரம் நவரத்தினம் B.A. 1961.07.11

யாழ். துன்னாலை மேற்குக் கரவெட்டியைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1997இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். ஆசிரிய சேவை புரிகின்றார். சொற்பொழிவு பட்டி மன்றம், முதலாய திறமைகள் உள்ளவர்.

### 64. சைவப்புலவர் சிவஞானம் பாலமுரளி 1975.02.25

யாழ். கரணவாய் கிழக்கு, கரவெட்டியைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1998இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சைவ சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்க இயகுநர் குழு உறுப்பினராகச் சமூகப்பணிசெய்கின்றார். சைவ சமய சொற்பொழிவுப் பணியில் ஈடுபட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**65. சைவப்புலவர் விமலரஞ்சினி மயில்வாகனம் B.A. (Hons) 1974.01.21**

யாழ். தாவளை, இயற்றாலை, கொடிகாமத்தைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1998 இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார்.

**66. சைவப்புலவர் இரத்தினம் நித்தியானந்தன் B.A., M.A 1971.05.17**

யாழ். அரசடிவீதி. திருநெல்வேலியைச் சொந்த இடமாகக் கொண்டவர். இரத்தினம் மகேஸ்வரி தம்பதிகளின் புத்திரரும் அருட்செல்வியின் கணவரும் ஆவார். 1998இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். சைவ சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றவர். வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தராகப் பணிபுரிகின்றார். மாவட்டம் சார்கலைச் செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் கலைகள் பற்றிய மீள்பார்வைக்கும் அவற்றின் நிலை பேற்றுக்கும் உதவிக் கொண்டிருக்கின்றார்

**67. சைவப்புலவர் ப. சாந்தகுமார் அளவெட்டி**

1998 இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர்.

**68. சைவப்புலவர் கடம்பேசுவரன்மணிமாறன் M.S.c**

1998இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். யாழ் சிந்துபுரம், வட்டுக் கோட்டையைச் சொந்த இடமாகக் கொண்டவர். கல்வி நிர்வாக சேவையில் (S.L.E.A.S.) உள்ளார்.

**69. சைவப்புலவர் க. நடராசா**

யாழ். கைதடியைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1998இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். அதிபர் சேவையில் இருந்து ஓய்வு பெற்று அமரராகிவிட்டார்.

**70. சைவப்புலவர் சிவானந்தன் நந்தகுமார் B.A. (Hons) 1970.07.18**

யாழ். சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கைச் சொந்த இடமாகக் கொண்டவர். சிவானந்தன் பாலாம்பிகை தம்பதிகளின் புதல்வரும் வாணியின் கணவரும் ஆவார். 1999 இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். தேசிய சேமிப்பு வங்கி (அச்சுவேலி) முகாமையாளராகப் பணிபுரிகின்றார். 2002 தொடக்கம் சைவப் புலவர் சங்கப் பொருளாளராகப் பணி செய்கின்றார். சைவ சமயச் சொற்பொழிவுக்ள, கட்டுரைகள், முதலான சைவப்பணிகள் செய்து வருகின்றார்.

**71. சைவப்புலவர் வல்லிபுரம் ஆறுமுகம் தங்கமயில் B.A. (Lond) M.A. 1944.11.01**

யாழ். வதிரி, மாலிசந்தி, கரவெட்டியைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1999இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். இலண்டன் கலைமாணிப் பட்டதாரியான இவர் ஓய்வு பெற்ற நில அளவையாளர் ஆவார். சைவ சித்தாந்தத்தில் யாழ். பல்கலைக்கழகத்தில் எம். ஏ. பட்டம் பெற்றுள்ளார். கதாப்பிரசங்கம், செய்யுளாக்கம், ஆச்சிர மத்தொண்டுகள், கோயிற் பணிகள் செய்து வருகின்றார். பலமுறை தீர்த்தயாத்திரையும் செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**72. சைவப்புலவர் சொக்கலிங்கம் கோவிந்தராஜன். 1944.12.31**

யாழ். பொன்னாலை சுழிபுரத்தைச் சொந்த இடமாகக் கொண்டவர் 1999இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சிறந்த சோதிடராக விளங்குகின்றார். அந்தணர் அல்லாத இந்துக் குருவாக இந்து சமய கலாசார அமைச்சின் பயிற்சி பெற்றவர். கதாப்பிரசங்கம், கோவில் தொண்டுகள் செய்து வருகின்றார்.

**73. சைவப்புலவர் வசந்த கௌரி புஷ்பலிங்கம் B.A.(Hons) 1975.05.12**

யாழ். சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்தவர். பாலபண்டிதர் பட்டமும் பெற்றவர். சமய சமூகத் தொண்டுகள் செய்பவர்.

**74. சைவப்பலவர் ஜமுனாராணி செல்லத்துரை B.A. (Hons)**

யாழ். நாவற்காடு, அச்சுவேலியைச் சேர்ந்தவர் 1999இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். பத்திரிகையாளர் பயிற்சி பெற்றவர். ஆலயப்பணிகள் செய்பவர்.

**75. சைவப்புலவர் திலீபாவல்லிபுரநாதன் B.A. (2nd up) 1975.11.02**

யாழ். புளியங்கூடல், ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவர். 1999இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். ஆசிரியராகப் பணிபுரிகின்றார்.

**76. சைவப்புலவர் நமசிவாயகம் கல்யாணி B.A., M. Phil 1954.01.01**

யாழ் கரவெட்டிகிழக்கு, கரவெட்டியைச் சேர்ந்தவர். 1999இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். ஆசிரியப் பணி புரியும் இவர் இந்து மாமன்றப் பொறுப்பாளராயும் சமயப் பிரசாரகராயும், நூல் ஆய்வாளராகவும் பன்முகப் பணி செய்கின்றார்.

77. **சைவப்புலவர் பூ. நகுலன்** - யாழ் நகர்

78. **சைவப்புலவர் பா. ஸ்ரீபவன்** - சங்கானை

79. **சைவப்புலவர் ஏ. அனுசாந்தன்** - குப்பிளான்

80. **சைவப்புலவர் பா. தாட்சாயினி** - நல்லூர்

81. **சைவப்புலவர் சி. விஜயராகினி** - பண்டத்தரிப்பு

82. **சைவப்புலவர் இ. சசிகலா** - வட்டுக்கோட்டை

83. **சைவப்புலவர் செ. சத்தியவாணி** - யாழ் நகர்

84. **சைவப்புலவர் செ. இரத்தினேஸ்வரி** - பண்டத்தரிப்பு

85. **சைவப்புலவர் செ. சுகிர்தா** - சங்கானை

86. **சைவப்புலவர் சி. விஜயகௌரி** - பண்டத்தரிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**87. சைவப்புலவர் க. தவராணி** - சுழிபுரம்

**88. சைவப்புலவர் ஜெயகௌரி நாகேந்திரம் B.A. 1977.11.01**

யாழ். நீர்வேலி வடக்கு நீர்வேலியைச் சேர்ந்தவர். 2000இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சைவ சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். அறநெறிப்பாடசாலை ஆசிரியராகவும், நீர்வேலி வடக்கு மகளிர் சிக்கன கடன் வழங்கும் கூ. சங்கப் பொருளாளராகவும் தொண்டு செய்கிறார்.

**89. சைவப்புலவர் ருத்திராதேவி பகீரதன் B.A.M.A. 1974.07.26**

யாழ். குருநாதசுவாமி கோயிலடி தெல்லிப்பழையைச் சொந்த இடமாகக் கொண்டவர். 2000 இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சித்தாந்த பண்டிதரும் ஆவார். ஆசிரியராகப் பணிபுரியும் இவர் சைவப்புலவர் சங்கச் செயற்குழு உறுப்பினராகவும் பணிபுரிகின்றார். பக்திச் சுவைக்குப் பெரியபுராணம் எனும் சிறந்த ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளார்.

**90. சைவப்புலவர் தயாளினி செந்தில்நாதன் B.A.M.A 1974.05.11**

யாழ். வட்டாரம் 5A, நயினாதீவைச் சொந்த இடமாகக் கொண்டவர். 2000இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். ஆசிரியர் சேவையிலுள்ள இவர் வலிகாமம் வலய சைவ சமய வளவாளராகவும் செயற்படுகிறார். மேலதிக தகைமைகளாக Dip in Temple Art, Dip in Saivasiddhanta, Dip in Education, எல்லாவற்றிலும் 1ம் வகுப்பில் சித்தியடைந்துள்ளார். சைவ சித்தாந்தமும் கலையும் எனும் நூலின் ஆசிரியராவார்

**91. சைவப்புலவர் நாகேஸ்வரி அரவிந்தன் B.A. (Hons) Dip in Ed 1974.03.14**

யாழ். 5A வட்டாரம் நயினாதீவைச் சொந்த இடமாகக் கொண்டவர். 2000 இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சைவ சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். ஆசிரிய சேவையில் உள்ளார்.

**92. சைவப்புலவர் வலினா நவரட்ணம் B.A. (Hons) 1975.09.24**

யாழ். பருத்தியடைப்பு, ஊர்காவற்றுறையைச் சொந்த இமாகக் கொண்டவர். 2000இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். ஆன்மீகச் சிந்தனைகளில் ஈடுபாடுள்ளவர். சமய, சமூகப்பணிகள் செய்து வருகின்றார்.

**93. சைவப்புலவர் மீனலோசினி** பாரதி **B.A. (Hons) Dip in Edu 1976.09.23**

யாழ் கிராம்புவில், சாவகச்சேரியைச் சொந்த இடமாகக் கொண்டவர், 2000இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சைவ சித்தாந்த பண்டிதர், தமிழ் பால பண்டிதர் பட்டங்களும் பெற்றவர். ஆசிரியர் சேவையில் உள்ளார். சைவப்புலவர் சங்கச் செயற்குழு உறுப்பினர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**94. சைவப்புலவர் ஜமுனா மயில்வாகனம் B.A. 1972.09.19**

யாழ். 10ஆம் வட்டாரம், புங்குடுதீவைச் சொந்த இடமாகக் கொண்டவர். 2000 இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர் சைவ சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். ஆசிரியர் சேவையில் உள்ளார்.

**95. சைவப்புலவர் வேலுப்பிள்ளை செல்வக்குமார் B.A. (Hons) 1975.04.05**

யாழ். நாவற்காடு, வரணியைச் சொந்த இடமாகக் கொண்டவர். 2000 இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். சைவ சித்தாந்த பண்டிதர் பட்டத்துடன் கணனிப் பயிற்சியும் பெற்றுள்ளார். ஆலயத் தொண்டு, அறநெறி கற்பித்தல் முதலான பணிகள் செய்பவர்.

**96. சைவப்புலவர் நித்தியானந்தன் தசீதரன் 1975.10.24**

யாழ். பன்னாலை தெல்லிப்பழையைச் சேர்ந்தவர். 2000இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். சைவ சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். தற்போது யாழ். பல்கலைக்கழக சைவ சித்தாந்த முதுகலைமாணி கற்கின்றார். தனியார்துறை ஆசிரியர் சேவையிலுள்ளார். சைவப்புலவர் சங்கம், சைவ பரிபாலன சபை என்பவற்றில் உதவித் தேர்வுச் செயலாளராயும் பணி செய்கின்றார். புராணபடனம், சைவ சமயச் சொற்பொழிவு, வானொலி நேர்முக வர்ணனை, பட்டி மன்றம் முதலான பணிகளில் வல்லவர், செஞ்சொல் வேந்தர், சிவத்தமிழ்ச் செல்வன், செஞ்சொல்வாரிதி, சிவநெறித்திலகம் முதலான பல கௌரவப்பட்டங்களைப் பெற்றுள்ளார்.

**97. சைவப் புலவர் பாலசுப்பிரமணியக் குருக்கள் சர்வேஸ்வர சர்மா B.A, (Hons) 1962.01.11**

யாழ். காயத்திரி பீடம், இணுவிலைச் சொந்த இடமாகக் கொண்டவர், 2000இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சைவசித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றவர். சிவாசாரியாராகவுள்ள இவர் பல கும்பாபிஷேகங்கள் செய்துள்ளார். சிறந்த சைவச் சொற்பொழிவாளர்.

**98. சைவப் புலவர் குட்டிப்பிள்ளை அரசேஸ்வரன் 1960.03.13**

யாழ். கலைமகள் வீதி, நல்லூர் வடக்கைச் சேர்ந்தவர் 2000இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். சைவ சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றுள்ள இவர் பயிற்றப்பட் சைவ சமய ஆசிரியர் சேவையிலுள்ளார்.

**99. சைவப்புலவர் அமிர்தேஸ்வரசர்மா மனோகரன் 1971.03.14**

யாழ். மணற்காடு, காரை நகரைச் சேர்ந்தவர். 2000இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். ஆசிரியர் சேவையிலுள்ளார். சைவ மன்றங்கள் மூலம் மாணவர்களின் சமய அறிவை வளர்த்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100. **சைவப்புலவர் வி. பராசக்தி** - நீர்வேலி

101. **சைவப்புலவர் கு. லலிதா** - மல்லாகம்

102. **சைவப்புலவர் யோ. யோகரூபி** - யாழ்நகர்

103. **சைவப்புலவர் நா. பன்னீர்ச் செல்வம்** - தாவடி

104. **சைவப்புலவர் செ. இந்திரா** - நீர்வேலி

105. **சைவப்புலவர் கு. கிருபாகினி** - அச்சுவேலி

106. **சைவப்புலவர் அ.சுப்பிரமணியம் J.P**

யாழ் . மூளாயைச் சொந்த ஊராகக் கொண்டவர். 2000இல் சைவப்டபுலவர் பட்டம் பெற்றவர். அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர். சைவப்பற்றுடைய இவர் ஆலய சேவைகளிலும் ஈடுபாடுடையவர்.

**107.சைவப்புலவர் மார்க்கண்டு சுராகினி B.A. Hons** 1974.18.10

யாழ். அளவெட்டி தெற்கு, அளவெட்டியைச் சேர்ந்தவர் 2001இல் சைவப்புலகர் பட்டம் பெற்றவர்.

**108.சைவப்புலவர் உமிலாதேவி உலகநாதன் B.A. Hons** 1975.08.13

யாழ் . இருபாலைச்சந்தி, கோப்பாயைச் சேர்ந்தவர். 2001இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர்.

**109.சைவப்புலவர் சரவணன் கார்த்திகா B.A. Hons** 1975.07.20

யாழ். பிள்ளையார் கோயிலடி, தாவடியைச் சேர்ந்தவர். 2001இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். யாழ். பல்கலைக் கழகத்தில் தற்காலிக உதவிவிரிவுரையாளராக இருந்தவர்.

**110. சைவப்புலவர் ஜெயந்தி கோபாலபிள்ளை**

யாழ். தாயகம் உடையார்லேன், கொக்குவிலைச் சேர்ந்தவர். 2001இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சமய, சமூகப் பணிகளில் முன்னிற்பவர்.

**111. சைவப்புலவர் வேலாயுதர் ஜெயகுரு** 1967.09.06

யாழ். 'குமரன்அகம்' பண்ணாகம் சுழிபுரத்தைச் சேர்ந்தவர். 2001இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சமய, சமூகப்பணிகளில் முன்னிற்பவர்.

**112. சைவப்புலவர் அப்புத்துரை கருணாகரன்** 1964.02.13

யாழ். 'திருமந்திரம்' பண்ணாகம், சுழிபுரத்தைச் சேர்ந்தவர். 2001இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். யாழ். சமய சமூகப்பணிகளில் முன்னிற்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**113. சைவப்புலவர் வேலாயுதபிள்ளை கமலேஸ்வரன் B.A. Hons**

யாழ். கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைச் சேர்ந்தவர். 2001இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். ஆசிரியர் சேவையில் உள்ளார். இளைஞ்ஞர் மன்றம், சிவநெறிக்கழகம் மூலம் சமயப்பணிபுரிகின்றார்.

**114. சைவப்புலவர் அம்பலவாணர் இராஜரட்ணம்**

யாழ். 56 விநாயகர் வீதி, நல்லூர் வடக்கைச் சேர்ந்தவர். 2001இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். சைவசித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றவர். யாழ்பாணம் கூ மொத்த விற்பனை நிலையத்தில் முகாமையாளராக இருந்தவர். தமிழ், ஆங்கில, சிங்கள மொழி பெயர்ப்பாளராக விளங்குகின்றார்.

**115. சைவப்புலவர் கணபதிப்பிள்ளை விமலநாயகி B.A. Hons** 1974.06.10

யாழ். உடையார் வீடு, கரவெட்டி தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்தவர். 2001இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார்.

**116. சைவப்புலவர் கோகிலவதனி நாகமுத்து B.A. Hons** 1975.12.08

யாழ். மந்துவில் கிழக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்தவர். 2001இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றவர்.

**117. சைவப்புலவர் திருநாவுக்கரசு தீபன் B.A. Hons** 1972.03.07

யாழ். கல்வளை வீதி, சண்டலிப்பாயைச் சேர்ந்தவர். 2000இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சித்திரப் பாட ஆசிரியர் பயிற்சியும் பெற்றுள்ளார். ஆசிரியர் சேவையில் உள்ளார்.

**118. சைவப்புலவர் திருநாவுக்கரசு றூபி B.A** 1974.03.03

யாழ். கல்வளைவீதி, சண்டலிப்பாயைச் சேர்ந்தவர். 2001இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சித்தாந்த பண்டிதர் பட்டம் பெற்றவர். ஆரம்பக்கல்வி ஆசிரியர் பயிற்சி பெற்றவர் ஆசிரியர் சேவையில் உள்ளார்.

**119. சைவப்புலவர் சத்திரூபன் தயாநிதி** 1970.09.20

யாழ். குறுக்குவீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலியைச் சேர்ந்தவர். 2001இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சைவசித்தாந்த பண்டிதருமாவார்.

**120. சைவப்புலவர் பொன்னுத்துரை சந்திரவேல் B.A. Hons M.A 1972.12.18**

யாழ். பத்மகிரி, குப்பிளான் வடக்கு, ஏழாலையைச் சேர்ந்தவர். 2001இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். யாழ் பல்கலைக் கழக சைவசித்தாந்த முதுகலை மாணிப்பட்டமும் பெற்றவர் கலாசார உத்தியோகத்தராகப் பணிபுரிகின்றார். சமயப்பிர சங்கம், சமூக விழிப்புணர்வு விரிவுரை நிகழ்த்துபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**121. சைவப்புலவர் சிவதாசன் மதனமோகனராஜ் B.A. Hons 1980.07.11**

யாழ். குப்பிளான் வடக்கு, ஏழாலையைச் சேர்ந்தவர். 2001இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர்.

**122. சைவப்புலவர் வைத்திலிங்கம் பாலகிருஷ்ணன் B.A. M.A 1955.09.02**

இராசவரோதயம் வீதி திருகோணமலையைச் சேர்ந்தவர். சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணத்தில் வாழ்கிறார். 2001இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். பொது நிர்வாக டிப்புளோமாச் சான்றிதழும் பெற்றவர். சன சமூக நிலையம், கிரமமுன்னேற்றச் சங்கம், இளைஞர் விவசாயக்கழகம், முதியோர் சங்கம் மூலம் தொண்டுகள் செய்து வருகின்றார். ஆன்மீகச் சொற்பொழிவாளராகவும் விளங்குகிறார். கமநல அபிவிருத்தித் திணைக்களப் பெரும்பாக உத்தியோகத்தராகக் கைதடி, சண்டிலிப்பாய்ப் பிரதேசத்தில் கடமை புரிகின்றார்.

**123. சைவப்புலவர் ஜெயந்தி கமலேஸ்வரன் B.A. Hons 1973.10.28**

யாழ். கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைச் சேர்ந்தவர். 2001இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றவர். ஆசிரியர் சேவையில் உள்ளார். இந்து மன்றம், மகளிர் மன்றங்களுடாகச் சமய சமூகசேவை செய்து வருகின்றார்.

**124. சைவப்புலவர் Dr. வெற்றிவேல் சக்திவேல் B.A. M.A 1968.08.30**

யாழ். கிளவ்வீதி, தெல்லிப்பழைச் சொந்த இடமாகக் கொண்டவர். 2001இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். சித்த மருத்துவ சத்திர சிகிச்சைமாணி B.S.M.S. பட்டமும் பெற்றுள்ளார். ஆங்கில இலக்கியப் பொதுக்கலைமாணி B.A, பொது நிர்வாக டிப்புளோமா, கல்வி டிப்புளோமா, தமிழ் முதுகலை மாணி, முதலாய தகைமைகள் பெற்றவர்.

சித்தபோதனா வைத்தியசாலை உள்ளக மருத்துவர், தொ.நு.கல்லூரி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை யாழ். பல்கலைக்கழகம், யாழ்பாணக்கல்லூரி ஆகியவற்றில் ஆங்கில வருகை விரிவுரையாளராய் இருந்துள்ளார்.

எழுத்துத் துறையில் பன்முக ஈடுபாடுடையவர். பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்கு ஏராளமான கட்டுரைகள் எழுதியுள்ளார், உளவியற் சிந்தனைகள் எனும் நூலின் ஆசிரியருமாவார்.

**125. சைவப்புலவர் ஹேமலோஜினி குமரன் B.A. Hons M.A 1974.08.03**

யாழ். நவாலி வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவர். கனகரத்தினம் சுசிலாலட்சுமி தம்பதிகளின் மகளும் குமரன் அவர்களின் துணைவியும் ஆவார். 2001இல் சைவப்புலவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டம் பெற்றுள்ளார். இந்து சமய கலாசாரத்திணைக்கள உதவிப் பணிப்பாளராகக் கடமைபுரிகின்றார். இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்குக் கருத்தரங்குகளை நடத்தி நிர்வாகித்தல், நூல்களை வெளியிடல், இந்துக்கலைக்களஞ்சியத்துக்குக் கட்டுரைகள் எழுதுதல் முதலான பணிகளில் முழுமையான ஈடுபட்டுள்ளார்.

**126. சைவப்புலவர் ரேவதி செல்வராசா**

யாழ். நீர் வேலிமேற்கு நீர்வேலியைச் சேர்ந்தவர். 2001இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார்.

**127. சைவப்புலவர் மனோரஞ்சிதம் சுப்பிரமணியம்**

யாழ். அராவி மேற்கு, வட்டுக் கோட்டையைச் சேர்ந்தவர். 2001இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர்.

**128. சைவப்புலவர் கிருட்டினர் சிவமணி J.P** 1935.11.01

யாழ். காரைநகர் மத்தியில் பிறந்து 315 முஸ்லிம் கல்லூரி வீதி ஓட்டுமடம், யாழ்ப்பாணத்தில் வாழ்கின்றார். கிருட்டினர் செல்லம்மா தம்பதிகளின் மகனும் கமலேஸ்வரியின் கணவரும் ஆவார். 2002இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். அதிபர் சேவையில (S.L.P.S.I) இருந்து ஓய்வு பெற்றவர். ஆசிரிய ஆலோசகராயும் பணிபுரிந்துள்ளார். காரைநகர் சிவகாமியம்பாள் தோத்திரப்பாக்கள், மணற்காடு முத்துமாரியம்மன் ஆலய ஆதிவரலாறு முதலான நூல்களின் ஆசிரியர். ச.ச. நிலையம், கி.மு.சங்கம், ப.நோ.கூ.சங்கம், புற்றுநோயாளர் சங்கம், கூட்டுப்பிரார்த்தினைச்சபை, முதலான சமய சமூக சேவை மன்றங்களில் பலபதவிகளில் இருந்து சேவை செய்தவர். நீதிமன்றயூரராகவும் இருந்துள்ளார். 'ஆசிரியமணி' எனும் கௌரவப்பட்டமும் பெற்றுள்ளார்.

**129. சைவப்புலவர் சண்முகலிங்கம் முகுந்தன்** 1980.12.18

யாழ். 'சுகந்தம்' இணுவில் கிழக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்தவர். சண்முகலிங்கம் செல்வ நாயகி தம்பதிகளின் புதல்வர். 2002இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். யாழ். பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்தம் முதுகலைமாணி கற்றுக் கொண்டு இருக்கிறார். சமயச் சொற்பொழிவு, கவியரங்கம், நூல்நயம் கட்டுரை, கவிதை எழுதல் முதலான திறமைகள் உள்ளவர்.

**130. சைவப்புலவர் மயில்வாகனம் சிவலிங்கம் B.A. Dip. in. Edu** 1961.05.31

யாழ். நாராயணன் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலைச் சேர்ந்தவர். மயில்வாகனம் ரோகினிதேவி தம்பதிகளின் மகனும் சரோஜினி தேவியின் கணவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவார். 2002இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். கவிதையாக்கம், நாடகம், சொற்பொழிவு முதலான சிறப்பாற்றல் படைத்தவர். ஆசிரியர் சேவையில் உள்ளார்.

வரகவி, கவிஜோதி, ஆசிரியமணி முதலான கௌரவப்பட்டங்கள் பெற்றவர். வல்லிபுரநாதர் பாமாலை, காளியம்பாள் கவிமாலை, பர்வதவர்த்தனிபாமாலை, முத்துமாரியம்மன் விருவூஞ்சல் முதலான பல நூல்களின் ஆசிரியர். சமாதான நீதவானுமாவார். மலராக்கங்கள், கல்வெட்டுக்கள் ஆக்கிக் கொடுப்பவர். பலவித சமய, சமூக, கல்விச் சேவைகள் செய்துவருகிறார்.

**131. சைவப்புலவர் லிங்கநாயகம் ரமணன் B.A.** 1974.01.16

யாழ். 3ம்வட்டாரம், நெடுந்தீவைச் சொந்த இடமாகக் கொண்டவர். 2002இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். லிங்கநாயகம் மங்கையர்க்கரசி தம்பதிகளின் மகனும் நளாயினியின் கணவரும் ஆவார். சமுர்த்தி உத்தியோகத்தராக உள்ளார். ஓவியம் வரைதல் மேடை, மைதான அறிவிப்பாளர். நெடுந்தீவு நெழுவினிப் பிள்ளையார் கோயில் அறங்காவலர் சபை உறுப்பினருமாவார்.

**132. சைவப்புலவர் சிவகுருநாதர் சிவசுப்பிரமணியம் B.A.** 1940.11.22

யாழ். 133 அரசடி வீதி, கந்தர் மடத்தைச் சேர்ந்தவர். சிவகுரு நாதர் பொன்னம்மா தம்பதிகளின் மகனும் புஸ்பலோசனியின் கணவருமாவார். அஞ்சல் அதிபர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர் தொ.நு.கல்லூரி ஆங்கில வருகை விரிவுரையாளர். சமயச் சொற்பொழிவு செய்தல், பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதுதல் முதலாம் பணிகள் செய்பவர். சைவப்புலவர் சங்கத்தின் உபதலைவராயுள்ளார். ஆங்கில தமிழ் மொழிபெயர்ப் பாளராயுள்ளார்.

**133. சைவப்புலவர் சுபாஜினி தம்பிராசா**

யாழ். 36/12, B.A. தம்பிலேன், வண்ணார் பண்ணையைச் சொந்த இடமாகக் கொண்டவர். 2002இல் சைவப் புலவர் பட்டம் பெற்றுள்ளார்.

**134. சைவப்புலவர் குலசிங்கம் றஜீவன் B.A. M.A** 1976.9.25

யாழ். ஏழாலை மேற்கு ஏழாலையைச் சேர்ந்தவர். குலசிங்கம் இந்திராதேவி தம்பதிகளின் மகனும் தர்மினியின் கணவரும் ஆவார். 2002இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். கலாசார உத்தியோகத்தராகக் கடமைபுரிகிறார். பல்கலைக்கழக வெளிவாரிமாணவர்க்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கை விரிவுரையாளராயும் உள்ளார். நான்கு கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். 100க்கு மேற்பட்ட கவியரங்குகளில் பங்குபற்றியுள்ளார். சைவசித்தாந்த ஆய்வு நிறுவனத்தை இயக்கி வருகிறார். சைவசித்தாந்தம் எனும் இதழையும் வெளியிடுகின்றார். இதுவரை ஐந்து நூல்களைப் பதிப்பித்துள்ளார். சமய கலாசார விழுமியங்களை ஆவணப்படுத்தலில் ஈடுபட்டுள்ளார். யாழ். பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்தம் ஏம்.ஏ பட்டம் பெற்றுள்ளார்.

**135. சைவப்புலவர் மகேஸ்வரி சுப்பிரமணியம் B.A.** 1952.02.06

யாழ். மீசாலைகிழக்கு, மீசாலையைச் சேர்ந்தவர். சுப்பிரமணியம் மங்கையர்க்கரசி தம்பதிகளின் புதல்வியாவார். 2003இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். ஆசிரியர் சேவையில் உள்ளார். சொற்பொழிவு, திருவிழா நேர்முக வர்ணனை, கூட்டுப்பிரார்த்தனை செய்தல் முதலாய பணிகளில் ஈடுபட்டுள்ளார்.

**136. சைவப்புலவர் விஜிதா சுதேஸ்குமார் B.A. Dip.in.Edu** 1972.10.25

திருகுமாரசுவாமி அவர்களின் மகளும், சுதேஸ்குமாரின் துணைவியும் ஆவார். யாழ். பிள்ளையார் கோயிலடி, தாவடியைச் சேர்ந்தவர். ஆசிரியர் சேவையில் உள்ளார். பாடசாலை இந்து மன்றப் பொறுப்பாளராகவும், பல சமயப் போட்டிகளுக்கு நடுவராகவும் பணிபுரிகின்றார். சைவப்புலவர் சங்கச் செயற்குழு உறுப்பினராகவும் இருந்துள்ளார். 2003இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார்.

**137. சைவப்புலவர் ஆறுமுகம் சிவகுமார் B.A. Hons** 1976.11.04

யாழ். இந்துக்கல்லூரி வீதி, பண்டத்தரிப்பைச் சேர்ந்தவர். ஆறுமுகம் பாகவதியம்மா தம்பதிகளின் புத்திரர் ஆவார். 2003இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். ஆசிரியர் சேவையில் உள்ளார். சமயச் சொற்பொழிவாற்றல், அறநெறிப்பாடசாலையில் கற்பித்தல், சமூகப்பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தல். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளநல மேம்பாட்டு உத்தியோகத்தராய்ப் பணிசெய்துள்ளார். பல்வேறுபட்ட சமய சமூகப்பணிகளில் முன்னின்று உழைக்கின்றார். சைவப்புலவர் சங்கச் செயற்குழு உறுப்பினர் ஆவார்.

**138. சைவப்புலவர் துளசிமலர் வைத்தி B.A.** 1979.10.05

யாழ். வீரபத்திரர் கோயிலடி, கச்சாய் வீதி, சாவகச் சேரியைச் சேர்ந்தவர். வைத்தி, கனகம்மா தம்பதிகளின் புதல்வியாவார். 2003.ல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். ஆசிரியர் சேவையில் உள்ளார். அறநெறிவகுப்பு நடத்துதல், எழுத்தறிவூட்டல் சனசமூக உதவிகள் புரிதல் முதலான பணிகள் புரிபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**139. சைவப்புலவர் பேபிவதனா தில்லையம்பலம்**

யாழ். இயற்றாலை, வரணியைச் சேர்ந்தவர். 2003இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார்.

**140. சைவப்புலவர் சிவசக்தி திளையசிங்கம்**

யாழ். நாவற்கடவைலேன், கோப்பாய் வடக்கைச் சேர்ந்தவர். 2003இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார்.

**141. சைவப்புலவர் திருமூர்த்தி கலைச்செல்வி B.A. Hons** 1975.09.17

யாழ். தொல்புரம், கிழக்கு, சுழிபுரத்தைச் சேர்ந்தவர். கந்தசாமி நாகேஸ்வரி தம்பதிகளின் புதல்வியும் திருமூர்த்தியின் துணைவியும் ஆவார். 2003இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சித்தாந்த பண்டிதரும் ஆவார். நிகழ்ச்சித்திட்ட அதிகாரியாக அரசசேவையில் உள்ளார். பலவித சமய சமூகப்பணிகள் புரிகின்றார்.

**142. சைவப்புலவர் ஜெயரத்தினராசா சிவக்கொழுந்து** 1955.01.28

யாழ். பண்ணாகம், சுழிபுரத்தைச் சேர்ந்தவர். அப்பாத்துரை அன்ன லட்சுமியின் புதல்வியும், ஜெயரத்தினராசாவின் துணைவியும் ஆவார். 2003இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். தாதிய உத்தியோகத்தராகப் பணிபுரிகின்றார். கவிதை எழுதுதல் சமயப் புத்தகங்கள் இலவசமாய் வெளியிடல், வைத்திய ஆலோசனை வழங்கள் முதலான சமய சமூகசேவைகள் செய்பவர்.

**143. சைவப்புலவர் உமாபாலசிங்கம்**

யாழ். லட்சுமி பவனம், பண்டகை, உடுப்பிட்டியைச் சேர்ந்தவர் 2003இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார்.

**144. சைவப்புலவர் பேரானந்தம் உஷாயினி**

யாழ். காராளர் வளவு அல்வாய்கிழக்கு, அல்வாயைச் சேர்ந்தவர். 2003இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார்.

**145. சைவப்புலவர் கவிதா கதிரமலை B.A.** 1976.09.08

யாழ். ஆர்.டி.எஸ். வீதி கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலைச் சொந்த இடமாகக் கொண்டவர். மார்க்கண்டு சரஸ்வதி தம்பதிகளின் புதல்வியும் கதிரமலையின் துணைவியும் ஆவார். 2003இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீத பண்ணிசை கலாவித்தகர் பட்டமும் பெற்று ஆசிரியர் சேவையில் உள்ளார். பேச்சு, பாட்டு, பண்ணிசைக் பஜனை. தியானம் முதலாய பல பணிகள் செய்பவர்.

**146. சைவப்புலவர் ஆனந்தி ஜெயரட்ணம் B.A. (PERA) 1970.01.12**

யாழ். மேதர்ஸ்லேன், மானிப்பாயைச் சேர்ந்தவர். 2003இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். காணிப்பதிவாளரும், மேலதிக மாவட்டப் பதிவாளரும். மேலதிக உதவிப் பதிவாளர் நாயகமுமாக வவுனியா செயலகத்தில் பணிபுரிகின்றார். அத்துடன் சத்தியப் பிரமாணம்பெற்ற மொழி பெயர்ப்பாளராகவும், சமாதான நீதவானாகவும் உள்ளார். கவிதை, கட்டுரை, பத்திரிகைச் செய்திகள் எழுதுபவர். இடம் பெயர்ந்து வவுனியா மாவட்ட நலன்புரிமுகாம்களில் இருக்கும் மக்களின் நலன்களைக் கவனித்தல், மக்களுக்குரிய ஆவணங்களைப் பெற வழிகாட்டல், மனிதநேயத்துடன் உதவுதல். இப்பணிகளுக்காக வவுனியா அரசஅதிபர், சர்வோதய நீதிச் சேவை இயக்கம் என்பவர்களிடமிருந்து சிறந்த சேவைக்கான விருதுகள் பல பெற்றுள்ளார்.

**147. சைவப்புலவர் இரத்தினசபாபதிக்குருக்கள் திருமாறன்**

யாழ். பிள்ளையார் கோயிலடி, விளபாரிமூலை, பருத்தித்துறையைச் சேர்ந்தவர். 2003இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார்.

**148 . சைவப்புலவர் பிருந்தகுமாரி அகிலன் B.A. Hons 1979.09.03**

யாழ். மண்டைதீவைச் சொந்த இடமாகக் கொண்டவர். இராமச்சந்திரன், ஶ்ரீரங்கராணி தம்பதிகளின் புதல்வியும் அகிலன் அவர்களின் துணைவியும் ஆவார். கலைக்குடும்பத்தைச் சேர்ந்த அவர் 2003இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். அத்துடன் சங்கீதகலாவித்தகர் பட்டமும் பெற்றவர். சுவிஸ்நாட்டில் இசை, தமிழ் கற்பிக்கின்றார். இனசக்கச்சேரி பட்டி மன்றம், சொற்பொழிவு முதலான பல்துறைச் செயற்பாடுகளில் ஈடுபட்டுப் பாராட்டுக்களும் பெற்றுள்ளார்.

**149. சைவப்புலவர் சிவாஜினி கந்தையா B.A. Dip in Edu 1974.11.18**

யாழ். செல்வபதி, உடுவில், சுன்னாகத்தைச் சேர்ந்தவர். கந்தையா சிவகுமாரி தம்பதிகளின் புதல்வியாவார். 2003இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். ஆசிரியர் சேவையில் உள்ளார். சைவப்புலவர் சங்கச் செயற்குழு உறுப்பினராக இருந்து சிறந்த சேவை செய்துள்ளார்.

**150. சைவப்புலவர் சுவாமிநாதப்பிள்ளை தேவமனோகரன் B.A. M.A 1959.02.09**

யாழ். இணுவில் கிழக்கு, இணுவிலைச் சேர்ந்தவர். சுவாமிநாதபிள்ளை இராசமணி தம்பதிகளின் புதல்வரும் துஷ்யந்தியின் கணவரும் ஆவார். 2004இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றவர். ஆசிரிய சேவையிலிருந்து, ஆசிரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசகராகித் தற்போது உதவிக் கல்விப்பணிப்பாளராக (A.D.E) SLEAS III) கடமைபுரிகின்றார் பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமாவும் (P.G.D.EM) பெற்றுள்ளார். பட்டப்பின் கல்விமாணி, பட்டப்பின் கல்வி டிப்புளோமா விரிவுரையாளராயும், அறநெறிப்பாடசாலை மேற்பார்வையாளராயும் பல்துறைப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். 124 கொழும்பு வீதி, கண்டியை வதிவிட மாகக் கொண்டுள்ளார்.

**151. சைவப்புலவர் கனகசுந்தரம்பிள்ளை சசிலேகா** 1977.09.03

யாழ். தோப்பு, அச்சுவேலி மேற்கைச் சேர்ந்தவர். கனகசுந்தரப்பிள்ளை புவனேஸ்வரியின் புதல்வியாவார். 2004இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். கோயில் தொண்டுகளுடன் மாதர் சங்கப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளார்.

**152. சைவப்புலவர் குஞ்சிதபாதம் சுரேஸ் குமார் B.A. Dip** 1972.10.06

யாழ்.54 விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். குஞ்சிதபாதம் மனோன்மணி தம்பதிகளின் புதல்வரும் தயாலினியின் கணவருமாவார். 2004இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். இந்துசமய பாடவிசேட பயிற்சி பெற்ற ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். ஆலயத் தொண்டுகள், சமய விழாக்கள் செய்வதில் ஈடுபாடுடையவர்.

**153. சைவப்புலவர் குமாரசாமி சுமுகலிங்கம் B.A. M.A** 1956.06.10

யாழ். வேரவல் பூநகரியில் பிறந்து, தபாற்கந்தோர் வீதி சாவகச்சேரியில் வாழ்ந்து வருகின்றார். குமாரசாமி செல்வலட்சுமி தம்பதிகளின் புதல்வரும் இரத்தினேஸ்வரியின் கணவருமாவார். 2004இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். கோயிற்பூசை செய்யும் சைவ வாழ்வுடையவர். சிவநெறித் தொண்டர் அறநெறிக்குரு முதலான கௌரவப் பட்டங்கள் பெற்றுள்ளார். சைவப்புலவர் சங்கச் செயற்குழு உறுப்பினராகப் பணிபுரிந்துவருகின்றார். ஆசிரியர்வழி காட்டல் ஆலோசகராயும் உள்ளார். பல சைவப்புலவர்கள் உருவாதற்கு ஊக்குவிப்பாளராயும் சேவை செய்கின்றார். மாவட்டச் சாரணர் ஆணையாளராகவும் நற்சேவையாற்றுகின்றார். சகலகலாதேவ காயத்திரி மந்திரங்கள், செற்நெறித் தேறல், பரமநாதம் முதலான பல நூல்களை வெளியிட்டுள்ளார்.

**154. சைவப்புலவர் துரைசிங்கம் சடாட்சரசிங்கம்** 1964.04.09

யாழ். கலைநகர் சித்தன் கேணியைச் சேர்ந்தவர். துரைராசசிங்கம் சிவபாக்கியம் தம்பதிகளின் புதல்வரும் ஜீவகல்யாணியின் கணவருமாவார். 2004இல் சைவப்புலவர் பட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள்ளார். கிளிநொச்சியில் வரி அறவீட்டாளராகக் கடமை புரிகின்றார். கோயில் பூசை செய்தல், நாடகம் வில்லிசை, சொற்பொழிவு, புராணபடனம் முதலாய சமயப்பணிகள் செய்பவர். செஞ்சொற் வெம்மல் எனும் கௌரவப்பட்டமும் பெற்றுள்ளார். கற்பகன்பாமாலை, விநாயக தோத்திரம் முதலான நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

**155. சைவப்புலவர் சுதர்சினி ஆறுமுகலிங்கம்**

195 நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியாவைச் சேர்ந்தவர். 2005இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர்.

**156. சைவப்புலவர் பிருந்தா தர்மலிங்கம்**

24/16 A 7ஆம் ஒழுங்கை, வேப்பங்குளம், வவுனியாவைச் சேர்ந்தவர் 2005இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர்.

**157. சைவப்புலவர் இராசேந்திரமலர் இராசையா** 1972.02.25

சின்னத்தம்பனை, நேரியகுளம், வவுனியாவைச் சேர்ந்தவர். இராசையா, அசோகமலர் தம்பதிகளின் புதல்வியாவார். 2005இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். பயிற்றப்பட்ட இந்து சமய ஆசிரியர் சேவையில் உள்ளார். புதுக்குளம், சாஸ்திரி கடளாங்குளம், வவுனியாவில் வாழ்கின்றார்.

**158. சைவப்புலவர் செல்லையா பரமேஸ்வரன் B.A. Dip** 1965.06.02

யாழ்.அளவெட்டி மத்தி அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக் கட்டுவன் தெற்கு, சுன்னாகத்தை வாழ்விடமாகவும் கொண்டவர். செல்லையா சோதிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும், சிவாசினியின் கணவரும் ஆவார். 2005இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். கல்விச் சேவை தரம் 1இல் அதிபர் சேவையில் உள்ளார். சொற்பொழி வாற்றுதல், பட்டிமன்றங்களில் வாதிடல், கவிதை, கதை எழுதுதல், வில்லிசை எழுதுதல் செய்தல், கூத்துக்கள், நாடகம் ஆடுதல், புராண படனம் செய்தல், நூல்வெளியீட்டுரை செய்தல் முதலான பல்துறைப்பணிகள் செய்வதுடன் இத்துறைகளில் மாணவர்களுக்கும் பயிற்சி அளித்து வருகிறார்.

**159. சைவப்புலவர் தவராசா குமரன் B.A. (Hons)**

யாழ்.'சக்திவாசா' கோவில் வீதி, மல்லாகத்தைச் சேர்ந்தவர். தவராசா தங்கரத்தினம் தம்பதிகளின் புதல்வர் ஆவார். 2005.ல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். சித்தாந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். யாழ் பல்கலைக்கழக சிறப்புப் பட்டதாரியான இவர் நாடகமும் அரங்கக்கலைகளும் உதவி விரிவுரையாளராக உள்ளார். சைவப்புலவர் சங்கச் செயற்குழு உறுப்பினராகவும் பணிபுரிகின்றார். சைவநெறிபாகம் I,II, சைவநெறி பல்தேர்வு வினாவிடை போன்றவற்றின் ஆசிரியராவார்.

**160. சைவப்புலவர் வெற்றிவேலு வரதிதாசன்** 1978.07.02

யாழ்.வட்டுமேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர் வெற்றிவேலு சாந்தரூபி தம்பதிகளின் மகனாவார். 2005இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். இயன் மருத்துவராகக் கடமை புரிகின்றார். சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றவர். சொற்பொழிவு, கவிதை புனைதலில் ஆற்றல் படைத்தவர். சைவப்புலவர் சங்கச் செயற்குழு உறுப்பினராகப் பணிபுரிகின்றார். உடல் நலிவுற்றோருக்கு உதவுவதைச், சமூகப்பணியாகக் கொண்டுள்ளார். பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

**161. சைவப்புலவர் சறோஜினிதேவி தம்பிராசா** 1953.09.20

யாழ்.பாரதி இல்லம் முதலாம் வட்டாரம் புங்குடுதீவைச் சேர்ந்தவர். 68/1 வைமன் வீதி நல்லூரில் வசிக்கின்றார். தம்பிராசா சிவபாக்கியம் தம்பதிகளின் புதல்வியாவார். 2006இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சைவசித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றவர். பொதுமுகாமைத்துவ சேவை வகுப்பு Iஇல் கடமையாற்றுகின்றார். தீவுப்பகுதியின் மூத்த இலக்கியபரம்பரையில் வந்த இவர் பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு ஏராளமான கவிதைகள் கட்டுரைகளை எழுதி வருகின்றார். கிராமாபிவிருத்திச் சங்கம், சர்வோதயம் முதலான அமைப்புகளின் மூலம் பல சமூகப் பணிகளையும் செய்து வருகிறார்.

**162. சைவப்புலவர் கணபதிப்பிள்ளை கஜரூபன் B.A.** 1984.11.29

யாழ். கரகம்பகம், மிருசுவிலைச் சொந்த இடமாகக் கொண்டவர். 2006இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். சென்யோன்ஸ் அம்புலன்ஸ் சேவையிலும் ஈடுபட்டுள்ளார். கணனித்துறைப் பயிற்சியும் உடையவர். பல சமய, சமூக, கல்விப் பணிகளில் ஈடுபட்டுள்ளார்.

**163. சைவப்புலவர் சாந்தரூபன் ஜெயசித்திரா** 1980.06.26

யாழ். பலகாடு, காரைநகரைச் சொந்த இடமாகவும், 130, சங்கமித்தை மாவத்தை, கொழும்பு - 13ஐ வாழ்விடமாகவும் கொண்டவர். 2006 இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். அறநெறிப்பாடசாலை ஆசிரியராக ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகப்பணி செய்து வருகின்றார். சைவசித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். தட்டெழுத்து, கணனிப் பயிற்சியும் உடையவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**164. சைவப்புலவர் மதிவதனி முருகன் B.A. DIp in Edu** 1973.05.03

யாழ். 39/9 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். ஆசிரியர் சேவையில் கடமையாற்றுகின்றார். 2006இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சமய, சமூக சேவைகளில் ஈடுபாடுடையவர்.

**165. சைவப்புலவர் சியாமினி இராசரத்தினம் B.A. Hons**

யாழ். முத்துமாரியம்மன் கோயிலடி, அச்சு வேலியைச் சொந்த இடமாகக் கொண்டவர். 2006இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சித்தாந்த பண்டிதர் பட்டமும் பெற்றவர். யாழ். பல்கலைக்கழகத்தில் எம். ஏ. தமிழ் பயில்கிறார். சைவப்புலவர் சங்கச் செயற்குழுவில் உறுப்பினராக இருந்து சிறந்த பணியாற்றிவருகின்றார். சமய, இலக்கிய எழுத்தாளருமாவார்.

**166. சைவப்புலவர் சண்முகராசா தையல்நாயகி** 1943.10.22

யாழ். வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தைச் சொந்தஇடமாகக் கொண்டவர். வைத்தியலிங்கம் அன்னபூரணம் தம்பதிகளின் மகளும் சண்முகராசாவின் துணைவியாருமாவார். 1967இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். பாலபண்டிதர் பட்டமும் பெற்றவராவார். அமரராகி விட்டதர்.

**167. சைவப்புலவர் சண்முகராசா சிறிகாந்தன் B.A. Hons** 1980.03.14

யாழ். 207 நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். சண்முகராசா தையல்நாயகி தம்பதிகளின் மகனாவார். 2006இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். யாழ். பல்கலைக் கழகத்தில் மானிடவியல் சமூகவியல் துறை விரிவுரையாளராகவுள்ளார். சிவதொண்டாற்றல், மாணவர்களுக்கு நல்வழி காட்டல் முதலாய பணிகளில் ஈடுபட்டுள்ளார்.

**168. சைவப்புலவர் விமலாதேவி கந்தையா B.A. DIp in Edu M.PhiL**

யாழ். மாரீசன் கூடல் இளவாலையைச் சேர்ந்தவர். 2007இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமைபுரிகின்றார்.

**169. சைவப்புலவர் நடராசா திருக்குமரன் B.A.** 1980.10.15

யாழ். 195 இடைக்குறிச்சி கிழக்கு, வரணியைச் சேர்ந்தவர். 2007இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். நீதிமன்ற எழுதுவினைஞராகக் கடமைபுரிகின்றார். தமிழ் ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும் மொழியறிவுடையவர். புராண படனம் படித்தல், தேவாரம் ஓதுவாராகவுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**170. சைவப்புலவர் சிவசுப்பிரமணியம் ஜனகா B.A. Hons 1979.11.24**

யாழ். விழிசிட்டி, தெல்லிப்பழையைச் சொந்த இடமாகக் கொண்டவர். செல்லாச்சியம்மையார் வீதி, சுன்னாகத்தில் வாழ்கின்றார். 2007இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். ஆசிரியர் சேவையில் உள்ளார். பேச்சு, விவாதம், ஆக்கங்கள் எழுதல், ஆய்வுக்கட்டுரை எழுதல் ஆகியவற்றில் ஆற்றல் படைத்தவர்.

**171. சைவப்புலவர் நடராசா புகன் ஸ்ரீந்திரன் B.A. (Dip in Edu) M.A 1961.12.06**

யாழ். சரசாலை வடக்கு, சாவகச் சேரியைச் சொந்த இடமாகக் கொண்டவர். திரு.மு.நடராசாவின் மகனும் விஜயலக்சுமியின் கணவரும் ஆவார். 2007இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். சித்தாந்த பண்டிதருமாவார். கவிஞர், பத்திரிகை எழுத்தாளர். சைவப்புலவர் சங்கச் செயற்குழு உறுப்பினர். சேவைகால ஆசிரிய ஆலோசகராகக் கடமைபுரிகின்றார். அறநெறிப்பாடசாலை நடத்துதல், சமயக்கருத்தரங்குகள் நடத்தல், சொற்பொழிவு செய்தல் முதலாயபணிகள் புரிகிறார். பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். சோலைக்குயில், சிறுவர் பாடல், சைவநெறிப்பயிற்சி நூல் முதலானவற்றின் ஆசிரியர் ஆவார்.

**172. சைவப்புலவர் பொன்னம்பலம் சுகந்தன் B.A. 1974.08.16**

யாழ். பொன்கந்தையா வீதி நெல்லிலடி கரவெட்டியைச் சேர்ந்தவர். பொன்னம்லம் சோதிமலர் தம்பதிகளின் மகனும்,. இந்திராவின் கணவரும் ஆவார். 2007இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். தமிழ்ப்பாலபண்டிதருமாவார். தனியார் கல்வி நிலைய ஆசிரியராகப் பணிபுரிகின்றார். பேச்சாளர், எழுத்தாளர், கவிஞர், நாடகஆசிரியர், ஓவியர் ஆகிய பல திறமைகள் படைத்தவர். சமூக அரங்கம், இலங்கைக் கலைஇலக்கிய அரங்கம் ன்பவற்றின் தலைவர் ஆவார். சொல்வேந்தர், தமிழ் ஞான வித்தகர் முதலான பல கௌரவப்பட்டங்கள் பெற்றுளார். வெளிச்சம் தேடும் விளக்குகள் என்னும் சிறுகதைக் தொகுதியையும் வெளியிட்டுள்ளார்.

**173. சைவப்புலவர் கதிரித்தம்பி சிவானந்தன் B.A 1954.04.18**

யாழ். 13 நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். 13 கொலின் காடன்ஸ், இலண்டன், ஐக்கியஇராச்சியத்தில் வாழ்கிறார். கதிரித்தம்பி தம்பதிகளின் மகனும், ரேணுகாவின் கணவரும் ஆவார். 2007இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். பட்டதாரியும் கணக்கியலாளரும், மேலாண்மை முகாமைத்துவம் பெற்றவருமாவார். கணக்கியல் பேராசிரியராகத் தொழில் புரிகின்றார். கவிதை கட்டுரை எழுதுதல், சொற்பொழிவாற்றுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாய சைவத், தமிழ்ப் பணிகள் செய்பவர். புலம் பெயர் நாட்டிலிருந்து முதன் முதல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர் என்ற பெருமைக்குரியவர்.

**174. சைவப்புலவர் பாலசுப்பிரமணியஐயர் இந்திரசர்மா B.A.M.A** 1977.12.31

யாழ். ஆனந்தன் வடலி வீதி, அரியாலையைச் சேர்ந்தவர். தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்கிறார். பாலசுப்பிரமணியஐயர் நாகேஸ்வரி தம்பதிகளின் புதல்வரும் ஸ்ரீ வித்யாவின் கணவரும் ஆவார். 2007இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். சமஸ்கிருதத்தில் பட்டமும் பெற்றவர். சொற்பொழிவு, சமய தத்துவ ஆராய்ச்சிகள் செய்பவர். பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். மதுரை சைவசித்தாந்த மாநாடு, தூத்துக்குடி சைவசித்தாந்த மாநாடு, என்பவற்றுக்கு ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்து விருந்தினர் அழைப்பு பெற்றவர்.

**175. சைவப்புலவர் அருளானந்தன் அரன்மகன்** 1946.09.22

யாழ். நவாலி மானிப்பாயைச் சொந்த இடமாகக் கொண்டவர். அருளானந்தன் செல்லம்மா தம்பதிகளின் மகனும் ஞானேஸ்வரியின் கணவரும் ஆவார். 2008இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். விசேட கணித பயிற்றப்பட்ட ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். யோகாசனம், நடிப்பு, வில்லுப்பாட்டு, நீச்சல், கோயில் சரியைத் தொண்டு திருமுறையோதல் முதலான துறைகளில் பாண்டித்தியம் பெற்றவர். எண்களுடன் விளையாடுவோம். தேசிய ஒருமைப் பாட்டில் ஆசிரியர் பங்களிப்பு, கிழக்கே உதித்த விடிவெள்ளி, சிவன் முத்தரின் பதி ஞானம் முதலானபல ஆய்வுக்கட்டுரைகள் எழுதியுள்ளார். தற்போது யாழ். பல்கலைக் கழகத்தில் எம். ஏ. சைவசித்தாந்தம் பயிகிறார்.

**176. சைவப்புலவர் சின்னத்தம்பி தங்கரதினராசா B.A. Dip in Acco**

யாழ். கைதடி தெற்கு, கைதடி நாவற்குழியைச் சேர்ந்தவர். தற்போது Odenwaldstr 53, 51103 KOLN, GERMANY யில் வாழ்கிறார். சின்னத்தம்பி வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் கலாஶ்ரீயின் கணவருமாவார். 2008இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். கணக்காளராகவும், கணக்காய்வாளராகவும் உள்ள இவர் தற்போது காப்புறுதிக் கூட்டுத்தாபன உதவிப் பணிப்பாளராகத் தொழில்புரிகிறார். கோயில் திருத் தொண்டுகள், சத்சங்கம், முதலாய பணிகள் செய்கிறார். சைவப் பெரியார் எனும் கௌரவப்பட்டம் பெற்றுள்ளார். குறிஞ்சி மலர் 2003 எனும் நூல் வெளியிட்டுள்ளார். ஜெர்மனியில் முதல்முறை நடைபெற்ற சைவப்புலவர் தேர்வில் பட்டம் பெற்ற பெருமைக்குரியவர்.

**177. சைவப்புலவர் வைகுந்தநாதன் தேவகி B.A. 1979.05.18**

யாழ். நாவற்காடு, அச்சுவேலியைச் சேர்ந்தவர். வட்டக்குளம் கட்டைப்பிராய், யாழ்ப்பாணத்தில் வாழ்கின்றார். 2008இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். தனியார் கல்வி நிலையத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியராகப் பணிபுரிகின்றார். கவிதை, கட்டுரை, பேச்சு ஆற்றல் படைத்தவர். ஆலயப் பணிகளுடன் மாணவர்களுக்கு வீட்டில் இலவசக் கல்வி வழங்கும் சேவையும் செய்கின்றார்.

### 178. சைவப்புலவர் சின்னத்துரை இராதாகிருஷ்ணன் B.A. (Dip in Edu) 1960.07.27

யாழ். பண்டத்தரிப்பு வீதி சண்டிலிப்பாயில் பிறந்து, 54/1, மாத்தளை வீதி, வத்தேகம, கண்டியில் வாழ்கின்றார். சின்னத்துரை தங்கரத்தினம் தம்பதிகளின் மகனும், சாந்தாதேவியின் கணவரும் ஆவார். 2008ல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். ஆசிரியர் சேவை தரம் 2 இலிருந்து அதிபர் சேவை தரம் (S.L.P.S.2 - 2) பதவியுயர்ந்து தற்போது இந்து சமய ஆசிரிய ஆலோசகராகக் கடமை புரிகின்றார்.

வத்துகாமம், சைவ முன்னேற்றச் சங்கத்தின் முக்கிய பதவிகளிலிருந்து மலையகத்தில் சிறந்த சமய, சமூகப் பணிகள் செய்கின்றார். பத்திரிகைகள், சஞ்சிகைகள், சிறப்பு மலர்களில் காலத்துக்குக் காலம் பயனுள்ள பல கட்டுரைகளை எழுதி வருகின்றார்.

வகுப்பேற்றம், நாற்காலிப் பிணங்கள், புனிதர் காட்டிய வழி முதலான நாடகங்கள் பலவற்றை எழுதி மேடையேற்றியுள்ளார் துன்பப் பிரளயம் எனும் சிறுகதைத் தொகுதியையும் வெளியிட்டுள்ளார். சாமஸ்ரீ கனகஜோதி, அறிவொளி சாமஸ்ரீ, சமூகஜோதி முதலான கௌரவப் பட்டங்களையும் பெற்றுள்ளார்.

### 179. சைவப்புலவர் மார்க்கண்டுபிள்ளை கணநாதன் 1958.01.09

யாழ். வட்டுமேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர், அராலிவடக்கு, வட்டுக்கோட்டையில் வாழ்கிறார். மார்க்கண்டுப்பிள்ளை இராசேஸ்வரி தம்பதிகளின் மகனும் சிவமலரின் கணவரும் ஆவார். 2008இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். வைத்தியசாலை உத்தியோகத்தராகக் கடமை புரிகின்றார். பிரத்தியேக விஞ்ஞான ஆசிரியரும் ஆவார். சைவப்பிர சங்கம் செய்தல், கவிதை புனைதல், சமயச் சொற்பொழிவாற்றல், நாடகம் என்பவற்றில் புகழ் படைத்தவர், கேதாரவிரதம், பக்திநெறி, கற்பகத்தின் பெருமை முதலான நூல்கள் எழுதியுள்ளார். தமிழ்ப்பால பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார்.

செஞ்சொற் கொண்டல், முத்தமிழ்ச் செல்வர், சொற்பொழிவுப்புயல் முதலான பல கௌரவப்பட்டங்களும் பெற்றுள்ளார்.

### 180. சைவப்புலவர் தங்கராசா சக்திவேல் B.A. 1983.04.20

யாழ். கல்லூரி வீதி, புலோலிமத்தி, பருத்தித்துறையைச் சேர்ந்தவர். 2009இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். தனியார் கல்வி நிலையத்தில் கற்பிக்கின்றார். பேச்சாற்றல் உள்ளவர். நூலாக்க முயற்சியுடையவர். கோயில்களில் தொண்டர் சபைகளை அமைத்துத் தொண்டு செய்தல், பிரசங்கம் செய்தல், திருமுறைபாடுதல் முதலான சமய சேவைகள் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றார். அவ்வொல்லைப் பிள்ளையார் ஆலய வரலாற்றைத் தெய்வீகத்தன்மை பொருந்திய ஒலிவடிவம் செய்து வெளியிட்டுள்ளார்.

**181. சைவப்புலவர் சின்னராசா ரமணராசா B.A. (Hons) 1981.09.30**

யாழ். மாவிட்டபுரம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி கிழக்கு, காளி கோயிலடி, அளவெட்டியை வதிவிடமாகவும் கொண்டவர். 2009இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். ஆசிரியர் சேவை செய்கின்றார். சிறந்த பேச்சாளர், வர்ணணையாளர், பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இந்து சமயம் ஆயிரம் பல்தேர்வு வினாவிடைகள் பாகம் 1 எனும் நூலை ஏழாலை சைவ சித்தாந்த ஆய்வு நிறுவனம் மூலம் வெளியிட்டுள்ளார்.

**182. சைவப்புலவர் வினோ தம்பையா B.A 1984.04.09**

யாழ். முத்துமாரியம்மன் கோயிலடி, சாவகச் சேரியைச் சேரந்தவர் 2009இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். சித்தாந்த பண்டிதரும் ஆவார். ஸ்ரீ முத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலைப் பொறுப்பாசிரியராகவுள்ளார். கிராமசேவையாளரின் உதவியாளராகச் சமுர்த்தி வேலைத்திட்ட மேற்பார்வை மற்றும் இடம் பெயர்ந்தோர்க்கு உதவுதல் முதலான சேவைகள் செய்து வருகிறார். பல ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

**183. சைவப்புலவர் சுந்தரமூர்த்தி துஷ்யந் B.A. (Dip in Ed) M.A. 1977.01.06**

பெரியகல்லாறு, கல்லாறு, மட்டக்களப்பைச் சொந்த இடமாகக் கொண்டவர். சுந்தரமூர்த்தி கமலாவதி தம்பதிகளின் மகனும் கிருஷ்ணப்பிரியாவின் கணவரும் ஆவார். பேச்சாற்றல் எழுத்தாற்றல் மிக்கவர். ஆசிரியர் சேவையில் உள்ளார். 2010இல் சைவப்புலவர் பட்டம் பெற்றவர். இந்து கலாசாரத்திணைக்கள மலர்கள், இந்துக்கலைக் களஞ்சியங்கள், அகில இலங்கை இந்து மன்ற மலர்கள் முதலானவற்றில் கனதியான, பயனுள்ள ஆய்வுக்கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ளார். கருத்தரங்குகளில் முக்கியமான வளவாளராகப் பங்களிப்புச் செயது வருகிறார். இவருடைய எழுத்தும் பேச்சும் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடியதாகவும், கவர்ச்சிகரமானதாயும் இருப்பது சிறப்பம்சம் ஆகும்.

**184. சைவப்புலவர் வைரவன் கோகிலன்**

யாழ். அனலைதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் Rotdorn weg8, 41540 Dormageu, Germany யை வாழ்விடமாகவும் கொண்டவர்.

வைரவன் சின்னப்பிள்ளை தம்பதிகளின் மகனும் சந்திராவின் கணவரும் ஆவார். 2010இல் சைவப் புலவர் பட்டம் பெற்றவர். சைவம், தமிழ் கற்பிக்கும் ஆசிரியராகப் பணிபுரிகின்றார். ஜெர்மனியில் இருந்து சைவப்புலவர் தேர்வு எழுதிச் சித்தி பெற்ற பெருமைக்குரியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 185. சைவப்புலவர் சந்திரா கோகிலன்

மன்னார் தாராபுரத்தைச் சொந்த இடமாகவும், Rotdorn Weg 41540 Dormateu, Germany யை வாழ்விடமாகவும் கொண்டவர். நாகன் சீதைப்பிள்ளை தம்பதிகளின் மகளும் கோகிலன் அவர்களின் துணைவியும் ஆவார்.

2010 இல் ஜெர்மனியில் இருந்து சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட 2ஆம் வருட மாணவியும் ஆவார். தமிழ் கற்பித்தலுடன், கடை முகாமையாளராகவும் தொழில்புரிகின்றார். சமூக சமயப் பணிகளுக்கும் உதவி வருகிறார்.

### 186. சைவப்புலவர் விஜயதர்சினி ஜோதிநாதன்

யாழ். இணுவில் மேற்கு இணுவிலைச் சேர்ந்தவர். தற்போது 28 (Camden Avenue Hayes, Middlesex, Ub4 Opn.U.K ) லண்டனை வாழ் விடமாகக் கொண்டுள்ளார். நல்லையா கனகம்மா தம்பதிகளின் மகளும் ஜோதிநாதனின் வாழ்க்கைத் துணைவியும் ஆவார். 2010இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். ஆசிரியராகவும், விற்பனை உதவியாளராகவும் பணிபுரிகின்றார் கவிதை, கட்டுரை எழுதுதல், மாணவர்களுக்கு பேச்சு, நாடகம் வில்லுப்பாட்டு பயிற்றுதல் முதலான பணிகளும் செய்கின்றார். திருவிழாக்கள், சமய, தமிழ்ப் போட்டிகளுக்கு உதவுதல் முதலான சேவைகளுடன் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுடோர்க்கு உதவுதலிலும் ஈடுபட்டுள்ளார்.

### 187. சைவப்புலவர் சந்தோஷம் ஜெயலட்சுமி B.A. 1953.10.06

கொழும்பு XB7-2-1 எட்மண்டன் அப்பார்ட்மென்ட்ஸ் எட்மன் வீதி, கிருலப்பனை, கொழும்பு 6இல் வாழ்பவர். கதிரவேல் நல்லம்மா தம்பதிகளின் மகளும், சந்தோஷம் அவர்களின் துணைவியும் ஆவார். 2010இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். சித்தாந்த பண்டிதர் பட்டமும் தமிழ் பால பண்டிதர் பட்டமும் பெற்றுள்ளார். அத்துடன் தர்மாசிரியர் தேர்விலும் சித்தியடைந்துள்ளார். திறந்த பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. சமூகவியல் கற்கை நெறியைப் பின்பற்றுகின்றார். மும்மொழி ஆற்றல் உள்ள இவர் 20 வருடங்களுக்கு மேலாகத் தனியார் ஆசிரியராகப் பணிபுரிகின்றார். அரச ஊழியர், சிங்கள மாணவர்களுக்குத் தமிழ் கற்பிக்கின்றார். சமூக சேவையில் ஈடுபாடுள்ளவர். தொடர்ந்து கற்றுக் கொண்டே இருக்கிறார்.

### 188. சைவப்புலவர் பிருந்தாவனிதை நடராசா B.A. (Hons), M.A. 1980.02.06

யாழ் 185/1, கண்டிவீதி, சாவக்சேரியைச் சேர்ந்தவர். நடராசா, மகேஸ்வரி தம்பதிகளின் புதல்வியாவார். 2010 இல் சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். கலைமானி முதுநிலை மாணி (தமிழ்) கற்கைகளுடன் பட்டப்பின் கல்வி டிப்புளோமா (PGDE) வும் செய்துள்ளார். கவிதை, சிறுகதை எழுத்தாற்றலுடன் சைவ சமயஞ்சார்ந்த கட்டுரைகளைப் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் அவ்வப்போது எழுதி வருகின்றார். ஆசிரியர் சேவையில் உள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப்புலவர் தேர்வு கடல்கடந்த முதல் யாழ்ப்பாணத் தேர்வாகப் பரிணமித்ததும் அவனின் திருவருளே!

ஆய்வாளர் ஆசிரியர் சூ.யோ.பற்றிமாகரன் இலண்டன்
BA Speical Diploma (Oxford) Bsc PG Diploma MA

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்திற்கு இப்பொழுது வயது 50. இந்தப் பொன்விழா ஆண்டுவரை இச்சங்கம் சைவசித்தாந்தத்திற்கும் சைவத்திற்கும் தமிழுக்கும் சாதித்தவைகள் பல. சந்தித்த வேதனைகளும் பல. ஆயினும்

"பின்னை நின்று என்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யுமாறே"

என்னும் திருமூலர்வாக்குக்கு அமைய இச்சங்கம் ஞானபூசையின் அம்சங்களாகத் திருமுறைகளை ஓதல் ஓதுவித்தல், சாத்திரங் களைக் கேட்டல் கேட்பித்தல் என்பதனை எம்மண்ணில் நிலைநிறுத்தும் வேலைத் திட்டத்தைக்கொண்டு செயற்பட்டுவருகிறது.

"ஞானநூல் தனைஓதல் ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான் கேட்டல் நன்றாய்
ஈனமில்லாப் பொருள்தனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில்ஞானபூசை"

எனச் சிவஞானசித்தியாரில் அருணந்தி சிவாசாரியார் அருளிய திருவாக்குக்கமைய சைவப்புலவர்சங்கம் சிறப்பாக அறிவொளி ஏற்றி அகஇருளகற்றிச் சிவவாழ்வை மீள்வித்து தவவழிவாழ மக்களுக்குப்பயிற்சி அளிக்கும் ஆன்மீகப்பாசறையாக திகழ்கிறது. இதனால் அகிலஇலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் பொன் விழா. தாயகத் தமிழர்க்குப் பெருவிழா. தாயகச் சூழலால் உலகெல்லாம் சுழற்சியுற்ற புலம்பெயர் நமக்கும் அது திருவிழா.

**வரலாற்றுத் தேவையால்**
**இலங்கையில் தனிச்சங்கமாகப் பிறப்பு**

30.09.1960 விஜயதசமியில் சைவப்புலவர் வித்துவான் வ. செல்லையா அவர்களைத் தலைவராகவும் சைவப்புலவர் ச.சச்சிதானந்த சிவம் அவர்களைச் செயலாளராகவும் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களைப் பொருளாளராகவும் கொண்டு தொடங்கப்பெற்றது. அன்று முதல் கடந்த 50 ஆண்டுகாலமாகத் தாயகத்தில் சைவசித் தாந்தத்தின் விளைநிலமாக இச்சங்கம் திகழ்கிறது. இன்தமிழ் இலக்கண இலக்கியச் சோலையாகவும் மணங்கமழ்கிறது. இச் சங்கத்தின் தாய்ச்சங்கமாக 1905 முதல் தமிழகத்தில் மறைமலை அடிகள் வழியில் தமிழ் உணர்வடனும் சைவசித்தாந்த அருட்திறத்துடனும் சைவச்சித்தாந்தப்பணியில் சிறப்புறச் செயற்பட்டு வந்த சென்னைச் சைவச்சித்தாந்த மகாசமாஜம் திகழ்ந்தது. 1960களில் சைவப்புலவர் தேர்வுக்கு மதுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற வித்துவான் சைவப்புவர் செல்லையா வித்துவான் சைவப்புலவர் சச்சிதானந்தசிவம் ஆகியோர் சென்னை சித்தாந்த மகாசபையின் தேர்வுகளை யாழ்ப்பாணத்தில் நடத்து வதற்கான அனுமதியைப் பெற்றனர். இக்காலத்தில் இலங்கையில் அந்நியச் செலாவணித்தடை அமுலாக்கப்பட்டு இருந்த மையினால் இந்தியா சென்று தேர்வுகளை எழுதுவதில் நடை முறைச்சிக்கல்கள் நிலவியமை இலங்கையில் இத்தேர்வை நடாத்துவதற்கான புறச்சூழ் நிலையைத் தோற்றுவித்தது.

**தாய்ச்சங்கத்திற்கும் வழிகாட்டியாக விளங்கியது யாழ்ப்பாணமே!**

இந்நேரத்தில் இலங்கையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரால் தொடங்கப்பெற்ற சைவத் தமிழ் மறுமலர்ச்சி சித்ம்பரத்தில் 1864ல் சைவப்பிரகாசவித்தியாசாலையை நிறுவி அங்கும் சைவசித்தாந்த மீள்உணர்வைத் தோற்றுவித்தது. இதன் வழி தென்னிந்திய சைவசித்தாந்த மகா சமாஜத்தின் முதல் மகாநாட்டுக்கு சேர் பொன்னம்பலம் இராம நாதன் தலைமைவகித்தார் என்பது வரலாறு. அத்துடன் தமிழ்த்தென்றல் வி.கல்யாணசுந்தர முதலியாரின் குரு கதிர்வேற்பிள்ளை என்பது மற்றொரு சிறப்பு. தமிழ்த்தந்தையெனப் பண்டிதமணி அவர்கள் புகழ்ந்துரைத்த தாமோதரம் பிள்ளையவர் களும் தமிழியல் தந்தை எனப் போற்றப்படும் ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை அவர்களும் சைவத்தமிழ்க்கல்வி தமிழகத்தில் வளர்த்த ஈழத்துப் பெரியார்களில் சிலர். மேலும் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரால் 1898ல் தொடங்கப்பெற்ற நான்காவது தமிழ்ச்சங்கத்தின் யாப்பினைப் பெற்று மதுரையில் பாண்டித் துரைத்தேவர் 1901ல் தொடங்கிய மதுரைத் தமிழ்ச்சங்கமும் பின்னர் சுவாமி விபுலா நந்தரின் வேண்டு கோளால் இராஜாசேர் அண்ணாமலைச் செட்டியாரால் தொடங்கப் பெற்ற அண்ணா மலைப் பல்கலைக்கழகமும் தமிழகத்தில் சைவத்தமிழ் வளர்ச்சிக்கு அளித்த புத்துணர்வின் பெறுமதிகளில் ஒன்றாகவே சென்னைச் சித்தாந்த சமாஜமும் அமைந்தது வரலாற்று உண்மை. அகிலஇலங்கைச் சைவப்புலவர் சங்கம் என்பது சென்னைச் சித்தாந்த மகாசமாஜத்தின் சேயாகவும் மலேசியச் சைவசித்தாந்த மகாசமாஜத்தின் உறவாகவும் உதித்த போதிலும் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் நாவலர் பரம்பரையின் அறிவுப்பணியின் மீள் உற்பத்தியாகவும் உள்ளது என்பதை உலகுணர உதவும்.

**கந்தபுராண கலாசார வழியில் தாய்ச்சங்கப் பணி தொடர்கிறது.**

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் பண்டித தேர்வில் சித்திபெற்று திருநெல்வேலி சைவஆசிரிய கலாசாலையில் நெடுங்காலம் பணிசெய்து பன்னூறு சைவத் தமிழாசிரியர் களை உருவாக்கிய பண்டிதமணி கணபதிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை ஐயா அவர்களின் வாழ்நாளில் யாழ்ப்பாணத்தின் கந்தபுராணக் கலாசாரத்தின் தொடர்ச்சியாக அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் தனக்கான தனித்துவத்துடன் செயற்பட்டது என்பதும் மற்றொரு முக்கியமான வரலாற்றுப் பதிவாக உள்ளது. தென்னிந்திய சைவசித்தாந்த மகாசமாஜம் முதல் எமது தாயகத்துச் சைவசித்தாந்தப் பேரறிஞர்களின் பெருநிலப்பரப்பாகவும் இந்த அகிலஇலங்கைச் சைவப்புலவர் சங்கம் தன்பணிதொடர்கிறது. இந்த வகையில் ஈழத்தமிழ்த் தேசியத்தின் தான்மைகளுள் ஒன்றாகத் ஈழத்தமிழ்ப் பண்பாட்டுச் சின்னங்களில் ஒன்றாக உலகெங்கும் வாழ் தமிழர்களால் போற்றப்படும் அமைப்பாக இது பரிணமித்து நிற்கிறது.

**புறச்சூழ்நிலையால் தன்னாட்சியுள்ள சங்கமாகப் பணிதொடர்ச்சி**

1972ல் இலங்கையின் இந்திய உயர்கல்விச் சான்றிதழ்களின் தரமதிப்பீட்டில் கொண்டு வரப்பட்ட கெடுபிடிகள் இல்கையிலேயே அகிலஇலங்கைச் சைவப்புலவர் தேர்வை சென்னை சைவசித்தாந்த மகாசமாஜத்தின் அனுமதியுடன் தன்னாட்சி உரிமையுடன் நடாத்த வேண்டிய காலத்தேவையை உருவாக்கியது. இதனால் அன்று முதல் இன்று வரை யுத்தகால நெருக்கடிகளையும் கடந்து அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் சைவப்புலவர் தேர்வுகளைத் தன்னாட்சி உரிமையுடன் நடத்தி வருகிறது.

**ஐரோப்பாவின் முதற் தாயகத்தேர்வாக சைவப்புலவர் தேர்வு**

சைவப்புலவர் சங்கச் செயலாளர் கலாபூஷணம் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களின் இங்கிலாந்து வருகை (2005) சைவப்புலவர் இளஞ்சைவப்புலவர் தேர்வு களை இங்கிலாந்து வாழ் சைவத்தமிழர்களும் எடுப்பதற்கான இறையருளாக மாறியது. இதன் வழி 2007ல் கடல்கடந்து நடத்தப்படும் முதல் யாழ்ப்பாணத்துத் தேர்வு என்ற வரலாற்றுப் பெருமையுடன் அகில இலங்கைச் சைவப் புலவர் தேர்வு இலண்டனில் தொடங்கப் பெற்றது. இதில் சைவப்புலவர் சிவானந்தன் இளஞ்சைவப்புலவர் விஜயதர்சினி ஆகியோர் சித்தி பெற்றனர். இலங்கையின் புகழ்பெற்ற நகுலேஸ்வரம் கோயில் குருக்களால் சைவப்புலவர் வசந்தன் குருக்கள் தலைமையில் இலண்டனில் பட்டமளிப்பு 2008ல் நடாத்தப்பெற்றது.

**சிவாசாரியர்கள் தலைமையில் ஐரோப்பிய பட்டமளிப்புக்கள்**

2008 இல் ஐரோப்பாவின் முதற் சைவப்பட்டத் தேர்வு என்ற வரலாற்றுப் பதிவுடன் யேர்மனியில் நடாத்தப்பட்டது. இதில் சைவப்புலவர் தங்கரெத்தினராஜா இளஞ் சைவப்புலவர் வைரவன் கோகிலன் ஆகியோர் தேர்வுபெற்றனர். 2009ல் யேர்மனியில் சிவாச்சாரியார் ரவிக்குருக்கள் தலைமையில் இலங்கையின் திருமலை வில்லூன்றிக் கந்தசுவாமிக் கோயில் பிரதம குருக்களாகத் திகழ்ந்து தற்பொழுது கனடாவில் வசிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவவேத அறிவுக்கடல் எனப்போற்றப்படும் பிரம்மஸ்ரீ பூரணானந்தக் குருக்கள் தலைமையில் பட்டமளிப்பு நடைபெற்றது.

இவ்வாண்டு 2010 சைவப்புலவர் தேர்வில் யேர்மனியைச் சேர்ந்த ஆசிரியர்கள் வைரவன் கோகிலன் திருமதி சந்திரா கோகிலன் ஆகியோர் 2ம்நிலையில் சிறப்புச் சித்தி பெற்றும் இலண்டனைச் சேர்ந்த திருமதி விஜயதரிசினி ஜோதிநாதன் 3ம் நிலையில் சித்தி பெற்றும் சைவப்புலவர் பட்டமளிப்பினை இவ்வாண்டில் பெறுகின்றனர். இவ்விதமாகச் சிவனருளால் சிவவழி ஆன்மாக்களை வழிநடத்தும் சைவப்புலவர் தேர்வுகள் உலகளாவிய விரிவினைப் பெற்று வருகிறது.

**பல்கலைக்கழக சைவசித்தாந்த முதுகலைப் படிப்புக்கு ஏற்பு**

2008முதல் அகிலஇலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் சைவப்புலவர் பட்டத்தினை யாழ்பல்கலைகழகத்தின் இந்துநாகரீகத்துறை கலைமாணிப்பட்டத்திற்குச் சமானமானதாக அறிவித்தது. 2008ல் சைவப்புலவராக வந்தவர்கள் யாழ்பல்கலைக்கழக சைவ சித்தாந்த முதுகலைமாணிப் பட்டம் பெற்று பல்கலைகழகமட்டத்திலும் அகிலஇலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் தரத்தை நிலை நிறுத்தியுள்ளர். நடப்புக் கல்வியாண்டிலும் சைவப்புலவர் பட்டம் பெற்றவர்கள் முதுகலை மாணி படிப்பில் பதிவாகி கல்வியில் சிறப்புற்று வருகின்றனர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் லண்டனிலும் இதனை நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அரும்பணிகள் செய்யும் சங்கமும் அதன் பணியும் அவன் திருவருளே!**

இவ்வாறாக இன்று தாயகத்திலும் ஐரோப்பாவிலும் அகிலஇலங்கைச் சைவப் புலவர் சங்கம் தொடர்ந்து தன் சைவப்புலவர் இளஞ்சைவப்புலவர் தேர்வுகள் வழி தமிழையும் சைவத்தையும் வளர்த்து வருகிறது. மேலும் சைவசித்தாந்த மகாநாடுகள் நடத்துதல் சைவபூஷணம் பட்டத்தைச் சைவத்திற்கு அளப்பரிய பணிசெய்தவர்களுக்கு வழங்கி மதிப்பளித்தல் தமிழகத்தின் சைவ சித்தாந்த மகாநாடுகளுக்குத் தாயகத்தின் தலைசிறந்த சைவசித்தாந்த அறிஞர்களை அனுப்பிச் சிறப்பித்தல் போன்ற பல பணி களுடன் சைவசித்தாந்த நூல்களையும் விளக்க நூல்களையும் இலக்கியகலாநிதி பண்டிதமணி மு. கந்தையா போன்ற பல தலைசிறந்த சைவத்தமிழ் அறிஞர்களின் ஆழஅகல உழுத அற்புதப்படைப்புக்களையும் உருவாக வெளியாக உழைத்து ஆண்டவனை அழைத்துத் தமிழ் உலகும் துய்த்து இன்புற வழிகாட்டி வருவது எல்லாமே அவன் அருளின் அற்புதச் செயல் என்றே கூறவேண்டும். அவனருளாலே சங்கம் நூறாண்டு கண்டு சிவவழி காட்ட இப்பொன்விழா ஆண்டில் அவன் தான் பணிந்து நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் திருநாடும் திருவாவடுதுறை ஆதீனமும்

**திரு. செல்லையா நவநீதகுமார்**
திருவாவடுதுறை ஆதீனச் சமயப்பரப்புநர்

சைவ ஆதீனங்களிற் தொன்மையான ஆதீனம் திருவாவடுதுறை ஆதீனம் ஆகும். இவ்வாதீனம் துறைசை ஆதீனம் என்றும் கூறப்படும். இதன் தோற்றம் பதின்னான்காம் நூற்றாண்டு காலப்பகுதியாகும். திருக்கைலாய பரம்பரை புறச்சந்தான குரவரான உமாபதி சிவாசாரியாரிடம் உபதேசம் பெற்றவர் அருள் நமசிவாயர். அவரிடம் உபதேசம் பெற்றவர் சித்தர் சிவப்பிரகாச தேசிகர்.

மூவலூர் வைத்தியநாதன் மெய்கண்ட சந்தான மரபில் வந்த சித்தர் சிவப்பிரகாச தேசிகரால் ஆட்கொள்ளப்பட்டார். தமது குருவின் நாமத்தைத் தீட்சாநாமமாகச் சூட்டி உபதேசம் செய்து திருவாவடுத்துறையிலிருந்து சைவ அடியவர்களுக்கு உபதேசம் செய்யுமாறு நமசிவாய தேசிகருக்கு ஆணையிட்டு திரு மறைக்காடு சென்றார் சித்தர் சிவப்பிரகாசர்.

குருநாதர் ஆணையிட்ட வண்ணம் நமசிவாய தேசிகர் திருவாவடுதுறையில் வீற்றிருந்து சைவபரிபாலனம் செய்து வந்தார். திருக்கைலாய பரம்பரை மெய்கண்ட சந்தானத் தொடர்பினால் இந்த ஆதீனம் திருக்கைலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் திருவாவடு துறை ஆதீனம் என்று சிறப்புப் பெறுகின்றது.

திருவிடைமருதூர், திருவீழிமிழலை, மயிலாடுதுறை, திருப்பெருந்துறை முதலிய பல பாடல் பெற்ற சிவாலயங்களைத் தரும பரிபாலனம் செய்து வரும் ஆதீனம், அன்றும் இன்றும் இயற்றமிழ், இசைத்தமிழ் வித்தகர் களைக் கௌரவித்து வருகிறது. அரிய பல நூல்களை வெளியிட்டு வருகிறது.

தாய்நாட்டில் இருந்து சிவஞானச் செங்கோலோச்சும் ஆதீனம் சேய்நாட்டில் உள்ள சைவத்தமிழ் அறிஞரை இனங்கண்டு பாராட்டத்தவறவில்லை.

யாழ்ப்பாணம் நல்லூரிலே கந்தப் பிள்ளைக்கு மகனாகத் தோன்றிய ஆறுமுகம் என்பவரை "நாவலர்" என்ற பெருமைக் குரியவராக்கியது திருவாவடுதுறை ஆதீனமே யாகும். ஆறுமுகம் அவர்கள் வண்ணார் பண்ணையில் சைவப் பிரகாச வித்தியா சாலையை ஆரம்பித்தார். அதைத்தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் சைவப்பிரகாச வித்தியாசாலைகள் ஆரம்ப மாயின, இங்கு பயிலும் மாணவர்களுக்கு பாடநூல், சமயநூல், கருவிநூல் தேவைப் பட்டது. நூல்கள் அச்சிடுவதற்கு அச்சு இயந்திரம் ஒன்று வாங்கி வருவதற்கு இந்தியா சென்றார் ஆறுமுகம். வேதாரணியம் சென்று அங்கிருந்து மயிலாடுதுறை போய்த் திருவாவடுதுறையை அடைந்து சிலநாள் அங்கு தங்கியிருந்தார்.

ஆறுமுகத்தின் கல்வித் திறனை அறிந்திருந்த திருவாவடுதுறை ஆதீன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருமகாசந்நிதானம் பிரசங்கம் செய்யும்படி கேட்டார், பதிபசுபாசம் என்னும் பொருளில் பக்தியும், சிவாகம ஞானமும், பொருட்செறிவும், எளிமையும், இனிமையும் மிக்கதொரு பிரசங்கமாரி பொழிந்தார். அங்கிருந்தோர் மெய்சிலிர்த் திருந்தனர். சந்நிதானம் "நாவலர்" என்ற பட்டம் அளித்து சிறப்புச் செய்தார்.

மேற்கூறியவற்றைப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் வருமாறு குறிப்பிடுகின்றார்.

"இருபத்தாறே வயது நிரம்பிய கெம்பீரமான ஒரு வாலிபர் கந்தபுராண உணர்ச்சி வீறுகொள்ள இந்த யாழ்ப்பாணத்திலிருந்து தாய் நாட்டை நோக்கி நடக்கிறார். அங்கே சைவத்திற்கும் தமிழுக்கும் உறைவிடமான திருக்கைலாச பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் அந்த வாலிபரை வரவேற்கிறது. சித்தியாருக்கு உரை கண்டவருள் ஒருவரான ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவ்வாலிபரை ஒரு உபந்நியாசம் செய்யும்படி குறிப்பிடுகின்றார். வாலிபர் புட்கலாவர்த்த மேகமாய் மாறி பிரசங்கமாரி பொழிகின்றார். அவருடைய பேச்சு அதிமதுரச்செந்தமிழாயிருந்தது. பேச்சின் கருத்து சுத்தாத்துவித சைவ சித்தாந்தத்தின் சிகரமாய் மிளிர்ந்தது. ஆதீனம் ஆராமைமிக்கு அந்த இளம் வாலிபரை "நாவலர்" என்று வாழ்த்தியது"

திருவாவடுதுறை ஆதீனம் வழங்கிய "நாவலர்" என்ற பட்டம் இயற்பெயருடன் சேர்ந்து ஆறுமுகநாவலர் என்று அழைக்கப்படலானார்.

வடகோவை சபாபதி என்பவர் திருவாவடுதுறை ஆதீனத்தை அடைந்து ஆதீன பதினாறாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடம் உபதேசம் பெற்று பன்னிரண்டாண்டுகள் ஞான நூல்களை அவர்பாற் கற்றுத்தெளிந்து ஆதீன வித்துவானாய் மிளிர்ந்தார். இவரின் பிரசங்கத்திறமையினால் ஆதீனக்குருமகா சந்நிதானம் அவர்கள் இவருக்கு "நாவலர்" என்னும் பட்டமளித்து ஆசிர்வாதஞ் செய்தருளினார். இலங்கை நாட்டவரில் முதலாவது ஆதீனவித்துவான் என்ற சிறப்பும் நாவலர் பட்டம் பெற்ற இரண்டாமவர் என்ற சிறப்பும் இவர் பெற்றுக்கொண்டார்.

சபாபதி நாவலர் தமது ஞானாசிரியராகிய குருவின் மீது மிகுந்த பக்தியுடையவர் என்பது இவர் பாடிய திருவிடைமருதூர்ப் பதிற்றுப் பத்தந்தாதியில் சுப்பிரமணிய தேசிக சுவாமிகளுக்குச் செய்த வணக்கத்தால் அறியலாம்.

தாவடுநற் றிருக்கயிலைத் திருநந்தி மரபுவழி தழைக்கப் போந்து
தேவடுவொன் றில்லாத மாதவத்தோ ரகவிருளைச் சீக்கும் பானு
மாவடுவின் வகிரன்ன கண்ணிவழி படமாசின் மணிதான் மேவு
மாவடுதண் டுறைசையிற்சுப் பிரமணிய தேசிகன்றா ளடைந்துய்ந் தேனால்.

சித்தங்கேணி அம்பலவாணபிள்ளை தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகியவற்றைக் கற்றுப்புலமை பெற்று ஆறுமுகநாவலர் காட்டிய வழியில் மடாலயம், கோவில் ஆகிய இடங்களிலே சைவப் பிரசங்கம், புராணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படனம் போன்றவற்றை நிகழ்த்தி வந்தார்.

பிள்ளையவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்தை அடைந்து பதினேழாவது பட்டம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரைப் பணிந்து ஆசிபெற்று உரையாடி மகிழ்ந்த போது சந்நிதானத்தின் திருவுளப்பங்கின் வண்ணம் பிரசங்கம் நிகழ்த்தினார். இவரின் நாவன் மையை வியந்து தேசிகர் நாவலர் என்ற பட்டம் அளித்துப் பாராட்டினார்.

ஆதீன 23ஆவது பட்டத்தில் எழுந்தருளிச் சிவஞான செங்கோலோச்சும் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் இலங்கைத் திருநாட்டுடன் நெருங்கிய தொடர்புடையவர். இரு தடவை இங்கு எழுந்தருயுள்ளார்.

ஆதீனத்திலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசை விழா நடைபெற்று வருவதும் இக்குருமகா சந்நிதானத்தின் அருளாசியிலே தான். இலங்கையிலே சைவ சமய சேவை செய்து வரும் சபை பாராட்டி பொற்கிளி வழங்கிக் கௌரவிக்கப் படுவதும் இக்குருபூசை விழாவில் தான். இலங்கையின் மூத்த சைவ சமய நிறுவனமான யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையும், கொழும்பு விவேகானந்த சபையும், ஆறுமுக நாவலர் விழாவில் கௌரவம் பெற்றன.

குருமகா சந்நிதானம் அவர்களின் அருளாணையின் வண்ணம் சைவப்புலவர் திரு. ஏ. அனுசாந்தன் அவர்களும் நானும் திருவாவடுதுறை ஆதீனச் சமய பரப்புநராகி இங்கு பணியாற்றுகின்றோம்.

தமிழ் நாட்டிலே சைவத் திருமுறை வளர்க்கும் நோக்கில் திருமுறைப் பயிற்சி மையம் அமைத்து. அதிலே 2290 பேர் பயின்று பயனடையும் வண்ணம் வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. இதுபோலக் குருமகா சந்நிதானத்தின் திருவுளப்பாங்கின் வண்ணம் கொழும்பிலேயும் பன்னிரு திருமுறைப் பயிற்சி மையம் திறம்பட நடைபெற்று வருகிறது. அன்றும் இன்றும் ஆதீனம் நம் நாட்டுக்கு பல சேவைகள் புரிந்து வருகின்றது.

**சமயகுரவர்கள் சிதம்பரத்துள் வழிபடச் சென்ற வாயில்கள்**

| | | |
|---|---|---|
| திருஞானசம்பந்தர் | - | தெற்குத் கோபுரவாயில் |
| திருநாவுக்கரசர் | - | மேற்குக் கோபுரவாயில் |
| சுந்தரர் | - | வடக்குக் கோபுரவாயில் |
| மாணிக்கவாசகர் | - | கிழக்குக் கோபுரவாயில் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்திருநாட்டில் சைவசித்தாந்தப் பயிர்வளர்த்த சான்றோர் சிலர்

**சிவத்திரு. கா. சிவபாலன்**
துர்க்காபுரம்

ஈழத்திருநாட்டில் சைவ சித்தாந்தப் பயிர்வளர்த்த சான்றோர் பலர் உளர். அவர்கள் எல்லாரையும் பற்றி எழுதுவதற்கு இடம்போதா. ஆதலால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் முதலான முக்கியமான பத்துப் பேர்கள் செய்த சைவப்பணிபற்றிய சுருக்கக் குறிப்புகளைத் தருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், காசிவாசி செந்திநாதஐயர், கொக்குவில் சபாரத்தின முதலியார், கொழும்பு மு. திருவிளங்கம் சதாவதானி நா. கதிரவேற்பிள்ளை, சைவப் பெரியார் சு., சிவபாத சுந்தரம், அச்சுவேலி ச. குமாரசுவாமிக் குருக்கள், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, கலாநிதி பண்டிதர் மு. கந்தையா, கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி முதலானோர் செய்த பணிகளே இங்கு குறிப்பிடப்படுகின்றன. ஆர்வமுள்ளோர் இவர்களைப் போல் பணிசெய்த மற்றையோரைப் பற்றித் தேடி அறியவும், இவர்களின் விரிவான பணிகளை ஆராய்ந்து அறியவும் இக்கட்டுரை உதவும் எனக் கருதுகின்றோம்.

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான்
## 1822 - 1879

யாழ்ப்பாணத்து நல்லூரில் கந்தப்பிள்ளை சிவகாமி தம்பதிகளுக்கு மகனாக 1822 மார்கழி அவிட்டத்தில் பிறந்தவர். இருபாலைச் சேனாதிராய முதலியாரிடமும், நல்லூர் சரவணமுத்துப் புலவரிடமும் தமிழ் கற்றவர். தமிழ், வடமொழி, ஆங்கிலத்தில் பாண்டித்தியம் மிக்கவர். சைவப்பிள்ளைகள் சைவச்சூழலில் கல்வி கற்க வேண்டுமென்றுவற்புறுத்தியதுடன் தானே வண்ணார் பண்ணையிலும், சிதம்பரத்தில் சைவப்பிரகாச வித்தியாலங்களை நிறுவி வழிகாட்டியவர். அவர் வழியில் சைவப் பாடசாலைகளும், கல்லூரிகளும் தோன்றி வளர்ந்தன கல்விப்பணி, சமயப்பணி, சமூகப்பணி, திருக்கோயிற்பணி முதலாம் பன்முகப்பணிகளை மிக உந்நதமாகச் செய்வதர். வேத ஆகம சைவ சித்தாந்த திருமுறைகளின் சாரத்தை உள்ளடக்கியதாகச் சிறுவர் முதல் பெரியோர் வரை பயன் பெறத்தக்கவகையில் சைவ வினாவிடை 1, 11, பாலபாடம் 1, 11, 111 முதலாம் நூல்களை எழுதி வெளியிட்டவர். சைவப்பிரசங்கத்தின் மூலம் மக்களை எழுச்சிகொள்ளச் செய்து சைவசமயக் கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பியவர்.

செய்யுள் நடையில் இருந்த பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் முதலாம் நூல்களை வசன நடையில் எழுதி வெளியிட்டவர். இதனால் இவர் 'வசன நடை கைவந்த வல்லாளர்' எனப் போற்றப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார் பெருமையையும், திருத் தொண்டின் மகிமையையும் சைவசித்தாந்த நுண்பொருள் விளக்கத்தையும், பெரியபுராண சூசனம் என்னும் நூல் மூலம் எடுத்து உணர்த்தியவர். தமிழ்மொழியைப் பிழையறக் கற்பதற்கு வசதியாக இலக்கணச் சுருக்கம், நன்னூல் காண்டிகையுரை முதலாம் நூல்களை வெளியிட்டவர்.

ஈழநாட்டைத் தளமாகக் கொண்டு தமிழ் நாட்டைத்தழுவி நிற்று ஆற்றிய பணிகளையும், இவரது பிரசங்கத் திறனையும் பாராட்டித் திருவாவடுதுறை ஆதீனம் "நாவலர்" பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

**மகான் காசிவாசி செந்திநாதஐயர்.**
**(1848 - 1924)**

ஈழத்திருநாட்டின் வடபால் குப்பிளான் கிராமத்தில் சின்னையா ஐயருக்கும், கௌரி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தவர். நாவலர் பெருமானின் உத்தம மாணவரில் ஒருவர். காசியிலே பத்து ஆண்டுகள் தங்கியிருந்து வேதாகம சித்தாந்த சாத்திரங் களை வல்லார் வாய்க் கோட்டுணர்ந்தவர்.

சிவபரத்துவத்தை மக்களிடையே பரப்பும் நோக்கமாக தேவாரம் வேதசாரம், சைவ வேதாந்தம், கந்தபுராண நவநீதம் முதலான அருமருந்தன்ன நூல்களை ஆக்கியவர். சைவசமய நெறிமுறையை நிலைநாட்ட வேதாந்த விளக்கமான நீலகண்ட பாஷியத்தைத் தமிழ் மொழியிலே மொழி பெயர்த்து உதவியவர். ஏகான்மவாதத்தைக் காரசாரமாகக் கண்டித்துச் சைவத்தை நிறுவியவர்.

**கொக்குவில் ச. சபாரத்தின முதலியார்**
**1858 - 1922**

கொக்குவில் சபாபதிப்பிள்ளை ஆச்சிமுத்து தம்பதிகளுக்கு 1858 காலயுக்தி வருடம் சித்திரை மாதம் 3ந் திகதி அவதரித்தவர். பண்டிதர் சயம்பு நாதரிடம் தமிழையும் யாழ். மத்தியகல்லூரியில் ஆங்கிலத்தையும் கற்றவர்.

ஈஸ்வர நிச்சயம் எனும் நூலை எழுதிப் பதிப்பித்து 1896 இல் வெளியிட்டவர். பிரபஞ்சவிசாரம், திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பு முதலாம் நூல்களுடன் பல பிரபந்தங் களையும் எழுதியுள்ளார். பத்திரிகைகள் மூலமாகச் சைவசித்தாந்தக் கட்டுரைகள் பலவற்றை எழுதி வெளியிட்டுள்ளார். கொக்குவில் கிருபாகர சுப்பிரமணியர் கோயிலில் ஸ்பாகர் பரம்பரையில் வந்தவர். இவர் வழிவந்தவரே சைவத் தமிழ் அறிஞர் பண்டிதர் அமிர்தாம் பிகை சதாசிவம் ஆவார்.

**சைவ சித்தாந்த அறிஞர் மு. திருவிளங்கம்**
**1859 - 1922**

யாழ்ப்பாணம் மானிப்பாயில் பிறந்து கொழும்பு நகரிலே பல ஆண்டுகாலம் வாழ்ந்வர். வழக்கறிஞராகவும், நொத்தாரிஸ் ஆகவும் பணிபுரிந்தவர். சைவ சித்தாந்தத்தில் பெரும்புலமையும், பற்றும் கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் ஆகிய சித்தாந்த நூல்களுக்கு இவர் எழுதிய உரைகள் பெருமைக்குரியன. கந்தரலங்காரத்துக்கும், திருப்புகழ்த் திரட்டுக்கும் இவர் எழுதிய உரைகள் தத்துவ நுட்பம் நிறைந்தவை. கொழும்பில் இருந்து சைவசித்தாந்தப் பணி செய்த இவர் சைவப் பெரியார்கள் சு. சிவபாதசுந்தரம், பண்டிதமணி சி.க. ஆகியோரால் போற்றப்பட்டவர்.

### மாயாவாத துவம்ச கோளரி மேலைப்புலோலி சதாவதானி நா. கதிரவேற்பிள்ளை 1871 - 1907

வடமராட்சி புலோலியில் 1871 மார்கழி 3இல் அவதரித்தவர். தனது 21ஆம் வயதில் தமிழகம் சென்றவர். சைவப்பிரசங்கம் செய்தல், நூல்கள் எழுதுதல், பதிப்பித்தல், உரை எழுதுதல், அகராதி வெளியிடல் முதலாம் சைவத் தமிழ்ப் பணிகள் செய்தவர். இவருடைய நூல்களிலே சுப்பிரமணிய பராக்கிரமம், சைவ சந்திரிகை, சிவஷேத்திராலய மகோற்சவ விளக்கம், சைவ சித்தாந்தச் சுருக்கம், ஏகாதசி புராண அரும் பதவுரை என்பன குறிப்பிடத்தக்கவை.

இவர் செய்த தமிழ் அகராதி அழியாப்புகழ் பெற்றது. 1636 பக்கங்களைக் கொண்ட இந்த அகராதியை 'யாழ்ப்பாண அகராதி' என அழைப்பர். புகழ் பூத்த தமிழ்த் தென்றல் திரு. வி.க. இவருடைய மாணவர் என்பது பெருமைக்குரியது.

### சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் 1878 - 1953

வடமராட்சி புலோலி சுப்பிரமணியபிள்ளை வள்ளியம்மை தம்பதிகளின் இளைய புதல்வராக 17.01.1878இல் அவதரித்தவர். சென்னையில் கணிதம், தர்க்கம் எனும் பாடங்களைச் சிறப்புப் பாடங்களாகக் கற்று B.A. பட்டதாரியானவர். பரமேஸ்வராக் கல்லூரி யிலும், சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியிலும் புகழ்பூத்த அதிபராயிருந்தவர்.

சைவ அறிஞர் மரபில் தோன்றிய இவர் ஓய்வுபெற்றதும் கந்தவனக் கடவை முருகன் ஆலயத்தில் ஆச்சிரமம் அமைத்துச் சமய வாழ்வு வாழ்ந்தவர். சைவ வேதம் 1ம், 2ம் புத்தகங்கள், திருவருட் பயன் விளக்கவுரை, கந்தபுராண விளக்கம், திருப்பெருவடிவம், திருவாசக மாணிகள், சைவ சித்தாந்தம், அகநூல், சைவ சமயசாரம் எனும் நூல்களைத் தமிழில் எழுதி வெளியிட்டவர். ஆங்கிலத்தில் சைவ சமயத்தின் மாண்பு, தர்க்கம், சிவஞானபோதம், ஆறுமுகநாவலர் எனும் நூல்களை வெளியிட்டவர். திருக்கேதீச் சரத்திருப்பணிச் சபைத் தலைவராய் இருந்து, திருஞானசம்பந்தர் மடத்தையும், நடராசப் பெருமான் விக்கிரகத்தையும் பிரதிட்டை செய்தவர். திருப்பணி அப்பர் எனப் போற்றப்பட்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அச்சுவேலி. சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் 1886 - 1971**

அச்சுவேலியில் ஆதி சைவ அந்தண குலத்தில் சபாபதிக் குருக்கள் தங்கம்மா அம்மையார் தம்பதிகளுக்கு அருந்தவப் புதல்வராக 16.11.1886ல் புனர்பூச நட்சத்திரத்தில் அவதரித்தவர்.

நீர்வேலி சிவசங்கர பண்டித்தரிடமும், மகன் சிவப்பிரகாச பண்டிதரிடமும் தமிழையும், சமஸ்கிருதத்தையும் கற்றவர், ஸ்ரீமத் த. கைலாசபிள்ளையிடமும், சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரிடமும், தமிழையும் சைவ சித்தாந்தத்தையும் கற்றுக் கொண்டார். புலோலி ம. குமாரசாமிக் குருக்களிடம் சைவாகமங்களைக் கற்றார்.

விநாயகபரத்துவம, முத்திலட்சணம், ஆலய சேவை, சிவபூசை விளக்கம், சைவப் பிரகாசிகை 1, 2, 3, 4, 5, முப்பொருள் விளக்கம் போன்ற 18 நூல்களை எழுதியுள்ளார். வடமொழியில் சிவாகம சேகரம், சிவாலய பிரதிட்டாவிதி எனும் நூல்களையும் எழுதியுள்ளார்.

சிவானந்த குருகுலம், வேதாகம சைவ சித்தாந்த சபை, சைவ பரிபாலன சபை போன்றவற்றினூடாக அரும்பெரும் பணிகள் ஆற்றினார்.

**இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை 1899 - 1986**

மட்டுவில் சின்னத்தம்பி தளங்கிளப்பு வள்ளியம்மை தம்பதிகளின் மகனாக 27.06.1899 சதய சட்சத்திரத்தில் பிறந்தவர். 19 வயதில் நாவலர் காவிய பாடசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு சுன்னாகம் குமார சுவாமிப்புலவர், ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை ஆகியோரின் தொடர்பு இவரின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாயிற்று.

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் 1929 - 1959 காலப்பகுதியில் ஆசிரியப் பணியாற்றித் தலைசிறந்த சைவாசிரியர்களை உருவாக்கினார். சமயக்கட்டுரைகள், சைவ நற்சிந்தனைகள். கந்தபுராண கலாசாரம், கந்தபுராண போதனை, கோயில், அத்வைத சிந்தனை முதலாய 27 நூல்களையும் 1000க்கு மேற்பட்ட கட்டுரைகளையும், எழுதிச் சைவத்துக்கு அளப்பரும் பணியாற்றினார். இவரின் தட்சகாண்ட உரைநூல் பேராதனைப் பல்கலைக்கழக வெளியீடாக யானைமீது ஏற்றி ஊர்வலமாக வரும் பேறு பெற்றது. பல்கலைக்கழகம் இலக்கிய கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

நாவலர் நீதிநெறி நின்று வாழ்ந்த இவர். நாவலர் பெருமான் பற்றி, நாவலர், நாவலர் பெருமான், நாவலரும் கோயிலும், ஆறுமுக நாவலர் என்னும் நூல்களையும் வெளி யிட்டுள்ளார்.

**இலக்கிய கலாநிதி, பண்டிதமணி மு. கந்தையா 1917 - 2002**

சைவஞானி அருளானந்த சிவம் தோன்றிய ஏழாலை மேற்கில் முத்தர் அன்னப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பதிகளின் புதல்வராக 1917.06.19இல் பிறந்தவர். பாடசாலைக் கல்விக்கு அப்பால் தமிழ், சமஸ்கிருதம் ஆங்கிலம். ஆகியவற்றை கற்றுத் தெளிந்தவர்.

எண்ணில்லாத சைவசித்தாந்த விளக்க நூல்களைப் படைத்துள்ளார். நாவலர் பெருமான் எழுதத் தொடங்கிய பெரியபுராண சூசனம் எனும் நூல் 23 நாயன்மார் வரலாற்றுடன் நின்றுவிட அவர் மறைந்து 125 ஆண்டுகள் யாருமே அதைத் தொடரத் தகுதியற்றிருந்த வேளை இவர் அதைத் தொடர்ந்தெழுதி முடித்த பெருமை வியக்கத் தக்கது. மௌனதவ முனிவர் எனக்போற்றப் படும் கைலாசபதி அவர்களின் கைலாசபதி சிந்தனைகள் எனும் நூலுக்கு சைவ சித்தாந்த நோக்கில் கைலாச ஹிஸ்மிருதி எனும் விளக்கம் எழுதி அதனை யாழ். பல்கலைக் கழகம் வெளியிட்டமையும், அப்பல்கலைக் கழகம் இவருக்கு இலக்கிய கலாநிதி எனும் கௌரவப் பட்டம் வழங்கிய மையும் பெருமைக்குரியன.

இவரின் சித்தாந்தச் செழும்புதையல்கள், அரியவும் பெரியவும், சித்தாந்த விளக்கில் சைவக்கிரியை, சனாதன சைவ விளக்கம் சைவ ஞானம், சிவ ஞான சித்தித்திறவு கோல், முதலான நூல்களுடன் திருக்கேதீஸ்வர மான்மியம் எனும் ஐந்து காண்டங்களைக் கொண்ட தலபுரணத்தையும் ஆக்கியுள்ளார்.

## கலாநிதி. சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 1925 - 2008

தெல்லிப்பழை கந்தர் தையற்பிள்ளை தம்பதிகளின் புதல்வியாக 1925.01.07இல் பிறந்தார். இராமநாதன் கல்லூரியிற் கற்கும் காலத்தில் பெரியார் சு. நடேசபிள்ளை, சுந்தரராஜ ஐயங்கர். ஆகியோரின் தொடர்பு ஏற்படடது. கல்வியில் உயர்ந்தவர் நாவலர் பெருமான் வழிநின்று பிரசங்கத்தால் தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதையும் கவர்ந்தார். எண்ணில்லாத பட்டங்களும் கௌரவங்களும் பெற்றார். தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயில் பரிபாலன சபைத்தலைவராயிருந்து செய்த அறப்பணிகள் உலகம் வியக்கத் தக்கன.

இருபத்தேழு சொற்பொழிவுகள், பத்துச் சொற்பொழிவுகள், கந்தபுராணச் சொற் பொழிவுகள், வாழும் வழி, பெண்மைக்கு இணையுண்டோ, என்னை ஆளாக்கிய சான்றோர் முதலான பல நூல்களை வெளியிட்டுள்ளார். சென்னைச் சைவசித்தாந்த மாநாடுகள் பலவற்றில் பங்குபற்றிய இவர் சமாசத்தின் பவளவிழாவைத் துர்க்கையம்மன் கோயிலில் நடத்திய பெருமைக்குரியவர். யாழ் பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. இவருடைய மணிவிழா, பவளவிழா முதலான பாராட்டு விழாக்களுக்கு வெளியிடப்பட்ட மலர்கள் மகத்துவம் வாய்ந்தவை. சிவத்தமிழ் ஆய்வு நூலகம் இவர் பணிக்கு உரை கல் ஆகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முத்திக்கு வித்து முதல்வன்தன் ஞானமே - திருமந்திரம் 2506

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறச் சந்தான குரவர்



மெய்கண்டர் அருணந்தி சிவம் மறைஞான சம்பந்தர் உமாபதி சிவம்

## முத்தித்திருநாள்

சித்திரை அத்தம் உமாபதி, ஆவணித் திங்கள்தனில்
உத்திரம் சீர்கொள் மறைஞான சம்பந்தர், ஓது கன்னிச்
சுத்தமெய்ப் பூரம் அருணந்தி, ஐப்பசிச் சோதிதனில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேன்மைகொள் சைவ சமயம்

**பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்**
தகைசார் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மேன்மைகொள் சைவநீதி எனப் போற்றப்படும் சைவ சமயம் நித்தியமானது, தொன்மையானது. சைவம் என்பது சிவனுடன் சம்பந்தமாவது எனப் பொருள் கொள்வர். சம்பந்தமாதற்குரியது ஆன்மா. எனவே என்றுமே ஆன்மாவுக்கு அந்தர்யாமி என்ற நிலையில் சிவம் உள்ளிருந்து திகழ்வது என்ற உண்மை சிறந்து விளங்கும்பொழுது சம்பந்தமாவது என்பதன் அடிப்படை விளக்கம் யாதாயிருக்கும் என்ற வினாவுக்கு பண்டிதர் மு. கந்தையா தமது சைவ சித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிகுதி என்ற நூலில் சிறந்ததொரு விடையளிக்கின்றார்.

**"இயல்பாகவே ஆணவ மலத்தோடு கூடியிருப்பது ஆன்மாவின் நிலை. ஆன்மாவின் அந்தர்யாமியா யிருக்கும் சிவத்தை ஆன்மாவுக்குத் தெரிய வொட்டாமல் மறைந்திருப்பது ஆணவத்தின் நிலை. அதனால் தன் உள்ளிருக்குஞ் சிவமுகப்படும் வாய்ப்பை முற்றாக இழந்து ஆன்மா ஐம்புல இன்பங்களை நோக்கிப் புறப்படுதலே பராக்காயிருக்கும். எனினும் நீண்டகால அடைவில் புண்ணியப் பேறாக வாய்க்கும் மனமாற்றத்தின் விளைவாகத் தன் கதியை மாற்றும் போகில் இயலும். அந்நிலையில் வாய்க்குங்குருவின் நோக்கினாலும் வாக்கினாலும் மெய்யுணர்வைத் தலைப்பட்டு அகமுகப்படுவதாகி அவ்வகையில் உள்ளிருக்குஞ் சிவத்துடன் சம்பந்தமாகும் என்பது அது."**

என்ற விளக்கம் இங்கு குறிப்பிடற்பாலது. எமது சமயமாகிய சைவமொன்றே மதம் எனப்படாது சமயம் என்றே என்றும் அழைக்கப்பட்டு வருவதோடு "மேன்மைகொள் சைவநீதி" என்ற வகையிலும் சிறப்பிக்கப் படுகின்றது நியமம் ஆதலால் மீறப்படக் கூடாத தாகவும், உடன்பாடு ஆதலால் மறுதலிக்கப் படலாகாததாகவும், வரையறை ஆதலால் எல்லைமீறப்படலாகாததாகவும், விதி ஆதலால் விலகமுடியாதது என்ற கண்டிப்புடன் கூடிய தாகவும் இச்சமயம் விளங்குகின்றது. சமயம் என்பதற்கு சங்கர பண்டிதர் முடிந்த முடிபான வரைவிலக்கணம் கூறுமிடத்து,

"சமயமாவது சுருதியிலே நியமிக்கப்பட்ட பரம பிரயோசனசித்திக்கு அநுகூலமாகிய பதார்த்த நியமமேயாகும். பரசித்திக்கு அநுகூலமாகிய சித்தாந்த பக்ஷமே சமயமெனினுமொக்கும்!" எனக்குறிப்பிடு கின்றார். மேலும் இவ் வுண்மையை விளக்கும் பொருட்டு, "சமய மென்பது நியமமும் உடன்பாடும் முடிந்த துணிபும் ஒழுக்கமும்" என்ற ஆரிய நிகண்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கோளாக எடுத்துக் காட்டுகின்றார். இங்கு வரும் "முடிந்த துணிபு" என்பதும் மேற் குறிப்பிடப்பட்ட பரமப்பிரயோச சித்தி. பரசித்தி என்பனவும் சித்தாந்தம் என்ற தொடருக்குப் பிரபலமாக வழங்கும் "முடிந்த முடிவு" என்ற விளக்கமும் அனைத்து நிலை களிலும் ஒன்றே எனவும் கருதமுடிகின்றது. எனவே சிவநெறி சார்ந்த ஒழுகலாறு சைவசமயம் என்ற விளக்கத்தை பண்டிதர் மு. கந்தையா தமது நூலில் மேற்குறித்த பல விளக்கங்களுடன் எடுத்துக் காட்டுவது பொருத்தமாகவுள்ளது. அத்துடன் சிவப்பேறுணர்த்தும் மெய்யியல் சைவ சித்தாந்தம் என்ற விளக்கத்தையுந் தந்து, சைவம், சைவ சித்தாந்தம் என்ற இரண்டும் ஈருடல் ஒருயிர்ப் பிறவிகளாதல் புலனாகின்றது எனவும் குறிப்பிடுவது சிந்தனைக்குரியதாக அமைகின்றது. சைவத்துக்கன்னியமாகச் சைவ சித்தாந்தமில்லை என அவற்றின் அந்யோன்யபாவத்தை எடுத்துக் காட்டுகின்றார்.

இம்மாநுட சரீரம் நாம் பெற்றதன் நோக்கம் பற்றிக் குறிப்பிடுமிடத்து நாவலர் கூறும் கருத்தும் சமய வாழ்வின் உயர் இலட்சியத்தை எமக்கு அறிவுறுத்துகின்றது. "பெறுதற்கரிய மாநுட சரீரத்தை நாம் பெற்றது கடவுளை வணங்கி முக்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்" என்ற கூற்று சைவ சமய வாழ்வியல் இலட்சியத்தை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. எனவே சைவம் நாம் வாழ்வாங்கு வாழ்வதற்கு எம்மை ஆற்றுப்படுத்துகின்றது. என்பது, சிறப்பம் சமாகும். வாழ்வாங்கு வாழ்தல் நீதியின்படி வாழ்தல், அறநெறி தழுவி வாழ்தல் என்ற விடயங்களை உள்ளடக்கியது.

இற்றைக்கு ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தாயுமானவர், திருமூலரைப் போற்றியவர், சிறந்த ஞான பக்தர், சமயங்கடந்த மோன சமரசநெறி கண்டவர். அந்நெறிக்கு அவர் கொண்ட சமயம் சைவசமயமேயாகும். அக, புற, அகப்புற, புறப்புறச் சமயங்கள் எல்லாம் தம்மளவில் அந்தம் ஆதியாகிய அருளினை அடையப் படிநிலைகளாக அமைந்துள்ள திறத்தையும் அறிந்தவர். இந்தப் படிகளுக் கெல்லாம் உச்சியிலே நிறைவுடைய சமயமாகச் சைவம் அரசோச்சுகின்றது என்று நன்கறிந்தவர் அவர். எல்லாச் சமயங்களும் சமய நெறிகளும் சமய நூற்கொள்கைகளும் தன் அகத்தே படி நிலைகளாக அமைய ஐம்பெருங்குழு, எண்பேராயம், நால்வகைப் படைத்தலைவர்கள் முதலியோர் அமர்ந் திருக்க. மண்டபப்படியனைத்தும் கடந்த மேடைமீது இடம்பெற்றிருக்கும் சிம்மாசனத்தில் பெருமிதத்தோடு வீற்றிருந்து பொலியும் ஆசனைக் போல ஆட்சியில் அமர்ந்து விளங்குவது சைவசமயம் என்பது அவரது காட்சியாக உள்ளது.

"இயல்பென்றும் திரியாமல் இயமமாகி
எண்குணமுங் காட்டி அன்பால் இன்ப மாகிப்
பயனருளப் பொருள்கள் பரி வாரமாகிப்
பண்புறவுஞ் சௌபான பட்சங் காட்டி
மயல் அறுமந்திரஞ் சிட்சை சோதிடாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றங்க நூல் வணங்க, மௌனமோவி
அயர்வறச்சென் னியில் வைத்து ராசாங்கத்தில்
அமர்ந்ததுவை திக சைவம் அழகிதந்தோ"

என வைதிக சைவத்தின் அழகினை ரசித்துப் பாடுகின்றார்.

சிவ வழிபாட்டுச் சிறப்பினைக் கொண்டது சைவ சமயம். உலக சமயங்கள் சில அருவ வழிபாட்டினைக் கொண்டவை. அவற்றுட் சிற்சில அருவ. உருவ வழிபாட்டினைக் கொண்டவை. பல உருவ வழிபாட்டினைக் கொண்டன. சைவ சமயமோவெனில் இம் மூவகை வழிபாடுகளையும் தன்னுள் கொண்ட சிறப்புடைத்து. இம்மூவகை வழி பாட்டையும் கோயில் என்ற சிறப்புப் பெற்ற தில்லையம்பதியில் காணலாம். தில்லையம் பலத்தில் திருக்கூத்து நிகழ்த்தும் நடராசப் பெருமானின் திருமேனி உருவ வழிபாட்டிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். இதுவே அண்டங் களையெல்லாம் அருள் வெளியில் வைத்து இயக்குகின்ற அருட் சக்தியின் அடையாள மாகக் கருதும்போது அருவுருவமாகின்றது. அத்தகைய அருட் சக்திக்கும் அப்பால் ஞானாகாசமாக நின்று நிலவும் நிலையில் அருவுமாகின்றது. பிறிதொரு வகையிலும் தில்லைத் திருக் காட்சியை நாம் கண்டு அனுபவிக்கலாம். கூத்தப்பிரான் திருமேனி உருவம். இலிங்கம் அருவுருவம், சிதம்பர வெளி அருவம், எனவே எத்தகைய வழிபாட்டு மரபினைக் கொண்டவர்களும் தில்லைத் திருக்கோயிலில் திகழும் வெளியை உணரும்போது எங்கெங்கோ எப்படி எப்படியோ காணக்கூடிய தெய்வத்திருக் காட்சிகளையெல்லாம், தங்கள் தங்கள் சமயக் காட்சிகளையெல்லாம் இங்கேயே கண்டு களிக்கின்றார்கள். என்மார்க்கம் இங்கு இருக்கின்றதெனக் கண்டு களிக்கின்றனர்.

"சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
சமயசங்கேதப் பொருளும் தான்ஒன் றாகப்
பன்மார்க்க நெறியினிலும் கண்டதில்லை ;
பகர்வரிய தில்லை மன்றுட் பார்த்த போதங்
கென்மார்க்க மிருக்குதெல்லாம் வெளியே யென்ன
எச்சமயத் தவர்களும்வந் திறைஞ்சா நிற்பர்"

என்ற பாடல் இவ்வுண்மையை விளக்கி நிற்கின்றது.

இவ்வாறு எல்லாச் சமயங்களையும் படிநிலைகளாகக் கொண்டு அவற்றிற்கெல்லாம் முடிமணிபோன்று விளங்குவதால் எச் சமயத்தைச் சார்ந்த எத்தகைய வழிபாட்டிற்கும் இடந்தந்து எல்லையற்று விரிந்திருத்தலால் சைவ சமயம் அனைவருக்குரிய அனைத்துக் கால இடங்களுக்குரிய சமயமாகப் பொலிவு பெற்று விளங்கும் மேன்மையுடையது. அச்சமயஞ் சார்ந்த சமயாதீதப் பழம்பொருளை உள்ளங்கை நெல்லிக் கனியெனத் தில்லை மன்றம் தெளிவு பெறச் செய்கின்றது. எனவே உலகத்தீரே! இப்புண்ணியத் தலத்தினைக் கண்டுகளிக்க இங்கு வந்து ஒன்று கூடுங்கள். முத்திதரும் தெய்வச் சபையை மானுடப்பிறவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிவதற்குள் ஒருமுறையேனும் தரிசித்து விடுங்கள். என்று உணர்வு பூர்வமாக அழைக்கின்றார் தாயுமான சுவாமிகள்.

"சைவ சமய மேசமயம்
சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள் வெளிக்
காட்டும் இந்தக் கருத்தை விட்டுப்
பொய்வந் துழலும் சமயநெறி
புகுத வேண்டா முத்தி தருந்
தெய்வசபையைக் காண்பதற்குச்
சேரவாரும்! செகத்தீரே!"

என்ற அவரது அன்புக் கோரிக்கை சைவ சமயத்தின் மேன்மையைக் காட்டி நிற்கின்றது.

இத்தகைய மேன்மை மிகு சைவ சமயத்திற்கு வேத சிவாகமங்களே முதல் நூல்களென விளங்கி சிறப்பிக்கின்றன. "வேதமோ டாகமம் மெய்யா மிறைவனூல்" எனத் திருமூலர் சிறப்பிக்கின்றார். வேதம் பொது எனவும் ஆகமம் சிறப்பு எனவும் கொள்வர். "ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன நாதனுரையவை" என்ற வரி இக்கருத்தை வலியுறுத்தும்.

"வேதநூல் சைவ நூலிரண்டே நூல்கள்
வேறுரைக்கும் நூலிவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அநாதி அமலன் தருநூல் இரண்டும்
ஆரணநூல் பொதுசைவம் அருஞ்சிறப்பு நூலாம்."

எனச் சிவஞான சித்தியார் செப்புகின்றது. அவை சைவத்திற்குப் பிரமாணமாக விளங்குவது போல் சைவ மெய்யியலாம் சைவசித்தாந்த உண்மைகளுக்கும் பிரமாணம் என்பதை சிவப்பிரகாசம் என்ற நூல்

"பல்கலை யாகம வேதம் யாவையினுங் கருத்துப்
பதிபசு பாசந் தெரித்தல்"

என்ற பாடல் வழி தெளிவு படுத்துகின்றது. சைவம் சைவ சிந்தாந்தம் ஆகியவற்றுக்குப் பிரமாணமாக விளங்கும் சிவாகமங்கள் கொண்டு விளங்கும் நான்கு உட்பிரிவுகளாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றின் சிறப்புப் பற்றி பண்டிதர் மு. கந்தையா எடுத்துக் கூறியுள்ளமை இங்கு குறிப்பிடற்பாலது.

**"சராசரி மனிதனிலிருந்து மஹாஞானிகள் வரை அவனவன் தன் தன் நிலைக் கேற்ப. உபாசித்த உரிய பக்குவமெய்து பாங்காக, சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நாற்பாதங்களைக் கொண்டிருத்தல் இவற்றின் பண்பாகும். இதன்கண் உடல், உயிர், உள்ளம் மூன்றும் ஒருசேரத் திருவருள் மயமாம் நிலை வாய்ப்பதாகும். ஆன்மா வானது தானென்னும் உணர்வு நிலை முற்றாகக் கைநெகிழ்ந்து, சர்வ பாவங் களினாலும் தன்னைத் திருவருளுக்கு முற்றாக ஒப்புக் கொடுத்திருக்கும் நிலையே சைவ சித்தாந்தம் வேண்டும் ஆன்ம இலட்சிய நிலையாம். அதற்குப் படிமுறையாக உபசரித்தலே இந்நாற்பாதங்களின் பண்பாதல் இவ்வாற்றான் உணரப்படும்."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கருத்து நாற்பாதங்களின் முக்கியத் துவம் பற்றிக் குறிப்பிடுவது கவனித்தற்குரியது.

சைவத்திற்கும் சைவ சித்தாந்தத்திற்கும் சிறந்த விளக்க நூலாக விளங்கும் கந்த புராணத்திற்கு 'கந்தபுராண வசனம்' என்ற நூலை எழுதியவர் சைவச் சான்றோனாக விளங்கிய ஆறுமுக நாவலராவர். அந்நூலுக்கு அவரெழுதிய முகவுரையில் இடம் பெறும் கருத்துக்கள் சைவத்தின் மேன்மை பற்றியும் சாதனை பற்றி அறியவும் பெரிதும் உதவுவன.

**"அநாதி முத்த சித்துருவாகிய முழுமுதற் கடவுள் சிவபெருமானே என்பது தெள்ளி திற்றுணியப்படும்"**

இப்படித் துணியப்படும் முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளாகிய சிவபெருமானை, அவர் அருளிச் செய்த வேதாகமங்களிலே விதித்தபடி, தங்கள் தங்கள் வருணத்துக்கும் ஆச்சிரமத்திற்கும் ஏற்ப, மெய்யன்போடு வழிபடுவோர் சைவ சமயிகள் என்றும், சிவனடியார்கள், என்றும் சொல்லப் படுவார்கள். இச்சைவர்கள் பல சமயத்தாருக்கும் பொதுவகையால் வேண்டப்படும் இலக் கணங்களை முன்னே வழுவாது தழுவிக் கொண்டே, பின்பு தங்களுக்குச் சிறப்பு வகையில் வேண்டப்படும் இலக்கணங்களை உடையவர்களாய் ஒழுகல் வேண்டும்.

பொதுவிலக்கணங்களாவன. கொல் லாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, பிறர்மனை நயவாமை, வரைவின் மகளிர் நயவாமை, இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய் தந்தை முதலிய பெரியாரை வழிபடுதல் முதலிய நன்மை களாம்.

சிறப்பிலக்கணங்கள், புறத்திலக்கணம், உடலிலக்கணம், அகத்திலக்கணம் என மூவகைப்படும். அவற்றுள் புறத்திலக்கணம் பத்து, அவையாவன, விபூதி ருத்திராக்ஷம் என்னும் சிவசின்னங்களைத் தரித்தல், குருவைப் பூசித்தல், சிவபெருமானைத் தோத்திரஞ் செய்தல், சிவநாமங்களை உச்சரித்தல், சிவபெருமானைப் பூசை செய்தல், சிவதருமங்களைச் செய்தல், சிவபுராணங் களைக் கேட்டல், சிவாலயங்களிலே சென்று சிவபெருனைத் தரிசித்தல், சிவனடியாரிடத் தன்றிப் பிறரிடத்துப் போசனம் பண்ணாமை. சிவனடியார்களுக்குக் கொடுத்தல், என்பவை களாம். உடலிலக்கணம் பத்து. அவையாவன, சிவபெருமானுடைய பெருமையைப் பேசும் போது கண்டம் விம்முதல், அதனைச் சிந்தித்து மகிழுந்தோறும் நாத்துடித் தெழும்பாமை, நகைதுடித்தல், சரீரங் குலுங்குதல், உரோமஞ் சிலிர்த்தல், வேர்த்தல். தன்வசமின்றி நாப்பெயராமை, ஆனந்தக் கண்ணீர் சொரிதல், வாய்விட்டழுதல், பரவசமாய்த் தன்னை அயர்த்தல், என்பவைகளாம். அகத்திலக்கணம் மூன்று. அவையாவன பஞ்சாக்ஷரத்தை மானதமாகச் செபித்தல், மானத பூசை, சிவபெருமானைத் தன்னொடு பிரிவறக் காண்டல் என்பவைகளாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விருபத்து மூன்றிலக்கணங்களுள் ஒன்றாகிய சிவ புராணங்கேட்டல் தான் ஓரிலக்கணமாய் நிற்றலன்றித் தன்னையும் தன்னையொழிந்த சிறப்பிலக்கணங்களையும் பொது விலக்கணாங் களையும் வருவித்தற்குக் கருவியாயும் நிற்றலுடையது.

சைவ சமயிகள் இச்சிவ புராணங்களை வாங்கி தங்கள் தங்கள் சுற்றத்தார் முதலாயினோர் கேட்ப, மெய்யன்போடு வாசித்து. பாவங்களை வெறுத்து, தங்கள் தங்களால் இயன்ற புண்ணியங்களை விதிப்படி சிரத்தையோடு செய்து, சிவபெருமானை வழிபட்டு, உய்யக்கடவர்'

எனச் சைவ வாழ்வியலின் மேன்மையைத் தெளிவுறக் கூறியுள்ளார்.

சைவ வழிப்பாட்டின் மேன்மையைச் சம்பந்தர் தமது தேவாரப் பதிகங்களிற் சிறப்பித்துக் கூறுகின்றார். அவரது நமச்சிவாய திருப்பதிகத்தில்,

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

என்ற தேவாரம் சைவ சமய மெய்ப்பொருளாகிய நமச்சிவாய என்ற திருவைந்தெழுத்தின் மேன்மையைக் கூறி எம்மைச் சிவ வழிபாட்டுக்கு ஆற்றுப்படுத்து கின்றது.

இவ்வாறாக சைவ சமயத்தின் மேன்மைக்கு வேதசிவாகமங்கள், திருமுறைகள், மெய்கண்ட சாஸ்திரங்கள், புராண இதிகாசங்கள் மூலமாக அமைந்து விளங்கு கின்றன. காலந்தோறும் அருளாளர்களும் சமய அனுபூதிமான்களும் சமயச் சான்றோரும் சைவத்தின் மேன்மையை ஒவ்வொரு தலைமுறையினர்க்கும் தெளிவுபடுத்தி வந்துள்ளனர். சைவத்தின் மேன்மையை மாத்திரமன்றி சாதனை பற்றியும் கூறியுள்ளனர். அப்புனிதப்பணியின் வளர்ச்சியும் தொடர்ச்சியுமாக சைவத்தின் பெயரால் இயங்கும் சங்கங்கள் எதிர்காலச் சந்ததியினரின் நலன் கருதிச் செயற்படுதல் உன்னதமான சிவப்பணியாகும். அதுவே காலத்தின் காட்டாய கடமையாகவும், பாரிய பொறுப்பாகவும் எம்முன் உள்ளன.

சைவச் சான்றோர் காட்டிய நல்வழியில் கடந்த ஐம்பது வருடகாலச் சமயப் பணியாற்றிச் சைவத்தின் மேன்மைக்காக தன்னை அர்ப்பணித்துள்ள அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் எதிர்காலத்திலும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற சகல வளங்களும் கிடைக்கும் வண்ணம் சிவனருள் துணை நிற்பதாகுக!

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் செயல்முறையும் சைவசித்தாந்தக் கருத்தியலின் வளர்ச்சியும்

**பேராசிரியர் சபா. ஜெயராசா**

இறை மற்றும் உயிர் பற்றிய தேடலும், இயற்கை பற்றிய புதிர்களைக்கண்டறிதலும், என்ற அறிகைத் தொழிற்பாடுகள் தமிழகத்துக் கல்விச் சூழலிலே "சைவ சித்தாந்தம்" என்ற கருத்தியலைத் தோற்றுவித்ததுடன் வரன் முறையான கல்விச் செயற்பாடுகள் வாயிலாக அக்கருத்தியல் தலைமுறை தலைமுறையாகக் கையளிக்கப்பட்டும் வருதலும் குறிப்பிடத்தக்கது. தமிழகத்துக் கல்வி மரபும் சைவ சித்தாந்தக் கருத்தியலும் ஒன்றென இணைந்து வளர்ந்த மேலெழுச்சிகள் சமூகவியலின் நேர்வெளிப் பாடுகளாகவும் சமூக **"அடியாதாரத்தின்"** (Base) மேலமைந்த அமைப்பு வடிவங் களாகவும் அமைந்தன.

திருவெண்ணெய் நல்லூரின் சமூகச் சூழலும் அதனை அடியொற்றிய சமயம்சார்ந்த ஆழ்நிலைத் தேடலும் மெய்கண்ட தேவர் வழியான கருத்தியலை நெறிமுறைப் படுத்தியது. மெய்கண்டார் தாம் பெற்ற உபதேசங்கள் வழியாக **"சிவஞான போதம்"** என்ற பன்னிரண்டு சூத்திரங்கள் அடங்கிய நூலாக்கத்தைச் செய்து அருள்நந்தி சிவாசாரியார் என்னும் முதல் மாணாக்கருக்கு வழங்கினார் என்று குறிப்பிடப் படுகின்றது. ஆகவே சைவசிந்தாந்தக் கருத்தியல் ஒரு **"தொடர்நிலை அறிகை ஆக்கத்தின் அமைப்பியல்"** வெளிப்பாடு என்பது அறியத்தக்கது. தனித்த ஓர் ஆசிரியரிடம் மட்டும் கட்டுப்பட்டிராத விரிந்த அறிகை யாக்கச் செயற்பாட்டினை அது புலப்படுத்துகின்றது.

சைவக் கருத்தியலின் (Ideology) தொடர்ச்சி வேதங்களுக்கு முந்திய நிலையிலிருந்து தோன்றி. வேதமாகி, வேதாந்தத் தெளிவாகச் சுட்டப்படுகின்றது. வேதங்களின் வழியாக எழும் முப்பொருள் உண்மையானது சைவத்தின் அடிநிலைப் பொருள்களாகின்றது. கல்வி வளர்ச்சியும் அறிவு வளர்ச்சியும் **"பகுப்பாய்வு"** (Analysis) என்ற அறிகைத் தொழிற்பாட்டை மேலெழச் செய்தன. தொன்மையான பொருளுற்பத்தித் தொழிற் பாடுகள் **"வேறு பிரித்தறிதல்"** மற்றும் பகுப்பாய்வு முதலாம் நடவடிக்கைகளைத் தோற்றுவித்தன. பொருளுற்பத்திச் செயற்பாடு அறிவின் உற்பத்தியிலும் நீட்சி கொண்டது. அறிபொருள்களின் தன்னியல்பு மற்றும் பொதுவியல்பு ஆகியவற்றைக் கண்டறிதல் சமயக் கல்வியிலே சிறப்பிடம் பெறலாயின. **பாஷாவாதம், பேதவாதம், சிவசமவாதம், சங்கிராந்த வாதம், ஈசுவர அவிகாரவாதம், நிமித்தகாரண பரிணாம வாதம்** முதலியவற்றை அடியொற்றிய வேறுபிரித்தல் ஆய்வு, பகுப்பாய்வு முதலியவை கல்வி வளர்ச்சியை அடியொற்றி மேலெழுந்தன.

வேதங்களின் உட்பொருளும் தெளிவுமாக அமையும் சைவ சித்தாந்தக் கருத்தியலின் அழகியல் வழி வெளிப்பாடுகளாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்நிலை வழி மேலெழுச்சிகளாகவும் தேவாரங்கள் அமைந்தன. **அருள்நிலை** (Mystic) வழி எழுந்த சிந்தனை களுக்கு அறிநிலைத் தருக்கம் அமைத்தமை மெய்கண்ட தேவரைத் தொடர்ந்து சிவஞான சித்தியாரால் முன்னெடுக்கப்பட்டது. **"பார் விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர்விருத்தப் பாதிபோதும்"** என்றவாறு சித்தியாரின் ஆக்கம் விதந்து பேசப்படுகின்றது.

தொடர்ச்சியாக நிகழ்ந்து வந்த ஆசிரிய மாணவத் தொடர்பாடற் பாரம்பரியம் வழியாக சைவ சித்தாந்தக் கருத்தியல் வளர்ந்து வந்த முறைமை தமிழகத்தின் வரன்முறையான (Formal) கல்வித் தொடர்ச்சியைக் கண்டறி வதற்கும் துணையாகவுள்ளது. **"கோட்பாட்டு வழி". "நடைமுறை வழி"** என்ற கல்வியின் இருபெரும் பரிமாணங்களும் சைவசித்தாந்தக் கல்வியில் நேரடியாகத் தெறித்து நின்றன. சைவசித்தாந்தத்தின் செயல் வழி அல்லது நடைமுறை வழியில் மறைஞான சம்பந்தர் ஒன்றித்து நிற்க அவர்தம் மாணவராகிய உமாபதி சிவனார் கோட்பாட்டு நிலையில் ஆக்க நிலைநிறுத்தல்களை மேற்கொண்டு, **"திருவருட் பயன்", "சிவப்பிரகாசம்", "சங்கற்ப நிராகரணம்"** முதலாம் நூல்களை எழுதி சைவ சித்தாந்தக் கருத்தியல் அறிகைக்கு வலுவூட்டினார்.

பொருளுற்பத்தியிலே நிகழ்ந்த திட்ப நுட்பமான செயற்பாடுகள் உற்பத்திப் பெருக்கை நேரடியாக அதிகரிக்கச் செய்தன. திட்பநுட்பக் கையாளுகையும் நிலச் செப்பமும் பயிர்வளப் பெருக்கத்துக்கு அனுகூலமாக அமைந்தன. அந்த அனுபவங்கள் கல்விச் செயற்பாடுகளிலும் நேர் நீட்சிகொண்டன. திட்பநுட்பமாகத் தருக்கவழியே முப்பொருள் உண்மைகளை வரையறுக்கும் செயற்பாடுகளும் விபரித்து விளக்கும் செயற்பாடுகளும் வளர்ச்சி பெறலாயின. அதன் வழியாகச் சைவ சித்தாந்தம் **"வேதாக மோக்த சுத்தாத் வைத சித்தாந்தம்"** என்ற அறிகைச் செம்மையைப் பெறலாயிற்று. சைவ சித்தாந்தின் மேன்மை யைச் சுட்டும் பொருட்டு, ஆசிரியர் மாணவர் வழி அக்கருத்தியல் கையளிக்கப் பட்டு வரும் செயற்பாட்டை முன்னெடுத்த தொகுதியினர் **"திருக்கைலாய பரம்பரையினர்"** என அழைக்கப் பட்டனர்.

பதி, பசு, பாசம் என்றமுப் பொருள் அறிகையானது தருக்கவழியாகச் சுட்டப்படும் பொழுது, அவை முறையே அறிவிக்காமலே அறியும் பொருள், அறிவித்தால் அறிந்து அறிவிக்காவிடில் அறியமாட்டாத பொருள், அறிவித்தாலும் அறியமாட்டாத பொருள் என்றவாறு குறித்துரைக்கப்பட்டது. அவை என்றுமிருக்கும் நித்தியப் பொருள்கள் என்றும் குறிப்பிடப்பட்டது. தருக்கநிலையில் அவற்றுக் கிடையேயுள்ள தொடர்புகளும் வலியுறுத்தப் பட்டன. பதியும் பசுவும் ஒன்றற் கொன்று அத்துவித தொடர்புடையவை. பதியாகிய பிரமம் வியாபகம், பசுவாகிய உயிர்கள் வியாப்பியம், பாசம் வியாப்தி என்ற வகையிலே தொடர்புடையவை என்பது சைவ சித்தாந்தத் தருக்க விளக்கம்.

வியாபகம் - எங்குமிருத்தல்

வியாப்பியம் - காரணமாயிருத்தல்

வியாப்தி - பெறுதலாயிருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகளாவிய முறையில் அறிவின் வளர்ச்சியும் கல்வியின் வளர்ச்சியும் தருக்க சிந்தனையின் வளர்ச்சியும் இணைந்த வகையில் மேலெழுச்சி கொண்டு வந்துள்ளன. கிரேக்க கல்வியிலே காரண காரியத் தொடர்புகளின் அடிப்படையாக மலர்ச்சி பெறத் தொடங்கிய அளவையியல் ஐரோப்பிய இயல்புகளை அடியொற்றி உலகியல் தழுவிய நிலையிலே பெருவளர்ச்சியடைந்தமை கல்வியியலாளரின் கவனத்தை ஈர்த்து வந்துள்ளது. இந்திய மரபிலும் தமிழக மரபிலும் சமயக் கருத்தியல் தழுவிய அளவையியல் அல்லது தருக்கத்தின் வளர்ச்சி ஒப்பீட்டளவில் மேலோங்கலாயிற்று. சமயத்தருக்க அறிகையை அடியொற்றியே **துவைதம், அத்வைதம், சமணம், பௌத்தம்** முதலிய கருத்தியல் களுக்கிடையே மோதல்கள் எழலாயின. ஒருவகையில் இந்த மோதல்கள் சமூகத்தில் நிகழ்ந்த தனியுரிமை வளர்ச்சியுடனும், நிலைநிறுத்தலுடனும், தொடர்பு பட்டிருந்தன என்று கூறுதல் தவறாகாது.

பதி என்ற வியாபகத்தின் வீச்சுக்குள் பசு, மற்றும் பாசம் ஆகியவை அமைந்திருப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது. பசுவாகிய வியாப்பியத்துள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள் வியாப்தியாகவுள்ளன.

சைவ சித்தாந்தம் பதியை இரண்டு நிலைகளிலே தருக்கப்படுத்துகின்றது. ஒன்று குணம், குறி, வடிவமற்ற, உருவம், அருவம், அருவுருவம் என்ற மூன்றும் அற்ற, மனம், வாக்கு, காயம் என்றவாறு அறியப்படமுடியாத பரமசிவனாகிய சொரூப நிலை.

மற்றையது உருவநிலையிலுள்ள பரம சிவன் என்ற பொதுநிலை. உயிர்களுக்கு அருளும் பொருட்டுப் பொது வியல்புகொள்ளல் சைவ சித்தாந்தத்தில் விளக்கப்படுகின்றது. இந்நிலையில் இறைவனின் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்கள் இடம் பெறுகின்றன. சிவனும் சக்தியும் தாதாமியத் தொடர்புடையவை. தாதாமியத் தொடர்பு என்பது பிரித்தறியமுடியாத் தொடர்பு.

"எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்கும்" என்று சிவஞான சித்தியார் குறிப்பிடுவார். தேவாரம் மற்றும் திருவாசகப் பாடல்களில் சிவனோடிணைந்த சக்தி பற்றிய இக்குறிப்புப் பரவலாக இடம் பெற்றுள்ளது.

சோழப் பெருமன்னர் காலத்தில் வளரச்சியுற்ற வரன்முறையான கல்விச் செயற்பாடுகளும், கோயில்சார்ந்த உயர்கல்வி நிலையங்களும், சைவசித்தாந்தக் கருத் தியலை திட்பநுட்பமாகக் கட்டமைப்புச் செய்யும் அறிகை முறைமைக்கும் தருக்க முறை மைக்கும் வலுவூட்டின. முப்பொருள் பற்றிய சிறப்பு விளக்கங்கள் மேலெழலாயின. மாற்று அளவைகள் காரணமான புலக்காட்சி மேலெழுந்தது.

பதியின் குணங்கள் தெளிவு பெறவிளக்கும் கருத்துச் செம்மை நிலை மேலும் வலுப் பெறலாயிற்று. ஏற்கனவே மறைஞான அனுபவங்களை அடியொற்றி விளக்கப்பட்ட எண்குணங்களும் ஐந்தொழில்களும் கற்றல் கற்பித்தலுக்குரிய உள்ளடக்க மாதலைச் சோழர்காலக் கல்வியிலே கண்டுகொள்ள முடியும். அளவில் ஆற்றலுடைமை. பாசங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் இருந்து இயல்பாகவே நீங்குதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், தன்வயத்தனாதல், பேரருளுடைமை, தூய உடம்பினனாதல், வரம்பில் இன்பமுடைமை முதலியவை ஓதல் வழியாக ஒப்புவிக்கப்பட்டன. **"அனுபவ வழியாகச் சிவநெறியறிதல்"** என்ற தோற்றப்பாடு ஒருபுறம் நிகழ, **"கல்வி வழியாகக் கற்றுக் கொள்ளல்"** என்பது இன்னொரு புறமாக வளரச்சி யடைந்தது. இந்த இரண்டாவது வகைச் செயற்பாட்டின் இன்றைய வளர்ச்சி சைவ சமயத்தை **"வெறும் பாடமாக"** க் கற்று பரீட்சை எழுதும் நிலையைத் தோற்றுவித்துள்ளது.

உயர் கல்வி முன்னேற்றத்தோடு இணைந்த தருக்க நிலைச் சிந்தனையின் வளரச்சி **"சத்காரிய வாதத்தை"** த் தோற்று வித்தது. "இல்லாதவற்றை உருவாக்குதல்" என்ற சிருஷ்டிக் கருத்தைச் சைவ நெறித் தருக்கம் ஏற்றுக்கொள்வதில்லை. காரண இருப்பிலிருந்து காரிய வெளிப்பாடாகவே சிருஷ்டி இடம் பெறுகின்றது. சத்காரிய வாதம் இருப்பின் நிலவரத்தைக் குறிப்பிடுகின்றது. சிருஷ்டியில் இறைவனே நிமித்த காரணம் என்பது திட்டவட்டமாக விளக்கப்படுகின்றது. முதற் காரணமாக மாயை அமைதலும் சக்தி துணைக்காரணமாக அமைதலும், தெளிவாகத் தருக்க நிலையில் விளக்கப் படுகின்றன.

பசு அல்லது உயிர்கள் பற்றிய பகுப்பாய்வு வழியான விளக்கமும் சைவ சித்தாந்தத்தில் இடம் பெற்றுள்ளது. இந்தப் பாகுபாடு சமூகம் பற்றிய அடுக்கமைப்பின் (Hierarchy) அறிகையிலிருந்து விரிவடைந்து **"எண்ணக் கருவாக்கம்"** பெற்றிருக்க முடியும். சமூக இருப்பின் வழியாகச் சமயத்தைக் கட்டமைப்புச் செய்யும் சிந்தனை முறைமையின் வெளிப் பாட்டைச் சைவ சித்தாந்தத்திலே காண முடியும். உயிர்களின் ஏறு நிரை வகைப்பாடு, அல்லது அடுக்கமைப்பு, பின் வருமாறு சைவ சித்தாந்தத்திற் காட்சி கொள்ளப்படுகின்றது.

1. ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களையும் உடையவர்கள் 'சகலர்'
2. ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்களையும் உடையவர்கள் 'பிரளயாகலர்'
3. ஆணவமலம் மட்டும் உடையோர் 'விஞ்ஞானகலர்'

ஆணவம் உயிரின் இயற்கையன இயல்பு அல்ல என்பதைச் சைவசித்தாந்தம் ஐயமற விளக்குகின்றது. அது அனாதியான சேர்க்கைப் பொருளாகவே குறிப்பிடப்படுகின்றது. ஆணவம் இயற்கைப் பொருளாயின் அது உயிரை விட்டு என்றும் விடுபடாத பொருளாயிருக்கும் என்ற தருக்கத்தின் அடிப்படையில் அது **"சேர்க்கைப் பொருளாக"** குறிப்பிடப்படுகின்றது.

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் உயிர்களின் இன்ப துன்பங்களுக்குரிய முதற்காரணமாகவும், துணைக் காரணமாகவும், நிமித்த காரண மாகவும் அமைகின்றன. **"பந்தங்கள்"** என்ற எண்ணக் கரு அடிப்படையில் இவை பிரதிபந்தம், சம்பந்தம், அனுபந்தம் என்றும் விளக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலநீக்கம், அல்லது மலங்களை அறுத்தொழித்தல் சைவச் செயல் முறையின் உன்னதமாகக் கொள்ளப் படுகின்றது. அந்தச் செயல் முறையிலும் திட்ட வட்டமான ஒழுங்கமைப்பை அல்லது அடுக்கமைப் பைச் சைவசித்தாந்தத் தருக்கம் தெளிவு படுத்தியுள்ளது.

1. முதலில் இல்லாதொழிவது மாயாமலம்.
2. இரண்டாவதாக இல்லாதொழிவது கன்மமலம்.
3. மூன்றாவதாக, இறுதயில் இல்லாதொழிவது ஆணவமலம்.

சரியை, கிரியை. யோகம், ஞானம் என்ற வழிகளின் தொடர்ச்சியாக மலங்களில் நின்றும் விலகுதல் பற்றிய நடைமுறைகளின் விளக்கமும் சித்தாந்த நெறிகளில் விரிவாக விளக்கப்படுகின்றன. திருக்கோயில் வழிபாடும் தொண்டும் பஞ்சாட்சர செபமும் மலநீக்க உபாயங்களில் உள்ளடக்கப் பட்டுள்ளன.

கல்வி வளர்ச்சி மற்றும் அறிவின் வளர்ச்சி ஆகியவற்றின் ஒரு சிறப்பார்ந்த வகைப்பாடு **"பல்லினப் பாங்குகளை"**த் (Diversity) தோற்றுவித்தலாகும். அந்நிலையில் அகச் சமயக்கருத்தியல் என்ற வகையில் பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவ சங்கிரவாத சைவம், ஈசுவர அவிகாரவாத சைவம். சிவாத்துவித சைவம் என்ற வளரச்சிகள் ஏற்படலாயின. அகப்புறச் சமயங்கள் என்ற பிரிவில் பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம் வயிரவம், ஐக்கிய வாத சைவம் முதலியவை வளரச்சி யடைந்தன.

மேற்கூறியவற்றைத் தவிர காஷ்மீர சைவம். வீரசைவம் முதலான கருத்தியல்களும் எழுச்சி கொண்டன. உள்ளபொருள் ஒன்றே என்ற ஒருமை வாதம் இக்கோட்பாட்டில் மேலோங்கி யுள்ளது. வழிபாட்டு முறைமையிலே சைவமும் வீரசைவமும் சிலவகைகளிலே வேறுபட்டு நிற்கின்றன. விசிஷ்டாத்வைதம் வீரசைவத்தின் உட்பொருளாகின்றது.

தமிழகத்திலும் இந்தியப் பெருநிலப் பகுதியிலும் வளரச்சி பெற்ற கல்விச் செயற்பாடுகளும் அவற்றோடிணைந்த தருக்கவியல் அல்லது அளவையியற் சிந்தனைகளின் முன்னேற்றமும் சைவ சித்தாந்தக் கருத்தியலின் வளரச்சிக்கும், அதனை அடியொற்றிய பன்மை நிலைச் சிந்தனைகளுக்கும் இட்டுச் சென்றன. பிற்காலத்திலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் காலத்துக் கல்வியில் எழுச்சி பெற்றிருந்த "தூய்மைமை வாதம்" சைவ சித்தாந்தக் கருத்தியலிலும் செல்வாக்கை ஏற்படுத்திய மையைக் காணலாம்.


**உசாவிய நூல்கள்**

1. BIJALWAN, CD. (1977) - Indian Theory of Knowledge, New Delhi, Heritage Publishers
2. CHATTERJEE and DATTA (1984) An : Introduction to Indian Philosophy, Kacutta, University of Calcutta
3. DEVASENAPATHI V.A. (1974) - :Saiva Siddhanta, Chennai, University of Madras.
4. KANDASAMY S.N. (1976) :Tamilum Tattuvamum, Chidambaram Manivasagar Noolagam




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவகை ஞானம்

சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர் மு. திருஞானசம்பந்தபிள்ளை

**(பாசஞானம் பசுஞானம் பதிஞானம்)**

உலகமாகிய இப்பிரபஞ்சம் இருவகைப் படும். ஒன்று சேதனம் மற்றையது அசேதனம் இன்னொரு வகையில் கூறின் அறிவுடையது அறிவற்றது. அறிவுடையது சித்துப்பொருள் அறிவற்றது அசித்து.

அறிவுடைய சித்துப் பொருள் உயிருடையது உணர்வுடையது உணர்த்த உணர்வது. அறிவற்ற அசித்துப்பொருள் சடம். உணரவோ உணர்த்தவோ முடியாதது.

அறிவுடைப்பொருள் உயிர்ப்புடையது. உயிர் உடம்போடு கூடி விளங்குவது. உயிர் இருக்கும் வரை உடம்பு, இயங்கும். உயிர்நீப்பின் உடம்பு நிலைபெறாது.

உடம்பு தத்துவ தாத்துவீகங்களாலாயது. இவை சடம் அறிவற்றது எனவே உடம்பும் சடம் அறிவற்றது.

உயிர் அறிவுடைப்பொருள், ஆயின் தத்துவங்களோடு கூடி அறிவது.

உயிர் எனப்படுவது இந்த உடம்பின் வேறாய் உள்ளது. அது உடம்புகளைப் பொருந்திக் குற்றம் பொருந்திய இச்சை ஞானக்கிரியைகள் உடையதாய் புண்ணிய பாவங்களைச் செய்யும். அவற்றால் வரும் இன்ப துன்பப் பயன்களையும் அநுபவிக்கும் ஆராய்ந்து பார்க்கில் அறிவு சோர்தலோடும் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியா தீதம் என்னும் ஐந்து அவத்தைகளையும் அடையும். அவற்றினுள்ளே துரியாதீதம் உயிர் தான் மாத்திரம் உளதாயிருக்கும் கேவலநிலை. தாத்துவிக தத்துவங்களோடு கருவிகளோடு கூடியிருக்கும் நிலை சகல நிலை. இவ்விரு நிலைகளுமற்று இருப்பதே சுத்தநிலை.

உயிரினை ஆன்மா என்று அழைப்பர். ஆன்மா வசித்திடவரும் வியாபகத்தன்மை, அருவத் தன்மை, **நித்தியத் தன்மை,** பசுத்தன்மை ஆகிய இலக்கணங்களை உடையது.

ஆன்மா எதனைச் சார்ந்ததோ அதனதன் சுபாவமே தன் சுபாவமாய், அதுவதுவாய் வசிப்புண்டு நின்றறியும் இயல்புடையது. அவ்வாறு சாரப்பட்ட அவ்வப் பொருள்களை நோக்குமிடத்து அவ்வான்மா தூலமாதலுடை மையின் அவ்வப் பொருள்களில் வியாப்பிய மேயாய் நிற்கும்.

குணங்களாகிய அறிவு இச்சை செயல் என்பன நித்தியமாகையால் குணிப் பொருளாகிய ஆன்மாவும் நித்தப்பொருளே.

ஆணவமாகிய அறியாமையால் பந்திக்கப் பட்டது ஆன்மா.

உயிராகிய ஆன்மா ஐம்பொறிகள், ஐம்புலன்கள் என்பவற்றோடு அந்தக் கரணங்களாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவற்றைக் கருவியாகக் கொண்டே அறிகின்றது. அந்தக் கரணங்கள் நான்கும் ஆன்மாவைப் பொருந்தி இவையே ஆன்மா என்னும்படி ஒற்றித்து நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாவினால் சுட்டியறியும் அறிவு தோற்றமும் நாசமும் உடையதாய் நிகழ்வதாலும், அவ்வாறு நிகழும் அறிவுதானும் நிலைபேறின்றி ஒன்றை விட்டொன்றைப் பற்றுதலாலும், அத் தன்மைத்தான ஆன்ம அறிவாற் சுட்டியறியப் படுவதாகிய காரியப் பிரபஞ்சம் முற்றும், தனு, கரண, புவன, போகங்களாகிய பலவகை யாய் வருவதலாலும், சகல நிலையில் மாயா மலங்களாகி ஆன்மாவோடு கலந்து நிற்றலாலும், சுத்த நிலையில் ஆன்மாவுக்கு அந்நியமாய் ஒழிதலாலும் சடப் பொருளேயாம்.

அறிவு என்றது இங்கே ஒருவிடயத்தை இந்திரியங்களாலே முற்பட்டுப் பொருந்தி, அதுவதுவாய் நின்று சுட்டியறியும் அறிவையாம்.

**பாச ஞானம்**

இவ்வறிவு சுட்டறிவு, கருவியறிவு, அளவையறிவு எனவும் **பாசஞானம்** எனவும் சொல்லப்படும். பாசஞானம் எனப்படுவது வைகரி முதலாய நால்வகை வாக்கினைச் சார்ந்த வேதசாத்திரம் முதலிய கலை ஞானங்களும், அசபையுமாகிய சொற் பிரபஞ்சமும், நிலம் முதல் நாதம் ஈறாகிய பொருட்பிரபஞ்சமும் ஆகிய இவற்றின் மூலமாக ஆன்மாவினிடம் நிகழுகின்ற சுட்டுணர்வாகும்.

இந்தஞானம் பதி ஞானம் விளங்குவதற்கு ஏதுவாகப் பயன்படுதல் கூடும். ஆதலின் இவற்றை ஓதுதல், ஓதுவித்தல், கூர்தல் வேண்டுவதாம்.

ஆன்மா கருவிகளோடு, கூடி அறிவது பாசஞானம் எனப்பட்டது. இதனால் பிரபஞ்சம் யாவும் கானல் நீர் போல்வது என்ற உண்மை தோன்றப்பெறலாகும். இதன் பயனாய்ப் பிரபஞ்சப்பற்று கழிக்கப்படும்.

இப்பிரபஞ்சப்பற்று மீளவும் வாசனையால் வந்து தாக்காது இருத்தற்பொருட்டே முத்திபஞ்சாக்கரமாகிய சிகராதிபஞ்சாக்கரம் விதிப்படி உச்சரிக்கப் படவேண்டும் என்றது. இவ்வழியால் ஆன்மா தத்துவங்களைப் படியாகக் கொண்டு மேலோங்கும்.

இதனையே திருமந்திரம்

"முப்பதும் ஆறும்படிமுத்தி ஏணியாய்
ஒப்பிலா ஆனந்தத்து உள்ளொளிபுக்கு"

எனக்குறிப்பிடுகின்றது.

பாசஞானமாகிய கருவிஞானம் அசத்து ஆதலால் அது சிவத்தை அறியாது.

**பசுஞானம்**

அந்தக் கரணங்கள் யாவும் கருவிகளேயன்றி அவை ஆன்மா அல்ல என்பது போதரும். இக்கருவிகளின் துணை கொண்டு ஒரு பொருளை அறிவது ஆன்மாவாகும். அங்ஙனம் அறியும் போது மேற்சொல்லப்பட்ட கருவிகள் ஆன்மாவோடு ஒன்றுபட்டு நிற்கும். என்றாலும் அறிவது ஆன்மாவே. விளக்கைக் கருவியாகக் கொண்டு கண் ஒரு பொருளை அறிவது போல இது நிகழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் ஒரு பொருளைக் காணினும் விளக்கு கண்ணின் வேறு நிற்பதாகும். கண்ணுக்கும் விளக்குக்கும் எப்படியோ அப்படியே உள்ளது ஆன்ம அறிவுக்கும் கண்ணுக்கும் உள்ள உறவு. ஆன்ம அறிவு கூடாது கண் அறியாது. ஆதலால் அறிவது கண் அன்று ஆன்மாவே ஆம். கண் கருவியேயாம்.

எனவே அந்தக் கரணங்கள் உயிருக்குக் கருவியாய் வேறு நிற்பன என்று அறிந்து அதனின் நீங்கி நின்று இக்கருவியின் துணை கொண்டறியும் கருத்தாவின் உண்மை எது என்று ஆராயும் அறிவே **பசுஞானம்** எனப்படும்.

இந்த ஞானம் ஆன்ம சொரூபத்தைக் காண்பிக்கும். இதுவே தம்மையறியும் முறையாம். இதுதலைவனை அறியும் அறிவு வாய்ப்புக்குத் துணையாய் நிற்பதாகும்.

இவ்வகையாக நாம் அந்தக் கரணங் களைக் கருவிகள் என அறிதலே பசு ஞானம் எனலாம். இப் பசுஞானமுடைய ஆன்மா பிரபஞ்சங்களனைத்தும் தனக்குக் கீழான வை என அறிதலுறும். அங்ஙனம் அறியும் போது தானே சிவம் எனவும், தான் சிவனை ஒப்பது எனவும் செருக்கடையும். இங்ஙனம் பாசம் நீங்கிய **பின்னும் தன்னையே மதிப்பது பற்றி இவ்வறிவு பசுஞானம்** எனப்பட்டது.

ஆன்மா தூலம், சூக்குமம், காரணம் என்னுந் தேகங்களால் கட்டுப்பட்டுள்ளது. நூலுணர்வால் உணர்த்த உணர்கின்றது. ஒவ்வோர் இந்திரியங் கொண்டு ஒவ் வொன்றாக உணர்கின்றது இது சிற்றறிவு எனப்படும்.

இச்சிற்றறிவு நீங்கப்பெற்று, அங்ஙனம் நீங்கப் பெற்றது இறைவனால் எனத்தெளிதல் வேண்டும். இன்றேல் ஆன்மா செருக் குற்றறிதலே உடையதாகும். இந்தச் செருக்கறிவு ஆன்மாவைச் சடுதியில் மயக்குகின்றது. இம்மயக்கத்தை நீக்கிப் பதியுணர்த்த நாம் உணருகின்றோம் என ஆன்மா கருத வேண்டும். அதாவது கரணங் கடந்தபோது பதியில் அழுந்த வேண்டும். அங்ஙனம் அழுந்தாவிடின் ஆன்மா திரும்பவும் பாசத்திலே கூடிவிடும். ஏனெனில் ஆன்மா ஏதேனும் ஒன்றைச் சார்ந்தே நிற்பதன்றித் தனித்து நில்லாது.

அப்படி நிற்பதாக எண்ணின் அதுவே பசுஞானமாம். இது பசுத்துவ வாதனை எனவும்படும். இதனால் ஆன்மாவின் பாசத்தடை இறையருளால் நீங்கப் பெறினும் ஆதிமுத்தன் எனப்படுதலே அன்றி இறைவனைப் போன்ற அநாதிமுத்தன் எனப்படுதல் இல்லை என்பர்.

ஒன்றை ஆன்மாவானது அறிந்தேன் என்றும் யான் அறிந்திலேன் என்றும் தன்னையே கர்த்தாவாக மதித்தலே பசு விளக்கம் ஆகும். இதனைக் கருவி வாயிலாக உணரின் பாசவிளக்கமாகும். சுருங்கக்கூறின் **தற்போத முனைப்பால் ஆன்மா விடத்தில் நிகழும் ஞானமே பசு ஞானமாம்** என்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதிஞானம்**

பதிஞானம் குருவருளால் அவருரைவழி உறைத்து நிற்பதால் உண்டாகும்.

புவனபோகங்களையெல்லாம் கக்கிய உணவு எனவெறுக்க வேண்டும்.

சுவரைக் காணவேண்டுமெனில் அதன் மீதுதீட்டிய சித்திரம் காணப்படாதது போலவே அறுவகை அத்துவாவுட்பட்ட பிரபஞ்சம் மாயையாகிய காரணரூபத்தில் ஒடுங்கி யிருக்கும் போது காணப்படாததலால் முழுப் பொய் எனக் கொள்ளல் வேண்டும்.

இவ்வித நிர்விகற்பமான காட்சி சலியாமலிருக்க வேண்டும்.

அப்போது ஞான சொரூபம் அறிவினிடம் விளங்கித் தோன்றலுறும். இது பிரபஞ் சத்தின் மேற்பட்டது. மேல்கீழ் இல்லாதது. பிரபஞ்ச நாட்டக்காரரால் உணரப்படாத இயல்புடையது.

இத்தகைய அறிவு உதயத்தே வறியவனுக்குப் புதையல் அகப்பட்டதைப் போல ஒரு பெருங்காதல் முறுகிவளரும். அப்போது அந்த அன்பே வழியாகச் சிவபிரான் புகுந்து ஆன்மாவினிடமாக இனிப்பன். இதுவே பதிஞான அநுபவமாம்.

பதிஞானத்தின் இயல்பு எல்லாப் பொருளையும் ஒருசேர அறிதலாம்.

"ஒன்றாகச் சிவனியல்பில் உணர்ந் திடுவன் காணே" என்பது சித்தியார் வாக்கு.

**ஆன்மா பதியினுள்ளடங்க அப்பதி வாயிலாகப் நிகழும் ஞானமே பதிஞானம் ஆகும்.**

இதனை முற்றறிவு என்பர். இதனையே சிவஞானம் எனவும் சிவபோதம் எனவும் செப்புவர்.

பதிஞானமானது குற்றங்குறைகளின்றி தானே பிரகாசிப்பது. தன்னையும் ஆன்மா வையும் அவ்வான்மாவுக்குப் பிரகாசப் படுத்துவது. எல்லாப் பொருளையும் இனிது விளக்குவது.

சிவஞானத்தைச் சிவன் எனவும் கூறுவது உண்டு. பதிஞானமே உண்மைஞானமாம். இதனையே **உணர்வரிய மெய்ஞ்ஞானம்** என்பர்.

இச்சிவஞானமே முத்திக்குச் சிறந்த சாதனம் என்பதே உணர்ந்தோர்கூற்று.

தெளிதலும், நிட்டைகூடலுமே உண்மை ஞானம் எனப்படும். இதுவே முதல்வன் திருவடியை அடையச் செய்வதாகும்.

இப்பதிஞானம், பதியின் அருளால் ஆன்மாவினிடத்து நிகழ்வது எனத்தெரிதல் நன்று.

சாயுச்சியமுத்தி என்பது இத்தகைத்தான பதிஞானத்தின் முடிந்த பயனாம்.

பதியருளால் இது விளைவது என்பதனை **"கொடுமாநரகத்து அழுந்தாமே காத்தாட் கொள்ளும் குருமணியே"** என்றும்

**"இறைவன் எம்பிரான் எல்லை யில்லாததன் இணை மலர்க்கழல் காட்டி அறிவு தந்து என்னை ஆண்டு கொண்ட**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருளிய அற்புதம்." என்றும். மணிவாசகப் பெருமான் திருவாசகமிடுதலால் அறிந்து கொள்ளலாம்.

**"பாசஞானம் தானென வேறன்மையாவது"**
**"பசுஞானம் தனக்கெனச் சுதந்திர முடையதன்று"**
**"ஆகவே பதிஞானமே சுதந்தரஞானம் எனப்படும்."**

இவ்வாறான பதிஞானம் எய்தப் பெற்று நமக்கு வழிகாட்டியாக மிளிர்பவர்களே எமது சமயகுரவர்கள். அவர்கள் அப்பதிஞானத்தை எய்தி, அதிலே நிலைப்புற்று அவ்வநுபவங்களைப் பலபடியாக **அழுது தேடுதல், தேடியடைதல், அடைந்து அழுந்துதல்** என்னும் முறையில் திருமுறைகளாகத் தந்துள்ளனர். அத்திருமுறைகளை நாளும் ஓதி உணர்ந்து நற்பயன் பெறலாமே.

வேதசாத்திரமிருதி புராணகலை ஞானம்
விருப்பசபை வைகரியா தித்திறங்கண்மேலா
நாதமுடிவான வெல்லாம் **பாசஞானம்**
நணுகியான்மா விவைகீழ் நாடலாவே
காதலினா னான்பிரம மென்னுஞானங்
கருது **பசுஞானமி**வனுடலிற்கட்டுண்டு
ஓதியுணர்ந் தொன் றொன்றா வுணர்ந்திடலாற் பசுவா
மொன்றாகச் சிவனியல் பினுணர்ந்திடுவன் காணே.

- சித்தியார் 293

சிவனையவன் **திருவடிஞானத்தாற்** சேரச்
செப்புவது செயல்வாக்குச்சிந்தை யெல்லாம்
அவனையணு காவென்று மாதலாறு
மவனடியவ் வொளிஞான மாதலானும்
இவனுமியான் றுவக்குதிர மிறைச்சி மேதை
யென்பு மச்சை சுக்கிலமோ விந்திரியக் கொத்தோ
அவமகல வெனையறியே னெனுமைய மகல
அடிகாட்டி யான்மாவைக் காட்டலானும்

சித்தியார் 295

---

**யாழ். பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்த முதுகலைமாணிப் பட்டம் பெற்ற சைவப்புலவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்**

சைவப்புலவர் கந்த. சத்தியதாசன் - புத்தூர்
சைவப்புலவர் ஆறுமுகம் தங்கமயில் - கரவெட்டி
சைவப்புலவர் பொன்னுத்துரை சந்திரவேல் - ஏழாலை
சைவப்புலவர் குலசிங்கம் றஜீபன் - ஏழாலை
சைவப்புலவர் குமாரசுவாமி சுமுகலிங்கம் - சாவகச்சேரி
சைவப்புலவர் நடராசா புகன்ஶ்ரீந்திரன்

*இவர்கள் பொன்விழாச் சைவ மாநாட்டில் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகிறார்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தக் கரணங்கள்

ந. சிவபாலகணேசன் B.A, (Hons) M.A. சைவசித்தாந்தம்

அந்தக் கரணங்கள் எனும்போது உயிருக்கு மிக நெருக்கமாகவும், மிக இன்றியமையா தனவாகவும் செயற்படும் கருவிகளையே கருதி நிற்கும். இவை வித்தியா தத்துவங்களுள் வரும் காலம். நியதி. கலை, வித்தை. அராகம் என்பனவும், ஆன்ம தத்துவங்களுள் வரும் மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்பனவும் ஆகும். அநந்த தேவரால் அசுத்தமாயை யிலிருந்து காலம், நியதி, கலை என்பனவும், கலையில் இருந்து வித்தையும். வித்தையில் இருந்து அராகமும் காரியப்படுத்தப்படும். இது தோற்றமுறையாகும். இவற்றின் தொழிற்பாட்டு முறை கலை, வித்தை, அராகம், காலம், நியதி என்ற வகையில் அமையும் என்பர். இறைசக்தி சுத்ததத்துவத்தைச் செலுத்த அதுகலை முதலியவற்றைத் தொழிற்படுத்தும் . கலை என்பது கலித்தல்,நீக்குதல் எனும் பொருளில் ஆணவ மல நீக்கம் அல்லது குறைப்பு என்பதைச் செய்வதன் பொருட்டு உயிரின் ஆற்றலை விளக்கி புத்தி தத்துவத்தில் செலுத்தும். செலுத்தவே புத்தி தத்துவம் தொழிற்படும். இதனால் உயிரின் கிரியா சக்தி விளங்கும். இங்கு புத்தி தத்துவம் இயங்க கலை அவசியமாகின்றது.

வித்தை என்பது உயிரின் ஞான சக்தியை விளக்குவதாகும். கேவல நிலையிலுள்ள உயிரின் திகைப்பை நீக்கும் கருவியே இந்த வித்தியா தத்துவமாகும். உயிரின் இந்த நிலையிலேற்படும் முதற் காட்சி நிருவிகற் பக்காட்சியாகும். இக்காட்சி புலன்வழியா யதாகும். புத்தி தத்துவத்துடன் இயையாத நிலை. அடுத்து வருவது சவிகற்பக்காட்சி. இது பொருளை இன்னதென வரையறுக்கும் நிலையிலுள்ளது. இது புத்தி தத்துவத்துடன் இயையும் நிலையாகும். இந்நிலைகளில் அகத்தே தோன்றும் அறிவு தன் வேதனைக் காட்சி அறிவு ஆகும். இது இன்ப துன்ப நிகழ்வாகும். இதற்கு புத்திதத்துவ இயைபுண்டு. உயிர் கலை, வித்தை. அராகம், காலம் நியதி என்பவற்றோடு பொருந்தி புத்தி தத்துவ உதவியுடன் விடயங்களை அறிந்து அழுந்தி அனுபவிக்கும் நிலை இதுவாகும். இங்கே தன்வேதனைக் காட்சிக்கு புத்தி தத்துவம் விடயமாவது காணலாம். இது அக நிகழ்வே. கலை, வித்தை என்பன தொழிற்பாட்டு முறைமையில் புத்திதத்துவ இயக்கம் தொழிற்பட ஊன்று கோலாயின என்பது தெளிவு. உயிர் ஐம்புலன்களைச் செலுத்திக் காட்சிகளை அனுபவிக்க வித்தையே கருவியாக இருந்தது என்பதும் இங்கு காணப்படுவதேயாகும்.

உயிருக்கு நுகர்வு நாட்டம் ஏற்பட விழைவு ஆற்றலைத்தோற்றுவிப்பது அராக தத்துவ மாகும். இவ்விருப்பம் ஞான ரூபம், வாசனாரூபம் என இருவகை. வாசனாரூபம் பொதுவானது. உயிருடன் என்றும் நிற்பது. இதனால் உயிரின் வீட்டு, இன்ப விருப்பம் உயிரை விட்டு நீங்காது. ஞான ரூபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தியினுடன் நிற்பதாகும். தீக்கையின் போது ஏற்படும் அத்துவா சுத்தியினால் வாசனா ரூபம் நீங்க உயிருக்கான புறப்பொருட்களின் மீதான விருப்பம் ஏற்படாது சிவராகம் ஒன்றே ஏற்படும். காலதத்துவம் வினையை கால அடிப்படையில் உயிர்கள் பெற உதவுவதாகும். நியதி என்பது அவ்வவ் உயிர்களின் வினையை அவரவருக்கு ஊட்டுவதேயாகும். அராகம் விழைவு ஆற்றலை உயிருக்கு ஏற்படுத்து வதனாலேயே மனம், புத்தி, அகங்காரம், சித்தம் தொழிற்படவேண்டிய நிலைக்குள்ளா கின்றன. இந்நிலை தன்னையறியும் தத்துவ ஞானிகளுக்கு இல்லை என்பர். இவர்கள் முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப் பார்கள். பின்னை வினையைப் பிடித்துப் பிசைவார்கள். இவர்களது இருவினையொப்பு நிலையே இதற்குக் காரணமாகும். இந்த வகையில் கலை, வித்தை, அராகம், காலம், நியதி என்பவற்றை உள் அந்தக் கரணங்கள் எனவும். மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்பவற்றைப் புற அந்தக் கரணங்கள் எனவும் கூறுவர்.

இக்கருத்தை அருள் நந்திசிவம் சிவஞான சித்தியார் சுபக்கம் 153ம். பாடலில் கூறுவது கருதத்தக்கது. **"வாயாதி சோத்திராதி புறத்து வாழ் கருவி ஆகும் ஓயாத மனாதி காயத்து உணரும் உட்கருவி ஆகும் ஆய்வார்கட்கு அராகம் ஆதி அவற்றின் உட்கருவி என்பர் மாயாள் தன்வயிற்று இவற்றால் துடக்குண்டு வாழும் ஆன்மா"**

அந்தக் கரணங்கள் என்பது அகக் கருவிகளையே. அதிலும் அகக்கருவிகளுக்கும் அகக்கருவிகளாய் தொழிற்படுவன அராகம் முதலியனவே என்பதை இங்கு காணலாம். எனவேதான் உள் அந்தக் கரணங்கள் எனப்பட்டது என்க.

புற அந்தக்கரணங்களாகிய மனம், புத்தி அகங்காரம், சித்தம் என்பவற்றை பிரணவம் என்ற சூக்கும பஞ்சாக்கரமே இயங்கு நிலைப்படுத்துகின்றது என்பதனை மெய்கண்ட தேவநாயனார் கருத்தில் சிவஞான போதம் நான்காம் சூத்திரத்தில் உள்ள மூன்றாவது உதாரண வெண்பா மூலம் அறியலாம்.

"அகார உகாரம் அகங்காரம் புத்தி
மகாரம் மனம் சித்தம் விந்துப் - பகாதிவற்றை
நாதம் உளவடிவாம் நாடிற் பிரணவமாம்
போதம் கடற்றிரையே போன்று."

அகாரம் அகங்காரத்தை செலுத்த, உகாரம் புத்தியை செலுத்தும். மகாரம் மனதைச் செலுத்த, விந்து சித்தத்தை செலுத்தும். நாதம் உள்ளத்தை செலுத்தும். பிரணவ பஞ்சாக்கரம் இவற்றை இயக்குவதன் மூலம் பிராண வாயு உள் வெளி செல்ல உதவும். இதனால் உயிர்களுக்கு நினைப்பு மறப்பு என்ற நிலைகள் ஏற்பட்டு சகல கேவல நிலைகள் இடம்பெறுகின்றன. மாறி மாறி வரும் இந்நிலையினால் உணர்வு உதித்தும் ஒடுங்கியும் வருவதை கடற்திரைக்கு உவமையாக கூறியதையும் காணலாம். இங்கு இவ்வந்தக்கரண இயங்கு நிலை உயிர்க்கு மிகவும் இன்றியமையாததாக அமைவதும் காணலாம். மனத்தின் விருத்தியே சித்தம் எனக்கூறி சித்தம் தனித்த கருவியல்ல எனவும் மனம், புத்தி, அகங்காரம் மூன்றுமே புற அந்தகரணம் என்பாரும் உளர். ஆயினும் உண்மை விளக்கத்தில் திருவதிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனவாசகங் கடந்தார், 16ம் பாடலில் பின்வருமாறு கூறுவதனால் அந்தக் கரணங்கள் நான்கு என்பதே தெளிவாகிறது.

"அந்தக்கரணம் அடைவே உரைக்கக்கேள்
அந்த மனம் புத்தியுடன் ஆங்காரம் - சிந்தை யிவை
பற்றியது நிச்சயித்துப் பலகால் எழுந்திருந்தங்
குற்றது சிந்திக்கும் உணர்".

சிவப்பிரகாசத்தில் உமாபதி சிவம் 63ம் பாடலில் பின்வருமாறு கூறுகிறார்.

"மருவிய பொறியிலொன்று மாபூதமைந்தி லொன்றுங் கருவிக ணான்கு நீங்காக் கலாதிக ளைந்துங்கூடி ஒருபுலனுகரும்......"

இங்கு கருவிகள் நான்கு என்பது புற அந்தக்கரணங்கள் நான்கு என்பதும், கலாதிகள் ஐந்து என்பது உள் அந்தக் கரணங்கள் என்பதும் கண்டு தெளியலாம். சிவஞானசித்தியார் சுபக்கத்தில் அருள் நந்தி சிவம் பின்வருமாறு கூறுகிறார்.

"சித்தமாம் அவ்வியத்தம் சிந்தனை யதுவும் செய்யும்
புத்தி அவ்வியத்தில் தோன்றி புண்ணிய பாவம் சார்ந்து......." பாடல் 148

"ஆங்காரம் புத்தியின் கண் உதித்து அகந்தைக்கு வித்தாய்......" பாடல் 149

"மனமது தைசத்தின் வந்து, ஒரு பொருளை முந்தி......."
பாடல் 150

"கருவிஆம் மனமும் புத்தி அகங்காரம் சித்தம் நான்கும் மருவி ஆன்மாவே என்னவரும்......."
பாடல் 192

இங்கும் புறஅந்தக் கரணங்கள் நான்கு என்பது தெளிவே. சிவஞான போதம் நான்காம் சூத்திர உதாரண வெண்பா இரண்டிலும் முதலாம் அதிகரண மேற்கோளிலும் மெய்கண்டார் கூறுவது.

"சிந்தித்தாய்ச் சித்தம் தெளியாதாய் ஆங்காரம்.
புந்தியாய் ஆய்ந்து மனமாகி - பந்தித்து"

"ஈண்டு இவ்வான்மாவானது அந்தக் கரணங் களாயுள்ள மனோபுத்தி அகங்கார சித்தங்களில் ஒன்றன்றென்றது"

இங்கும் நான்கு என்பதே கருத்து. எனவே புற அந்தக்கரணங்கள் நான்கு என்ற முடிவே இங்கு காணக்கிடக்கின்றது. பெரிய புராணத்திலும் சேக்கிழாரின் "அளப்பரும் கரணங்கள் நான்கும்" என்பதும் நோக்குக.

உயிரின் செலுத்தும் முறைமையில் அந்தக்கரணங்கள் நான்கினதும் தொழிற் பாடுகள் அமையும் நிலையைக் கொண்டு, இவை கால நேர இடைவெளி கொண்டு இயங்குவனவா அன்றேல் ஒருமித்து ஒரே நேரத்தில் இயங்குவனவா என்பதை விடயத்தின் தன்மை, தரம் கொண்டே தீர்மானிக்க முடியும். மனம் பொருளைப் பற்றி அறிய, சித்தம் சிந்திக்கும். ஆனால் மனம் இதுவோ அதுவோ இது என்ன பொருள் என ஐயப்பட்டு நிற்கும். இதனால் விடய தெளிவுக்காக அகங்காரம் எழுச்சி கொண்டு இது பற்றிய முடிவு வேண்டும் என்ற நிலைக்கு வர, புத்தி நிச்சயிக்கும் நிலையை எய்தும். தொழிற்பாட்டு முறையில் மனம் பற்றுவதும் புத்தி நிச்சயிப்பதும், அகங்காரம் எழுச்சி கொள்வதும், சித்தம் சிந்திப்பதும் ஆன நிலையே உண்டு. இவற்றை தனித்தனி சிந்திப்பது சிறந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனத்தத்துவம்:** சாத்வீக குண மிகுதியால் தைசத அகங்காரத்திலிருந்து மனதத்துவம் தோன்றுகின்றது. இதைப் பற்றி "மனமது தைசதத்தின் வந்து ஒரு பொருளை முந்தி நினைவதும் செய்து அங்கு ஐயநிலைமையின் நிற்கும்" என அருள் நந்தி சிவம் கூறுகிறார். நினைப்பதும் ஐயம் கொள்வதும் புலன்களுடன் பொருந்திக் காணும் போதே தான் உணர்வு பெறுவதும் மனத்தின் செயற்பாடுகளாக விளங்குகின்றன. மனத்தின் தொழிற்பாட்டிற்கு சாத்வீக குண விருத்திகளும் உதவுவனவே ஆகும். அவையாவன தைரியம், மனஉறுதி. சாமர்த்தியம். மென்மை, நொய்மனம், மகிழ்ச்சி, நேர்மை, சுத்தி, புண்ணிய முயற்சி, பொறுமை, மறவாமை, போதும் என்ற மனம், முத்தி பெறும் இச்சை, புறக்கரண அடக்கம், அகக் கரண அடக்கம், பெருங் கருணை என்ற 16ம் ஆகும்.

மனத்துக்கண் மாசிலனாகி பஞ்சாக்கர தியானம் செய்தலும் மனத்தின் இன்னொரு தொழிற் பாடேயாகும். இவ்வித மனத்தின் செயற்பாடுகளினால் உயிருக்கு நன்மை செய்தலான நிலை ஏற்படும். சிறப்பாக பின்வருவன மனத்தால் உயிருக்கு ஏற்படுவனவாகும். அருளுடைமை, பொறை, பிறர் பொருள் விரும்பாமை, செய் நன்றி மறவாமை, வஞ்சகமின்மை, நடுநிலை நிற்றல். அபிமானம் பேணல், அழுக்கா றின்மை. அவாவறுக்கை. பிறர் துயர் கண்டிரங்கல் என்பனவாகும்.

**தத்துவம் :** சாத்வீக குணம் மிகுந்த நிலையிலே குண தத்துவத்தில் இருந்து புத்தி தத்துவம் தோன்றுகிறது. சாத்வீக. இராசத, தாமத குணங்கள் சமமாக இருக்கின்ற நிலையே குண தத்துவ நிலையாகும். சாதி, பெயர், இனம், முதலியன கொண்டு விடயத்தை உறுதிப்படுத்தி கூறுவதே இப்புத்தி தத்துவத்தின் சிறப்புத் தன்மையாகும்.

உறுதிப்படுத்தி, நிச்சயப்படுத்தும் தொழிலை புத்தி தத்துவம் செய்த பின்பே உயிர் நுகர்தலைச் செய்யவும் அவ்விடயத்தை அழுந்தி அனுபவிக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது. இதுவே இன்ப துன்ப புண்ணிய பாவ நிலையாகின்றது. எனவே தான் புத்தி தத்துவம் இவற்றிற்கு ஆதாரமாகின்ற நிலை காணப்படுகின்றது. உயிர்களுக்கு நிச்சயிக்கும் தன்மை என்ற விடயம் மிகவும் இன்றியமையாத தொன்றாகவும் அதனால் புத்தி தத்துவத்தின் முக்கியத்துவம் புலப்படுவதும் இங்கு கருத்திற் கொள்ள வேண்டிய சிறப்பம்சமாகும். புத்தி தத்துவத்தின் குணங்கள் 8 எனக் கூறப்படுகின்றது. அவையாவன அறம் (தர்மம்), அறிவு (ஞானம்), வெறுப்பு (வைராக்கியம்). செல்வம் (ஐஸ்வர்யம்), பாவம் (அதர்மம்), அறியாமை (அஞ்ஞானம்), விருப்பு (அவைராக்கியம்), வறுமை (அநைசுவரியம்) என்பனவேயாகும்.

அறம் எனும்போது 16 விடயங்களை அருள்நந்தி சிவம் கூறுவது நோக்கத்தக்கது.

"ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், உறவு, சீலம், வழுக்கிலாத்தவம், தானங்கள், வந்தித்தல், வணங்கல், வாய்மை, அழுக்கிலாத்துறவு, அடக்கம், அறிவொடு, அர்ச்சித்தல் ஆதி இழுக்கிலா அறங்களானால் இரங்குவான் பணி அறங்கள்".

சிவஞானசித்தியார் சுபக்கம் பாடல் - 113.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வறம் இயமம், நியமம் என இருவகையின. கொல்லாமை, மெய்மை, கள்ளாமை, பிரமசரியம், அகந்தூய்மை என்ற ஐந்தும் இயமம் எனப்படும். வெகுளாமை, வழிபாடு, புறந்தூய்மை, உவகை, செப்பம் (செவ்வியவழி) என்ற ஐந்தும் நியமத்தின் பாற்படும். இவையாவும் அறவாழ்க்கையின் அம்சங்களாகும். அறிவு எனும்போது 8வகையான அம்சங்கள் இடம் பெறுவதாகக் கூறுவர். அவையாவன."

1. உள்ளபடி அறிதல் 2. ஆதி யான்மிக ஞானம்
3. ஆதிபௌதிக ஞானம் 4. ஆதி தெய்வீக ஞானம்
5. சான்றோர் அறிவுரையால் வரும் ஞானம்.
6. நூல்களைக் கற்பதால் வரும் ஞானம்.
7. நல்லாசிரியரிடம் பாடம் கேட்பதால் வரும் அறிவு.
8. ஈகையினால் வரும் ஞானம் என்பன வேயாகும். உயிர்களுக்கு இஞ்ஞானங்களால் கிடைக்கும் பயன் சித்தியும் முக்தியுமாகும். புத்தி தத்துவ குணங்களில் மூன்றாவது வெறுப்பு என்பதாகும். இந்நிலை மன உறுதியை ஏற்படுத்தும் அவையாவன :

1. நோயாளரைக் கண்டு வரும் வெறுப்பினால் உறுதி பிறத்தல்.
2. ஆத்தியான்மிக துன்பத்தால் வெறுப்பு ஏற்பட்டு உறுதி பிறத்தல்.
3. ஆதி பௌதீக துன்பத்தால் வெறுப்பு ஏற்பட்டு உறுதி பிறத்தல்.
4. ஆதி தெய்வீக துன்பத்தால் வெறுப்பு ஏற்பட்டு உறுதி பிறத்தல்
5. பொருள் தேடுவதால் வரும் வெறுப்பினால் உறுதி பிறத்தல்
6. நண்பரின் இழப்பால் வரும் வெறுப்பினால் உறுதி பிறத்தல்
7. மனைவி வெறுக்கத்தக்க செயல் செய்தால் வரும் வெறுப்பினால் உறுதி பிறத்தல்.
8. பசியினால் வரும் வெறுப்பினால் உறுதி பிறத்தல்
9. வறுமையால் வரும் வெறுப்பினால் உறுதி பிறத்தல்
10. பிறப்பின் மீது வரும் வெறுப்பினால் உறுதி பிறத்தல் என்பனவாகும்.

அடுத்த குணம் செல்வமாகும் இவை எட்டு வகைப்படும். அட்டமா சித்திகள் என்று இதைக் கூறுவர்.

அணிமா - சிறியதிற் சிறியதாகும் சித்தி.
மகிமா - பெரியதிற் பெரியதாகும் சித்தி.
இலகிமா - உடம்பை லேசாக்கும் சித்தி.
பிராப்தி - விரும்பியவற்றை பெறுதல்.
பிராகாமியம் - மகளிர் இன்பம் நினைத்தபடி படைத்துப் பெறுதல்.
ஈசத்துவம் - பிரமா முதலியோரைத் தன்வழி நடத்துதல்.
வசித்துவம் - உலகை வசியப்படுத்தல்.
கரிமா - பொருள் நுகர்வினால் கட்டுப்படாமை.

பாவ குணத்தில் 10 வகை உண்டு. அவையாவன கொலை, பொய், களவு, பிறர்மனைநயத்தல், அழுக்காறு, வெகுளி, வழிபடாமை, மாசுபடிதல், செற்றம், கோட்டம் (மாறுபாடு), என்பனவேயாகும்.

அறியாமை என்ற குணத்தில் 5 வகையுண்டு.

தமம் - சடத்தை உயிரென மயங்குதல்.

மோகம் - அட்டமா சித்திகளே உறுதியானவை என மயங்குதல்.

மாமோகம் - தன்மாத்திரைகளால் வரும் இன்ப துன்பமே இறுதியானவை என மயங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமிசிரம் - அட்டமா சித்திகள் பெற்று அதை இழந்து வருந்துதல்.

அந்ததாமிசிரம் - அட்டமா சித்திகளை வேறு ஒருவன் கவர்ந்தால் இவன் வருந்துதல்

விருப்பு என்ற குணம் 100 வகையின என்பர் இறுதி குணமாக வறுமையும் பல்வேறு வகையின என்பர்.

**அகங்கார தத்துவம்** : அகங்காரம் என்ற சொல் அகம் + காரம் என பிரிபடும். அகம் என்றால் நான், காரம் என்றால் செய்வது என பொருள் படும். இங்கு நான் செய்வது என்ற கர்வ நிலையைக் காட்டுவதாக இத்தத்துவம் அமைகிறது. புத்தி தத்துவத்தில் இருந்து இராசத குணம் மிக்கு தோன்றுவதே இந்த தத்துவமாகும். இது தைசத அகங்காரம், வைகாரிக அகங்காரம். பூதாதி அகங்காரம் என மூவகைப் படுகிறது. சாத்வீக குணமிகுதியால் தைசதமும், இராசத குண மிகுதியால் வைகாரியும், தாமத குண மிகுதியால் பூதாதியும் இடம்பெறுகின்றன என்று கூறுவர். விடயம் சம்பந்தமாக எழுச்சியைக் கொள்வதே இத்தத்துவ செயற்பாடாகும். உமாபதி சிவம் பின்வருமாறு கூறுவார்.

“ஆனதனு வதனிலுறு மறிலனையு மியக்கி
யாங்கார நீங்காத வகந்தைக்கு வித்தா
யானலது பிறரொருவ ரெனையொப்பார் புவியி
லில்லையெனு மியல்பினதா யிந்திரியம் புலன்கள்
தானுகரு மளவிலதின் முந்தியுறும்.....”

- சிவப்பிரகாசம் பாடல் 43

பிராணாதி வாயுக்களை இத்தத்துவம் இயங்கச் செய்து, செருக்குக்கு மூல காரணமாய், நான் அன்றி வேறெவருமில்லை என்ற தன்மையுடையதாய் முன்னிற்கும் அளவில் அகங்கார தத்துவம் தொழிற்படுவதே அதன் முக்கியத்துவத்தைக் காண்பிக்கின்றது. பிராண வாயு, அபானவாயு, சமானவாயு, வியானவாயு, உதானவாயு. ஆகிய ஐந்தையும் இத் தத்துவம் இயக்குவதால் “சீவனம்” எனச் சொல்வர் பெரியோர்.

**சித்தம் :** சிந்தித்தலாகிய தொழிலைச் செய்து விடயங்களை ஆராய்ந்து புத்தி நிச்சயிக்க உதவி பண்ணுவதே இதன் தாற்பரியம். மேலும் நினைவு மாத்திரையாய் நிச்சயித்த விடயங்களைப் பதிவு செய்து வைத்திருப்பதும் இதன் செயற்பாடாகும். இதனாற் போலும் சூக்கும தேகத்தில் சித்தம் இடம் பெறாதுள்ளது.

உயிர் இயக்கத்தில் அந்தக் கரணங்கள் முக்கிய வகிபாகத்தைப் பெற்றிருப்பது என்பது 36 தத்துவங்களின் இயங்கு நிலைத் தன்மையில் எந்த வகையிலும் புறக்கணிக்க முடியாதென்பதே இங்கு நிலை பெறும் கருத்தாகும். அந்தக் கரணங்களின் செயற்பாடுகளைப் பூரணமாக அறிந்து, விளங்கி, உணரும் ஒருவர் மனிதப் பிறவியின் நோக்கம் முத்தியின்பம் பெறுவதேயாகும் என்ற முடிவுக்கு வருவதில் எந்தவித முரண்பட்ட கருத்துக்களையும் கொண்டிருக்க முடியாது என்பது திண்ணம்.

**பயன் நூல்கள் :**

1. சிவஞான மாபாடியம் - மாதவச் சிவஞான முனிவர்.
2. சிவஞான மாபாடியம் - விளக்கம் சி.சு.மணி.
3. சைவ சித்தாந்த வரைவு - முனைவர் நல்லூர் சா. சரவணன்.
4. சிவஞான சித்தியார் - சுபக்கம்.
5. சிவப் பிரகாசம்.
6. உண்மை விளக்கம்.
7. சிவஞான போதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தியும் முத்தி தரும் சிவத்தலங்களும்

டாக்டர் சிவகுரு ஜெயமனோகரன் MBBS, MS, FRCS

## முத்தி

முத்தி என்பது பிறந்து இறந்து இளைக்கின்ற உயிர், மீண்டும் பிறவிக்கு வராத பெரு நிலையைப் பெறுவதாகும். இதனை "வீடுபேறு" என்றும் கூறுவர். வீடு என்பது பாசத்தை விடுவது, பேறு என்பது சிவத்தைப் பெறுவது. வீடு பேறு என்பது உயிர்க்குள்ள ஆணவமல மறைப்பு அறவே நீங்கப் பெற்றுச் சார்ந்ததன் வண்ணமாக இருக்கும் உயிர் சிவமாம் தன்மை பெற்று மாறாத பேரின்ப நிலையில் இருப்பதாம்.

பிறவிக்கு வருவதற்கு முன், கேவல நிலையில், உயிர் ஆணவ மலத்தை மட்டுமே பற்றி, சார்ந்ததன் வண்ணமாம் தன்மையால், ஆணவ மலத்தைப் போலச் சடமாய்க் கிடந்து, பேரிருளில் மூழ்கி இருந்தது. அது போல் பிறவி நீங்கப்பெற்ற முத்திநிலையில் ஆன்மா சிவபெருமானை மட்டுமே பற்றி, சார்ந்ததன் வண்ணமாம் தன்மையால், சிவபெருமானின் எண்குணத் தன்மையைப் பெற்றுச் சிவமேயாய் நின்று பேரின்பத்தில் மூழ்கி இருக்கும். இவ்வுண்மையை,

"ஒன்றி நின்று உணரும் உண்மைக்கு உவமை ஆணவத்தோடு ஒன்றே" எனச் சிவப்பிரகாசம் ஓதும். இதையே,

"ஆணவத்தோடு அத்துவிதம் ஆனபடி மெய்ஞ் ஞானத்

தாணுவினோடு அத்துவிதம் சாரும் நாள் எந்நாளோ?" - என்பார் தாயுமானவர்.

முத்தி நிலையில் ஆன்மா தான் என வேறுபாடு தோன்றாமல் சிவமேயாய் நிற்கும்.

முத்தி நிலையில் உயிருக்கு ஐந்தொழில் ஆற்றும் திறன் இல்லை, தனித்து நிற்கும் தகுதி உயிர்க்கு எந்த நிலையிலும் இல்லை. அதனால் தான் கேவல நிலையில் ஆணவமலத்தைப் பற்றி இருண்டு கிடந்தது. உய்வு பெறுவதற்காக இறைவன் அருளாற் கிடைத்த சகல நிலையிலும் மும்மலங் களைப் பற்றி நின்றது. முழு இறை அருள் பெற்றுப் பிறவிப் பயன்பெற்ற சுத்த நிலை ஆகிய முத்தி நிலையிலும் சிவத்தைப் பற்றி நிற்கும். ஐந்தொழில் ஆற்றுதற்கு சுவதந்திரம் வேண்டும். உயிர் தனித்து நிற்கும் தன்மையற்றது ஆதலின், சுவதந்திரம் உடையதன்று. எனவே முத்தி நிலையில் ஆன்மா இறை இன்பத்தை அனுபவித்து நிற்க முடியுமே அன்றி, ஐந்தொழில் ஆற்றுவதற்கு இயலாது. இவ்வுண்மையைச் சிவஞான சித்தியார் "உம்பர் பிரான் உற்பத்தியாதிகளுக்கு உரியன் உயிர்தானும் சிவானுபவம் ஒன்றினுக்கு உரித்தே" என்று ஓதுகின்றது.

### முத்தி வகைகள்

முத்தி நான்கு வகைப்படும்.

1. **பதமுத்தி** - இந்த நிலையில் உயிர் களுக்கு மலவாசனை உண்டு. எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் பிறவி எடுக்க வாய்ப்பு உண்டு. சாலோக, சாமீப, சாரூப நிலைகளை அடைவதாகும்.

2. **அபரமுத்தி** - சூக்கும உடம்பு நீங்கப்பெறும் நிலையில், பதமுத்தியில் இருந்தவாறே, பரமுத்திக்குச் செல்லும் நிலையைப் பெறுவது ஆகும். இந்த உயிர்கள் பெரும்பாலும் பிறவிக்கு வராதனவாகும்.

3. **பரமுத்தி** - மீண்டும் பிறவிக்கு வராத சாயுச்சிய நிலையை அடைவதைக் குறிக்கும். இங்கிருக்கும் ஆன்மாக்களுக்கு யாதொரு உடம்பும் இருக்காது. இதுவே முத்தியின் முடிந்த நிலை ஆகும்.

4. **சீவன் முத்தி** - பதமுத்தி நிலையிலிருந்து இறைவன் கருணை காரணமாக உலக உயிர்களுக்கு உய்வு நெறி காட்டி வழி நடத்தும் பொருட்டு இவ்வுலகில் தோன்றிய அருளாளர் பெருமக்களின் நிலையைக் குறிக்கும். இவர்கள் உடம்பைப் பற்றிய உணர்வு இன்றி நின்று செயற்கரிய செய்வர்.

- சரியை நெறியாகிய உடலாற் செய்யும் வழிபாட்டில் நின்றவர்கள் "சாலோக" முத்தியைப் பெறுவர். சிவலோகத்திற்குச் சென்று அங்குள்ள போகங்களை அனுபவிப்பர்.

- கிரியை நெறியாகிய மனமும் உடலும் கலந்து (பெரும்பாலும் வாயால்) செய்யும் வழிபாட்டில் நின்றவர்கள் சிவலோக போகத்தை அனுபவிப்பதோடு, சிவ பெருமானுக்கு அருகில் இருக்கும் "சாமீப" முத்தியைப் பெறுவர்.

- யோக நெறியாகிய மனத்தினால் செய்யும் வழிபாட்டில் நின்றவர்கள் சிவலோகத்தில் சிவபெருமான் கொண்டுள்ள திருமேனி களில் ஒன்றைப் பெற்று நிற்கும் "சாரூப" முத்தியைப் பெறுவர். இம்மூன்றும் பத முத்தி எனப்படும்.

எங்கும் எதிலும் இறைவனையே கண்டு அவனன்றி வேறெதுவும் இல்லை என்னும் அறிவு தலைப்பட்டு ஞான நெறியில் அறிவால் அறிந்து வழிபட்டோர் சிவபெருமான் திருவடிக்கீழ் இரண்டறக் கலந்து நின்று நித்திய ஆனந்தத்தை அனுபவித்து இருப்பர். அந்நிலையில் ஆணவ மலப்பற்று அறவே நீக்கப்பட்டு, ஆன்மா சிவமாம் தன்மை பெற்று, மாறாத பேரின்பத்தில் திளைத்து நிற்கும்.

**சரியை வழிபாடு** - உடலால் வழிபடுதல் - திருக்கோயில் வழிபடுதல், வலம்வருதல், பூமாலை தொடுத்தல், திரு நந்தவனம் அமைத்தல், திருக்கோயில் துப்புரவுப்பணி, உழவாரப் பணி, விளக்கிடுதல், கோயிலைக் கழுவுதல். சிவவேடப் பொலிவு உடையவரைச் சிவனாகவே வழிபடல், பூக்கொய்தல், திருமுறைகளைப் பரவசமாகப் பாடுதல் என்பன

**கிரியை வழிபாடு** - உடலாலும் மனத்தாலும் செய்யும் வழிபாடு, பெரும்பாலும் வீட்டில் செய்யப்படும் நித்திய வழிபாடு, உபாசனா மூர்த்தம் ஆகிய வழிபடும் தெய்வத்தை வீட்டில் நிறுவி வழிபடுவது, திருமுறைகளைக் கலந்த அன்பாகிக் கசிந்துருகிப் பாடுதல், அஞ்செழுத்து மந்திரங் களை ஓதுதல், நித்திய திருமுறைப் படனம், சாத்திர தோத்திரக் கருத்துக்களைப் பிறர்க்கு உரைப்பது என்பன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யோக வழிபாடு** - மனத்தினால் வழி படுவது. வழிபடும்தெய்வத்தை மனத்தில் இருத்திப் பூசிப்பது; அந்தர்யாக பூசை, அஞ்செழுத்து மந்திரத்தை உள்ளத்தால் அக்கு மாலை கொண்டு எண்ணுவது என்பன. இந்த மூன்றுவகை வழிபாட்டிலும் முக்கியமானது இறைவன் பெருங்கருணையைச் சிந்தித்து வழிபடுதலேயாகும். நல்ல சிந்தையோடு செய்கின்ற செயலே சிறந்த பலன் தரும். என்பதற்கு "ஈசற்கு நல்லோன் எறிசிலையோ நன்னுதால் ஒண்கருப்பு வில்லோன் மலரோவிருப்பு?" என்ற பாடல் பதம் சிந்திக்கத் தக்கது. உள்ளன் போடு சரியை, கிரியை, யோக பதிபுண்ணிய நெறிகளில் நின்றவர்களுக்கு இறைவன் வெகு விரைவில் ஞானகுருவாய் வந்து ஞானத்தை உணர்த்துவான்.

சிவனுக்கே மீளாஅடிமை பூண்ட ஆன்மா, ஆணவ மறைப்பினால் உலக போகங்களுக்கு அடிமையாகி, அல்லற்படுவது கண்டு சிவபெருமான் தன் பேரருட் கருணையால் பத்திநெறியறிவித்து, சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி ஆளுகின்றார். பிறப்புக்குத் தொடக்கம் அநாதியானது. ஆனால் முத்தியில் முடிவடை கிறது. முத்திக்குத் தொடக்கம் உண்டு, ஆனால் முடிவே இல்லாது, காலத்தை வென்று, காலகாலன் ஆன சிறுமான் ஏந்திதன் சேவடிக்கீழ்ச் சென்று இறுமாந்திருக்கும் நிலையே முத்தி ஆகும்.

ஐந்தொழில் ஏவித் தனி நடத்தும் எங்கோவான சிவன் முத்தியை அருள வேண்டும் என்னும் பெருங்கருணையால் தான் வினை அனுபவத்தைக் கொடுத்து மறைத்தலைச் செய்கிறார். "பேதித்து (அறிவில் மாற்றத்தை ஏற்படுத்தி) நம்மை வளர்த்து (திரோதானம்) எடுத்த (அருளல்) பெய்வளை" என்பார் மாணிக்கவாசகர். வேறுவேறு பிறவிகளைத் தொடர்ந்து எடுத்து, வேறுவேறு குருமார் காட்டிய நெறியல்லா நெறிகளில், ஐம்புலவேடரின் வழியே சென்று இளமை, வாழ்க்கை, உறவு, செல்வம் என்பவற்றின் நிலையாமையை உணர்ந்து இளைப்புற்ற ஆன்மாவை சரியை, கிரியை, யோகம் இவற்றின் படிவழியே பக்குவப்படுத்திச் சிவன் முதற்குருவாய் வந்து உணர்த்த, உணர்த்திய இறைவன் "தன் இனத்தானே" (அந்நியம் இன்மை) என அறிந்து அவன் திருவடியைச் சார்ந்து இன்புறத் தொடங்கும். வீடு பேற்றுக்கு இறைவனைப் பற்றிய முழு அறிவாகிய "ஞானமே" சாதனமாகும். நம் அறிவு நுணுகி நுணுகி பருமை குறைந்து நுட்பநிலை பெறுவதே ஞானம் பெறும்வழி, இவ்வாறு நுண்ணறிவு பெறுவதே பக்குவம். "நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே" - என்றும் "அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே" - என்றும் சிவபுராணம் பேசும். நம் அறிவு நுணுக விடாமல் தடையாய் இருப்பது ஆணவ மலம். இது தேயத் தேய, மறைப்பு நீங்கி நல்லறிவு வெளிப்படத் தொடங்கும்.

"பல்லூழி காலம் பயின்றரனை அர்ச்சித்தால்
நல்லறிவு சற்றே நகும்"

சதா இறை சிந்தனை, இறை வழிபாடு என்ற பக்தியே ஞானம் பெறவும், அதனால் முத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறவும் வழி. ஆணவமலம் முற்றாகத் தேய்ந்து விட்ட நிலை மலபரிபாகம். பல பிறவிகளில் அடையும் அனுபவத்தால் "என் செயலால் ஆவது ஒன்றுமில்லை, எல்லாம் அவன் செயலே" என்ற அறிவும் பணிவும் வர வர ஆணவமலம் கரையத் தொடங்கும். இந்த இறை நம்பிக்கையே ஞானம் பெற முதல்படி. இதை "தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி" என்பார் மணிவாசகர். பக்தி பூர்வமாய் சிவனின் முதன்மையை உணர்ந்து வழிபடல் ஞானத்தின் இரண்டாம் படி.

மலபரிபாகம் ஏற்பட்ட உடனேயே சத்தினிபாதம் ஏற்படுகிறது. திருவருட் சக்தி ஆன்மா மீது அதிகமாகப் படிதலே சக்திநிபாதம். பக்குவம் வளர வளர மறைப்பாற்றலாய் இருந்த திரோதான சக்தி மெல்ல மெல்ல அருளைச் செய்யும் அருட் சத்தியாகி ஞான ஒளி வீசத் தொடங்கும். பிறை நிலா வளர வளர இரவின் இருள் விலகுவது போல் அருள் ஒளி வளர வளர ஆணவ இருள் தேய்ந்து வரும். அருள் மிகுதலும் ஆணவம் தேய்தலும் ஒரே நேரத்தில் நிகழும். மலபரிபாகம் அடைந்து விட்ட நிலையை உணர்த்துவதே "இருவினை ஒப்பு" நல்வினை பொன் விலங்கு போன்றது. தீவினை இரும்பு விலங்கு போன்றது. இரண்டும் நம்மை தளைக்கும் விலங்குகளே என உணர்ந்து, எதுவரினும் இன்பமோ துன்பமோ, நல்லதோ கெட்டதோ, அவற்றைச் சமமாக எண்ணி எல்லாம் "அவன் செயலே" எனத் தன் முனைப்பு அற்றிருக்கும் மன நிலையே "இருவினை ஒப்பு" ஆகும். அறிவு பக்குவமாகி இறைவனை நோக்கிச் செல்லும் நிலை மலபரிபாகம், சத்திநிபாதம், இருவினையொப்பு என்பன நிகழும் போது ஏற்படுகின்றது. எது நிலைத்தது, எது நிலையாதது என்ற உண்மை நிலையை உணர்வதே நிலையாமை உணர்ச்சி ஆகும். இது ஞானத்தின் மூன்றாம் படி ஆன்மாக்களுக்கு முன் செய்த தவத்தால் ஞானம் நிகழும்.

சரியை, கிரியை யோகங்கள் என்பவை ஞானத்தைக் காட்ட, அந்த ஞானம் முத்தியைக் கொடுக்குமே அன்றி அவை நேராக முத்தியைக் கொடுக்க மாட்டா. ஞானத்தில் ஞானம் என்ற மார்க்கத்துக்குப் பலன், சாயுச்சியம் என்னும் பரமுத்தி நிலையில் சிவபெருமான் திருவடியில் இரண்டறக் கலந்து சிவானந்தத்தை அழுந்தி அனுபவித்தல் ஆகும். சரியை முதலிய பதிபுண்ணியங்களைச் செய்பவர்கள் இறக்கும் பொழுது மனைவி மக்கள் மீது பற்று வைத்திருந்தாராயின் அப்பற்றின் காரணமாக அப்பற்றின் பயனை அனுபவித்தல் பொருட்டு மீண்டும் இந்த உலகில் பிறக்க வேண்டிவரும். சரியை முதலிய தவங்களைச் செய்பவர்கள் இறக்கும் பொழுது இத்தகைய உலகப்பற்று இல்லாது இறந்தால் சாலோகம் முதலிய பதங்களில் இருந்தவாறே, ஞானத்தை அடைவர். தலைவனே குருவாய் வந்து உபதேசிக்க அந்த உபதேசத்தால் ஐம்புலனை விட்டு ஆன்மா தலைவன் திருவடியை அடைகிறது. சரியை, கிரியை யோகங்களே அத்தகைய உபதேச அறிவை ஆன்மா பெறும்படி செய்யும். வேள்வி முதலாயின சுவர்க்கம் முதலிய பதங்களையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரும். வீடுபேற்றைத் தரமாட்டா. சிவ பெருமானே மானுடச் சட்டைத்தாங்கிக் குருவாய் வந்து உபதேசிக்கிறான். ஒவ்வொரு உயிருக்கும் அதனதன் மலசக்தியின் மறைப்புக்கேற்ப தனித்தனித் தன்மையில் இறைவன் உணர்த்துவான்.

ஐம்பொறிகள் மயக்கத்தைச் செய்யுமே அன்றிச் சிவபெருமானை அறியும் உணர்வை விளக்கமாட்டா. ஐம்பொறிகள் நீங்கும்பொழுது கேவலநிலை கூடுமாதலின் அப்பொறிகள் உள்ளபொழுதே அப்பொறி உணர்வைப் பொய்யாக்க வேண்டும். பொறி உணர்வைப் பொய் என்று கண்டபொழுது, ஆன்மா இறைவன் திருவடியை அடையும். பழைய வாசனை காரணமாகப் பொறிகள் மீண்டும் அவற்றைப் பொருந்துமாயின் சிவபெருமான் திருவடியையே நினைத்து அவற்றைவிட்டு நீங்கவேண்டும்.

பாசஞான பசு ஞானங்களால் இறைவன் அறியப்படான். எனவே திருவடி ஞானத்தினாலேயே அவனை அறியவேண்டும். உலகத்தைக் கானல் நீர் போல, நிலை இல்லாதது எனக் கண்டு கழித்தால், அந்தத் திருவடி ஞானம் விளங்கித் தோன்றும். திருவடி ஞானத்தால் இறைவனைக் கண்டபொழுதும், பழக்க வாசனையால் மீண்டும் உலகத்தைப் பற்றாது இருத்தல் பொருட்டு 'சிவயசிவ' என்னும் முத்தி பஞ்சாக்கரத்தை ஓதல் வேண்டும்.

தற்போதம் நீங்கிய நிலையிலும், அவனருளால் அன்றி அவனை அறிய முடியாது. ஆகவே பதிஞானம் இன்றித் தனித்து இறைவனைக் காணும் தன்மை ஆன்ம அறிவுக்கு இல்லை.

நிலையில்லாத உலகத்தை நிலை இல்லாதது என்று காணும் போது, உலகம் முழுவதும் சூனியம் போலத் தோன்றும், ஆயினும் அத் தோற்றம் சூனியம் அன்று. அது ஞான சொரூபமே ஆகும். உலகப்பற்று நீங்க வேண்டுமாயின் உயிர் சிவோகம் பாவனை செய்யவேண்டும். தன்னைச் சிவனாகவே நினைத்துத் தனக்கும் எண்ணும் மந்திரத் துக்கும் வேற்றுமை காணாதிருத்தலே சிவோகம் பாவனையாகும். இதயத்தில் தியானிக்கும் போது அண்டத்தில் காணப்படும் முப்பத்தாறு தத்துவங்களையும் பிண்டத்துள் இதயத்தில் தாமரையாகக் கொண்டு அந்தத் தாமரையின் மேல் சிவபரம் பொருள் வீற்றிருக்கும்.

பாசநீக்கம் ஏற்படுவதற்கு ஏகன் ஆகி நிற்றலும் இறைபணி நிற்றலும் இன்றியமையாதன. ஏகன் ஆகி நிற்றலின் பயன் ஆணவமல நீக்கமும் இறையருள் வழி நிற்றலின் பயன் மாயா கன்மாங்களின் நீக்கமும் உண்டாகும். ஆன்மார்த்த பூசையும், சிவன் உயிரோடு கலந்து நிற்றலை நினைந்து சிவனே நான் என்று பாவிக்கும் சிவோகம் பாவனையும் பாச நீக்கம் ஏற்படுவதற்கு உறுதியாகக் கைக்கொள்ள வேண்டிய வழிபாட்டு நெறிகளாகும்.

பாசநீக்கம் பெற்றதனால் ஆன்மா, தன்னோடு இறைவன் அத்துவிதமாய் நின்று காட்டியும் கண்டும் வரும் உபகாரத்தை இடைவிடாத அன்பால் நினைத்து, அவன் திருவடியாகிய சிவஞானத்தை அடைதலே சிவப்பேறு. இறைவன் உயிர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவித்தல் ஆகிய காட்டும் உபகாரத்தை மட்டும் அன்றி அறிதல் ஆகிய காணும் உபகாரத்தையும் செய்வான். முத்தியிலும் இறைவன் உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும், உடனாயும் நிற்றல் ஆகிய அத்துவித நிலையில் நின்று காணும் உபகாரத்தைச் செய்வான். பாசம் நீங்கித் திருவடியை அடைதல் உடம்பு உள்ள போதே உயிர்க்குக் கூடும்.

சீவன் முத்தர் உலகில் சீவிக்கும் போதே பாசத்தினின்றும் விடுபட்டவர். உடம்போடு கூடி வாழ்க்கையில் அவரது அறிவு, இச்சை, செயல்கள் புறத்துச் செல்லும் பொழுது அவரது அறிவு மலத்தை நீக்குவதிலும், அவரது இச்சை அன்பரொடு கூடுவதிலும், அவரது செயல் திருவேடத்தையும் சிவாலயத்தை வழி படுதலிலும் செல்லும். விபரீத உணர்வைச் செய்யும் மும்மலங்களைக் களைவதே முதலில் செய்யவேண்டுவது ஆகும். மலம் நீங்கப் பெறும் பொருட்டுச் சிவனடியாரொடு இணங்கி இருக்க வேண்டும். குரு லிங்கம் சங்கம வழிபாடு மிக மிக இன்றிய மையாததாகும். சிவபெருமான் வெளிப்பட்டு விளங்கும் திரு வேடத்தையும் சிவாலயத் தையும் சிவனெனவே கண்டு வழிபட வேண்டும். இம்மூன்றையும் செய்ய வேண்டுவது சீவன் முத்தர்க்குக் கடமையாகும். ஞானம் நிகழ்வதற்கு முன் வழிபடாது மறந்த குற்றம் அறியாமையால் நிகழ்ந்தது. ஆதலின் அக்குற்றம் நீக்கப்படும். ஞானம் தோன்றிய பின், வழிபடாத செய்ந்நன்றி கொன்ற மகற்கு உய்வு இல்லை. ஆதலின் இறைத் தன்மையை அடையச் செய்த அந்தப் பெருமானையும் அவன் அடியவரையும் அவன் வீற்றிருக்கும் கோயில்களையும் மூர்த்தங்களையும் இடையறாது வழிபடுதலே இறைத் தன்மை பெற்ற ஆன்மாவுக்குப் பெருமை தருவது ஆகும்.

இனி முத்தி தரும் சிவத் தலங்களில் முதன்மையான பதினான்கைப் பார்ப்போம்.

### முத்தி தரும் சிவத்தலங்கள்

1. **திருவாரூர்** - பிறக்க முத்திதரும் தலம். மூலாதாரத்தலம் பிருதிவித்தலம். சப்த விடங்கத் தலங்களில் தலையாயது. சிவபெருமான் 360 திருவிளையாடல் களைப் புரிந்த தலம். சுந்தரருக்குத் தன்னைத் தோழனாகத் தந்து, அவர் பொருட்டுப் பல அற்புதங்களை ஈசன் புரிந்தருளிய தலம். மூவர் தேவாரமும் - மொத்தம் 35 பதிகங்கள் பெற்ற தலம். பல நாயன்மார் வாழ்க்கையோடு அற்புதங் களும் நிறைந்த தலம். ஏழு தேவாரத் திருமுறைகளிலும் பாடல் பெற்ற தலம். சுந்தரர் பொருட்டு பரவையாரிடம் ஈசன் இரு தடவை தூது சென்ற "செந்தாமரை நாறு வீதி" உள்ள ஊர். சுந்தரர் திருத்தொண்டர் தொகை பாட "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று இறைவன் அடி எடுத்துக்கொடுத் தலம்.

இந்திரன் வழிபட்ட சோமாஸ்கந்தர் முசுகுந்தன் மூலம் திருவாரூர் வீதி விடங்கப் பெருமான் என்னும், தியாகராசர் ஆனார். சாயரட்சைப் பூசைச் சிறப்புடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம். பெரிய புராணத்தில் நகரச்சிறப்பு, பேசப்பட்ட, மனுச் சோழனின் ஊர் சிதம்பரம் போல பஞ்சபாசுரம் பெற்ற ஒரேயொரு மற்றத்தலம்.

2. **காசி (வாரணாசி)** - இறக்க முத்திதரும் தலம். வட நாட்டுத் தலம். வடக்கு நோக்கி கங்கை நதி உத்தர வாஹினியாகப் பாய்வ தால் சிறப்புப் பெற்ற தலம். காசி விசுவநாதர் 12 ஜோதிலிங்கங்களில் ஒருவர். காசிக்கு நிகரான தலமும் இல்லை, கங்கைக்கு நிகரான நதியும் இல்லை.

3. **திருமறைக்காடு** - (வேதாரண்யம்) தீர்த்தமாட முத்திதரும் தலம். ஏழு தேவாரத் திருமுறைகளிலும் பாடல் பெற்றதலம். வேதங்கள், பிரமன், விசுவாமித்திரர் பூசித்த தலம். அகத்திய முனிவருக்குத் திருமணக் கோலம் காட்டிய தலங்களுள் ஒன்று, வேதங்களால் பூட்டப்பட்ட கதவை பதிகங்கள் பாடி நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் முறையே திறக்கவும் அடைக்கவும் செய்த அற்புதம் நிகழ்ந்த தலம்.

புவனி விடங்கத் தியாகராசர், ஹம்ஸபாத நடனம் நிகழ்த்தும் தலம், இராமபிரானும் கங்கையும் காவிரியும் நீராடித் தம் பாவங்களைப் போக்கிய தீர்த்தச் சிறப்பு.

இராவணனைக் கொன்ற வீரஹத்தி தோஷம் நீங்க இராமன் லிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்த தலம். கோளறு பதிகம் பாடப்பட்ட தலம்.

4. **இராமேஸ்வரம்** - தீர்த்தமாட, நினைக்க, விரதம் இருக்க, புகழ, தானம் செய்ய, தரிசிக்க, இறக்க முத்தி தரும் தலம். பாடல் பெற்ற பாண்டிய நாட்டுத்தலம். காசியிலும் சிதம்பரத்திலும் - பத்து மாதம் தங்கிய பலனையும். நைமிசாரணியம், ஸ்ரீசைலம், மதுரை, திருவானைக்கா, குடந்தை, திருவிடைமருதூர். மயிலாடுதுறை, திருமறைக்காடு, திருவாரூர், திருவெண் காடு, சீர்காழி, காஞ்சிபுரம், திருமுதுகுன்றம், திருவண்ணாமலை, திருக்காளத்தி ஆகியபதிகளில் - ஓராண்டு தங்கிய பலனையும், தனுஷ்கோடியில் நீராடி இராமநாதரை வணங்கி - மூன்றே நாளில் பெறலாம் என்பதில் இத்தலத்தின் சிறப்பை அறியலாம். "நீடு தனுக்கோடியை நினைத்தாலும், புகழ்ந்தாலும் நேர் கண்டாலும் வீடு பெறல், எளிதாகும்" - சேது புராணம், இராவண வதத்தால் இராமனைத் தொடர்ந்த பிரம்மஹத்தி நீங்க இராமன் இலிங்கப் பிரதிஷ்டை செய்ததலம். தமிழ்நாட்டு ஜோதிர்லிங்கத்தலம். காலைப் பூசைச் சிறப்புடைய தலம்.

5. **திருக்குற்றாலம்** - பிறக்க, இறக்க, தரிசிக்க, நினைக்க முத்திதரும், பாண்டிய நாட்டுத் தலம். "புந்தியுற நினைந்தார்க்கே அருண கிரி, தரிசனைக்கே புலியூர்பேறு, நந்து தவழ் திருவாரூர் பிறந்தார்க்கே, இறந்தார்க்கு நல்குங் காசி: எந்தையார் திருவருளாற் பிறந்தார்க்கும் இறந்தார்க்கு மெதிர் கண்டார்க்கும் சிந்தையுற நினைந்தார்க்கும் அழியாத கதிகொடுக்கும் திருக்குற்றாலம்." பஞ்சசபைகளில் சித்திரசபை உள்ள தலம். பாடல் பெற்ற ஒரேயொரு தலவிருட்சம் குற்றாலத்துக் குறும்பலாவே. திருவனந்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசைச் சிறப்புள்ள, அகத்தியருக்குத் திருமணக் கோலம் காட்டிய தலம்.

6. **திருமுதுகுன்றம்** - (விருத்தாசலம்) இறக்க முத்தி தரும் தலம் - விருத்த காசி.

"தூசினால் அம்மை வீசத் தொடையின் மேல் கிடத்தித் துஞ்சும்
மாசிலா உயிர்கட்கெல்லாம் அஞ்செழுத்தியல்பு கூறி
ஈசனே தனது கோலம் ஈந்திடும் இயல்பால் இந்தக்
காசியின் விழுமிதான முதுகுன்ற வரையும் கண்டான்."

(கந்தபுராணம் - வழிநடைப்படலம்)

சுந்தரர் 12000 பொன்பெற்று மணிமுத்தா நதியில் போட்டுத் திருவாரூர்க் கமலாலயக் குளத்தில் எடுத்த அற்புதத்தோடுமுன் பாதித் தொடர்பு உள்ள தலம்.

7. **திருவையாறு** - பிறக்க, வசிக்க, இறக்க முத்தி தரும், காசிக்குச் சமமான தலம்

"தேசம் காசியை ஒப்பது திருவையாறு: அதனில்
ஏசில் கங்கையில் அதிகமாம் பொன்னி: இத்தலத்தில்
வாசம் பெற்றவர் பிறந்தவர் இறந்தவர் மன்னோ
ஆசில் முத்தியை அடைவது சத்தியம் ஆமால்."

திரு நந்திதேவர் அவதாரத் தலம். சப்த ஸ்தானத்தலங்களில் தலையாயது, ஏழூர் விழா சிறப்பாகக் கொண்டாடும் தலம். நாவுக்கரசருக்கு இறைவன் கயிலைக் காட்சியைக் காட்டிய தலம். "ஐயாறதனில் சைவனாகி" இறைவனே தன்னைப் பூசனை செய்த தலம்.

8. **அவிநாசி** - கூறக் காதால் கேட்க முத்தி தரும் தலம். கொங்கு நாட்டுத்தலம். முதலையுண்ட பிள்ளையை மூன்று ஆண்டுகளின் பின் மூன்றாண்டு வளர்ச்சியுடனும் முதலை வாயிலிருந்து சுந்தரர் பதிகம் பாடி மீட்ட தலம். அந்தணச் சிறுவன் முதலை வாயுட்புக்கு மூன்றாண்டு ஒளித்திருந்து மீண்டதால் புக்கொளியூர் அவிநாசி என்றும அழைக்கப்படும் தலம். (வெங்கராவுண்ட பிள்ளையை நல்கியதலம்)

9. **திருக்காளத்தி** - பிரவேசிக்க முத்தி தரும் தலம். பொன்முகலிஆறு வடக்கு நோக்கிப் பாய்வதால் சிறப்புப் பெற்ற தலம்.

"**ஸ்ரீ காளத்தி** - பிரவேச முத்தி", சிலந்தி, பாம்பு, யானை வழிபட்ட தலம். பக்திக்கு இலக்கணம் வகுத்த கண்ணப்பன் ஆறே நாளில் கண் இடந்து அப்பிய தலம். நக்கீரர்" கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி பாடி அருள் பெற்ற தலம். தக்கண கயிலாயத் தலம். காற்றுத் தலம். நதி - நிதி, பர்வதச் சிறப்புள்ள தலம். சென்னையில் இருந்து 120 கி.மீ. தொலைவில் உள்ள ஆந்திராத் தலம். (ராகு, கேது. கிரக கிரகதோஷ நிவர்த்தித் தலம்) மூவர் பாடல் பெற்றதலம்.

10. **திருவானைக்கா** - தரிசிக்க, சொல்ல, கேட்க முத்தி தரும் தலம், திருக்கயிலையில் இருந்து இறைவி இங்கு எழுந்தருளித் தவம் செய்து இறைவனிடம் ஞானோபதேசம் பெற்றதால் ஞானத்தலம் எனப் பெயர் கொண்ட தலம்,

"மேதகைய பயன் விழைவோர் ஞானத் தலத்துறை குவது மேவாதாயின்
ஓதுக அத்தலப் பெயரை யாங்கதுவு முற்றாதேல் உரைப்பக் கேட்க
காதலொடு கேட்ட வரும் மூவகைப் பாதகமுங் கடந்து மேலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதமுணர்ந் தெம்மடியிற் புக்கிருப்பரிஃ துண்மை பொலங்கொம்பன்னாய்:"

என்று இறைவனே சொன்னதாகப் பேசுகின்றது கச்சியப்ப முனிவர் இயற்றிய திருவானைக்காத் தலபுராணம். பஞ்ச பூதத் தலங்களில் அப்புத் (நீர்த்) தலம். ஜம்பு முனிவர் வெண்ணாவல் மரமாக மாற, வெண்ணாவல் மரத்தடியில் இருந்த சிவலிங்கத்தை (ஜம்பு கேஸ்வரரை) யானையும், சிலந்தியும் வழிபட்டு வருங்கால், தம்முள் பிணக்குற்று இறந்துபோக யானை நேராக முத்தியடைய, சிலந்தி கோச்செங்கட் சோழ மன்னன் ஆகப் பிறந்து சிவத் தொண்டு பல ஆற்றி முத்தி பெற்ற சிறப்புடைய தலம். உச்சிக்காலப் பூசைச் சிறப்பு பெற்றதலம். மூவர் பாடல் பெற்ற தலம், சிவபெருமானே சித்தராக வந்து, "திருநீறிட்டான் மதில்" என்னும் ஐந்தாப் பிரகாரப் பெருமதிலை, திருநீற்றைக் கூலியாகக் கொடுத்து கட்டுவித்த சிறப்புப் பெற்ற தலம். இராவணனின் தம்பி, முன்னவனுக்கும் பின்னவனுக்கும் அறமுரைத்த நல்லவன், நடுவன், குலமானத்துக்காகவும், செஞ்சோற்றுக் கடனுக்காகவும் அறநெறி பிழைத்த அண்ணனுக்காகச் சண்டை செய்து அவனுக்கு முன் இராமர் கையால் கொல்லப்பட்ட கும்பகர்ணன் கொலையால், ஏற்பட்ட ஹத்தி தோஷங்கள் நீங்க இராமபிரான் இராமதீர்த்தமும் லிங்கப் பிரதிஷ்டையும் செய்த தலம்.

11. **திருவண்ணாமலை** - நினைக்க முத்தி தரும் நடுநாட்டுத்தலம். திருமாலும் பிரமனும் தம்முளே தருக்குற்றுத் தம்முட் பெரியவர் யாரென்று போட்டியிட்டு அனற் பிழம்பாக நின்ற சிவபெருமானின் அடியையும் முடியையும் காண முடியாத வராகி அயர்வுற்ற பொழுது சிவன் தோன்றி அருள் செய்த தலம். அண்ணாத (எட்டாத) மலை அண்ணாமலை, மலையே சிவத்திருமேனியாக இருப்பதால் கிரிவலம் கருவறையைச் சுற்றிவருவது போன்ற சிறப்புப்பெற்ற தலம். கார்த்திகைத் தீபச் சிறப்பு, கிரிவலச் சிறப்பு பெற்ற தலம். அருணகிரியார் அற்புதங்கள் பல முருகன் அருள் கொண்டு நிகழ்த்திய தலம். நெருப்புத்தலம். ஞானத் தபோதனரை வாவென்று அழைக்கும் தலம். திருவெம்பாவை, திருவம்மானை பாடப்பட்ட தலம்.

12. **காஞ்சிபுரம்** - (கச்சியேகம்பம்) வசிக்க முத்தி தரும் தலம். சக்தியம்சம் கூடிய பிருதிவித் தலம். காஞ்சி மாவடியில் காமாட்சி அம்பாள் "தழுவக் குழைந்த கம்பர்" சிவலிங்க வழிபாடு செய்த தலம். கச்சியப்பர் கந்தபுராணம் பாடிய குமர கோட்டம் இங்கு உண்டு. காப்புச் செய்யுளில் - திகடசக்கரம் = திகழ் + தசக்கரம் என்னும் புணர்ச்சிக்கு இலக்கணங்கூற, முருகப் பெருமானே வீர சோழிய இலக்கண நூலொடு புலவராக வந்து கச்சியப்பருக்கு சிறப்பையும் வெற்றியையும் பெற்றுத்தந்த அற்புதத்தலம், கண்ணிழந்த சுந்தரர்" "ஆலந் தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உகந்து" பதிகம் பாடி இடக்கண் பெற்ற தலம். சிறப்பு மிக்க காஞ்சிமா தல விருட்சம். ஏழு தேவாரத் திருமுறைகளிலும் பாடல் பெற்ற தலம்.

13. **சிதம்பரம்** - (கோயில்) தரிசிக்க முத்தி தரும் தலம். தில்லை, புலியூர் மறுபெயர்கள். ஆகாயத் தலம். ஆடல் வல்லான் நடராசப் பெருமான் பஞ்சாக்கர ரூபமாக எழுந்தருளி, பஞ்ச கிருத்தியங்களையும் நிகழ்த்துகின்ற சிற்சபையும், கனக சபையிலிருந்து சிற்சபைக்கு ஏறுவதற்கு 5 படிகள், பஞ்சாக்ஷரப் படிகள், பஞ்சாக்ஷர ஜபத்தின் மூலம் இறைவனை அடையலாம் என்பதையும் உணர்த்தி நிற்கும் தலம். 14 மெய்கண்ட சாத்திர நூல்களுள் ஒன்றான திருக்கடவூர் உய்ய வந்த தேவர் இயற்றிய நூல் இப்பஞ்சாக்கரப்படியொன்றில் வைக்கப்பட்ட பொழுது படியின் இருபுற முள்ள கல்யானைகளில் ஒன்று தன் தும்பிக்கையால் நூல் சுவடியை எடுத்துத் தில்லைக் கூத்தன், திருவடியில் சேர்த்த அற்புத்ததால் அந்நூல் "திருக்களிற்றுப் படியார்" எனப் பெயர் பெற்றது. சிற்சபையின் கூரை 21600 தங்க ஓடுகளால்
(நிமிடம் 15 மூச்சு எடுக்கிறோம். ஒரு நாளைக்குளடுக்கும் மூச்சின் எண்ணிக்கை = 15X60X24= 21600) ஆனது.

"பாலுண்குழவி பசுங்குடர் பொறாதென, நோயுண்மருந்து தாயுண்டாங்கு" எனக் குமரகுருபரர் கூறியவாறு நம்பொருட்டு அன்னை சிவகாம சுந்தரி தரிசிக்கக் கூத்தப் பிரான் "எடுத்த பொற் பாதமும் காணப் பெற்றால் இம் மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்தமாநிலத்தே" என்பதன் மூலம் ஆடலைத் தரிசிப்பதே பிறவிப்பயன் என அப்பர் வலியுறுத்தி உள்ளார். பொற் கூரைக்குள்ளிருப்பவன் உயிருக்குயிராய் இருந்து இதயப் பெருவெளியில் நட்டம் புரிபவன். சேக்கிழார் பெருமானுக்கு 'உலகெலாம்' என்று திருத்தொண்டர் புராணம் பாட அடியெடுத்துக் கொடுத்து, புராணத்தைப் பாடச் செய்து அநபாய சோழனைக் கொண்டு அரங்கேற்றச்செய்து சைவம்வளர்த்ததும் கூத்தப் பிரான் திருவருளே. தில்லை வனமாயிருந்த காலத்தில் வியாக்கிரபாத முனிவர் வழிபட்ட தலம். கயிலையில் சுந்தரர் வருகையையும் வரலாற்றையும் உரைத்தவரும் கண்ண னுக்குத் திருவடி தீட்சை அளித்து பஞ்சாக்கர உபதேசம் செய்தவருமான உபமன்பு முனிவர், பாலகனாய் இருக்கையில் பாலுக்கு அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான் இத்தலத்துக் கூத்தப்பிரான்.

மாணிக்கவாசகரைக் கொண்டு ஈழநாட்டுப் புத்தர்களை வாதில் வென்று ஊமைப் பெண்ணைப் பேச வைத்துத் "திருச் சாழல் பாடல்கள் பெற்றதோடு "பாவை பாடிய வாயால் கோவை பாடு" என்று வேண்டி, அவர் பாடும் பொழுது "அழகிய சிற்றம்பலவனே" ஏடும் எழுந்தாணியும் கொண்டு எழுதிய சிறப்புப் பெற்ற தலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேந்தனார், மார்கழித் திருவாதிரையில் ஓடாது தடைப்பட்ட தேரைத் திருப் பல்லாண்டு பாடி ஓடுவித்ததும், அவர் நிவேதித்த களியமுதை உண்டு தன் மேனியில் காட்டியதும் கூத்தப்பிரான் அடியார்க்கு எளியன் என உணர்த்தி நிற்கும், மற்ற எட்டுத் திருவிசைப்பா ஆசிரியர்களும் உருகி அனுபவித்துப் பாடிய திருவிசைப்பாப் பதிகங்கள் பெற்றவன் இந்த ஆடல்வல்லான்.

கொடி ஏற்றமாகாதபோது நான்கு பாடல் கொண்ட 'கொடிக்கவி'யை கொற்றவன் குடி உமாபதி சிவாச்சாரியாரை வரவழைத்துப் பாடுவித்த போது, கொடி ஏறியதாலும், அவருக்குச் சீட்டெழுதி அனுப்பிப் "பெற்றான் சாம்பான்" என்னும் ஆதி திராவிடனுக்கு முத்தியளிப்பித்ததாலும் அவர் பெருமையை உணராது வெறுத்து ஒதுக்கிய, தில்லை வாழந்தணர்க்குஅவர் பெருமையை உணர்த்தியதும் கூத்தப்பிரான் திருவிளை யாடலே. மாணிக்கவாசகரும் பல நாயன் மாரும் இறைவனுடன் ஐக்கியமான திருத்தலம். நமபியாண்டார் நம்பிக்குத் திருமுறைக்ள் சேமிக்கப்பட்ட அறையைக் காட்டியும் அருளியும், திருமுறைகண்ட சோழனுக்கு திருமுறைகளையும் சைவ மெய்ந் நெறி யையும் மண்ணில் என்றும் நிலைக்கச் செய்ததுவும் ஆடல் வல்லான் நிகழ்த்திய அற்புதமே. அர்த்த சாமப் பூசைச் சிறப்புப் பெற்ற தலம். பஞ்ச பாசுரம் (தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப் பல்லாண்டு, திருப்புராணம்) பெற்ற தலம்.

**14. திருவாலவாய்** - (மதுரை) கேட்க, கூற முத்தி தரும் இக் கூடல் நகரம். பாண்டிய நாட்டுத் தலைநகர். சிவபெருமான் 64 திரு விளையாடல் புரிந்த தலம். அங்கயற் கண்ணியார் தடாதகைப் பிராட்டியார் என்னும் பெயர் தாங்கி, மலையத்துவசன் மகளாக வளர்ந்து அரசு பெற்று சோமசுந்தரராக வந்த சிவபெருமானைத் திருமணம் செய்துகொண்டு அரசு வீற்றிருந்த தலம். திருஞானசம்பந்தர் சுரவாதம், அனல்வாதம், புனல்வாதம் செய்து சமணர்களை வென்று சைவத்தின் புகழையும் திருநீற்றின் சிறப்பையும் நிலை நாட்டியதலம். மூன்று தமிழ்ச்சங்கங்களும் திகழ்ந்த தலம். குமர குருபரர் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்பாடி மீனாட்சி கையால் மாலையிடப்பட்டு அருள் பெற்ற தலம். மாணிக்கவாசகர் நின்ற சீர் நெடுமாறன், குலச்சிறையார், மங்கையர்க் கரசியார், நக்கீரர் வாழ்வில் பெரும் சோதனைகளும் இறைவன் அருளால் சாதனைகளும் நிகழ்ந்த அற்புதப்பதி. வெள்ளியம்பலம் உள்ளதலம். இரவுப் பூசைச் சிறப்புப் பெற்ற தலம். இராஜசேகர பாண்டியனுக்காக இறைவன் கால் மாறி ஆடிய தலம். வாதவூரருக்காக "நரியைக் குதிரைப் பரியாக்கி... பெரிய தென்னன் மதுரை எல்லாம் பிச்சதேற்றும்" திருவிளை யாடலும், "மண் சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்ட" திருவிளை யாடலும் வாதவூரர் பெருமை யை உலகறியச் செய்ய இறைவனே நிகழ்த்திய சிறப்புப் பெற்ற தலம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாகமங்களின் சாரம் சைவசித்தாந்தம்

சைவப்புலவர் : சு. துஷ்யந் BA, Dip.in.Edu,MA
மட்டக்களப்பு

"ஸித்தாந்தேன நிவேதிதம்" (காமிகம் 1.10)

சிவாகமங்கள் சிவவழிபாட்டு இலக்கியங்கள் மாத்திரமன்றி சிவதத்துவமான சைவ சித்தாந்தத்தின் பிரமாண நூலும் ஆகும். சந்தான குரவர்களுள் முதல்வராகக் கருதப்படும் மெய்கண்ட தேவநாயனார் சைவசித்தாந்தத்தை மேம்பட நிலை நிறுத்தியவர். முதல் முதலில் ஆகமத்தின் வித்தியாபாத பொருள்மரபின் சாராம்சங்களை சைவத் தமிழில் சைவசித்தாந்த அமிர்தமாக சிவஞானபோதம் எனும் நூலாக கடைந் தெடுத்தவர் அவரேயாவார். சிவாகமங்களைத் திருமேனியாக உடைய சிவனுக்கு நிவேதனப் பொருளாகக் கொள்வது அச் சிவாகமங்களின் ஞானபதப் பொருளாகிய சித்தாந்தமேயாகும்.

"சைவசித்தாந்தம்" என்ற பெயர், சிவாகமங்களுக்கும், சைவசித்தாந்தத்திற்கும் உள்ள தொடர்பினை உறுதி செய்கின்றது. "சைவ", "சித்தாந்த" என இரண்டு சொற்களைக் கொண்ட ஒரே தொகைச் சொற்றொடராகும். அவற்றுள் "சைவ" என்பது பெயர் விகுதி பெற்ற சொல்லாகும். "சித்தாந்த" என்பது தொகைச் சொற்றொடராகும். எனவே, பெயர் விகுதி பெற்ற சொல் மற்றும் தொகைச் சொற்றொடர் ஆகிய இரண்டினையும் உள்ளடக்கிய தொகைச் சொற்றொடரே "சைவசித்தாந்தம்" என்பதாகும். சித்தாந்தம் எனும் சொல்லுக்கு "முடிந்த முடிவு" என்றே பொருள் கூறுவர். எந்த ஒன்றினைப் பரீட்சகர்கள் பல விதங்களில் பரீட்சித்து பல்வேறு காரணங்களால் சாதித்து, நிலைநிறுத்து கிறார்களோ. அந்த நிர்ணயத்திற்கு, முடிவிற்கு "சித்தாந்தம்" என்று சரகர் என்பவர் கூறுகின்றார்.

சிவாகமங்களுக்குப் பல பெயர்கள் இருக்கின்றன. அவற்றுள் "சித்தாந்தம்" என்பதும் ஒன்று. சிவபெருமானே ஆப்தர், அவர் அருளிய "ஸித்தாந்தமே" ஆப்த வாக்கியமாக, ப்ரமாணமாக அமையும் என அகோரசிவாசார்யர் பத்ததி நூல் குறிப்பிடு கின்றது. சைவமதத்திலுள்ள சிவபேதம் 10, உருத்திரபேதம் 18 என்னும் சிவாகமங்கள் 28உம் சைவசித்தாந்தம் என்பது "பிறநூல் திகழ் பூர்வம், சிவாகமங்கள் சித்தாந்தமாகும்" என்று கூறுவது அருள்நந்தி சிவாசாரியாரின் திருவாக்கு. "ஸித்தாந்தம்' சிவாகமங்களின் காரண இடுகுறிப் பெயர் என்பதை "ஸித்தாந்த, மந்த்ரதந்த்ரம்ஸ்யாத்" எனும் காமிக ஆகம வசனங்களிலும் தெளிவுறக் காணலாம்.

இனி சிவாகமங்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் எங்கு உளது என்பதை இரத்தினச் சுருக்கமாக நோக்குவோம். ஆகமங்கள் நான்குபாத நெறிகளால் ஆக்கப்பட்டவை. அவற்றுள் ஞானாபாதமே சைவசித்தாந்த நெறியைப் போதிக்கின்றது. இன்று கிடைக்கும் ஆகமங்களுள் சுப்பிரபேதம். கிரணம், மகுடம், இரௌராகமம், சுவாயம்புவம் ஆகிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களில் மட்டுமே ஞானாபாதம் கிட்டியுள்ளன. மேலும் வேறுசில ஆகமாங் களான பௌஷ்கரம், மிருகேந்திரம், மதங்க பாரமேஸ்வரம் முதலான உபாகமங்களிலும் ஞானாபதம் கிடைத்துள்ளன. மேற்குறிப்பிட்ட அனைத்தின் ஞானாபாதத்திலும் பல பல படலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் இலக்கணங்கள், பசு பாசங்களில் நின்று நீங்குவதற்கான சாதனங்கள் அதன் பயனாக பசு அடைய வேண்டிய முக்திப் பேறு என்பன தனிச் சிறப்பாய் அமைந்து கிடக்கின்றன. அவற்றுள் கிரணாகமத்தின் ஞானாபாதம் அமைப்பைக் காட்டுவது இவ்விடத்தில் சாலப் பொருத்தமாகும். கிரணம் என்பது ஒளி. பசுவுக்கு ஞான ஒளியை ஊட்டுவதால் இப்பெயர் வரலானது. இது பன்னிரு படலங்களால் ஆனது அவை முறையே 1. பசுப்படலம், 2. மாயா படலம், 3. கன்மபடலம் 4. பதிப்படலம், 5. சக்தி நிபாதபடலம், 6. தீட்சா கன்ம படலம், 7. மந்திரபடலம், 8. புவனப்படலம், 9. சிவதத்துவ படலம், 10. சந்திராவதார படலம், 11. மாதிருகோற்பத்தி படலம், 12. மந்திரலோத்தார படலம் என்பனவாகும்.

இப் படல அமைப்புக்களை அடிப்படையாகக் கொண்டுதான் சாத்திர நூல்கள் 14லும் உருவாக்கம் பெற்றன. சிவஞான போதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் போன்ற சித்தாந்த நூல்கள், 12 சூத்திரங்களில் சைவசித்தாந்தக் கருத்துக்களை விரிவாக்கிச் சொல்வதை இத்தால் கவனத்தில் கொள்ள வேண்டும். அது போல திருவருட்பயனும் 10 அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இந்நூல் சைவசித்தாந்த நுட்பங்களைத் தெளிவாக குறளோவியமாக வரைந்திருப் பதையும் ஈண்டு கவனிக்கத்தக்கது.

இனி, சைவ சித்தாந்தச் சாத்திரத்தின் பொருளும் சிவாகமங்களையே மூலமாகக் கொண்டவை என்பதையும் நிரூபணமாக்க வேண்டும். 14 சாத்திர நூல்களை உள்ளடக்கிய சைவசித்தாந்தச் சாத்திரத்தினை தமிழில் மேம்பட விளங்க வைத்தவர் மெய்கண்டார் ஆவார். இவர் இயற்றிய நூலாகிய சிவஞான போதமானது, அதே சிவபெருமான் அருளிய 16வது மூல சிவாகமமாகிய ரௌரவாகமத்தின் 73 படலமாகிய பாசவிமோசனப் படலத்தில் வரும் துவாதஸ சூத்திரத்தைத் தழுவி, தமிழில் மொழி பெயர்க்கப்பட்டதாகும். சிவாகமத்தி லிருந்து சிவஞான போதம் 12 சூத்திரங்களை ஒத்தாற் போலவே மெய்கண்டதேவரும் சிவஞான போதத்தைப் பாடினார். அதாவது முப்பொருள் உண்மைக்கு சைவாகமங்களே முதற் பிரமாணம். அதனை அவ்வாறே புரிந்து கொள்ள உலகத்தவர்களால் முடியாது என்பதாலேயே, வாதங்களோடு, எடுத் துரைக்கவே அனுமானம் முதலிய பிரமாணங் களோடு "சிவஞானபோதம் இயற்றப்பட்டது என்பதனை கீழ்கண்ட பாடல்வரிகள் ஊர்ஜிதம் செய்கின்றன.

"எந்தை சனற்குமரன் ஏத்தித் தொழ இயல்பாய்
நந்தி உரைத்து அருளு ஞானநூல் - சிந்தை செய்து
தான் உரைத்தான் மெய்கண்டான் தாரணியார்
தாமுணர ஏது திருட்டாந்தத்தால் இன்று"

நூல்மரபு - சிவஞானபோதம்

எனவே சிவாகமங்களின் சாரம் சைவசித்தாந்தம் என்பது தெள்ளத் தெளிவாய்த் தெரிந்தாலும், சைவ சித்தாந்த சாஸ்த்திர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களில் விளக்கப்பட்டுள்ள விடயங்கள் அதுபோன்றே, சிவாகமங்களில் உள்ளதைக் கண்டால், "சிவாகமங்கள் மூலநூல்" என்பதும், சைவசித்தாந்த சாஸ்திரம், அதன் அரியதொரு உரைநூல் என்பதும் உள்ளங்கைக் கனி என விளங்கும். இவற்றைச் சற்று தெரிந்து கொள்ள சில உதாரணங்களை மட்டும் கருத்தில் கொள்வோமாக,

உண்மை விளக்க நூலில் மனவாசகம் கடந்த தேவர் நடராஜரின் ஆடல் முறைகளை கீழ்வருமாறு ஒரு பாடலில் காட்டுகின்றார்.

"தோற்றம் துடி அதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முக்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு"

இப்பாடல் உணர்த்துபவை உண்மையா. அல்லது கற்பனையா என்பதனை சிவாகமத்தின் மொழி பெயர்ப்பாய் வரும் கீழ்வரும் வரிகள் உண்மை என்று பறைசாற்றுகின்றன.

"டமரோ: ஜாயதே ஸ்ருஷ்டி, அபயாத்ஸ்திதி, உச்சுயதே அக்நே: துப்ரோக்த: ஸம்ஹார: திரோதானம் – து குஞ்சிதாத்
அநுக்ரஹோஹி ஊர்த்வபதம் க்ருதயம் பஞ்ச ஸபாபதே"

சிவஞான சித்தியாரின் சுபக்கப்பாடலொன்று சைவச்சாதனைகள் நான்கால், சங்கரனை அடையும் முறை அதன் மூலம் ஈட்டும் பேறு என்பனவற்றை கீழ்வரும் பாடலொன்றால் உணர்த்துகின்றது.

"சன்மார்க்கம். சகமார்க்கம், சத்புத்ரமார்க்கம்
தாசமார்க்கம் என்னும் சங்கரனை அடையும்
நன்மார்க்கம் நாலவைதாம் ஞானயோகம்
நற்கிரியா என நவிற்றுவதும் செய்வர்...."

இதுவும் காமிக ஆகமம் முன்னே உரைத்தவைதான் அது அவ்வாகமத்தில்

"ஸந்மார்கீ புத்திரமார்கீ சஸஹமார்கீ ததா அபர"
தாஸ மார்கீ, சதுர்தா ஏஷாம் க்ரமாத்..." என்று குறிப்பிடப்படுகின்றது.

அதுபோலவே

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத் தெய்வமாகி
ஆங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்....."

என, சிவஞான சித்தியார் சுபக்கத்தில் அருள்நந்தி சிவாசாரியார் கூறுவது, சொந்தக் கருத்தல்ல அது ஆகமங்களின் மறு மொழியே என்பதனை

"யேந யேந ஹி ரூபேண ஸாதக, ஸம்ஸ்மரேத் ஸதா
தஸ்ய தந்மயதாம் யாதி சிந்தாமணி"

எனும் ஆகம வாக்கியம் தெளிவு கூறுகின்றது. இவ்வாறு சிவாகமங்களின் வழிநின்றே சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கும் சைவசித்தாந்தக் கருத்துக்களைப் போதிக்கின்றன என்பது தெள்ளத் தெளிவாகின்றது.

சுருங்கக் கூறின் "சிவாகமங்களின் சாரமே சைவசித்தாந்தம்" என்பது புலனாகின்றது. சிவாகமங்களையும், சைவசித்தாந்தத்தையும் அருளியவர் ஒருவரே என்பதனால் இரண்டிற்கும் தத்துவ நிலையில் பேதம் இருக்காது. இருப்பினும் வடமொழி மரபிற்கும், தமிழ் மொழி மரபிற்கும் இந்து தத்துவ உலகில் ஒர் பாலத்தை அமைத்துக் கொடுத்திருக் கின்றது. சிவாகமங்களும், சைவ சித்தாந்தமும் சிவனுக்கு உவப்பான நிவேதனங்களாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் தேவாரமும் முதல் சூத்திரமும்

சைவப்புலவர் கலாபூஷணம் சு. செல்லத்துரை

சைவத்திருமுறைகள் பன்னிரண்டு, சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதின்னான்கு, இவை சைவ சமயத்தவர்க்கு இரு கண்கள் போன்றவை.

திருமுறைகள் சைவத்திற்கு இலக்கியங் களாகவும், சித்தாந்த சாத்திரங்கள் சைவத்திற்கு இலக்கணங்களாகவும் அமைந்துள்ளன.

இலக்கியம் காலத்தால் முந்தியது, அதன் விழியாகிய இலக்கணம் காலத்தால் பிந்தியது. இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் வகுத்தலே வழக்கு.

பன்னிரு திருமுறைகளும் கி.பி. 12ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை, திருமுறை களின் சாரமான சைவசித்தாந்த சாத்திரங்கள் கி.பி. 13ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவை.

வேத உப நிடதங்களில் உள்ள சைவ சித்தாந்தக் கருத்துக்கள், சைவாகமங்களில் விளக்கம் பெற்றுப் பின் தமிழில் பன்னிரு திரு முறைகளில் விரிந்து, சித்தாந்த சாத்திரங்களில் தெளிவு பெற்றுள்ளன. இவ்வுண்மையை,

"வேதம்பசு, அதன்பால் மெய்யாகமம், நால்வர்
ஓதும்தமிழ் அதனின் உள்ளுறுநெய் - போதமிகு
நெய்யின் உறுசுவையாம், நீள் வெண்ணெய்"
மெய்கண்டர் செய்த தமிழ் நூலின் திறம்.

எனும் பழம் பாடல் இனிதே விளக்கு கின்றது.

வேதம் பசுவாகவும் ஆகமம் அதன் பாலாகவும், திருமுறைகள் நெய்யாகவும் சித்தாந்த சாத்திரங்கள் நெய்யின் சுவையாகவும் இங்கு உவமை மூலம் சொல்லப்பட்டிருத்தல் நயத்தலுக்குரியது.

சித்தாந்த சாத்திங்களில் முதன்மையானது மெய்கண்ட தேவ நாயனாரால் செய்யப் பெற்ற சிவஞான போதமாகும். இது பன்னிரண்டு சூத்திரங்களை உடையது. சைவத் திருமுறை களும் பன்னிரண்டாகும்.

பன்னிரு திருமுறைகளிலும் உள்ள சைவசித்தாந்த உண்மைகளே பன்னிரு சூத்திரங்களாக முறையே சொல்லப்பட்டு உள்ளன என்பதை அறிஞர்கள் ஆராய்ந் துள்ளனர்.

நாம் இங்கு அத்தனையையும் விரிக்கிற் பெருகுமாதலால் உதாரணத்திற்கு சிவஞான போத முதற் சூத்திரத்தையும் முதலாம் திருமுறையின் முதல் தேவாரத்தையும் காண்போம். திருமுறைகளின் சாரமாகச் சொல்லப்பட்ட சைவசித்தாந்தக் கோட்பாடு களைத் திருமுறைகளில் விரிவாகவும் விளக்கமாகவும் காணலாம், என்பதற்கு இது எடுத்துக் காட்டாக அமையும்.

எமது பொறி புலன்களாகிய அறிகருவி களால் அறியக்கூடிய அனைத்தும் தோன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று அழியக் கூடியன. ஆதியும் அந்தமும் உள்ள அநித்தியப் பொருட்களே இப்பிரபஞ்சம் எல்லாம்.

அறிகருவிகளுக்கு அப்பாற்பட்டு, அநுபூதிமான்களாகிய ஞானிகளால் அகக்காட்சியில் உணரப்பட்டவையே மெய்ப்பொருள்கள் ஆகும். அவை அநாதியான, என்றும் உள்ள பொருள்கள் ஆகும். அவையே உள் பொருள்கள்.

பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களும் அநாதியான, என்றும் உள்ள பொருள்கள். பதியாகியகடவுள் ஒருவன் பசுக்களாகிய ஆன்மாக்கள் எண்ணில்லாதன.

பதியும் பசுக்களும் அநாதியானவையாயிருந்தாலும் பசுக்கள் அறியவோ அடையவோ, முடியாதபடி அநாதியான பாசம் (மலம்) பசுக்களைப் பந்தித்துள்ளது.

பசுக்கள் பாசத்தில் நின்றும் விடுபடுவதற்கு ஏதுவாக அவைகள் வினைகளைச் செய்வதற்கு இறைவன் தனுகரண, புவன போகங்களைக் கொடுத்துள்ளான்.

பசுக்கள் ஆகிய ஆன்மாக்களின் மலபந்தம் நீங்கும் வரை தனுகரண புவன போகங்களைப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் பதியாகிய இறைவன் செய்து கொண்டே இருப்பார். அவர் ஐந்தொழிலுக்கு உட்படுவதில்லை.

ஆன்மாக்கள் மீது கொண்ட கருணையால் அவற்றின் மலமாசு நீங்கும் வரை யுகங்கள் தோறும் ஐந்தொழில்களையும் பதிசெய்து கொண்டே இருப்பார்.

இவ்வுண்மையை சிவஞான போதத்தின் முதலாம் சூத்திரம்.

அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்.
எனக் கூறுகின்றது. இதன் பொருள்,

அவன் அவள் அது எனச் சுட்டி அறியப்படும் இவ்வுலகம் தோன்றல், நிலைத்தல், ஒடுங்குதல் ஆகிய முத்தொழிலுக்கு உட்படுகிறது.

ஆதலால் இவ்வுலகைத் தோற்றுவித்தற்கும் நிலைபெறச் செய்வதற்கும், ஒடுக்குவதற்கும் இவற்றுக்கு அப்பாற்பட்ட ஒருவன் வேண்டும். அவனே பதி.

ஒடுக்கம் ஆகிய முடிவை (அந்தம்) செய்பவனே உலகிற்கு (ஆதி) முதற்கடவுள் ஆவார். அவரே உலகத்திற்குக் கருத்தாவாகிய சிவபெருமான். அவரே முதலும் ஈறும் ஆவார். ஆன்மாக்களின் மலபந்தம் நீங்கும் வரை முத்தொழிலை நிகழ்த்திக் கொண்டிருப்பார்.

இனி, இப்பொருள் பன்னிரு திருமுறையின் முதற் பாடலாகிய தோடுடைய செவியன் எனத் தொடங்கும் தேவாரத்தில் விளக்கமாயிருப்பதைக் காணலாம். அத்தேவாராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தோடுடைய செவியன், விடை ஏறி, ஓர்தூ வெண்மதிசூடி
காடுடைய சுடலைப் பொடிபூசி, என்னுள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான், முனைநாட்பணிந்தேத்த, அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம், மேவிய பெம்மான் இவன், அன்றே"

என்பதாகும்.

திருப்பிரமபுரம் ஆகிய சீர்காழியில், தந்தையார் நீராடும் போது அவரைக் காணவில்லை என அழுத ஞானசம்பந்தக் குழந்தைக்குச் சிவபெருமான் அம்மையப் பராகக் காட்சி கொடுத்து, உமாதேவியார் மூலம் பொற்கிண்ணத்தில் ஞானப்பாலை ஊட்டி மறைந்தனர்.

தந்தையார் வந்துபார்த்த போது குழந்தை யின் வாயில்பால் வடிந்திருப்பதைக் கண்டு உனக்குப் பால் தந்தவர் யார் என்று கேட்க, ஞானசம்பந்தர் சொன்ன பதிலே இத்தேவாரம்.

இத்தேவாரம் தரும் சைவசித்தாந்த உட்பொருள் சிவஞான போதத்தில் முத்தொழி லாகச் சொல்லப்பட்டதே. இங்கு ஐந்தொழிலாக விரித்துரைகப்பட்டிருப்பதைக் காணலாம்.

தோடுடைய செவியன் என்பதனால் உலகத் தோற்றத்திற்கு மூலமாகிய அருள் வெளிப் பாட்டைக் குறித்தார். இது படைப்பைப் புலப்படுத்தியது. ஓம் எனும் பிரணவமே தோற்றத்திற்கு முதற் காரணம்.

விடை ஏறுதலும், மதி சூடுதலும் அறம், மறம் உடையாருக்கு முறையே இன்ப துன்ப நுகர்ச்சியைத் தந்து பாதுகாக்கும் காத்தல் தொழிலைப் புலப்படுத்தும்.

சுடலைப் பொடி பூசுதல் என்பது பிரளய காலத்தில் உலகம் எல்லாம் அழிந்து சாம்பராகி ஒடுங்கிவிடப், பதி ஒருவரே அச்சாம்பரைப் பூசி நிற்பார் என்பது சங்காரமாகிய அழித்தலைப் புலப்படுத்தும்.

உள்ளம் கவர் கள்வன் என்பது மறைத் தலாகிய திரோதானத்தைப் புலப்படுத்தும்.

ஏத்த அருள் செய்த என்பது அருளால் ஆகிய அனுக்கிரகத்தைப் புலப்படுத்தும். இதனால் "தோற்றிய திதியே ஒடுங்கி" எனும் முத் தொழிலும் ஐந்தொழிலாக விளக்கம் பெற்று ஆன்மாக்கள் மலமாசு நீங்கிப் பதியின் அருள் பெற்று வீடுபேறடைதலைப் புலப்பட வைத்தலை அறியலாம்.

இனி, **தோடுடைய செவியன்** என்பது - பதியாகிய இறைவன் சக்தியும் சிவமுமாக - அம்மை அப்பராக - அர்த்தநாரீஸ்வரராக இருப்பதை உணர்த்துகிறது. அம்மைக்குரிய பக்கமான தோடுடைய செவி சக்தியையும், ஆண்பால் அன்விகுதி பெற்ற செவியன் என்பது சிவத்தையும் குறிக்கும்.

அது மட்டுமன்றி மலமாசு நீங்கிய ஆன்மா முதலிற் காண்பது சக்தியாகிய திருவருளை என்பதும், (சத்தி நிபாதம்) திருவருள் கைகூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்துச் சிவப் பேறு முத்தி சித்திக்கும் என்பதும் மலமாசு நீங்கிய பக்குவ ஆன்மாவாகிய திருஞான சம்பந்தப் பெருமானுடைய அநுபூதி வாக்காக முதல் தேவாரம் அமைந்திருப்பது எண்ணி எண்ணி இன்புறத்தக்கது.

**ஏடுடையமலரான்** என்பது இதழ்களை யுடைய தாமரைமலரில் இருக்கும் பிரமனைக் குறிக்கும். முனை நாட்பணிந்தேத்த அருள் செய்த என்பது சர்வசங்கார காலத்தின் பின் மீண்டும் உலகத்தைப் படைப்பதற்காகப் பிரமனைத் தோற்றுவிக்கப் பிரமன்தான் செய்வது எதுவென வேண்டித் தொழ அவனுக்குப் படைத்தல் தொழிலைச் செய்ய அருள் பாலித்த செயலைக் குறிக்கும்.

**பீடுடைய பிரமாபுரம்** என்பது சர்வசங்கார காலத்தில் தோணியாகி (தோணிபுரம்) நின்றதலமே மீண்டும் படைப்புக் காலத்தில் பிரமனால் வழிபடப் பட்டமையால் பிரமபுரம் எனப்பட்டது. சிவபெருமானின் அருள் விளக்கம் பெருமையுடையதால் பீடுடைய எனப்பட்டது.

சர்வசங்கார காலத்தில் அழியாது தோணியாகி நின்ற இறுதி இடமே படைப்புக்கு முதலிடமாயிற்று **"அந்தம் ஆதி என்மனார் புலவர்"** எனும் சிவஞான போதத்திற்கு இது இலக்கியமாகும் அருமைப்பாடு வியக்கத்தக்க தாகும்.

**உலகின் தோற்றத்திற்கு மூலமான அருளை இறைவன் வழங்கிய இடமே பிரமபுரம். அத்தலமே தமிழ் மறையாகிய தேவாரம் தொடங்குவதற்கும் முதல் இடமானது.**

**இறைவனின் திருவருட் சக்தி துணைக் கொண்டு வேதத்தை நான்முகன் எப்போதும் ஓதிப்பணிபுரியும் பிரமாபுரத்தில் தமிழ் வேதமாகிய தேவாரத்தைப் பாடிப் பணிபுரியும் திருஞான சம்பந்தப் பெருமான் ஞானப் பாலுண்டு அருள் பெற்ற சித்தாந்த ஞானச் செய்தி விளக்கம் உவக்கத்தக்கது.**

## சிவபெருமான் நடராசராக நடம்புரியும் ஐந்து சபைகள்

| | | |
|---|---|---|
| 1. சிதம்பரம் | - பொன்னம்பலம் | - கனகசபை |
| 2. மதுரை | - வெள்ளியம்பலம் | - வெள்ளிச்சபை |
| 3. திருவாலங்காடு | - மணியம்பலம் | - இரத்னசபை |
| 4. திருநெல்வேலி | - செப்பு அம்பலம் | - தாமிரசபை |
| 5. திருக்குற்றாலம் | - சித்ர அம்பலம் | - சித்ரசபை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராசப் பெருமானின் ஆடல் உணர்த்தும் தத்துவம்

**சைவப்புலவர் சா. தில்லைநாதன்** BA, Dip.in.Edu,MA
ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர், மட்டக்களப்பு

நடராச வடிவம் சிற்பம் ,இசை, நாட்டியம் போன்ற கலைகளின் பிறப்பிடமாகவும் இருப்பிடமாகவும் விளங்குகின்றது. நடராச வடிவத்தில் இப்பல்வேறு கலைகள் எம்புலக் காட்சிக்குத் தென்பட்டபோதிலும் கண்முதற் புலனால் காண்டற்கரிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீது காட்டுகின்ற அளவிறந்த கருணையினைக் குறிகாட்டி நிற்கும் மெய்ஞானத் திருவுருவேயாகும். இத்திரு நடனம் பதஞ்சலி வியாக்கிரபாதர் என்னும் இருமுனிவர்களுக்காகச் சிவபிரான் தை மாதத்தில் பூரணையும் பூச நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய நன்நாளில் நடராசர் வடிவமதாய் திருநடனம் புரிந்ததாபச் சைவசமய சாத்திர நூல்கள் தெரியப்படுத்துகின்றன.

திருச்சிற்றம்பலத்தில் இறைவன் சக்தியாகிய இயற்கையோடு கூடி அறிவால் அறியப்பெறும் மந்திர வடிவைத் தாங்கியுள்ளார். மந்திரங் களின் ஒலி சக்தி அதன் பொருள் சிவம். இவை இரண்டும் கூடிய வடிவே சிவத்திருமேனி ஒலியும் பொருளும் போல சிவசக்தி பிரிக்க முடியாதன. இத்தகைய பின்னமிலா நிலையிலுள்ள சிவன் கலையால் வளைந்து இருபத்தைந்து வடிவங்கள் அறுபத்து நான்கு வடிவங்கள் ஆயிரம் ஆயிரம் வடிவங்களாக ஆன்மாக்களுக்குக் காட்சி கொடுக்கிறார். அவற்றுள் ஒன்றே நடராசத் திருவுரு.

சிவபிரான் ஆன்மாக்களது பக்குவ நிலைக்கேற்ப தனித்தனியே நின்று ஐந்து தொழில்களையும் இயற்றுகின்றார். ஒருமித்து நின்றும் ஆடுகின்றார். காளிகா தாண்டவமாடி ஆக்கற் தொழிலையும் கௌரி தாண்டவமாடி காத்தற் தொழிலையும் சங்கர தாண்டவமாடி அழித்தற் தொழிலையும் திரிபுர தாண்டவமாடி மறைத்தற் தொழிலையும் ஊர்த்துவ தாண்டவமாடி அருளற் தொழிலையும் செய்கின்றார். இவ்வைந்து தாண்டவங்களும் தனித்தனியாக ஒவ்வொரு தொழிலையும் செய்கிறது. இதனை உண்மை விளக்கம்

"தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முத்தி
நான்ற மலர்ப் பதத்தே நாடு."

(பாடல் 36) எனக் கூறுகிறது.

இறைவன் உயிர்களுக்காக உலகைப் படைக்கவேண்டும் என்னும் திருவுளத்தோடு பரமானந்தத் தாண்டவத்தை ஆடத் தொடங்கினார். அவரது உடுக்கையிலிருந்து பதினான்கு வகையான ஒலிகள் பிறந்தன. எழுத்துக்களுக்கெல்லாம் பிறப்பிடம் அவ்வொலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களே. ஒலி ஆகாயத்தின் காரியம். உடுக்கையினின்று முதலொலியும் அதன்வழி மொழிகளும் படைக்கப்பெற்றன. இக்கருத்தை வலியுறுத்த இலக்கண விளக்கச் சூறாவளி "மொழி முதற் காரணமாம் நாதகாரிய ஒலி எழுத்து" எனக் கூறுகிறது.

சிவபிரான் படைத்தற் தொழிலைப் புரிகிறார் என்பதை உடுக்கையில் சிகரமும், ஆன்மாக்களைக் காக்கும் நிலையை அபயகரமாகிய யகரமும், மாயமலாதிகளை நீக்குவதை அக்கினியாகிய நகரமும், ஆன்மாக்களுக்குத் திருவருள் புரிவதை வீசுகரமாகிய வகரமும், மலத்தினது இயல்பை அடக்கியாள்வதை முயலகனாகிய மகரமும் உணர்த்துவதாக உண்மை விளக்கம் பின்வருமாறு கூறுகிறது.

"சேர்க்கும் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் - பார்க்கிலிறைக்(கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகளார்
தங்கும் மகரமது தான்."

(பாடல் 34)

இவ்வாறு திருவைந்தெழுத்து பொருந்திய நடராசாப் பெருமான் ஓங்காரமாகிய திருவாசியின் நடுவே திருநடனம் புரிகிறார் என்பதை சித்தாந்த சாத்திரம் புலப்படுத்துகின்றது. "ஓங்காரமே நல் திருவாசி" என்பது உண்மை விளக்கப் பாடல். பிரணவம் இல்லாமல் திருவைந்தெழுத்தை செபிக்கக் கூடாது. அதேபோன்று திருவாசியில்லாத நடராசாத் திருவுருவத்தை தரிசித்தலோ வணங்குதலோ ஆகாது. திருவாசியின் மேல் விளங்கும் இருபத்தொரு அனற்கொழுந்துகள் ஒளியின் உருவங்கள். ஆதலால் ஒளியிடையிற் காணப்பெறும் ஒலியிடையில் ஐந்தெழுத்து வடிவான நடராசர் விளங்குகிறார். திருவாசியின் உள்பொருளும் இறைவன் பேரொளி வடிவான என்பதை உணர்த்தி நிற்கின்றன.

மேலும் கூறுகையில் நடராசருடைய ஊன்று திருப்பாதம் நகரம், வயிறு மகரம், தோல் சிகரம் முகம் வகரம், முடி யகரம். பாசத்தினாற் கட்டுண்டு கிடக்கும் உயிர்களுக்கு இறைவன் திருவடி நகரமாகிய திரோதான சக்தியாக நின்று, உயிர்களை தன்னிடத்தில் கூட்டி என்னையும் உன்னையும் அழியாமல் இதுவரை மறைந்திருந்த மாயத்தை பார்த்தாயா? என்று வயிற்றிலே மகரத்தைக் காட்டி எங்கும் பரவியிருப்பதே சிவமாகிய பரம்பொருளென உணருமாறு தோள்களாகிய சிகரத்தால் அறிவித்து, உபதேச வழங்கும் முகமாக வகரத்தை முகத்தில் காட்டி இங்ஙனம் அனுபம் முதிரப்பெற்ற ஆன்மா முடியாக விளங்கும் என்பதை திருநடனம் உணர்த்துகிறது.

**உடுக்கை:** நடராசருடைய ஒரு வலக்கரத்தில் உடுக்கை இருக்கிறது. இந்த உடுக்கையிலிருந்து ச, ப, என்னும் பிரகதி ஸ்வரங்கள் பிறந்தன. இவ்விரண்டில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரி, க, த, ம, நி என்னும் விக்ர திஸ்வரங்கள் தோன்றின. எல்லா ஸ்வரங்களும் (ஒலிகளும்) தோன்றுமிடம் உடுக்கை என்பது புலனாகிறது. எனவே உடுக்கை சிருஷ்டி நாதம் முழங்குகிறது ஒலியாகிய சத்தத்தில் இருந்து சகம் எழுந்தது. இது படைத்தலைக் காட்டுகிறது.

**அபயம் :** பிறவித் துன்பத்தில் கிடந்து வருந்தி ஓடிவந்த உயிர்களுக்கு அபயம் அளிக்கிறது. இந்த வலக்கரத்தை - அபயக்கரத்தை உண்மை விளக்கம் காத்தற் தொழிலை சுட்டுவதாக குறிப்பிடுகிறது.

**தீயகல் :** இடக்கையில் ஏந்தியிருக்கும் இத்தீயகல் நமது பாசங்களை அழிப்பது போல் உணர்த்துகிறது. இது அழிக்கும் செயலை குறிக்கிறது.

**கஜஹஸ்தம் (வீசுதிருக்கை):** நடராசருடைய இடக்கைகளில் ஒன்று திதிபதாகை முத்திரையோடு தூக்கிய திருவடியை குறித்து நிற்கிறது. இது பக்குவமுற்ற ஆன்மாக்களை தன்னருளால் ஆனந்த கடலாகிய தூக்கிய திருவடியில் அழுத்தி நிற்கின்றது.

**தூக்கிய திருவடி :** இது ஆன்மாவுக்கு பரம சாந்தியை கொடுக்கிறது. உள்வளைந்து, அடிக்கீழ் இருக்கும் உயிர்களுக்கு முத்தி யின்பத்தை வழங்குவது. இது அருளாற்றலை உணர்த்தி நிற்கின்றது.

ஊன்றிய திருவடி : இது ஆணவத்தின் முனைப்பை அழுந்த மிதிக்கிறது. இது மறைப்பாற்றலை உணர்த்துகிறது.

**முயலகன் :** இது ஆணவமலத்தின் அடையாளம் ஆணவத்தின் வலியொடுக்க சிவனாலன்றி வேறு எவராலும் முடியாது என்பதை எமது சமய நூல்கள் எடுத்துரைக் கின்றது. ஆணவத்தை அடக்கினால் அவ்வுயிர் வீடு பேறடையும் என்பதை ஊன்றிய திருவடியும் அதன் கீழ் கிடக்கும் முயலகனும் உணர்த்துகின்றன.

**கபாலமாலை :** இருபத்தொரு பிரம்ம கபாலங்களும் ஆதிவராகத்தின் கொம்பும் நடராசருடைய கழுத்தில் தரிக்கப்பட்டுள்ளன. சிவன் பிரம்ப கற்பங்களையும் ஆதிவராக கற்பங்களையும் கடந்தவன். அவனை மூலகாரணமானவன் என்பதை உணர்த்து கிறன.

**பாம்பணி :** பாம்பு நோன்பிகளுக்கு எடுத்துக்காட்டு காற்றை உணவாக கொண்டு வேறொன்றையும் உண்ணாது ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள இருக்கின்ற நிலையில் பாம்பு மிக சிறந்தது. இதனை அணியாக ஏற்ற சிவன் அன்பர்க்கு எளியன் என்பதை உணர்த்துகின்றன.

**தோடும் குழையும் :** இடக்காதில் தோடும் வலக்காதில் குழையும் காதணிகளாக விளங்குகின்றன. பெண்ணாகிய சக்தியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தமைந்த இவ்வுலகம் தனது உருவமே என்பதையும் உலகம் முழுவதும் தனது வடிவமே என்பதையும் படைப்பாற்றலையும் அழிவாற்றலையும் அடக்கியாளுகின்ற அருளாற்றலும் சிவசக்திகளின் தனித்தன்மை என்பதை உணர்த்துகின்றன.

**சிலம்பும் கழலும்:** உயிர்களின் வினை களை நீக்கி பிறப்பறுப்பதை உணர்த்துகின்றது. "கள்ளவினை வென்று பிறப்பறுக்க சாத்திய வீரக்கழல்" என்கிறது போற்றிப் பஃறொடை.

**முக்கண் :** அறிவுணர்ச்சியையும் பொருளு ணர்ச்சியும் ஊட்டவல்ல புறசோதிகளாகிய சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய முச்சுடர்களை மூன்று கண்களாக கொண்டும் சிவனாகிய நடராசர் விளங்குகிறார் என்பதை இது உணர்த்துகிறன.

**திருச்செவி :** சிவனது செவிகள் பிரணவ வடிவானது. உடுக்கை ஒலித்து அப்பரநாத ஒலியை வல செவியில் ஏற்று உலகை தோற்றுவித்துக் கொண்டும் இட செவி மானொளியை ஏற்று (அகங்கார உருவான உயிர்) உலகத்தை அளிக்கும் ஒலியை உண்டாக்கிக் கொண்டும் சிவன் விளங்குகிறார் என்பதையும் உணரச் செய்வதுடன் சிவனின் அருளாற்றலையும் குறித்துக் காட்டுகிறது.

சடைமுடி சிவன் ஆன்மாக்களுக்கு ஞானமூட்டும் தன்மையை உணர்த்துகிறது. இதனை "நுண்சிகை ஞானமாம்" எனக் கூறுகிறது திருமந்திரம்.

**குமிண்சிரிப்பு :** நடராசருடைய குமிண் சிரிப்பு ஆன்மாக்களினது இரு வினைகளையும் நீக்குகிறது. இரு வினைகளுக்கும் சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என்னும் உருவில் பயனூட்டுவன. சிவனது சிரிப்பு முப்புரங்களை தகனம் செய்தது. ஆதலால் சிவனின் சிரிப்பு மூன்று வினைகளையும் அழிப்பதை குறிக்கும். இதனை சிவதருமோத்திரம் "இடர் மூன்றும் இழித்தருளும் இளமுறுவல் முகமலரிலங்க" எனக் கூறுகிறது.

**பிறை:** சிவனது பிறைமதி ஆன்மாக்களுக்கு வினை கெடுத்து பேரானந்தத்தை கொடுக்கும் நிலையை உணர்த்துகிறது.

"தூமதிச் சடைமிசைச் சூடுதல் தூநெறி
யாமதி யான்என அமைத்த வாறே" என்கிறார் பட்டினத்தடிகள்.

சிவபிரானின் சடாபாரத்தில் உள்ள இளம்பிறை சிவனது அளவிலா ஞானத்தை தெரிவிப்பது என்றும் சிவனது கருணையினது அடையாளம் என்றும் சமய சாத்திர நூல்கள் கூறுகின்றது.

**கங்கை :** சிவனது சடாபாரத்தில் விளங்கும் கங்கை சிவனது எண்குணங்களுள் அளவிலாற்றலை உணர்த்துகின்றது. தங்கு தடையின்றி பெருகி கொண்டே இருக்கும் கங்கையை தனது மயிர்காலிற் கட்டவல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றதான கணக்கற்ற ஆற்றலை உடையவர் சிவபிரான் என்று உணர்த்துகிறது.

தலையிற் சூடிய பூவும் அறுகும் : சிவன் தலையில் எருக்கம் பூ, ஊமத்தம் பூ, அறுகு ஆகியவற்றைப் பூண்டுள்ளார். எருக்கு விளக்கத்தையும், ஊமத்தம் பூ விருப்பு வெறுப்பற்ற இயல்பினையும் அறுகு அறிவாற்றலையும் உணர்த்துகின்றன.

**கோவணம்** : உலகில் உள்ள அறுபத்துநான்கு கலைகளாலும் அறியப்படும் பரஞானக்கலையை நான்கு வேதங்களாகிற அரைஞானிற் கோர்த்து அணிந்திருக்கிறார் என்னும் தத்துவத்தை உணர்த்துகின்றது.

**பூணூல் :** இது சிவபிரானது திரு மார்ப்பில் குறுக்காத் தொங்குகிறது. தோளில் இருந்து தொப்புள் வரை தொங்குகிறது. இது குண்டலினி சக்தியைக் குறித்துணர்த்துகிறது.

**திருவெண்ணீறு** : தீயினால் குற்றமனைத்தம் நீக்கிய திருவெண்ணீறு போல ஆன்மாக்களும் தன்னை பிணித்துள்ள பாசங்களில் நீக்கம் பெறின் தூய பொருளாக விளங்கும் தன்மையையுடையன என்பதை உணர்த்துகிறது. சிவபிரான் திரு வெண்ணீற்றை அணிந்திருப்பது தானும் தன்னை சார்ந்த பொருளும் அனாதி நித்தியமானவை என்பதையும் திரு வெண்ணீறு முடிந்த முடிவு என்பதையும் உணர்த்தி நிற்கிறது.

இங்ஙனம் நடராசப் பெருமானது ஆடல் பல தத்துவங்களை உணர்த்தி ஐந்தொழில் புரியும் ஆற்றலை விளக்குகிறது. சிவபிரான் உயிர் களின் மீது கொண்ட பெருங் கருணையால் அவற்றின் குற்றங்களை நீக்கி குணாங் கொண்டு கோதாட்டி அவற்றை சுற்றிய சுற்றமாகிய சித்தமலம் என்னும் தொடர்பினை அறுத்து, சிவமாக்கி, ஆண்டருளுகின்றார். என்னும் தத்துவத்தை எமக்கு உணர்த்தி நிற்கிறது. தில்லையுட் கூத்தனின் இவ்வாறான திருநடனத்தை காணப்பெற்றால் "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தில்" என்று அப்பர் பெருமான் அங்கலாய்க்கின்றார்.

தற்காலத்தில் பலர் சைவசித்தாந்தம் கூறும் பூரண உண்மை தனை அறியாது பல்வேறு உலகியல் தத்துவங்களை நடராஜ வடிவத்தில் விளம்புகின்றனர். ஒரு சிலர் பல்வேறு விஞ்ஞான தத்துவங்கள் உள்ளதாகவும் கூறுகின்றனர். ஆனால் சைவ சித்தாந்தம் கூறும் உண்மையை அறியாது நடராசர் உருவத்திற்கு விளக்கம் கற்பித்தல் பொருத்த மன்று.

"சிற்பரவியோமமாகும் திருசிற்றம்பலத்துள் நின்று பொற்புடன் நடஞ் செய்யுந் திருத்தாள் வாழ்க"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய அமைப்பு

**சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் தயாளினி செந்தில்நாதன்** B.A. (Hons) M.A. (India)

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற வாக்கிற்கு ஏற்ப ஒரு ஊருக்கும் அங்கு வாழும் மக்களுக்கும் இன்றியமையாதவையாகக் கோயில்கள் விளங்குகின்றன. இதனாலேயே அப்பர் கோயில் இல்லாத ஊரை அடவிகாடு என்று கூறியிருக்கின்றார்.

ஆலயம் என்பதிலே ஆ என்பது ஆன்மாவையும் லயம் என்பது லயித்தல் என்னும் பொருள்பட்டு. ஆலயம் ஆன்மா லயிக்கும் இடம் என்று கொள்ளப்படுகின்றது. இதனாலேயே ஔவையார் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று கூறியிருக்கின்றார்.

சங்க காலத்திலே நகர் என்ற பெயரால் கோயில் அழைக்கப்பட்டது. "முக்கட் செல்வர் நகர்", பூமுடி நாகர்நகர்" என்பன போன்ற தொடர்களால் அறியலாம். ஆரம்ப காலத்திலே கோயில்கள் இல்லாமல் இயற்கையைக் கண்டு வணங்கிய மையை உணரக் கூடியதாக உள்ளது.

"உலகம் உவப் வானேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு"

என்பதன் ஊடே உணரலாம். அத்துடன் நடுகல் வழிபாடு மூலமும். மரத்தடியில் இறைவனை வைத்து வணங்கிய நிலையையும் காணலாம்.

"கள்ளி நீழல் கடவுள் வாழ்த்தி
தெய்வம் சேர்ந்த பராரை வேம்பு" என்பதன்

மூலம் அறியலாம். சிலம்பு, மணிமேகலையில் கோட்டங்கள் அமைத்து வழிபட்ட நிலையைக் காணலாம். கோயில்களின் முப்பரிமாண வளர்ச்சியைப் பல்லவர் காலத்திலே காணக்கூடியதாக இருக்கின்றது. குகைக் கோயில்கள், பாறைக் கோயில்கள், கட்டுமானக் கோயில்கள் என்று வளர்ச்சியடைந்துள்ளது. சோழ, பாண்டிய விஜயநகர நாயக்கர் காலங்களில் ஏற்பட்ட வளர்ச்சிக்கும் பெருக்கத்திற்கும் பல்லவர்களே முன்னோடிகள் ஆவார்கள்.

இப்படியாக வளர்ச்சியடைந்த திருக் கோயில்கள் மக்களின் வாழ்க்கையிலே முக்கியம் பெறுகின்றன. திருக்கோயிலில் ஒரு மனப்பாட்டுடன் மக்கள் கூடுவர். அதனால் திருக்கோயில் வளாகத்துள் அன்பு செறிந்த அருள் நலம் கனிந்த மனித உறவு வளர்கிறது. இதனால் சமுதாயம் ஒழுங்கமைவு பெறுகின்றது. திருக்கோயில் பண்பாட்டுக் கருவூலமாகத் திகழ்கின்றது. இவ்வாறாக முக்கியத்துவம் பெற்று விளங்குகின்ற ஆலயத்தினுடைய அமைப்பு பற்றி நோக்கலாம்.

கோயிலானது நமது உடம்பின் வடிவிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனாலே "க்ஷேத்திரம் சரீரப் பிரஸ்தாரம்" என்று அழைக்கப்படுகின்றது. அதாவது இதன் மூலம் ஆலயம் நமது உடம்புபோல அமைக்கப்பட்டிருக்கின்றது என்பதை உணரக் கூடியதாக இருக்கின்றது.

மேலும், பருப்பொருளாகிய உடம்பு தூயதாதற் பொருட்டு அங்கலிங்கங்களும், நுண்பொருளாகிய உடம்பு தூயதாதற் பொருட்டு பிராணலிங்கமும், சிற்றறிவுடைய உயிர் தூய தாதற்பொருட்டு காரணலிங்கமும், கொண்டு வழிபட வேண்டும். இதனைத் திருமுறை ஆசிரியர்,

"காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக,
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பால நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்கும் போற்றவிக் காட்டினோமே"

என்றும்,

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைத்தும் காளா மணிவிளக்கே"

என உள்ளம் இறைவன் எழுந்தருளும் இடம் எனக் கூறியுள்ளார்.

திருக்கோயில் அமைப்பு கீழ் மேலாக (கிழக்கு மேற்கு) ஒருவன் படுத்திருப்பதை,

| | | |
|---|---|---|
| தலை | - | கர்ப்பக்கிரகம் |
| முகம் | - | அர்த்த மண்டபம் |
| மார்பு | - | ஸ்நபன மண்டபம் |
| தொப்பூழ் | - | மகா மண்டபம் |
| கணுக்கால் | - | ஆஸ்தான மண்டபம் |
| பாதம் | - | கோபுரம் |

என்பதனால் புலப்படுகின்றது. மேலும்,

| | | |
|---|---|---|
| கருவறை | - | தலை |
| அர்த்த மண்டபம் | - | கழுத்து |
| மகா மண்டபம் | - | மார்பு |
| நிருத்த மண்டபம் | - | தொடை |
| யாகசாளை | - | நாடி |
| கோபுரம் | - | பாதம் |

எனவும் கொள்ளப்படுகின்றது.

அடுத்து, சர்வ ஞானோத்தரம் என்ற ஆகமம் ஆன்மாவின் வேறுபட்ட நிலையைப் பின்வருமாறு கூறுகின்றது.

முன்கோபுரம் - ஸ்தூலலிங்கம் - பூதான்மா
மகாபலிபீடம் - பத்திரலிங்கம் - அந்தரான்மா
கொடிமரம் - துவஜலிங்கம் - தத்துவான்மா
மூலவர் - சதாசிவலிங்கம் - சீவாத்மா
ஆசாரியர் - ஆன்மலிங்கம் - மந்திரான்மா
பராவளி - அகண்டலிங்கம் - பரமான்மா

எனக் கூறியுள்ளது.

எமது உடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களையும் கடந்து 'சகஸ்ராரம்' எனும் சக்கரத்துக் குண்டலியினின்று சக்தி எழுந்தருளும் போது, யோகியானவன் பரம்பொருளோடு லயித்து முத்தியடைந்து விடுகின்றான்.

| **ஆதாரங்கள்** | **உடம்பில்** | **ஆலயத்தில்** |
|---|---|---|
| மூலாதாரம் | முதுகுத்தண்டின் அடி | கொடிமரப்பீடம் |
| சுவாதிட்டானம் | மண்ணீரல் | மகாபலிபீடம் |
| மணிபூரகம் | தொப்பூள் | அதிகாரநந்தி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அனாகதம் | இதயம் | நடராசர் |
| விசுத்தி | கழுத்து | வாகனநந்தி |
| ஆக்ஞை | புருவநடு | மூலஸ்தான லிங்கம் |
| சகஸ்ராரம் | தலைஉச்சி | கர்ப்பக்கிரகவிமானம் |

மேலும், "அண்டத்தில் உள்ளது தான் பிண்டத்தில் காணப்படும்" என்பதற்கு எடுத்துக் காட்டாகவும் கோயில் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். திருக்கோயில் அமைப்பிலே கருவறை, விமானம், மண்டபம், கோபுரம், பிரகாரங்கள், கொடிமரம், நந்தி, பலிபீடம் என்பன முக்கிய இடம்பெறுகின்றன.

கருவறையானது, கர்ப்பக்கிருகம், மூலஸ் தானம் என அழைக்கப்படுகின்றது. மூலமூர்த்தி இங்கேயே வீற்றிருப்பார், இருதயம் எவ்வாறு நுட்பமாக உள்ளதோ அவ்வாறே மூலஸ்தானமும் மிக சூட்சுமமானது. எல்லா உலகங்களையும் படைத்தற்கும் காரணமான மூலப்பிரகிருதியின் இடமாகும்.

விமானம் கருவறைக்கு மேல் காணப்படும் கட்டிடம் ஆகும். மானம் என்பது அளத்தற் பொருளைக் குறிக்கிறது. விமானம் எனப் படுவது இறைவன் பெருமையானது சிறப்பாக அளந்து அமைக்கப்பட்டதைக் குறிக்கின்றது. விமானம் வடிவில் சதுரமாக இருந்தால் நாகரம் எனவும், வட்டமாக இருந்தால் வேசரம் எனவும் ஆறு அல்லது எட்டுப் பட்டையாக இருந்தால் திராவிடம் எனவும் அழைக்கப்படும்.

"கோபுர தரிசனம் பாவ விமோசனம்" என்பதற்கு ஏற்ப கோயில்களிலே கோபுரம் விளங்குகின்றது. கோயிலின் நுழைவாயிலில் கட்டப்படும் இக்கோபுரமானது நீண்ட சதுரமாகவும் 3, 5, 7, 9 எனப் பல அடுக்குகளை உடையதாகவும் இருக்கும்.

மூன்று வாயில் - சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி

ஐந்து வாயில் - ஐம்பொறிகள்

ஏழு வாயில் - ஐம்பொறிகள், மனம், புத்தி

ஒன்பது வாயில் - ஐம்பொறிகள், மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

என்பனவற்றைக் குறிக்கின்றன. அத்துடன் நான் உடம்பல்ல ஆன்மா என்ற உண்மையை இடைவிடாது உணர்த்தி நிற்பது கோபுரமாகும். இதனாலேயே தூரத்தே கண்டதும் கோபுரத்தை வழிபட வேண்டும். நமது உடலில் கன்மேந்திரியங்கள், ஞானேந்திரியங்கள் துவாரங்களாக அமைந் துள்ளன. இவ்வாறே திருக்கோயிலில் கோபுரத் துவாரங்கள் அமைந்து காணப்படுகின்றன. கோபுரத்திலே பல சிற்பங்களைக் காணக் கூடியதாக இருக்கின்றது. அதாவது மானிட வடிவங்கள், தேவர்களின் வடிவங்கள், சில அருவருக்கத்தக்க வடிவங்கள், சில வனவிலங்குகள், பறவைகள், என்பன போன்றன இடம்பெறுகின்றன. இவை உலக உற்பத்தியில் இவை எல்லாவற்றுக்கும் இடம் உண்டு என்பதை உணர்த்துகின்றது.

மேலும், கோயிலைச் சுற்றியுள்ள பிரகாரங்கள் திருச்சுற்றுகள் என்றும், மதிற்சுவரை திருச்சுற்றுமதில் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படுகின்றது. திருச்சுற்றுகள் ஆவரணங்கள் எனவும் அழைக்கப் படுகின்றன.

| பிரகாரங்கள் | உடம்பு வகைகள் |
|---|---|
| ஒன்று - | மனிதனுடைய உடம்புத் தொகுதி |
| மூன்று - | ஸ்தூல, சூட்சும, காரண உடம்புகள் |
| ஐந்து - | அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம் ஆனந்த மயகோசம் |
| ஏழு - | அன்ன உடம்பு, பிராண உடம்பு, இச்சை உடம்பு, உருவமான உடம்பு, அருவமான உடம்பு, விஞ்ஞான உடம்பு, ஆனந்த உடம்பு |

என்பவற்றைக் குறிக்கின்றன.

அடுத்து கொடிமரம் (துவசத்தம்பம்) ஆனது இடகலை, பிங்கலை எனும் இரு நாடி வழியாகச் சென்று ஒரு நாடியாகிய சுழுமுனை அமைந்து நிமிர்ந்து நிற்கும் தன்மையைக் காட்டுகின்றது. கோயில் கொடிமரத்தில் வெள்ளைத் துணியை முறுக்கி தருப்பைக் கயிறுடன் கொடியேற்றுங் கிரியை இடம்பெறும்.

முதுகுத்தண்டு - கொடிமரம்
தருப்பைக் கயிறு - பிராணவாயு
வெள்ளைத் துணி - சுழுமுனை

மேலே ஏறுவது - சகஸ்ரார கமலத்தைக் குறிப்பிடுகின்றது எனக் கூறப்படுகின்றது.

பலிபீடத்தருகே விழுந்து வணங்குதல் வினைநாசம் பாச நீக்கம் ஏற்பட வழிவகுக்கும். ஸ்தூல நிலையை முன்கோபுரம், அறிவிப்பது போல அந்தரான்ம நிலையை அறிவிப்பது பலிபீடம். பண்பட்ட ஆன்மா நன்மை, தீமை இன்னதென, ஒருவாறு பகுத்தறிய வல்லதாயின், கோபுர வாசலைக் கடந்து உள்ளே மகாபலிபீடத்தருகில் செல்லும் அந்தரான்மா எனப்படும்.

நந்தியானது, சீவான்மாவைக் குறிக்கும், மூலப் பொருளாகிய கடவுளைப் பார்த்த வண்ணம் அமைந்திருக்கிறது. சீவான்மாவின் குறிக்கோள் கடவுளைச் சென்றடைய வேண்டியது என்பதாகும்.

எனவே, திருக்கோயில்கள் அடியார்களின் நெஞ்சத்தாமரையின் வடிவமாகவும், அவர்களின் பருவுடம்பு, நுண்ணுடம்பு, மூலவுடம்புகளின் வடிவமாகவும் விளங்கு கின்றமையால் அவற்றை அமைக்கும் முறைகளையும், அவற்றின் கண் விளங்கும் தெய்வங்களையும் அவற்றை வழிபடும் முறைகளையும் அவர்கள் பெருக்கி வரலாயினர். அந்த வகையிலே நாத வடிவமான சிவனது ஒலி நமதுள்ளே கேட்கப்படுவது போலத் திருக்கோயில் மணி ஓசை கேட்கப்படுகிறது. எனவே ஆலய அமைப்பில் ஆலயத்தின் முதன்மையான நோக்கம், ஆன்ம தத்துவத்தை உணர்தலே ஆகும் என்பது பெறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறளில் சைவ சித்தாந்தம்

**சைவப்புலவர் அ. அரன்மகன்**
ஓய்வு நிலை ஆசிரியர் S.L.T.S- I, எம். ஏ. சைவசித்தாந்த மாணவன்.

மூன்றாம் தமிழ்ச்சங்க காலத்தில் அரங்கேற்றப்பட்ட நீதி நூல்களில் திருக்குறள் முதன்மை பெறுகின்றது. திருக்குறளை மேற்கோள்காட்டி பேசுவது, எழுதுவது போல ஏனைய நூல்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவது இல்லை. ஏனெனில் அவை வெறுமனே உலக நீதியை மட்டுமே பகர்கின்றன. ஆனால் திருக்குறள் மட்டும் தான் பதி, பசு, பாசம் என்ற சைவ சித்தாந்த உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. திருக்குறள், நீதி நூல் வரிசையில் வருவதால் அதில் சிவன் என்ற சொல்லைப் பயன்படுத்துவது மரபல்ல என்று உணர்ந்த வள்ளுவர் சிவனுக்கு செம்பொருள் என்று இலக்கிய வார்த்தையைப் பயன்படுத்துகின்றார்.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச்
சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு.

தத்துவங்களையும் சமயக் கொள்கை களையும் குறிப்பாகவும் நீதியை வெளிப் படையாகவும் சொல்லியுள்ளார். வேதத்திற் குரிய பொய்யாமொழி என்ற பெயரை திருக்குறளுக்கும் வைத்தனர். திருக்குறளை உத்தர வேதம் எனவும் அழைப்பர். அரிய பிரயோகங்களில் திருக்குறளையும் சிவஞான போதத்தையும் கூறுவது வழக்கம். சமயநுட்பங்கள் வரும்படியாக இலக்கியச் சொற்களைப் பயன்படுத்தினார் வள்ளுவர்.

"எண் குணத்தான் தாளை வணங்காத் தலை" இங்கு சைவ சித்தாந்தம் கூறும். தன் வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கை உணர்வினைதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களில் நின்று நீங்குதல், பேரருள் உடைமை. வரம்பில் இன்ப முடைமை. முடிவிலா ஆற்றலுடைமை ஆகிய இறைவனின் எண் குணங்களும் குறிப்பிடப் பட்டுள்ளன.

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்" இங்கு இருவினையும் என்றபதம் இருவினைகள் தவிர வேறு வினை (மூன்றாம் வினை) இல்லை என்ற சித்தாந்தக் கருத்தை வெளிப்படத்தி நிற்கின்றது. மேலும் "இருள்சேர் இருவினை" ஆணவ முனைப்பினால் செய்யப்படுகின்ற நல்வினையும் கூட பிறவி என்னும் இருளைக் கொடுக்கும் என்றார். "வேண்டுதல் வேண்டாமை இலான் - விருப்பு வெறுப்பு இல்லாதவன். பொறிவாயில் ஐந்தவித்தான் - ஐம்புலன் ஆசைகளை ஒழித்தவன். தனக்குவமை இல்லாதான் - தனக்கு வேறு ஒருவரையும் நிகராகக் கொள்ளாதவன், அறவாழி அந்தணன் - அறக்கடலாக விளங்குபவன் மேலும், 'அந்தணன்" என்பது நூறு வீதம் சுத்தமான ஆன்மாவைக் குறிப்பது. அது சிவனுக்கு மட்டும் தான் பொருந்தும், இந்த விதமாக இறைவனின் இயல்புகள் பலவகையில் கூறப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனடி சேர்ந்தாரே பிறவித் துன்பத்திலிருந்து விடுபடுவர் என்று, வீடுபேறு அடைதலைப்பற்றிக் குறிப்பிடுகின்றார் வள்ளுவர்.

"பிறப்பு அறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை" என்பதிலிருந்து, பிறவித்துன்பத்தை ஒழிக்க முயல்பவருக்கு உடம்பும்கூட மேலதிகமானதாகும் என்கிறார். இங்கு பௌத்தர்களில் பஞ்சராத்திரிகக் கொள்கையை மறுக்கிறார்.

"மலர் மிசை ஏகினான்" இங்கு வள்ளுவர் குறிப்பிடுவது உள்ளக் கமலத்தையேயாகும். ஆன்மாவில் சிவன் பஞ்சாட்சர வடிவில் நடனமாடுகிறார். ஞான நிலைக்கு வரும்போது கமலாசனத்தில் (உள்ளக்கமலத்தில்) வந்து அமருகிறார். தாமரை மலர் வடிவில் வருவது 36 தத்துவங்களைக் குறிக்கும். அப்படிப்பட்ட இறைவனின் திருவடிகளைச் சேர்ந்தவர்கள் வீட்டு உலகத்தில் நீண்ட நாள் வாழ்வார்கள். ஏகினான் என்பது மிக விரைவாக நடைபெறுதலைக் குறிக்கின்றது.

வள்ளுவர், இறைவனுக்கு அடுத்த சிறப்பை ஏன் மழைக்குக் கொடுத்தார் என்று நோக்கின், தண்ணீர்மை குன்றினால் கடலில் வாழும் உயிரினங்கள் அழிந்துவிடும். கடல்வாழ் உயிரினங்களுக்கு சூக்சும சரீரம் தோன்ற மழை அவசியம். அத்தோடு படர்ந்து, (பஞ்சாசினி வித்தை) சூச்சும சரீரம் போகாவிட்டால் உயிர் உண்டாகாது.

தவம் செய்வார் தம் கருமம் செய்வார் மற்று அல்லார் அவம் செய்வார் ஆசையுள்பட்டு

இங்கு 'தவம்' என்பது உடலை வருத்துகின்ற தவம் அல்ல. சரியை, கிரியை, யோகம் தான் தவம். ஒரு பிறவியில் அல்ல பல பிறவிகளில் செய்த சரியை, கிரியை, யோகம் தான் ஞானத்தைக் கொடுக்கும்.

'தவமும் தவமுடையார்க்கு ஆகும்' தவம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் பிறப்பதற்கே தவம் செய்திருக்க வேண்டும்.

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார் கொல் மற்றையவர்கள் தவம்.

சிறந்த தவசிகளுக்கு உணவளித்து (மகேசுவர பூசை) உதவுவதற்காக இல்லறத்தான் துறவு நெறியை மேற்கொள்ள மறந்தனர் போலும்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது.

இல்வாழ்க்கையின் பண்பு அன்பு. இல்வாழ்க்கையின் பயன் அறன், இல்வாழ்க்கை அறிவு பூர்வமாக இருப்பதைவிட அன்பு பூர்வமாக இருப்பதே மேல். அவ்வாறு இருப்பதால் இல்லறத்தான் தன் சிறந்த கடமையாகிய தென்புலத்தார் (பிதுரர்), தெய்வம், விருந்தினர் சுற்றத்தார், தன் குடும்பம் என்னும் ஐந்திடத்தும் அற நெறியைப் பேண முடியும் என்றார்.

இறைவன் ஆன்மாவிற்கு கொடுத்த 31 கருவிகளில் சூக்கும சரீரத்தைவிட்டு 15 நீங்குதல் இறப்பு எனப்படும். மீண்டும் அந்த 15 கருவிகளும் ஆன்மாவுடன் இணைவது பிறப்பு எனப்படும். இதனையே வள்ளுவர்.

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.
என்றார் போலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பு எனும் பேதைமை நீங்க
சிறப்பு எனும் செம்பொருள் காண்பதறிவு
செம்பொருள் - சிவன் பிறப்பு - திரோதகம்

ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்புடைத்து. புத்தி தத்துவத்தில் தான் வினைகள் எல்லாம் பதிவு செய்யப்பட்டு அடுத்தடுத்த பிறவிகளுக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றது என்பதே மேற்கூறப்பட்ட குறளின், சைவ சித்தாந்தக் கருத்தாகும். அந்தக் கரணங்கள் அடுத்த பிறவிக்கும் செல்லும் என்பதே இதன் பொருள்.

கற்று ஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர் மற்று ஈண்டு வாரா நெறி தத்துவங்களை மட்டும் கூறாது அதனுடன் வாழும் வழி முறைகளையும் சொல்லுவது தான் நெறி எனப்படும். கற்க வேண்டிய வற்றைக் கற்று மெய்ப்பொருளையும் அறிந்தவர். மீண்டும் இப்பிறவிக்கு வாராத வழியை அடைவர்.

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு

மழை பெய்யாது போனால் மக்களால் செய்யப்படும் திருவிழாக்களோடு கூடிய நாள் வழிபாடும் நடைபெறாது. என்றார் ஆசிரியர். இதன் சித்தாந்த விளக்கம் யாதெனில், சிறப்பொடு பூசனை என்பது நைமித்திய பூசையையே ஆகும். மழைபெய்யாவிடில், இறைவனுக்குச் செய்யப்படுகின்ற நித்திய பூசை மட்டுமல்லாது நைமித்திய பூசையும் நடைபெறாது என்பதாகும்.

"வகுத்தான் வகுத்த வகையல்லால்" என்றால் ஓர் உயிர் செய்த வினை இன்னொரு உயிர் மேற்செல்லாது என வகுத்தலின் என்று பொருள். அவரவர் வினைவழி அவரவர் செல்ல வேண்டும்.

ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்.

விதியை வெல்ல எடுக்கப்படுகின்ற முயற்சியே அவ்விதிக்குக் காரணமாகிவிடும். அறிவால் ஊழை வெல்ல முடியாது. ஞானத்தால் தான் அதனை வெல்ல முடியும். ஞானம் என்பது ஒருவர் செய்த புண்ணி யங்கள், சிவாகமங்கள் சொன்ன நூல்களைக் கற்பதால் விளைவது என்றார்.

"கண்ணோட்டமே கண்ணுக்கு அணி கலன்" அதாவது பிறஉயிர்கள் படுகின்ற துன்பத்தைப் பார்த்துக் கண்ணீர் வடிப்பது கண்ணுக்கு அழகு என்றார்.

பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர், நயத்தக்க
நாகரிகம் வேண்டுபவர்.

சிவனும் ஆலகால விஷத்தை உண்டு, தேவர்களிடம் கருணை கொண்டார். நாவுக்கரசரும் பல்லவன் கொடுத்த நஞ்சை உண்டார். உயிருடன் இருந்தார். ஆனால் மன்னன் மீது எந்தக் கோபமும் காட்டவில்லை. அவனைத் தன் வயப்படுத்தினார். (நாகரிகம் - கண்ணோட்டம்)

இவ்வாறு, இலக்கணம். தர்க்கம், மொழியின் கூறுபாடு கொண்டு சிந்தித்து எழுதப்பட்ட திருக்குறளை ஊன்றிக் கவனிப்பின் ஆங்கு சைவ சித்தாந்தக் கருத்துக்கள் அரண் செய்யப்பட்டுள்ளமை நன்கு புலனாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர்



மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்து அறிந்து ஓதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவர் அன்றே

- திருமந்திரம் 99



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவம் வளர்க்கும் புராண படனக்கலை

சைவப்புலவர் சி. வேலாயுதம்
ஓய்வுநிலை அதிபர்

சிவனை முழுமுதலாகக் கொண்டது சைவம். அன்பே சிவம். புராணபடனம் என்பது புராணக்கதைகளைச் சுவைபடச்சொல்வது என்பது அகராதி. புரா + நவம் புராணம் பழமையும், புதுமையும் இணைந்தது. மனித வாழ்வைச் செம்மைப் படுத்துவதில் முக்கிய பங்கைப் பெறுவது புராணம். வேதத்தின் நுண்பொருளை யாவரும் தெரிய வைப்பது இது. சைவம் கூறும் நூல்களில் இருந்து புராணங்களை எடுத்துவிட்டால் சைவம் வெறிச்சோடிவிடும். பதினெண் புராணங்களுள் சிவபுராணம் பத்து. இவற்றை நமக்குத் தந்தவர் வியாசர்.

திரிநேத்திரமாக அமைந்த புராணங்கள் மூன்று, அன்புப் பெட்டகமாக மனிதனை மையமாக வைத்துச் சேக்கிழார் பெருமான் நமக்கு விட்டுச் சென்றது பெரிய புராணம். சைவ சித்தாந்தக் களஞ்சியமாகக் காஞ்சிக் குமரக்கோட்டம் கச்சியப்ப சிவாசாரியாரால் 10.345 பாடல்களால் உருப்பெற்ற தெய்வீக மான நூல் கந்தபுராணம். இதன் சிறப்பை முருகனே அறிவான் என்பது சூதமுனிவர் கருத்து. மூன்று காண்டங்களைக் கொண்ட இறை திருவிளையாடலை இனிக்க இனிக்க எடுத்துக்கூறும் அரியதொரு புராணம் திருவிளையாடற் புராணம். இறைவனின் அற்புதங்கள் சமய வளர்ச்சிக்கு வேண்டப் படுவதாகும். சமயங்கள் வளர்ந்தது அற்புதங்களினாலேயே.

சூரிய கிரண உதவியினாலேதான் சூரியனைக் காணலாம். அவன் அருளாலே தான் அவனை அடையலாம். இறை அருள்பெற இப்புராணங்கள் வழிகாட்டு கின்றன. புராணபடனம் என்றதும் கந்தபுராண சிந்தனைதான் எமது மனத்திரையில் ஓட ஆரம்பிக்கும். அது மிகப் பிரசித்தமானது.

வருடந்தோறும் ஏதோவொரு மூன்று மாதகாலம் கந்தபுராணபடனம் ஆலயங்களில் நடைபெறும். மடம், ஆற்றோரம், நந்தவனம், மலை என்றெல்லாம் கூறப்படினும் இன்று ஆலயங்கள் தான் இதற்குரிய இடமாகும். ஆண், பெண் இருபாலாரும் தமது சிந்தையில் நினைத்ததை முடிக்க வேண்டும் என்ற குறிக்கோளை முன்வைத்து விரதம் இருப்பர். "குறிக்கோள் இல்லாது கெட்டேன்" என்றார் நாவுக்கரசர், கையில் கட்டிய காப்பை மூன்று மாதம் முடியுமுன் அவிழ்க்கமாட்டார்கள். இடையில் அவிழ்த்த இலக்கண சுந்தரி பட்டபாடு யாவருமறிவர். புராண படன விதியை - மரபை மீறக்கூடாது.

உரைமரபு தொல்காப்பியர் காலத்திலே தோன்றிவிட்டது. அதன் வளர்ச்சி தான் இன்று கந்தபுராண உரையாய் நமது கையிற் தவழுகின்றது. ஏனைய புராணங்கட்கு அப்படியான உரை அருமையாகவே காணப்படுகின்றது. உரை எழுதுவது வேறு, உரை (பயன்) கூறுவது வேறு. பயன் சொல்லுவது ஒரு கலை. எல்லாரும் இலகுவிற் சொல்ல முடியாது. புராணம் படிப்பதும் அவ்வண்ணமே.

புராணபடன மரபு தொன்மையானது. புராணம் வாசிப்பவரும், பயன் சொல்லுபவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரசீலராய், சமய தீட்சை பெற்றவராய், சிவசின்னம் தரித்தவராய், சமய அறிவும் பக்தியும் உடையவராய், இலக்கண, இலக்கியப் பயிற்சி உடையவராய் இருத்தல் வேண்டற்பாலது.

புராணநூல் புனிதமானது. பட்டுத்துணியின் மேல்பீடம் ஒன்றில் வைத்துத் தீபம் காட்டிப் பூசித்து, ஆரம்பிக்கும் போதும், நிறைவு செய்யும் போதும் "திருச்சிற்றம்பலம்" எனக்கூறி. அவ்வப்புராணங் களுக்கு ஏற்றதான காப்புச் சொல்லி ஆரம்பிக்க வேண்டும். காப்பைப்பயன் சொல்பவர் சொல்வது தான் மரபு. ஐயர்தான் கூறவேண்டும் என்ற ஒரு நியதி வந்த மைக்கான காரணமுண்டு.

புராணம் படிப்பவரும் பயன் விரிப்பவரும் உயர்ந்த ஒரு ஆசனத்தில் இருத்தல் வேண்டும். புராணம் படிப்பவர் முதன்முறை பாட்டைப் பண்ணுடன் பாடுவார். (பொதுவாக நாட்டை, பூபாளம், மோகனம். தோடி, பைரவி முதலான இராகத்துடன் பாடி) இரண்டாம்முறை பொருளுக்கமைவாகக் கொண்டு கூட்டி வாசிப்பார். வாசிப்பவரின் ஸ்ருதியில் அதே இராகத்தில் பயன் சொல்ல வேண்டும். சிலர் தமக்கேற்ற சோடியைத் தேர்ந்தெடுத்து வைத்துக் கொள்வர். இதனால் ஏற்றத் தாழ்வு தோன்றாது சுவையாய் இருக்கும்.

இடத்திற் கேற்ற இராகம், பாவம், சொற்பிரயோகம், முதலான அம்சங்கள் அமைய வேண்டும். கேட்போர் உள்ளம் உருகி மயிர்சிலிர்த்து கண்ணீர் வரச்செய்து பாத்திரத்துடன் ஒன்றியிருக்கச் செய்தல் வேண்டும். மாமன், மருமகரான நாவலரும், வித்துவசிரோமணியும் படித்துப்பயன் சொல்ல அதைக் கேட்கும் பாக்கியம் பெற்றவர் கொடுத்து வைத்தவர்.

முதலில் பாடலின் பொழிப்புரையைக் கூறிப் பின் விரிவுரை கூறுதல் மரபு. விரிவுரை அவரவர் ஆற்றலுக்கு ஏற்றவாறு அமையும். ஆயினும் விரிவுரையின் போது நமது சமயக்கருத்துக்களன்றி இலக்கிய எடுத்துக் காட்டுகள் இடம்பெறுவது விரும்பத்தக்கதல்ல.

ஒருவர் படித்து இன்னொருவர் மாறும் போது. எழுந்து நின்று வலது பக்கத்தால் கொடுக்க வேண்டும். புதிதாக புத்தகம் வாங்கியவர் முன் படித்தவரின் இராகத்தில் மீண்டும் ஒருமுறை தானும் வாசித்து அதன்பின்பே கொண்டு கூட்டுச் செய்து பாடிக் கொடுக்க வேண்டும். பயன் சொல்லி முடியும்வரை பொறுத்திருக்க வேண்டும்.

சிலவேளை படித்தவரோ, பயன்சொல் பவரோ அவசரமாக எழும்ப வேண்டும் என்றால் அவர்வரும்வரை படிப்பவர் எழும்பாது இருக்க வேண்டும். படிப்பவருக்கும் அப்படியே, இருவரும் எழும்ப நேர்ந்தால் காப்புச்சொல்லி எழும்ப வேண்டும். நாவலர் காலம் புராணபடன உச்சக்காலம். நமது கலாசாரம் கந்தபுராண கலாசாரம் என்று பண்டிதமணி அவர்கள் கூறுவார்.

புராணபடனத்தின் சிறப்பாலன்றோ இன்றும் அழியாது புத்துயிர் பெற்று வளருகின்றத. முத்துப்பிறந்தது கடலில். கடலுக்கு அதன் சிறப்பு தெரியாது. அதை அணிபவர்க்கே புரிவது போல புராணம் பிறந்த இந்தியத் தமிழகத்தில் இதன் அருமை பெருமை தெரியாது. நமது நாடு தான் பயனை அனுபவிக்கின்றது. புராணபடனம் வளர மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்கும் .

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

# VENKADESWARA

## TRANSPORT SERVICE





**Colombo**

127, Old Moor Street, Colombo-12

**Tel: 011 4375174, 075 7948422**

**JAFFNA**

152A/127, Kasthuriar Road, Jaffna.

**Tel: 021 4901271**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

**சைவப்புலவர் சங்கப் பொன்விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்.**

யாழ், நகரில் பாடசாலை மற்றும் காரியாலய உபகரணங்கள்,
காகிதாதிகள் இலங்கை, இந்திய நூல்கள்,சஞ்சிகைகள்,
மற்றும் சிறுவர்களுக்கான நவீன கற்றல் சாதனங்கள் என்பவற்றை
மலிவாகப் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்.

# அன்னை புத்தகசாலை







இல. 7, ஆஸ்பத்திரி வீதி, நவீனசந்தை, யாழ்ப்பாணம்
தொலைபேசி இலக்கம்: 021 222 9881

*With best compliments from:*

*அகில இலங்கைச் சைவப்புலவர் சங்க பொன்விழா
மலர் இனிதே
சிறப்புற வாழ்த்துகின்றோம்.*

**பலசரக்குப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக் கொள்வதற்கு யாழ் நகரில் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்**

# சிறீ முத்துமாரியம்மன் ரேடர்ஸ்

இல. 344, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 8666



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய புராண சூட்சுமம்

சைவப்புலவர் கு. றஜீபன் BA., M.A. (சைவசித்தாந்தம்)

புராணம் என்றால் முன்னம் நடந்தது என பொருள் கொள்ளும் நிலையில் பெரியபுராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணம் என்பது திருத்தொண்டர்களது வரலாற்று நிகழ்வு களை எடுத்துரைப்பதாகும். புராணம் என்ற சொல் பழமையைக் குறிப்பதோடு புதுமை யையும் குறிக்கிறது. புரா + நவம் = புராணம் இதில் 'புரா' என்ற சொல் பழமையைக் குறிப்பதாகவும், நவம் என்பது புதுமையை குறிப்பதாகவும் அமைகிறது. மேலும் பூரணனாகிய பெருமானிடமிருந்து வந்தமையால் பூரணம் என்று வழங்கி பின்னர் அச்சொல்லே புராணம் எனத்திரிந்தது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தமிழர் சமயப் பரப்பில் ஏற்பட்ட சமய மறுமலர்ச்சி பன்னிரண்டாம் நூற்றாண்டில் சேக்கிழாரால் உயரிய நிலையில் நிலைநிறுத்தப்பட்டது. பக்தியின் பயனையும் திருத்தொண்டின் சிறப்பினையும் எளிதில் மக்கள் அறிந்து அவ்வழி ஒழுகுவதற்கு உரிய வழிவகைகளை உரைப்பதற்கு சோழர்காலத்தில் பிரசித்தமாய் இருந்த காப்பிய இலக்கிய வடிவம் தேவைப்பட்டது. சாதாரண அடியவர்களை காப்பியத் தலைவராகக் கொண்டு செந்தமிழுக்கும் சிவநெறிக்கும் அரணாக அமைந்ததே திருத்தொண்டர் புராணம் ஆகும். இது சேக்கிழார் இட்ட பெயராகும்.

இத்திருத்தொண்டர் புராணம் திருமலைச் சருக்கம் தொடங்கி வெள்ளானைச் சருக்கம் ஈறாகப் பதின்மூன்று சருக்கங்களைக் கொண்டுள்ளது. ஒரு பெருங்காப்பியத்தினை படிப்பவர்களது உள்ளத்தினை ஈர்க்கும் உத்திமுறைகளில் ஒன்றாக காப்பியத் தலைவரான சுந்தரமூர்த்தி சுவாமிகள் உலகிலே தோன்றுவதற்குரிய காரணத்தினை முதலிலே கூறுவதற்காக திருமலைச் சருக்கம் என்ற ஒரு பகுதியினை அமைத்திருக்கிறார். பிறகாப்பியங்கள் காப்பியத் தலைவனின் பிறப்பில் இருந்து தொடங்க இது காப்பியத் தலைவனின் முத்தியிலிருந்தே தொடங்குவது சிறப்பானதாகும்.

இவ்வாறு சுந்தரர் நிலவுலகில் வந்து தோன்றி பின் தன்னை மறக்க, இறைவன் அவரை மறவாது தக்கதருணத்தில் வந்து தடுத்து ஆட்கொண்டு அருளிய கருணைத் திறத்தினால், அப்பெருமானில் இருந்தும், அவனை வழிபடுகின்ற அடியவர்களிடத்திலும் அடிமைத்திறம் பேணி வாழுமாறு செய்வித்தருளிய பகுதி தடுத்தாட்கொண்ட புராணத்தில் கூறி சுந்தரரால் பாடப்பட்ட திருத்தொண்டர் தொகை வழி அடியவர்களின் வரலாற்றையும் அந்த வரலாறுகளோடு இயைந்து போகும் காப்பியத்தலைவரின் வரலாற்றையும் இடையிடையே அமையுமாறு செய்து திருக்கயிலை சென்று பெருவாழ்வு பெற்று நிற்கும் திறத்தினை வெள்ளானைச் சருக்கத்தில் நிறைவுபடுத்தி இருக்கும் கட்டுக் கோப்பு வேறு காப்பியங்களில் அமைந்திராத சிறப்பாகும்.

இத்தகைய உயரிய சீரிய சிறப்பினைப் பெற்று விளங்கும் திருத்தொண்டர் புராணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்துக்குக் காலம் பல பதிப்புக்களையும், பலவகைப்பட்ட உரைகளையும் பெற்று அறிஞர் பெருமக்களால் போற்றப்படும் சைவ வாழ்வியல் களஞ்சியமாக விளங்குகிறது. தமிழ்மரபும், சமயமரபும் இணைந்த தனிப்பெரும் தமிழ்க்காப்பியமாகவும் விளங்குகிறது. இதற்கு எழுதப்பட்ட பலவகையான உரைகளில் இங்கு நோக்கப்படுவது சூசனம் ஆகும். உரைகள் எல்லாம் பாடல்பொருளை மட்டும் குறிப்பன வன்றி அவை சார்ந்துள்ள பொருள் நியதிக் கோட்பாடுகளையும், தத்துவங் களையும் விளக்குகின்றமக்கள் ஊடகமாகவும் விளங்கு கின்றது. இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படும் சூசனம் உரையாக அன்றி சமயதத்துவ உண்மைகளை விளக்கும் ஆய்வுக் களஞ்சியமாக - சைவசித்தாந்த ஞானக் களஞ்சியமாக விளங்குகிறது.

சைவசமயத்தின் சிவநெறிக் கொள்கை களை விளக்கியுரைக்கும் காப்பியம் பெரியபுராணம். சைவசமயம் உணர்வு மார்க்கம், அறிவுமார்க்கம் என்ற இரு தளநிலைகளில் இருந்து வளர்ந்த சமயமாகும். இவற்றில் அறிவு மார்க்கத்தின் கட்டமை வியலை குறிப்பிடுவதே சைவசித்தாந்தமாகும். சைவசமயத்திற்கே உரிய சிறப்புநிலைச் சட்டகமாக இது விளங்குகிறது. தென்னிந்திய தமிழர்களுடைய அரிய பெரிய தத்துவமாகவும், பேரறிவின் பெரும் பயனாகவும் சைவ சித்தாந்தம் விளங்குகின்றது. பிறசமய தத்துவ ஆராய்ச்சி வகைகளையும், வழிபாட்டு முறைகளையும் விட சைவ சித்தாந்தம் பல சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்டதாக விளங்குகிறது. பிறசமயங்களும், தத்து வங்களும் அயலவர்க்கு உரியதாகவும், அண்மையில் தோன்றியதாகவும் இருக்க ஆராய்ச்சித் துறையிலும் கொள்கை, வாழ்க்கை என்பவற்றை உணர்த்தும் முறையிலும் மிகச் சிறந்ததொன்றாக சைவசித்தாந்தம் விளங்கு கின்றது.

பெரியபுராணத்திற்குச் சூசனம் வரைந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும், இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு. கந்தையா அவர்களும் எழுபத்தைந்து பெரும் தலைப்புக் களும், நூற்று முப்பத்திரண்டு சிறுதலைப்புக் களுமாக இதற்கு சூசனம் வரைந்துள்ளனர்.

**சூசனம் என்பதன் பொருள்**

சூசனம் என்பது செய்யுளில் சூட்சுமமாகச் சொல்லப்பட்ட பொருளின் உண்மை ஞானத்தெளிவு என்பது பெறப்படும். இவற்றில் திருத்தொண்டர் புராண சூசனம் என்பது திருத்தொண்டர் புராணத்தில் சூட்சுமமாக சொல்லப்பட்ட பொருள்களை வெளிக் கொணர்தலை நோக்கமாகக் கொண்டது. இங்கு சூசனம் என்பது வடமொழியில் 'சூசி' என்ற வேர்ச்சொல்லில் இருந்து பிறந்த சொல்லாகும். சூசி என்பது ஊசி, கூர், போன்ற கருத்துக்களைத் தரும். சூசனம் என்பது பெயர்ச்சொல்லாய் குறித்துக் காட்டுதல், எடுத்து விளக்கி முன்வைத்தல் என்ற பொருள்களைத் தருகிறது. சூசி என்ற சொல் 'ஒத்த', 'பயிலப்படுகின்ற', 'பொருத்தமான' போன்ற பொருட்களில் வருகின்ற வினையடியிலிருந்து பிறந்ததாக மக்டெனல் அகராதி கருதுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூசித என்பது மிகப் பொருத்தமானதென்ற இறந்தகால உடன்பாட்டு செயற்பாட்டுவினைப் பெயரெச்சம் ஆகும். இவற்றுள் சூசி உணர்த்துகின்ற ஊசி எனும் பொருள், ஊசியால் துளைக்கப்பட்ட, குறுகிய, இலேசில் அவிழ்க்கப்படாத, இருள் போன்ற வஸ்துவைக் குறிக்கும். எனவே இதனடியாகப் பிறந்த சூசனம் காட்சிக்குப் புலப்படாத விடயத்தை வெளிவரச்செய்து வாசகர்களுக்குக் காட்டுதல் என்ற பொருளைத் தரும்.

மேலும் சூசி எனப்படுவது பறவையின் கூரிய அலகு எனவும் குறிப்பிடப்படுகிறது. பறவை பூ மொட்டைத் துளைத்து தேனை உறிஞ்சுவது போல சூசனம் எழுதும் அறிஞர் ஒரு நூற்பகுதியின் உள்ளே இருக்கும் ஞானத்தேனை எடுத்துத் தன் குஞ்சு போன்ற சீடருக்குத் தருகின்றார், என்ற உபகருத்தும் இப்பிரயோகத்தில் அடங்கியுள்ளது. சூசகர் என்பதற்கு கதை கூறுவோர், ஆசிரியர், சித்தர், என்ற பொருள்களும் உண்டு. எனவே சூசனம் எழுதுபவர், எழுதியவர் ஒரு சித்தர், இதளியம் முதலிய தாதுப்பொருட்களை நிலத்தினுள் இருந்து வெளிப்படுத்துவது போல, தான் எடுத்துக்கொண்ட நூற்பகுதியிலுள்ள விலை மதிப்பற்ற ரசத்தை வெளிக்கொணர்ந்து உள, உடல் நோயால் பீடிக்கப்பட்ட சாதகர்களுக்கு ரசகுளிகை செய்யும் வைத்தியர் போல உதவுகிறார் என்ற உட்பொருளையும் கண்டறிய முடிகிறது.

அறிவிப்பு, பார்வை, யூகம், என தமிழ்ப் பேரகராதியும், அறிவித்தல், பார்த்தல், என தமிழ் மொழி அகராதியும், (கதிரைவேற்பிள்ளை) வெள்ளிவிழா தமிழ்ப்பேரகராதி, யாழ்ப்பாண அகராதி, என்பனவும், குறிப்பித்தல், குறிப்பு, கூர்மை என கோனார் தமிழ் கையகராதியும் குறிப்பிடுகை, திட்டம், கூர்மை என சென்னைத் தமிழ் லெக்ஸ்சிகனும், (பகுதி 2) வெளிப் படையாகக் காட்டு, தெளிவாகக் காட்டு, நிரூபி, அகத்தினுடைய சம்சூசனம், பொருளினது தெளிந்த விளக்கம் என்றும் கூறும்.

திருக்கோவையார், சிவப்பிரகாசம் போன்ற நூல்களின் உரைக்கு முன்னே ஆன்றோர் அமைத்துள்ள 'கொளு' என்பதும் சூசனத்தின் குறள் வடிவமே எனலாம். முடிவாக குறிப்பிடுமிடத்து சூசனம் என்பது சித்தாந்த விளக்கமே என்று பொருளாகின்றது.

தமிழ் உரைமரபில் சூசனம் ஒருவகை உரையே ஆகும். செய்யுள்களின் பொருள் விளங்க கொடுக்கப்பட்ட விளக்கங்களே உரை. இந்நிலையில் இந்த உரைவகையில் ஒன்றாக ஆறுமுகநாவலர் அவர்களால் உருவாக்கப்பட்ட புதிய ஒரு உரைவடிவமே சூசனம் ஆகும். ஒவ்வொரு செய்யுளின் பொருளை விளக்க எழுந்தது உரை என்றும், ஒரு தொகுதி செய்யுளின் உண்மை ஞான விளக்கம் சூசனம் என்றும் சூசன அமைவியல் விளங்குகின்றது. எனவே பெரியபுராண சூசனம் என்பது 'பெரியபுராணத்தில் சூட்சுமமாக சொல்லப்பட்ட விடயங்களை எடுத்து விளக்குகின்றது என்பதாகும். நாவலர் பெருமான் பெரிய புராணத்தில் 23 தனியடியார் வரலாற்றுக்குச் சூசனம் எழுதிய அளவில் இறையடி சேர்ந்துவிட்டார். 125 வருடங்களின் பின் அவர் வழிவந்த ஏழாலைப் பண்டிதர் கலாநிதி மு. கந்தையா அவர்கள் மீதியை எழுதி நிறைவு செய்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையனுபவ இன்பத்திருவாசகம்

சைப்புலவர் வைரவன் கோகுலன் - ஜேர்மனி

இறையனுபவத்தைப் பெற்றதினால், அந்த இறையனுபவத்தின் இன்பத்தைப், புனிதத்தைப் பெருமையை உணர்ந்த திருவாதவூரர், அது இல்லாமற் போய்விட்டதே அதை மீண்டும் பெறவேண்டும் என்ற ஏக்கத்தில், தவிப்பதில் இறைவனை வேண்டிப் பாடிய பாட்டுக்களே திருவாசகம்.

அந்த இறையனுபவத்தின் இன்பத்தை மெய்கண்ட சாத்திரங்களுள் மூத்த சைவசித்தாந்த நூலான திருவுந்தியாரில் திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் அவர்கள்

**இங்ஙன் இருந்ததுஎன்றுஎவ்வண்ணம் சொல்லுவேன்**
**அங்ஙன் இருந்ததுஎன்று உந்தீபற அறியும் அறிவதுஅன்று உந்தீபற**

குருவாக வந்த பரம்பொருள் தானாகத் தன் திருவருளை வழங்கி என்னை ஆட்கொண்ட போது யான் பெற்ற பேரின்பம் இவ்வாறு இருந்தது என்று எப்படிச் சொல்லுவேன்? அப்பேரின்பத்துக்கு ஒப்பானது அதுதான். அப்படித்தான் இருந்தது. என அவர் தான் பெற்ற எல்லையற்ற பேரின்பத்தைக் கூறுகின்றார்.

திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகப் பெருமானுக்கு முதலில் "நமச்சிவாய" என்னும் நாதஓசையே அவர் திருச்செவிகளில் விழுகின்றது. ("நமச்சிவாய வாழ்க" என்றே திருவாசகத்தை முதலாகத் திருவாய்மலர்ந்து அருளுகிறார்.) சோதி வடிவான பரம்பொருள் தட்சணாமூர்த்தியாக வந்து அடியார்கள் கூட்டத்துடன் அமர்ந்துள்ளார். திருவாதவூரர் நாதஓசையால் ஈர்க்கப்படுகின்றார்.

**ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே**
**நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி**

என்றெழுகிறது திருவாசக ஓசை. நாத ஓசைவடிவான, அருவடிவான சிவப்பரம் பொருள் யாவராலுமே அறிதற்கரியவர் அவரின் பெருமையைத் திருமூலநாயனார்

ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
ஆரறிவார் அந்த அகலமும் நீளமும்
பேரறியாத பெருஞ்சுடர் ஒன்று அதின்
வேரறியாமை விளம்புகின்றேனே

தமிழ் ஆகமமான திருமந்திரத்தில் பேரொளிச்சுடரின் வேரைக்கூட அறியமுடியாத அறிவுக்கு அப்பாற்பட்டது பரம்பொருள் என விளம்புகின்றார். அப்பரம்பொருள் குருவடிவாக உருவவடிவாக இறங்கிவந்துள்ளார். இந்நிலையில் எம்பெருமான் திருப்பாதம் திருமந்திரமாக, திருஅஞ்செழுத்தாகக் காட்சி தருகிறது.

இதன்காரணமாகவே தான் இறைவன் மீது கொண்டுள்ள அளவற்ற அன்பை மனிதனிடம் காணப்படும் கீழான குணங்களைத் தம்முடையதாக ஏற்றி அதனைக் களைவதற்கான வழிகளைக் கூறியும் சிவபுராணம் முதலாக அச்சோப்பதிகம் வரையான 51 பதிகங்களைப் பாடியுள்ளார். ஆறு அங்க மந்திரங்களுள் சிகாமந்திரமாக விளங்குகின்றது திருவாசகம். மெய்ஞ் ஞானத்தவ முனிவர் மெய்கண்டதேவ நாயனாரால் அருளப்பட்ட முதல் நூலான சிவஞானபோதத்தின் எட்டாவது சூத்திரத்தில் இறைவன் குருவடிவாக வருதல் :-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்**
**தம்முதல் குருவுமாய் தவத்தினில் உணர்த்த விட்டு**
**அந்நியம் இன்மையின் அரன் கழல் செலுமே**

என்னும் சூத்திரம், மணிவாசகப் பெருமானால் அருளிச் செய்யப்பட்ட திருவாசகத்தின் பிழிவு என்றும் அருளாளர்களால் கூறப்படுகிறது.

இத்தகைய திருவாசகத்தில், இறைவனை வணங்கும்போது பக்தி உணர்வால் "மெய்தான் அரும்பி விதிர் விகிர்த்து.." எனத் தொடங்கும். திருச்சதகத்தில் வரும் இப்பாவில் அவர் மலர்ந்தருளிய ஒவ்வொரு வாக்கும் எங்களையும் பக்திப் பரவசத்துள் ஆழ்த்துகின்றது.

எம்பெருமானின் மணம் நிறைந்து வீசுகின்ற திருவடிகளை வணங்கும்போது, உடல் புளகாங்கிதம் அடைந்து நடுங்குகின்றது. கைகள் தலையின்மீது குவிகின்றன: என் கண்களிலிருந்து கண்ணீர் பெருகுகின்றது. உள்ளமானது பக்திக் கனலால் வெதும்புகின்றது. பொய்யானவற்றை யெல்லாம் தவிர்த்து மெய்ப்பொருள்வழி நிற்கும், என் நாவும் உன் புகழை வாழ்த்திக் கொண்டேயிருக்கும், கைகளோ தம்மை மறந்து குவிந்த வண்ணமே இருக்கும். (நீங்களும் ஒருமுறை பக்தியோடு சிந்தையில் வையுங்கள்)

இன்னுமொரு திருவாசகத்தில் இறைவனின் வியாபகத்தையும் அவன் உயிர்களை அனுபவப்படுத்தும் முறைமையையும் கூறுவதைக் காணலாம்.

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே

மணிவாசகப் பெருமான் உள்ளத்தை நொந்து அருளியவொரு திருவாசகம்.

**ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு**
**அன்பிலை யென்புருகிப்**
**பாடுகின்றிலை பதைத்துஞ் செய்கிலை**
**பணிகிலை பாதமலர்**
**சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை**
**துணையிலி பிணநெஞ்சே**
**தேடுகின்றிலை தெருவு தோறலறிலை**
**செய்வதொன்று அறிகிலேனே**

எந்த விதமான செயலுமின்றி துணையேயில்லாத பிணம்போல்கிடக்கின்ற நெஞ்சே! உனக்கு தில்லையிலே திருநடம் புரிகின்ற தில்லைக் கூத்தனின் திருவடிகள் மீது அன்பில்லை: அன்பு மேலீட்டால் நீ ஆடுவதுமில்லை, எலும்பு உருகிப் பாடுவதுமில்லை கூத்தனுக்காக உணர்ச்சி மிகுந்து பதைத்து எதையும் செய்வதுமில்லை, அவனை வணங்குவது மில்லை, அவனு டைய செங்கமலப் பாதங்களை தலைமீது சூட்டுவதுமில்லை. திருப்பாதங்களை மலர்கள் தூவி அலங்கரிப்பதுமில்லை. இறை நாட்டமுமில்லை. அவனுடைய திருநாமத்தை இசைத்தபடி வீதிகளில் செல்வதுமில்லை, இறைவனிடம் நாட்டமேயில்லாத உன்னை வைத்துக்கொண்டு நான் என் செய்வேன், இறையுணர்வேயில்லாத மனம் பிணத்துக்குச் சமம் என்றும், இறைவனின் துணையே எங்களுக்கு நிலையானதும் உறுதியானதுமான வாழ்வைத்தரும் என்றும் (இதை அவர் எங்களுக்காகவே) அருளியுள்ளார்.

மணிவாசகப்பெருமான் இறைவன் மீது அன்பு மீதூரப் பெற்றவர். ஆனபோதும் திருக்கோத்தும்பியில் வரும் இப்பாடலில்,

**கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை கண்டபின்**
**என்னப்ப னென்னொப்பில் என்னையு**
**மாட்கொண்டருளி**

புலால் பிறிதொன்றன்புண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வண்ணப்பணித்து என்னை வாவென்ற வான்கருணைச்**
**சுண்ணப் பொன் நீற்றற்கே சென்று ஊதாய் கோத்தும்பி**

கண்ணப்ப நாயனார் அருஞ்செயலால் அன்பின் உச்ச நிலையை அடைந்தவர். அவ்வாறான அன்பு என்னிடம் இல்லா விடினும், என் தந்தை என்னையும் ஆட்கொண்டான், அவன் கருணைமிக்கவன், வண்டுகளின் வேந்தே அவனின் திருவடிக் கமலத்தில் சென்று ஊதுவாயாக.

குழைத்த பத்து திருப்பெருந்துறையில் அருளியது. மணிவாசகப் பெருமான் தன்னை ஆட்கொண்டபின் உடல் பொருள் ஆவி அனைத்தும் இறைவன் வசம் சென்றுவிட்ட சிறப்பை

**அன்றே என்தன் ஆவியும்**
**உடலும் உடைமை எல்லாமும்**
**குன்றே அனையாய் என்னை**
**ஆட்கொண்டபோதே கொண்டிலையோ**
**இன்று ஓர் இடையூறு எனக்குண்டோ**
**என்தோள் முக்கண் எம்மானே**
**நன்றே செய்வாய் பிழைசெய்வாய்**
**நானோ இதற்கு நாயகமே**
**என்ற பாடலால் உணர்த்தி யருள்கின்றார்.**

பிடித்த பத்து :- திருத்தோணிபுரத்தில் அருளியது. முத்திக்கலப்புரைத்தல் : இறைவனைத் தொடர்ந்து இறுகப் பற்றியுள்ளார் எங்ஙனம் விட்டுப் போகமுடியும்?

**பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்**
**பரிந்து நீ பாவியேன் உடைய**
**ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி**
**உலப்பிலா ஆனந்தம் ஆய**
**தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த**
**செல்வமே சிவபெருமானே**
**யானுனைத் தொடர்ந்த சிக்கெனப்பிடித்தேன்**
**எங்கெழுந்தருளுவது இனியே**

"பிள்ளையின் பசியுணர்ந்து அன்புடன் பாலூட்டும் தாயைக்காட்டிலும் என்மீது மிகவும் தயவுகொண்டு பாவியாகிய என் உடம்மை உருகச்செய்தாய், உள்ளத்தே அறிவொளியைப் பெருக்கி அழியப்பெறாப் பேரின்பமாகிய சிவானந்தத் தேனூட்டி நான்கு புறங்களிலும் உடன் திரிந்த செல்வமே சிவபெருமானே யான் உன்னைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் இனி என்னை விட்டு நீ எங்கு எழுந்தருள முடியும்?" மாணிக்கவாசகரின் இந்த உள்ள உறுதி தான் இறைவனை அவருடன் இரண்டறப் பிணைத்தது. அவரின் பாடல்கள் இந்த இறைபற்றின் தமிழ் வரிகளாக விரிந்தன. இதனால் தான் மாணிக்கவாசகப் பெரமானின் திருவாசகம் தேனினும் இனியதாகியது. அத்தனை பாக்களுமே உள்ளத்தை உருக்கும் ஆற்றல் கொண்டவை.

**வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி**
**நெஞ்சு நெக்குருகி நிற்பவர் காண்கிலேம்**
**திருவாசகம் இங்கொருகால் ஓதின்**
**கருங்கல் மனமும் கரைந்துருகக் கண்கள்**
**தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய**
**மெய்மயிர் பொடிப்ப விதிர்விதர்ப்பு எய்தி**
**அன்பர் ஆகுநர் அன்றி**
**மன்பதை உலகில் மற்றையர் இலரே.**

எனச் சிவப்பிரகாச சுவாமிகள் திருவாசகத்தைச் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

குறிப்பு:- இருள் சூழ்ந்திருந்த எங்களையும் சற்று நீக்கம் செய்து இறைநாட்டம் கொள்ள வைத்த எம்பெருமானையும் குருவையும் வணங்குகின்றோம்.

"அவன் அருளாலே அவன் தாள் வணங்கி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


*With best compliments from:*

# IYNKARAN MOTORS
# ஐங்கரன் மோட்டோர்ஸ்

Market View, Jaffna Road, Manipay

Spare Parts for Motobikes, Three Wheelars, Waterpumbs & Bicycle

Authrized Distributers of CEAT TIRES, FEVICOL Items in Jaffna




T.P: 0215100620, 0215671073, 0215671074
E-mail: iynkaranmotors@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*



# Pillayar Stores
# &
# Madu Fancy House

*Jaffna Road, Manipai.*
*Tel: 021 222 7543*





*With best compliments from:*

# V.S.M. STORES

## வீ.எஸ்.எம். ஸ்ரோர்ஸ்

மானிப்பாய்
தொ.பே.இல: 2227771



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தர் நெறி நின்று நாமும் நலம் பெறுவோம்

**சைவப்புலவர் சின்னத்தம்பி தங்கரத்தினராசா** B.A. - ஜேர்மனி

மனிதனது மகத்தான ஆத்மசக்தியானது, அறிவுக்கருவிகளுக்கு அப்பாற் சென்று சமுதாய, உலக உயர்வுக்கு உறுதுணையாக நிற்கின்றது. அந்தச் சக்தியை உணராது உதாசீனம் செய்யும் போது துன்பமும் துயரமும் ஏற்படுகின்றன. நிலையற்ற இந்தச் சரீரத்தைத் தேராகவும் மனத்தைக் கடிவாளமாகவும் புத்தியைச் சாரதியாகவும் ஜீவனைத் தேரில் வீற்றிருப்பவனாகவும் குதிரைகளை இந்திரியங் களாகவும் அறிவாய் என யமதர்மன் கூறியுள்ளான் (கட உபநிஷத்து) நாம் எண்ணும் தீய எண்ணங்கள் பிறந்த இடமே புகலிடமாதலால் இறுதியில் நம்மையே வந்து தாக்கும். தீய எண்ணங்களை மனத்தில் புகவிடாது வைராக்கியம் என்ற எண்ணெய் விட்டுப் பக்தியாகிய திரியைக்கொண்டு ஒளிரும் ஞான தீபத்தை மனிதன் தரிசிக்க வேண்டும்.

ஆன்மாவானது விருப்பு வெறுப்பு என்ற மனத்தின் குணங்களாற் பந்தப்படுத்தப்பட்டுச் செய்வதறியாது திகைக்கின்றது. பல வியாதிகளுக்கு மன உளைச்சலும் மனச் சஞ்சலமுமே காரணமாகின்றன. மனமானது எதை மிக நேசிக்கின்றதோ அதுவாகவே அது ஆகின்றது அல்லது அதன் விருப்பம் ஒன்றே அதைத் தேடிவருகின்றது. சிறுகுழந்தைகள் பற்றற்றவர்களாக இருப்பதால் கருமங்களின் விளைவு அவர்களைத்தாக்காது. குழந்தை பாவபுண்ணியங்களுக்கு ஆளாகாது எனச் சாஸ்திரங்கள் கூறுகின்றன. சுயநலம் அற்ற இடத்தில் கர்மபந்தம் இருக்காது. கற்புள்ள மாதரருகில் யமதர்மன் கூட நெருங்க முடியாது.

விஞ்ஞான வளர்ச்சியால் காட்சிப் பொருட் களையும் கருத்துக்குத் தெளிவாவதையும் ஏற்றுக் கொள்வது தவறு. அந்தரத்தில் எறியும் பொருள் கீழே விழுகின்றது. வெளியாகிய ஆகாசமே அனைத்து அண்டசராசரத்தையும் தாங்கி நிற்கின்றது. சூட்சுமமான மனமே கருவிகளை இயக்குகின்றது. எனவே நாம் சூட்சுமத்தையும் அறியவேண்டும். திருவள்ளுவர் “உலகத்தார் உண்டு என்பது இல் என்பான் அலகையாய் வைக்கப்படும்” (அலகை - பேய்) என்கிறார். இறைவன் அமைத்துத் தந்த உலகவாழ்க்கையை முதலில் புனிதமானதாக எண்ணிப் போற்ற வேண்டும். இந்த உடல் அளவுகடந்த சாதனைகளைச் செய்வதற்கே என்பதை உணரவேண்டும். கண்மூடித்தனமாக மடிவதற்கில்லை என்பதை அறியவேண்டும். உடல்நலம் விரும்பும் ஒருவன் உயர்ந்த எண்ணங்களை வகுத்து உடலையும் உயிர்ப்பையும் அதற்காகப் பயன்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகின்றான். அவன் பழக்கவழக்கங்களில் நெறிதவறாது ஒழுகி அறிவையும் ஆக்கத்திற்குப் பயன் படுத்துகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரியும் தீயைக் கொண்டே மற்றொரு தீபத்தை ஏற்றமுடியும். அதேபோல், ஆத்மஞானியால்தான் மற்றொருவருக்கு ஆத்மஞானத்தை உபதேசிக்க முடியம். அட்டாலும் பால் சுவையிற் குன்றாததுபோல் நல்லோர் சேர்க்கை நற்பலனையே தரும். (ஔவையார் மூதுரையில்)

அதிக போகமும் அதிக சுகமும் அதிக மரியாதையும் மிகவும் அச்சத்திற்குரியவை. இவற்றிற்குப் பின்னால் நோய், துயரம், அவமானம் காத்திருப்பதை உணரவேண்டும். கப்பல் கடலில் மிதக்கலாம். ஆனால் கப்பலுக்குள் தண்ணீர் புகுந்துவிடக்கூடாது. மனிதன் உலகில் வாழலாம். அவன் உள்ளத்தில் பேராசை நுழைந்து விடக்கூடாது. பலகோடி பெறுமதியான இரத்தினக்கல்லாக இருந்தாலும் அதற்கான இன்பம் நிலைப் பதில்லை என்பதை உணரவேண்டும். இளமையில் விருந்தினர் போல் அவ்வப்போது தோன்றும் நோய்களும் துயரங்களும் வயது முதிர்ந்தவுடன் குடும்ப அங்கத்தவர்களாகித் தங்கிவிடுகின்றன. மனித சமுதாயம் வாழத்தெரியாமல் வாழ்ந்து விதியின் கைப்பொம்மையாக இழுத்துச் செல்லப் படுகினறது. அவர்களின் தனிமனித ஒழுக்க மீறல் சமுதாய ஒழுக்கமாக மாறுமிடத்து அதை அனுமதிக்கும் மக்கள் கூட்டத்தை அவர்களின் போக்கில், அனுபவிக்கவிட்டுப் பின்னர். இயற்கையே தாங்கமுடியாத சீற்றம் கொண்டு ஒட்டுமொத்தமாகப் பழிவாங்குவதைக் காணலாம். காரைச்சித்தரின் கலியுகத்தின் காலநெறிபற்றிய பாடலில் இதையறியலாம்.

**தீராத புயல்களெல்லாம் தினமுண்டாகும். தீக்கக்கு எரிமலைகள் சிரிப்புக் கூடும், தேராத நோய்களெல்லாம் தினமுண்டாகும், திசை கலங்கும் பூகம்பத் திறமே சாடும்**

**நேரான நெறியெல்லாம் நடுங்கி ஓடும் நெறியில்லா நெறியெல்லாம் நிறைந்தாடும்**

**போராகக் குருதி கொப்பளித்துப் பொங்கும் புகையாகப் புவன வளம் புதைந்து போகும்**

நெறியைப்படைத் தான்
நெரிஞ்சில் படைத் தான்
நெறியில் வழுவின்
நெரிஞ்சி முட்பாயும்
நெறியில் வழுவாதியங்க வல்லார்க்கு
நெறியின் நெரிஞ்சில் முட் பாயகிலாவே -

(திருமந்திரம்)

சூரியன் உலகை அளக்கின்றான். அவனால் காலம் கணிக்கப்படுகின்றது. நாழிகை நாட்கள் எனக்கழியும், காலம் வாரங்கள் வருடங்கள் என வளர்ந்து வழிந்தோடுகின்றது. கடந்தகாலத்தை எவராலும் வருவிக்க முடியாது. சமுத்திரத்தை அடைந்த நீருக்கு அதற்கு மேல் ஓட்டம் இல்லை. அன்னை தந்தையரை மாற்றி அமைக்க முடியாது. எல்லாவற்றையும் விழுங்கும் ஆற்றல் காலத்திற்கு மட்டுமே உண்டு. மனிதன் காலத்தின் கைதி. அது நில் என்றால் நிற்க வேண்டும். அமர் என்றால் அமரவேண்டும். எல்லாம் மாறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மாற்றம் ஒன்று மட்டுமே மாறாது உள்ளது. மாற்றத்திற்குப் பின்னால் ஓடுவதைத் தவிர மனிதனுக்கு வேறு வழியில்லை. இம்மாற்றத்தை நிர்ணயிக்கும் ஆற்றல் காலத்திற்கு மட்டுமே உள்ளது.

அருள் நூலாகிய ஆகமமும் அறநூலாகிய வேதமும் பிறநூல்களும் சிவயநம என்ற திருவைந்தெழுத்தின் பொருளை விளக்குகின்றன. பொதுநூலாகிய வேதம் உண்மையை ஓரளவாகவே உணரவல்ல உலக மாந்தர் பொருட்டும் சிறப்பு நூலாகிய ஆகமம் உண்மையை முற்றாக உணரவல்ல சத்திநிபாதர் பொருட்டும் ஆக்கப்பட்டன. சைவசித்தாந்தம் ஆன்மா (ய) நம என்ற பாசத்தை விட்டு அருளின் (வ - திருவருட்சக்தி) துணையால் ஆனந்தத்தை (சி - சிவம்) அடைதலே பேறெனக் கூறுகின்றது. சி - பேசா எழுத்து (அசபை - செபிக்கப்படாதது) வ பேசும் எழுத்து தமிழ் மரபு சிவ என ஓதுதல். தோன்றி அசைதலாகிய விந்து, அதன் புடைப்பெயர்ச்சி ஒலியாகிய நாதம், அதன் வண்ணவடிவமாகிய வரி அட்சரத்தின் சகரமெய் என்னும் ச், அதன் குணங்களை வெளிப்படுத்தும் ஆதிசக்கரமாகிய பிரணவமூல அகரம், இதைத் தன் வண்ணச் சுபாபத்தோடு வெளியில் தோன்றச் செய்வித்து விளங்கும் அருட்பிரணவமாகிய இகரம் ஆகக்கூடிய விந்துக்கள் ஐந்தும் ஒருருவமாகிச் சிகரமாகிற்று என்பது அருளாளர் கூற்று. ஞானநெறியில் நில்லாதவர் நாயைப் போற் குரைப்பர். அப்படிக் குரைப்பதை ஒழித்து மௌனத்தை ஏற்படுத்தும் மந்திரம் சி என்பதை திருமூலர் நாயோட்டு மந்திரம் என்று கூறி விளங்க வைத்தார். ஆற்றுவழிச் சென்று அலை கடலில் பாய்ந்த நீர் தன் இயல்பான தன்மைகெட்டுக் கடல் நீரின் தன்மை ஏற்கும். இதேபோல தன்முனைப்பற்று சிவப்பரம் பொருளுடன் ஒன்றி அவன் திருவடிகளையே சிந்தித்திருப்பார்க்கு அவர்கள் அறிவு புலன்வழிச் செல்லாமலும், பசுகரணம் அல்லாமலும் சிவகரணமாகவே விளங்கும். ஆதிசங்கரர் இறந்துபோன ஒரு குழந்தையை "நான் எழுப்பித் தருகின்றேன்" என மூன்றுமுறை மந்திரம் செபித்து நீர் தெளித்தும் குழந்தை ஏழவில்லை. இங்கு "நான்" என்னும் தன்முனைப்பே பசுகரணமாக நிற்பதையும் நாயன்மார்களின் ஆற்றல் இறைவன் திருவருளால் நடந்தேறட்டும் என்ற நினைப்பு பசுகரணம் கெட்டு சிவகரணமாக நிற்பதையும் காண்க.

தரையில் இருந்தே தேவையான உணவு, பொருட்கள் கிடைக்கின்றன. அதன் ஈர்ப்பே எம்மை நிற்க நடக்க உதவுகின்றது. இருட்டில் ஒளிதோன்றி எப்பொருளையும் காட்டுகின்றது. இவற்றை நாம் எவ்வாறு சிந்தியாது இருக்கின்றோமோ அதேபோல் எங்கும் வியாபித்து எமக்கு ஆதாரமாக இருக்கின்ற திருவருளை உணர்வதில்லை.

பரமில்லாதது எவ்விடம்<br>
பரமிருப்பது எவ்விடம்.<br>
அறமிலாத பாவிகளுக்கு<br>
பரமிலையது உண்மையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரமிருந்தும் பொருளிருந்தும்
அருளிலாத போதது,
பரமிலாத சூனியமாம்
பாழ் நரகமாகுமே.

(சிவவாக்கியர்)

உலக வாழ்க்கையில் அல்லலுறும் மக்களுக்கு ஆறுதல். மனச்சாந்தி, நம்பிக்கை தருவனவாகவும் தேவைகளை நிறைவேற்று வனவாகவும் இறைவன் கருணையால் உருவாகிய அனுக்கிரக மூர்த்தங்கள் அமைந்திருக்கின்றன. தெய்வீகக்கதைகள் ஒழுக்கம், தன்னடக்கம். பக்தி, வைராக்கியம் என்பவற்றை வழங்குகின்றன. அருவமான இறைவன் தம் சொரூபநிலையில் நின்று இறங்கித் தேவர்களையும் ஆகர்சிக்கும் ஜோதியான லிங்கமூர்த்தியான நின்ற காட்சி அடிமுடிதேடிய படலம். கடவுளை அன்பு மயமாகப்பாவனை செய்து அவனை அன்பால் அடையச் செய்யும் பக்தி மார்க்கத்தில் கடவுளைக்காண முயல்பவர்கள் பக்தர்கள். இவர்கள் அருளைக் குறிக்கோளாகக் கொண்டு மனமாரத் துதித்துப் பக்தியில் உறைந்து நிற்பவர்கள்.

. முனிவர்கள் வேதவழியில் நடப்பவர்கள், மந்திர உபதேசம் பெற்று யாகம் வளர்த்து வரம் பெற உழைப்பவர்கள். தர்மநெறிதான் இவர்கள் நெறி, ஆயினும் பெயர் புகழ் வேண்டும் என்று எண்ணுபவர்கள், ஒருவன் ஊருக்கு நலம் வேண்டிச் செய்வது யாகம். தனக்காகச் செய்வது ஹோமம், இவை குறைவற நிறை வேறினால் அதன் பயன் கிடைக்கும்.

சிவனைக்கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள், சிவசாரூப்பிய நிலையை நிலை நிறுத்து பவர்கள் இவர்கள், இவர்களுக்கு உடம்பு தான் ஆலயம். உடம்பை வளர்த்து அதன்வழி உயிரை வளர்ப்பவர்கள். வரங்களுக்காகத் தவம் இருப்பது இவர்கள் செயலல்ல. தன்னை அறிந்தால் போதும் தானாகத் தெய்வம் அறியும் நிலை வந்துவிடும் என்பது இவர்கள் சித்தாந்தம்.

சைவம் ஆருக்கடி அகப்பேய், தன்னை அறிந்தவர்கே

சைவம் ஆனவிடம் அகப்பேய், சற்குரு பாதமடி (அகப்பேயச்சித்தர்)

சித்தனுக்கு எல்லாம் ஒன்று. சித்தர்கள் மருத்துவம், அறுவைச்சிகிச்சை, சோதிடம். கப்பல் கட்டுவது ஆகியகலைகளில் வல்ல வர்கள். சித்தமருத்துவத்தை ஞானத்தாலும் உழைப்பாலும் உயர்த்தியதுடன் உலகம் வாழ எழுதியும் வைத்துள்ளனர். இவர்கள் சீனா, மக்கா, மதினா. ரோமாபுரி வரை சென்றவர்கள்.

தமிழ் மண்டலம் ஐந்தும் தாவிய ஞானம், உமிழ்வது போல உலகந் திரிவார் அவிழு மனமும் எம் ஆதி யறிவுந். தமிழ் மண்டலம் ஐந்தும் தத்துவமாமே (திருமந்திரம்)

சித்தாந்தம். வேதாந்தம். சன்மார்க்கம். பூசைவழிபாடு என்ற எல்லாம் இறையருள் பெறவுதவும் திருநெறிகளாகும். சைவசித்தாந்த நெறியே தமிழ்ச் சான்றோர் சென்ற நெறியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

அகில இலங்கை சைவப்புலவர் சங்கப் பொன்விழா மலர்
சிறப்புற மனமுவந்து வாழ்த்துகின்றோம்.



# வீ.எம்.கே. ஜீவல்லறி

உங்களது பழைய நகைகளைக் கொடுத்து உடனுக்குடன்
புதுப்பொலிவுடன் திகழ அசல் 22கரட் தங்க நகைகளைத்
தெரிவு செய்ய இன்றே நீங்கள் நாடவேண்டிய இடம்



வீ.எம்.கே. ஜீவல்லறி
105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

*With best compliments from:*

அகில இலங்கை சைவப்புலவர் சங்கப் பொன்விழா மலர் சிறப்புற மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

ACF


## புரோமோல்ற்

அதி உன்னத
புரதப் பானம்




## சிவன் மாளிகை

அலுமினியம், பித்தளை, எவர்சில்வர், எனாமல்,
பிளாஸ்ரிக், வீட்டுப்பாவனை பொருட்கள்
மற்றும் கோவில் சாமான்களையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்வதற்கு
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்



சிவன் மாளிகை லிமிடட்
116, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் - 021 222 2996
மின்னஞ்சல் - visvakarma@shnet.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கை சைவப்புலவர் சங்கப் பொன்விழா மலர்
சிறப்புற மனமுவந்து வாழ்த்துகின்றோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருக வழிபாட்டில் சைவசித்தாந்தம்

**இளஞ்சைவப்புலவர் சிவானந்தஜோதி ஞானசூரியம்**
மட்டக்களப்பு - மண்டூர்

சைவசித்தாந்தம் என்பது சைவம் + சித்தாந்தம் எனும் இருசொற்களின் இணைவாகும். சிவசம்பந்தமானது என்பார் திருமூலர். சித்தாந்தம் சைவ சமயத்தின் தெளிவுண்மையாகும். சமயத் துறையின் பூரணம் சித்தாந்தம். பல கோணங்களிலிருந்து ஆய்வு செய்யப்பட்டு தர்க்க ரீதியாக எது நிறுவப்படுகிறதோ அதுவே சித்தாந்தம் எனப்படுகிறது. சித் என்பது அறிவு, அந்தம் முடிந்தமுடிவு. ஆக சைவ சித்தாந்தம் சிவத்தோடு தொடர்புடைய அறிவின் முடிந்த முடிவு என்று பொருள்படும்.

"எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னிய அரன் தாள் மறவாமை பொருள்" எனக்கூறும் சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையைக் கூறுகின்றது.

சிவபெருமான் முழுமுதற் கடவுள் ஆதலால் ஏகன் ஆகிறார். உயிர்கள் உய்வதற்காக ஐந்தொழில் ஆற்றும் நிலையில் அனேகன் ஆகிறார். சித்தாந்தம் ஆகமத்தின் முடிவு. அதன் விளக்கத்தின் தெளிவு சித்தாந்தம். சைவம் பற்றிக் கூறுபவை ஆகமங்கள். அவை கூறும் கிரியைகள் சிவசம்பந்தமானவை.

இந்த வகையில் கந்தபுராணத்தில் முருகனின் தோற்றத்திலே சைவ சித்தாந்தம் பின்னிப் பிணைந்துகிடக்கிறது. **"அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்ப் பிரமமாய் நின்ற சோதிப் பிளம்பதோர் மேனியாகிக் கருணை கூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய"**

எனும் கந்தபுராணப் பாடலில் கூறப்பட்டது சிவனின் அம்சங்கள், அதாவது அருவம், உருவம், அருவுருவம், ஆகின்றது சிவதத்துவம், எனவே தத் + துவம். தத் - உள்ளது. துவம் - தன்மை. உள்ளதன்மை எனப்படும். உள்ளதன்மை என்றால் "உண்மை" எனவே தத்துவவிளக்கம் சொல்லாலும் சைவ சித்தாந்தம் உண்மை விளக்கம் எனப்பட்டது.

உண்மை - "மை" விகுதி அது தன்மை அல்லது இயல்பைக் குறிக்கும் இயல்பாக உள் ள பொருளைக் கூறுவது உண்மை. அதாவது பொருளின் முதற்காரணம் பற்றிய சிந்தனையாகும். சைவ சித்தாந்தம் கொள்ளும் கடவுள் உயிர், ஆணவம், கன்மம், மாயை என்னும் ஐந்து பொருள்கள் பற்றிய சிந்தனையே தத்துவம் ஆகும். இவற்றில் ஓரிரு பொருளை மட்டும் சிந்திப்பது தத்துவமாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகனின் தேவியார் தெய்வானை, கிரியா சக்தியையும் வள்ளி இச்சா சக்தியையும் குறிப்பது யான். எனது என்ற அகந்தை அற்ற அடியவர்களிடம் முருகன் தானே வந்து அருள் புரிவான் என்ற தத்துவத்தை விளக்குவது ஆகும். மயில் ஆகிய வாகனம், ஆணவத்தையும் கொடியாகிய கோழி சிவஞானத்தையும் குறிப்பன. முருகன் ஆன்மாவின் ஆணவத்தை அடக்கும் அடையாளமாகவே மயிலை வாகனமாகக் கொண்டுள்ளார். ஆணவமாகிய மயிலை கீழ் அடக்கி அதன் மீது அமர்ந்து திருவருளாகிய சிவ ஞானத்தை கொடுத்து ஆன்மாக்களை உயர்பதம் அடையச் செய்பவர். தாம் என்பதைக் குறிக்கும். சிவஞானம் என்ற கோழியை வெற்றிக் கொடியாகப் பிடித்துள்ளமை சித்தாந்த சாரமே எனப் பொழிப்புடையதாகிறது. அதுமட்டுமல்ல, கோழி கூவுவதன் பொருள் கொக்கு + அர + கோ கொக்கரக்கோ. கொக்கு என்றால் மாமரமாகிய சூரபத்மன். அர - அறுத்த, கோ - அரசன் எனப் பொருள்படும். எனவே மாமரமாய் நின்ற சூரனை அறுத்துத் தேவர் துயர் நீக்கிய முருகன் முன்னம் தன் திருப்பெரு வடிவத்தைக் காட்டியபோது சூரபத்மன் சிவனின் திருப்பெரு வடிவமாகிய பரமேஸ்வர வடிவத்தைக் கண்டதும்,

"போயின அகந்தை போதம் புகுந்தன வலந்த தான
தூயதோர் தோழும் கண்ணும் துடித்தன புவனமெங்கும்
மேயின பொருள் கண்முற்றும் வெளிப்படுகின்ற விண்ணோர்
நாயகன் வடிவங் கண்டேனற்றவப் பயனிதன்றோ"

எனக் கந்தபுராணத்தில் சூரபத்மன் நிலையை கூட்டியதும் அகிலாண்டம் முழுவதுமே பரமேஸ்வரனுக்கு வடிவமாகுதல் அவையாவும் முருகனுடைய திருப்பெருவடிவம் வெளிப்பட்டு நின்றதும் இது நான் முன்பு செய்த தவத்தின் பயனன்றோ என்றதும் வினையின் ஈட்டம் முற்பிறப்பு, மறுபிறப்பு எனக்கூறும் சைவ சித்தாந்த இணைப்பு வெளிப்படுவதை அறியலாம்.

அடுத்த கண்ணோட்டத்னின்று நோக்கும் போது ஆறுமுகம் பிரணவத்துடன் கூடிய அஞ்செழுத்தின் அறிகுறி என்றும் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, மேல், கீழ் என்னும் ஆறினும் நிறைந்து நிற்கும் சிதாகாச வடிவத்தை அறிவுறுத்துவதென்றும் அது சைவ சமயப் பொருளை விளக்குவதென்றும் சொல்லப்படுகின்றது. இதன் ஸ்ரீ தத்துவ நிதி என்ற நூலில் மூன்று கண்ணுடைய விபூதி தரித்தவராகவும், கரத்தில் புஸ்பபாணக் கரும்புவில், கத்தி, கேடயம், வச்சிராயுதம், சேவற் கொடி சிவந்த மேனியுடையவராயும் ஆறுமுகமும் ஆறுகுணமும் உடையவராகவும் முருகன் காட்சி தருகிறார் எனக் கூறப்படுகிறது.

அதுமட்டுமல்ல முருகன் சிவபெருமானின் பஞ்ச கிருத்தியத்தையும் காட்டி நிற்கிறார் என்றும் கூறப்படுகிறது. அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவற்கொடி படைத்தலையும், மயில் வாகனம் - காத்தலையும், சக்திவேல் அழித்தலையும், வள்ளியம்மை - மறைத்தலையும், தெய்வானை - அருளலையும் குறிக்கிறது. எனவே சிவ பெருமானைப் போன்று மதிக்கப்பட வேண்டியவர் ஆவார். சைவ சித்தாந்த இறைவனுக்கு எண் குணங்களைப் போன்று முருகனுக்கு ஆறு குணங்கள் என்றும் சர்வஞ்ஞத்துவம் - முற்றறிவு, பரிபூரணத்துவம், எங்கும் நிறைந்தவர், அநாதி பேதம் - இயல்பாகவே பாசங்களி நின்றும் நீங்குதல், அலுப்த சக்தி - பேரருள் உடைமை, சுதந்திரத்துவம் - தன் வயத்தனாதல், அனந்த சக்தி - முடிவில் ஆற்றலுடமை என சிவனைப் போன்ற ஆறு குணத்தை உடையவர் என்பதை கருத்தில் கொண்டு சைவ சித்தாந்த இறைவனே முருகன் என்றும் அவர் சிவனன்றி வேறல்லரே என்ற துணிவும் பெறப்படுகிறது. "தனக்கு தானே மகனாகிய தத்துவம்" என்றும் தணிகைப் புராணம் கூறுகிறது. இதனைக் கந்தபுராணம் **ஆதலின் நமது சக்தி ஆறுமுகன் அவனும்யானும் பேதகமன்றால் நம்போல் பிரிப்பிலன் யாண்டும் நின்றான். ஏதமில் குழவி போல்வான் யாவையும் உணரும் நீரான் போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருளவல்லான்** - என்கிறது.

சிவம், சக்தி ஆகிய இரண்டும் ஒன்றுபடும் சித்தபிரம நிலையே சுப்பிரமணியம் என்று சொல்லப்படுவதிலும் ஆறுமுக வண்மை யுண்டு. சிவபெருமானின் ஐந்து முகமும் சக்தியானது ஒருமுகம் சேர்ந்த அதோ முகமாகவும் ஐம்புலனும் ஒன்றப்பெறும் சான்றோரிடம் காணப்படும். (சிற்சக்தி) ஆறாவது அறிவுக்கு பொருளாவது அதைத் தான் "அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்" என்று கூறிய நக்கீரர் இந்த அதோமுகத்தையேயாகும். சிவபெருமான் அருள்பாலிக்கும் சோமாஸ்கந்த மூர்த்தத்தை எடுத்துக் கொண்டால் சிவபெருமானின் சச்சிதானந்த (உண்மை, அறிவு, ஆனந்தம்) மயமாய் இருப்பதை தாய், தந்தை, சேய் என்று புராணம் கூறும். சத் என்ற உண்மையைச் சிவம் என்றும். சித் என்ற அறிவைச் "சக்தி" என்றும், ஆனந்தம் என்ற இன்பத்தை "முருகன்" என்றும் கூறி இம்மூன்றும் ஒன்றிணைந்த இவ் வுண்மையை உலகோர்க்கு உணர்த் துவதே சோமாஸ்கந்த மூர்த்தம் என்பர். இதனடிப்படையினும் சைவ சித்தாந்த உண்மை புலப்படுகிறது. நமசிவாய, சிவாயநம எனும் மந்திரம் போல் முருகவேளுக்கு மந்திரம் ஆறு எழுத்து சடாட்சரம் எனப்படும் குமாரயநம என்பது தான் ஆறு எழுத்து என கூறுவர் நச்சினார்க்கினியார். இதை சரவணபவ என்றும் கூறலாம்.

இனி சிவம், சக்தி, முருகப் பெருமான் இம்மூவரும் ஒரே நிலையில் வழிபாடாற்றத் தக்கவர்கள் என்று வேதசிவாகமங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணங்களும் கூறுகின்றன. முருகப் பெருமான் சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியவர். நெற்றிக் கண் ஞான சக்தியாதலால் "ஞானஸ்கந்தன்" என்றும் பெயர் பெறுகிறார். ஞானசக்தி ஸ்வரூபாகிய முருகப் பெருமான் மற்றைய இச்சை, கிரியை ஆகிய இரு சக்திகளையும் முறையே வள்ளி, தெய்வானை என்ற இரு மனைவியர்களாக தம்முடன் இருத்திக் கொள்கிறார். இவர் சிவ பரம் பொருளுக்கு ஒப்பான நிலையில் இருப்பதால் இவருடைய வழிபாடு முறைகளும் சிவவழிபாடுகள் போன்றே அமைகின்றன.

"மந்திரபேதோ பவேதந்ர க்ரியாபேதோ ந வித்யதே" இக்காரணங்களாலேயே நாவுக்கரசர் "நம் செந்தில் மேய வள்ளி மணாளருக்கு தாதை கண்டாய்" என்றும் "நம் கடம்பனை பெற்றவள் பங்கினள் தென் கடம்பை திருக்கரக் கோயிலான்" என்றும் "நஞ்சுண்ட பரமனது குருவான தெய்வமே" என்றும் குறிப்பிடுகின்றார்.

சிவனைப் போன்று குமாரன் என்று சிறப்புப் பெயர் அவருக்கு உண்டு. இதன் பொருள் சிவபெருமானுடைய குமாரா என்று சொல்வர் "கு" என்றால் "பூமி", "மா" என்றால் "லக்ஷ்மி", "ர" என்றால் "கொடுப்பர்" தம்மை வழிபடுபவர்களுக்கு நிலபுலன்கள், லக்ஷ்மி கடாட்சம் ஆகியவற்றை கொடுப்பதால் குமாரர் எனப்படுவார்.

**முடிவுரை**

இவை மட்டுமல்ல முருக வழிபாட்டில் சைவசித்தாந்தம் எனும் தலைப்பில் எடுத்து நோக்கும் இடத்து அருணகிரி நாதருடைய திருப்புகழில் "அருணதள பாத பத்மம் அனுதினமுமே துதிக்க அரிய தமிழ் தானளிந்த மயில்வீரா" எனும் போது சாரூபமுத்தியை முருகனிடம் வேண்டு கிறார். "உருவாய் அருவாய் உளதாய் இலதாய்" எனும் கந்தரனுபூதியில் சைவசித்தாந்தம் காட்டும் உருவம் ஆகிய "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" எனக் கூறி சைவ சித்தாந்த இறைவனே நீ வருக என அழைக்கிறார். "வித்தகா ஞான சத்தினிபாதா வெற்றி வேலாயுதப் பெருமாளே" எனக்கூறி சைவ சித்தாந்தத்தின் சந்நிதிபாத முத்தியினை கேட்கிறார்.

எனவே உலகம் சிறிய வீடாக மாறிவிட்ட கால கட்டத்திலும் சைவ சித்தாந்த அறிவு அவசியமா என்றால் அவசியம் மட்டுமல்ல அவசரமும் கூட எனத் தோன்றும் அளவிற்கு சைவ சித்தாந்தம் முருக வழிபாட்டில் மட்டுமல்ல எமது அன்றாட வாழ்விலும் சித்தாந்த அறிவு அவசியம் எனக்கூறி சித்தாந்த வழி தொடர்வோமாக!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கப் பொன்விழா சிறக்க வாழ்த்துகின்றோம்.

**வீட்டுப் பாவனை, அலுவலகப் பாவனை போன்ற எல்லா வற்றுக்குமான மின்சார உபகரணங்களை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

**வீடுகளில் நேரடியாக மின் இணைப்புக்களையும் செய்ய நாடுங்கள்**



# சுந்தர்சன்

**மின் சாதன விற்பனையாளர்களும் ஏக விநியோகஸ்தர்களும்**

**பிரதான வீதி, மானிப்பாய்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப்புலவர்கள் சைவம் பிரகாசிக்க
சிவநாதம் வாழ்க



# ஈசன்

## பல்பொருள் வாணிபம்

சந்தையடி, பிரதான வீதி
மானிப்பாய்

உரிமையாளர்
செல்லத்துரை கேதீஸ்வரன்

சைவப்புலவர்கள் சைவம் பிரகாசிக்க
சிவநாதம் வாழ்க



# சிவசம்பு

## களஞ்சியம்

# Sivasamboo

## Stores

இல.3, மின்சார நிலைய வீதி,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

*No.3, Power House Road, Jaffna*

# Student Visa

## Visit Visa & Migration

**Student / Visit / Schengen Visa**
**UK/Canada/Australia/Netherland/New Zealand/Malaysia/Ireland**
**Reject / Refusal visa க்கள் பரிசீலனை செய்து தரப்படும்**

- புதிய வீசா விதிகளுக்கமைய Visa Process மிக திறமையாக செய்து தரப்படும்.
- 15 வருட அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் மூலம் ஆவணங்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.
- அங்கீகாரம் பெற்ற College / University அனுமதி. Sponsor வசதி பெற்றுத்தரப்படும்.

**Australia Migration ►►**
**Business & Skill** • Engineers • Accountants • IT Degree holders

**EUROPEAN TECHNOLOGY & BUSINESS COLLEGE**
No. 22A, Frankfort Place, Bambalapitiya, Colombo -04, Srilanka.
Tel : 011 2508443 / Mob : 0777 849 853,
Web : www.etbclanka.com
E-mail : etbc@etbclanka.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகத்தில் அச்சோப்பதிகம்

**சைவப்புலவர் சந்திரா கோகிலன்** (ஜேர்மனி)

இறைவன் யார்? இறைவனின் தன்மை என்ன? அவனின் குணம் என்ன? இறைவனுக்கும் எனக்கும் என்ன தொடர்பு? நான் எவ்வாறு இறைவனை அடைய வேண்டும்? நான் எவ்வாறு அவனை வணங்கவேண்டும், நான் எவ்வாறு அவனுடன் இணைய வேண்டும்? என்ற கேள்விகளுக்கு விடையாக அமைந்ததே திருவாசகமாகும். தன்னை ஆட்கொண்டருளிய பின் மீண்டும் அந்த அன்பைத் தேடி அலைந்து உருகிய நிலையில் பாடப்பட்ட பாடல்களே திருவாசகமாகும். பக்தி நிறைந்த உருக்கமான இப்பாடல்களில் மயங்கி இறைவனே நேரில் வந்து எழுதியதாக திருவாசகத்திற்கு வரலாறு உண்டு. இதனையே அகச்சான்றாக "மெய்த்தவ வாதவூரன் விளம்பிட எழுதும் இந்தப்புதகம் மன்றுள் ஆடல் புரிந்தவன் எழுத்து" என அருளியிருப்பதைக் காணலாம்.

வாழும்போதே இறைவனைக்காண முடியும் என திருவாசகத்தின் கடைசிப் பதிகமான அச்சோப்பதிகத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் உரைத்ததன் மூலம் எடுத்த இப்பிறவியிலேயே இறைவனை அடைய முடியும் எனும் தத்துவத்தை விளக்கியுள்ளார். தேவர்கள் கூடக் காணமுடியாத இறைவனை மனிதப்பிறப்பில் மட்டுமே காணமுடியும் என்ற மிகப்பெரும் பேற்றினால் "அரிது அரிது மானிடராதல் அரிது" என ஔவைப்பாட்டியும் "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மானிலத்தே" என அப்பர் சுவாமிகளும், "கல்லாய், மனிதனாய், பேயாய் கணங்களாய்... செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள் எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான் மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்" என மாணிக்க வாசக சுவாமிகளும் இறைவனின் கருணையையும் அக் கருணையின் பெருக்கால் அவர் பெற்ற அளவற்ற இன்பத்தையும் பாடியிருப்பதைக் காணலாம்.

அச்சோப்பதிகத்தின் முதற்பாடலாக வரும்

"முத்திநெறி அறியாத
மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப்
பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே

எனும் பாடலில் முத்திக்குரிய வழி என்னவென்றே தெரியாதவர்களுடன் திரிந்த தன்னை பக்திக்குரிய வழியில் நிற்கவைத்து, மலத்தால் மயங்கி நின்ற தன் சித்தத்திலே, மலத்தை நீக்கி சிவத்தையே வைத்து தன்னை ஆட்கொண்ட அதிசயத்தை இயம்புகின்றார். இவ்வாறாக இறைவன் அவருக்கு அருள் புரிந்து ஆட்கொண்ட சிறப்பையும், இதனூடாக அவர் சிவபெருமான் மீது நெக்குருகிப் பாடும் திருவாசகம் கோயில் திருப்பதிகத்தில்

"மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்தமுதே
ஊறி நின்றென்னுள் எழுபரஞ்சோதி
உள்ளவா காணவந்தருள்வாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடையஅன்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையினின்றும் விலக்கி என்னை ஆசையில் மயக்கும் வஞ்சனையைச் செய்கின்ற ஐம்புலன்களையும் அடைத்து என்னுள் சுரந்து நின்று தோன்றுகின்ற அமுதமே, தேனே, தெளிவே, சிவபெருமானே முடிவேயில்லாதவனே வாக்குகளுக்கு அப்பாற்பட்டவனே இன்பமே வடிவானவனே என்னன்பே என இறைவனால் இன்ப அனுபவத்தைப் பெற்ற அவர் மீண்டும் அந்த இன்ப அனுபவத்தை எண்ணி எண்ணி இறைவனைப் புகழ்ந்து போற்றும் இது போன்ற பாடல்களில் உள்ள உருக்கமும் ஏக்கமும் இவ்வாறான திருவாசகப் பாடல்களைப் பாடும் எங்களுக்கும் இறைவன் மீது அன்பையும் வழிபாட்டையும் உண்டாக்குகின்றது என்று கூறினால் அது மிகையாகாது.

முத்திநெறி அடைதல் எனும் தத்துவத்தினை சைவ சித்தாந்த சாத்திரங்கள் மேலும் அழகுற விளக்கியிருக்கின்றன.

"நின்ற சிவம் ஒன்று அதனைத்தேர்தல் ஞானம் திகழ் தருபோதம் தேர்ந்தவை தெளிதலாகும்"

எம்பெருமான் ஒருவனே. அவனின் ஞானத்தில் மூழ்கி திழைத்தலே முத்தி என திருவாதவூரர் புராணத்தில் கடவுள் மாமுனிவரும், "ஞானத்தால் அரனை அர்ச்சிப்போர் வீடெய்தல் அறிந்தோர் "எனவும்" ஞானத்தால் வீடென்றே புராணங்களும் ஆகமங்களும் சொல்லும், "ஞானம் வரப்பந்தமறும் எனக் கூறுவதும் இதனை ஒட்டியே அமைந்தது. பந்தம் என்பதை பாசம் எனவும் தளை எனவும் கருதுவர். கந்தபுராணத்தில் "சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம் பொருள் மூன்றுள ஆன்றதோர் தொல்பதி, ஆருயிர் தொகை, வான் திகழ்தளை" என்பார். இங்கு தளை பாசத்தைக் குறிக்கும். பாசம் எனும் போது அது ஆணவம், கன்மம், மாயை என்பனவற்றைக்குறிக்கும். ஆணவம் முனைப்புக் கொள்ளும் போதே பிறப்பானது தோற்றம் பெறுகின்றது.

"ஆர்பெறுவார் அச்சோவே" என எட்டடி கொண்ட பாடலாக அமையும் இம்முதற்பாடல் தொடங்கி இறுதி ஒன்பதாவது பாடல் வரையும் ஒவ்வொரு பாடலின் இறுதி அடியும் ஆர் பெறுவார் அச்சோவே என முடிகின்றது. இங்கே அச்சோ என்பது அச்சன் எனும் சொல்லின் ஈறுகெட்டு வந்தது எனவும், இங்கே அச்சோ என்பது அரசன் தந்தை எனக் கருதப்படும் எனவும். ஆச்சரியத்தை, அல்லது வியப்பைத்தரும் சொல் எனவும் இது என்ன அதிசயம் எனவும் கருதுவர்.

யாரும் காண அறிய முடியாதவன். அவனது கூத்தையும் அறியமுடியாது. குறி ஏதும் இல்லாதவன் எனினும் அவன் தன் திருவடியை எனக்குக் காட்டியருளினான். இத்தகைய பெருமையை, கொடையை யார் பெறுவார் தந்தையே. இதற்கு நான் என்னதவம் செய்தேன். இது என்ன வியப்பு என உருகும் நிலையினையும் இப்பாடல் விளக்குகின்றது

"நெறியில்லா நெறிதன்னை
நேறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே
திருவருளே சேரும் வண்ணம்
குறியொன்றும் இல்லாத
கூத்தன்தன் கூத்ததையெனக்
அறியும் வண்ணம் அருளியவாறு
ஆர் பெறுவார் அச்சோவே" என்பதை

இவ்வச்சோப்பதிகத்தில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லுதமிழ் எங்கே சுருதியெங்கே - எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்க ளெங்கேப்ர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே அறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப்புலவர் கடன் இதுவே

**பேராசிரியர் இ. குமாரவடிவேல்**

தலைவர் பௌதிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்

அன்பான சைவப்புலவர்களே!

எமது சமயம் பற்றிக் கற்றுத்தேறிய உங்களிடம் சைவ சமயத்தவர்களாகிய நாம் எதனை எதிர்பார்க்கின்றோம் என்பது பற்றிய எனது கருத்துக்கள் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணுகின்றேன்.

உங்களில் பெரும்பான்மையினர் சைவ சமயம் கற்பிக்கும் ஆசிரியர்களாக நியமனம் பெறுவீர்கள். ஆசிரியத் தொழில் ஒரு பெருங் கௌரவமான தொழில். ஆசிரியர்கள் தான் புதிய சந்ததியை வடிவமைப்பவர்கள். சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய முகவர்கள் ஆசிரியர்களே. இவ்வாசிரியர் களுள்ளும் சமயம் கற்பிக்கும் ஆசிரியர்களது பணி முக்கியமானதும் மகத்தானதுமாகும். சமயக் கல்வி பாடசாலை மாணவர்களிடையே ஆன்மீக உணர்வை ஊட்டவும் அவர்கள் ஒழுக்கமும் அறனும் சார்ந்த நீதியான வாழ்வை முன்னெடுக்க உதவவேண்டும் என்பதற்காகவே கற்பிக்கப்படுகிறது. அது பரீட்சைகளில் மேலதிக பெறுபேறுகளைப் பெறுதற்கும் தகைமைச் சான்றிதழ்கள் பெறுதற்குமாகக் கற்பிக்கப்படுமொரு பாடமாகக் கருதப்படக் கூடாது.

போதனையிலும் சாதனையே சிறந்தது. சமயத்தைச் செயன்முறையில் மாணவர் களுக்கு கற்பிப்பது அவசியம். சமயபாடம் கற்பிப்பவர்கள் தமது நடை, உடை, பாவனை மூலம் முன்மாதிரியாக வாழ்ந்து காட்ட வேண்டும். சமய அனுட்டானங்களைத் தாமும் தவறாது சாதனை செய்து மாணவர்களையும் சாதனை செய்யத் தூண்டுதல் வேண்டும். அவற்றிற்கு மேலாக நீதி நியாயம், நல்லொழுக்கம், நற்பண்புகள் பற்றிய நற்போதனைகளையும் பிள்ளைகளின் மனதில் ஆழமாகப் பதியும் வண்ணம் போதித்தல் வேண்டும்.சமய போதனையின் பயனாக மாணவர் நல்லொழுக்கம், பெரியாரைப் பேணல், நல்லோர் சகவாசம், சத்தியம், அறம், அன்பு, மனித நேயம் போன்ற நற்பண்புகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் பாடவிதானத்துடன் நின்றுவிடாது தாம் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டுவதும் நல்லொழுக்கத்தை நீதி நூல்களின் உதவியுடன் போதித்தலும் மிக அவசியம். இவற்றை நடைமுறைப்படுத்த சைவப் புலவர்கள் பட்டம் பெற்றவர்களை விடத் தகுதியானவர்கள் இருக்கமுடியாது. ஏனெனில் நீங்கள் சைவசித்தாந்த அடிப்படைகளை நன்கு கற்றுத் தேறியுள்ளீர்கள். ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு ஆசிரியராவது சைவப்புலவர் பட்டம் பெற்றவராக இருக்க வேண்டும்.

மாணவர்களுக்குச் சமயம் கற்பிப்பதுடன் சைவப்புலவர்கள் திருப்தி கொள்ளக் கூடாது. ஒவ்வொரு பிரதேசத்திலும் வாழும் சைவப் புலவர்கள் அப்பிரதேசத்திலுள்ள ஆலயங்கள் சைவநெறி முறையில் நடைபெறுவதை உறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அக்கிராமத்து பெரியவர்களை, இளைஞர்களை ஒன்று சேர்த்து அவர்களுக்கு சமய உண்மைகளைத் தெரியப்படுத்தி அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். அக்கிராமத்து மக்களின் பிரச்சனைகளைக் கேட்டறிந்து அவற்றிற்கு பரிகாரம் தேட முயல வேண்டும். நீங்கள் அவ்வப்பிரதேச சமய சேவகர்களாக - சமயக் காவலர்களாக - சமூகத் தலைவர்களாக உங்களை வளர்த்தெடுத்துக் கொள்ள வேண்டும். தலைமைப் பீடமொன்றும் சமயத்தைப் போதிக்கும் குருமாரும் இல்லாமையால் நிலவும் வெற்றிடம் காரணமாக சமய தத்துவங்கள் பற்றி எதுவித அடிப்படை விளக்கமும் இல்லாதவர்களெல்லாம் சமயக் கோட்பாடுகளை வியாக்கியானம் செய்யும் தலைவர்களாக - குரல்தர வல்ல அதிகாரிகளாகச் செயற்படுகிறார்கள். இவர்களது செயற்பாடுகள் மக்களிடையே மயக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பிட்ட இவ்வெற்றிடத்தை நிரப்பக் கூடிய தகுதி சைவப் புலவர்களுக்கு உண்டு. ஆகவே நீங்கள் ஊக்கமுடனும் அர்ப்பணிப்புடனும் இவ் வெற்றிடத்தை நிரப்ப முன்வர வேண்டும்.

**சைவ சித்தாந்தத்தைச் சுருக்கமாகத் திரட்டிக் கூறுவதாயின், கடவுள் ஒருவர் இருக்கிறார். பல ஆன்மாக்கள் இருக்கின்றன. அவற்றின் அறியுந் திறமை ஆணவத்தால் தடுக்கப்படுகிறது. ஆன்மாக்கள் கன்மத்தைச் செய்து அதன் விளைவுகளை அனுபவித்தல் மூலம் அத்தடைகள் படிக்கிரமமாக அகற்றப் படுகின்றன. "பிழையான செயல்களின் விளைவு துன்பம். சரியான செயல்களின் விளைவு இன்பம்" என்பது கன்ம விதி. ஒவ்வொரு ஆன்மாவும் எதுவித விலக்கு மின்றி இறுதியில் முத்தியென்கின்ற பேரின்பத்தை அடையும், இதற்குப் பல பிறவிகள் தேவை. சைவம் எவரையும் பாவிகள் என்று நரகத்துள் தள்ளிவிடு வதில்லை. இதுவும் மறுபிறவிக் கோட்பாடும் சைவ சித்தாந்தத்தின் சிறப்பியல்புகளில் மகிமைகளில் இரண்டு.**

ஆகவே சைவசமயிகளாகப் பிறப்பதற்கு நாம் கொடுத்து வைத்தவர்கள். சைவ சமயம் ஒரு வாழ்க்கை நெறி. அவ்வாழ்க்கை நெறிக்கு அடிப்படை நீதி, ஒழுக்கம், பண்பு, கல்வி, கடவுள் வழிபாடு ஆகியன. சைவப்புலவர்களாகிய நீங்கள் மக்களுக்கு இவ்வடிப்படைகளை எடுத்துக்கூறி அவர்கள் நீதியின்பாற்பட்ட, ஒழுக்கமுள்ள, பண்புமிக்க, கல்வி ஞானமுள்ள, இறைவன் மீது பயபக்தி உடையவர்களாக தமக்கும் சமூகத்திற்கும் பிரயோசன முள்ளவர்களாக வாழ வழிகாட்ட வேண்டும்.

நீதிவழி வாழ்தலே சைவ வாழ்வு

சைவசித்தாந்தக் கருத்துக்களை அடிப்படை யாகக் கொண்டவை திருமுறைகள். அத்திரு முறைகளுக்கு எவ்விடத்தும் முக்கிய இடமளிப்பதை உறுதி செய்ய வேண்டியவர்கள் சைவப்புலவர்கள்.

அத்திருமுறைகள் இறைவன் நீதி வடிவானவன் என்கின்றன. நீதியால் வாழ்வதுவே சைவ வாழ்வு என்பதைத் திருமுறைகள் தெளிவாகப் பலவிடங்களில் கூறுகின்ற போதிலும் அப்பரடிகள் எமக்குத் தந்தருளிய தேவாரங்களுள் ஒன்றைப் பற்றிச் சிந்தித்தல் பொருத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பர் மேலும் குறைபட்டுக்கொள்கிறார்

"நீதியால் வாழமாட்டேன் நித்தலும் தூயேனல்லேன்
ஓதியும் உணரமாட்டேன் உன்னையுள் வைக்க மாட்டேன்
சோதியே சுடரே உன்றன் தூமலர்ப் பாதம் காண்பான்
ஆதியே அலந்து போனேன் அதிகை வீரட்டனாரே"

இந்த ஒரேயொரு தேவாரமே எமது வாழ்வு எவ்வாறு அமைய வேண்டுமென்பதை இரத்தினச் சுருக்கமாகக் கூறுகிறது. **நீதியாக வாழ்தல், மனதை எப்போதும் தூய்மை யானதாக வைத்திருத்தல். கற்றுணர்தல். இமைப்பொழுதும் மறவாத இறையுணர்வை மனதில் ஏற்படுத்திக் கொள்ளல்** எனும் இவைநான்கும் வாழ்க்கை முறையாக எடுத்துக்கூறப்படுகிறது. இவற்றிலிருந்து நீதி கடவுளின் வடிவு என்பது பெறப்படுகிறது.

ஆகவே தமது வாழ்வில் நீதியைப் போற்றாதவர்கள் கடவுளின் வடிவத்தை நிந்திக்கிறார்கள் என்பது பெறப்படும்.

நீதிக்கு முகமனில்லை. மனித நீதிவான்கள் பிழைவிடலாம். ஆனால் இறைவனது நீதி முகமனும் நட்பும் பாராட்டாது. சுந்தரர் எத்துணை நட்புரிமை பூண்டிருந்த போதிலும் நீதி தவறியபோது - என்ன நல்ல நோக்கத்தோடாயினுஞ் சரி- கண்ணை இழந்ததும் பிழை பொறுக்கக் கேட்டபோது "உளோம் போகீர்" என்ற பதில் கிடைத்ததும் நாம் சிந்திக்க வேண்டியவை.

குற்றத்தை உணர்த்திய பின் - இரந்து வேண்டிய போது தண்டனையிலிருந்து விமோசனம் பெறுகிறார் சுந்தரர்.

"அழுக்கு மெய்கொடு உன் திருவடி அடைந்தேன்
அதுவும் நான் படப் பாலதொன்றானால்
பிழுக்கை வாரியும் பால் கொள்வர் அடி கேள்
பிழைப்பன் ஆயினும் திருவடி பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெயரல்லால்
மற்று நான் அறியேன் மறுமாற்றம்
ஒழுக்க என்கணுக்கு ஒரு மருந்து உரையாய்
ஒற்றி யூரெனும் ஊர் உறைவோனே."

என இரந்து கண் பெறுகிறார் சுந்தரர். தினை விதைத்தவன் தினை அறுப்பான். பிழையை உணர்ந்து திருந்த முற்படுபவனுக்கு பாவ விமோசனம் உண்டு. ஆனால் தெரிந்து கொண்டு அநீதியான செயல்களைச் செய்து கொண்டு அவற்றிற்கு பிராயச்சித்தமாக இறைவனுக்கு கையுறை கொடுத்துத் தப்பித்துக் கொள்ளலாம் என எண்ணுபவர்களைக் கண்டு இறைவன் நாணி நக்கு நிற்பன்.

நீதிக்குச் சைவம் என்று மற்றுமோர் பெயர். நீதியோடு சம்பந்தம் செய்யும் வாழ்வு தான் சைவ வாழ்வு. நீதியைப் போற்றாதவர்கள் சிவனை நிந்திக்கிறார்கள்.

சைவத்தை உணர்ந்தவர்கள் நீதியைக் குறுக்கி நிதி சேகரிக்கமாட்டார்கள். "நிதியைக் கொண்டு நீதி செய்பவர்கள் சீவன் குறுகிச் சிவன் ஆவார்கள்" எனப் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் கூறுவார்கள்.

எங்கும் நிறைந்த - அரி பிரமருக்கும் எட்டாத இறைவன் - அன்பு வலையில் - பக்தி வலையில் படுவான் - என்கிறது எமது சமயம். இறையன்பினால் நாம் பெருவாழ்வு பெறலாம். ஆனால் அந்த இறைவனோ கருணையே உருவானவன். அவன் இந்தப் பிரபஞ்சத்தி லுள்ள ஒவ்வொரு சீவராசி மீதும் தன் அன்பைப் பொழிகிறான். பன்றிக்குட்டிகளுக்கு இரங்கிப் பால் கொடுத்த பரமதயாளன் அவன். ஆகவே இறைவன் மீது அன்பு கொள்ளும் நாம் இப்பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு சீவராசி மீதும் இரக்கமுடையவர்களாக இருத்தல் வேண்டும். இது சைவ நீதியின் மற்றுமோர் முக்கியம் அம்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே இறையன்பு, சீவராசிகள் மீது இரக்கம், ஒழுக்கம் நிறைந்த அறவாழ்வு இம்மூன்றும் இணைந்து விளங்கும் நீதியாதலால் அது மேன்மை கொள் சைவ நீதியாகச் சிறப்படைகிறது.

இந்த மேன்மைகொள் சைவ நீதியை பட்டி தொட்டியெங்கும் பரவச் செய்து மக்களுக்கு சைவ வாழ்வு எவ்வாறு அமைவேண்டு மென்பதை எடுத்துக் கூறுவதில் சைவப் புலவர்களாகிய நீங்கள் முன்னிலை வகிக்க வேண்டும்.

**இன்றைய சைவ சமய நிலை**

இறையன்பு, அறவாழ்வு, ஒழுக்க வாழ்வு, இரக்கம் பற்றிய சிந்தனையின்றி.....

**வாழ்வில் சில சகாயங்கள் பெற உதவும் ஒரு கருவியாக இறைவனைக் கருதி. அவனின் சகாயத்தைச் சமயச் சடங்குகள் மூலமாக மட்டும் பெற்று விடலாம் - அதற்குப் பணமும் சில பூசாரிகளும் இருந்தால் போதும் - என்ற நிலையில் எமது சமூகத்தின் பெரும்பான்மையோர் வாழ்ந்து கொண்டிருக்கும் பரிதாபமான நிலையைக் காண்கிறோம்.**

சமயம் ஒரு வியாபாரப் பொருளாகிவிட்டது. பணத்தை வாரி இறைத்துச் சில சடங்குகளை - கிரியைகளை - செய்விப்பது (செய்வது அல்ல) மூலம் - ஏனையோரை விட அதிகளவு பணம் செலவு செய்தல் மூலம் - இறையருளுக்குப் பாத்தியமாகி விடலாம் எனச் சிலர் நம்புகிறார்கள். இவர்களாலும் இவர்களை ஊக்குவிக்கும் சில பூசாரிகளாலும் சமயம் என்பது பொருட்செலவு மிக்க பணவலிமை உடையோருக்கான ஒரு கைங்கரியம் ஆகிவிட்டது.

இந்த மயக்கம் அகற்றப்பட வேண்டும். இம்மயக்கத்தை அகற்றச் சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர்கள் பெரிதும் பங்களிப்புச் செய்ய முடியும். நீங்கள் இவை பற்றிய பிரசாரங்களில் ஈடுபட வேண்டும் அப்போது மேன்மை கொள் சைவநீதி உலகெலாம் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

சமூக சமய வளர்ச்சிக்கு மிக அவசியமான சைவப்புலவர்களை உருவாக்கி அளிக்கும் சைவப்புலவர் சங்கத்தின் சேவை மகத்தானது. சைவப்புலவர் பட்டம் பெற்றவர்களை ஒருங்கிணைத்து ஒவ்வொரு வருடமும் பொதுப்பிரச்சனைகள் பற்றி ஆராய்ந்து வருவது வரவேற்கத்தக்கது. இது மேலும் வலுவடைந்து நான் முன்னர் குறிப்பிட்டது போல சைவப்புலவர்கள் கிராமம் தோறும் பணியாற்றும் சைவப் பிரசாரகர்களாக - சைவசேவகர்களாக - சைவகாவலர்களாக விளங்கவும், அப்பணிகளை ஒருங்கிணைக்கும் வலைப்பின்னல் ஒன்றின் கேந்திர அமைப்பாக சைவப்புலவர் சங்கம் வளர்ச்சி பெறுமாயின் அது சமுதாயத்திற்கு நீங்கள் செய்யும் போற்றுதற்குரிய பணியாக அமையும் என நான் கருதுகிறேன்.

இன்று பட்டம் பெறும் சைவப்புலவர்கள் இது பற்றிக் கூடுதல் கவனம் செலுத்துவார்கள் என்ற நம்பிக்கையுடன் நீங்களும் உங்களுடன் இணைந்து சமூகமும் வளம்பெற வேண்டும் எனப் பிரார்த்தித்து வாழ்த்தி விடைபெறுகிறேன்.

உருவுகண்டு எள்ளாமை வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

# அஜெய் பட்டுச்சோலை அன் பான்சி ஹவுஸ்
# Ajay Paddu Soolai & Fancy House

அனைவருக்குமான ஆடைகளை இங்கு பெற்றுக்கொள்ளலாம்.



பிரதான வீதி, மானிப்பாய்.
Main Street, Manipay



*With best compliments from:*

# அல்டிமேட் டிஜிற்றல் வீடியோ அன் போன் சொப்
# Ultimate Digital Video & Phone Shop




யாழ் வீதி,
மானிப்பாய்.

**Jaffna Road,**
**Manipay**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*



# ரானியா ரெக்ஸ்

சந்தையடி, யாழ் வீதி, மானிப்பாய்

*With best compliments from:*

# நவகுமரன்ஸ்

## ஆயுர்வேத மருந்துக்கடை







பிரதானவீதி மானிப்பாய்

நாடென்ப நாடா வளத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ விழுமியங்கள்

## கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்

சைவம், சிவம் சம்பந்தமுடையது. சிவம், அன்பு இரண்டும் வேறல்ல. "அன்பே சிவம்" என்கிறார் திருமூலர். சிவத்திற்கும் அன்புக்கும் உள்ளது அத்துவிதத் தொடர்பு ஆகும். சிவம் என்னும் செம்பொருளை வழிபடுபவர்கள் சைவர். அவர்களின் நெறி சைவநெறி. அதுவே அன்பு நெறியாகும். சிவத்தைச் சார்ந்து வாழ்தல் சைவநெறி. சிவத்தைச் சார்ந்து வாழ்தல் என்பது சிவம் குறித்து நிற்கும் தன்மைகள், குணங்கள், விழுமியங்கள் என்பவற்றை வாழ்க்கையில் மேற்கொண்டு செம்மையாக வாழ்தல் ஆகும். திருஞான சம்பந்தர், "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம், வைகலும்" என்று சைவசமயிகளுக்கு நம்பிக்கையளித்து, அதற்குரிய வழிமுறைகளையும் தமது தேவாரப்பாடல்களில் குறிப்பிடுகிறார். சைவ வாழ்க்கையின் குறிக்கோள்களாக விளங்குபவை, அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாகும். வாழ்க்கைக்கு, குறிக்கோள் அவசியம் என்பதை, அப்பரடிகள், "குறிக்கோள் இலாது கெட்டேன்," என்று குறிப்பிடுவதிலிருந்து அறியமுடிகிறது. குறிக் கோள்கள் அடையப்படும் போது வாழ்க்கைப் பயன்கள் ஆகின்றன. வாழ்வில் விழுமியங்கள் மேற்கொள்ளப்படும். அளவிற்கேற்பவே மனிதர்களுக்கு உயர்வும், அமைதியும், மகிழ்ச்சியும் அமைகின்றன.

### சிவத்திருவடிவங்கள்

அருவம், அருவுருவம், உருவம் என மூன்று வகையான திருமேனிகளைக் கடவுள் கொண்டுள்ளார், எனச் சைவசித்தாந்தம் கூறும். எனவே, கடவுளுக்கு வடிவம் உண்டு என்பது தெளிவு. ஆனால் அதனைப் புறக்கண்களால் காண்பது அரிது. தூய அறிவினால் காணத் தக்கது. வாலறிவு என அதைக் கூறுவர். வாலறிவன் எமது கடவுள். "மெய்ப்பொருள் காண்பது அறிவு", என்கிறார் திருவள்ளுவர். மெய்ப்பொருள் என்பது உண்மைப்பொருள். உண்மை ஒன்றுதான். அதன் பெயர் சிவம். அது பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. "உண்மைப் பொருள் ஒன்றுதான்: ஞானிகள் அதனைப் பல பெயர்களால் அழைக்கின்றனர்" என இருக்குவேதம் கூறுகிறது.

"ஒரு நாமம் ஓருருவ மொன்றுமில்லார்க்கு ஆயிரம்
திரு நாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ"

சிவம் எனும் கடவுளின் வடிவம் ஒன்றின் பெயர் அன்பு; நீதி என்பது மற்றொரு வடிவம். "பங்கயத்தயனு மாலறியாநீதியே என்று விளித்துச் சிவபரம் பொருளை நீதி வடிவில் காண்கிறார். மாணிக்க வாசகர் நீதியைச் சிந்திப்பவர், வந்திப்பவர், நீதியை விசாரித்துக் கருமமாற்றுபவர்; நீதி வழுவா நெறி முறையில் வாழ்க்கையை நடத்துபவர்கள் சைவர்கள் ஆவர். "நீதி வழுவா நெறிமுறையில் இட்டார் பெரியோர்", என்பது ஔவையார் வாக்கு சைவர்களுக்கு நிதி பெரிதன்று: நீதியே பெரிது. "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்", எனக் கந்தபுராணம் கூறுகிறது. கந்தபுராண கலாசாரம் நீதியின் அடித் தளத்தில் கட்டியெழுப்பப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி ஓர் உயர் விழுமியம். மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்துபவை; செந்நெறியில் இட்டுச் செல்ல உறுதுணையாக அமைபவை; எல்லா உயிர்களுக்கும் சுகத்தைச் செய்பவை; நலம் செய்பவை; வாழ்க்கைக் குறிக்கோள்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றை அடைய மக்களை நெறிப்படுத்துபவை; தனிமனித, குடும்ப, சமுதாய, உலக அமைதிக்கு வழிவகுப்பவை எவையோ அவையெல்லாம் விழுமியங்கள் எனப் படுகின்றன.

விழுமியங்கள் யாவும் அறம் தழுவியவை. "அறம் அறியார் அண்ணல் பாதம் அறியும் திறமறியார்" என்கிறார் திருமூலர். சைவத்துக்குச் சரியான இலக்கணம் கண்டவர் திருமூலர். "அன்பே சிவம்", என உறுதியான வரைவிலக்கணம் தந்தவர் சைவத்தின் தலைமகனாக விளங்கும் திருமூலர். அறத்திற்கு அன்புசார்பாக உள்ளது என்று கூறும் திருவள்ளுவர் வீரத்திற்கும் அன்புதான் துணையாக நிற்கின்றது என்கிறார். அன்பினில் விளைவன யாவும் விழுமியங்கள். மதிப்பு, பெறுமானம் மிக்கவை விழுமியங்கள், "தருமம் என்றொரு பொருள் உளது", என்று உறுதி கூறுகிறது கந்தபுராணம். தருமம் என்னும் வடசொல் தமிழில் அறம் எனப்படுகிறது. வாழ்க்கைக்கு அன்பும் அறனும் இருகண்கள் போன்றவை. வாழ்க்கையின் பண்பும் பயனுமாக அவை உள்ளன. "மனத்துக் கண் மாசிலன் ஆதல்" அறம் என்பது வள்ளுவர் வாக்கு.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை
பண்பும் பயனும் அது," - திருக்குறள்

அறவாழ்வே, விழுமியஞ்சார் வாழ்வாகும்.

வாழ்க்கையின் அடுத்த குறிக்கோள் பொருள் ஈட்டல். பொருள் ஈட்டும் போது பழிக்கு அஞ்சி, அறவழியில் சேர்த்துச் செலவு செய்யும் போது பலருடனும் பகுத்துண்டு, ஒப்புரவு செய்து வரின் வாழ்க்கையில் இன்பமே எஞ்ஞான்றும் சேரும்: துன்பம் சேராது. மூன்றாவது குறிக்கோள், இன்பம், அடையப்பட்டு விடும். அறம், பொருள், இன்பம் சித்தித்தவர்க்கு வீடுபேறு உறுதியாகி விடுகிறது. இவை சைவ விழுமியங்கள். அன்பும் அறமும் ஆன்மிகமும் விழுமியங்களில் இணைந்தே உள்ளன. விழுமியங்களே வாழ்வின் ஆதாரம். விழுமியங்களைத் தெளிந்தவர்கள் சிவத்தைத் தெளிந்தவர்கள் ஆகி விடுகின்றனர். அந்நிலையில், மனிதர்கள் புன்னெறியதனிற் செல்லும் போக்கினை மாற்றி மேலாம் நன்னெறியதனிற் சென்று தூயவாழ்வு வாழ்வர். மனம், மொழி, மெய்த்தூய்மையுடன் வாழ்வது தூய வாழ்வு. தூய்மை ஓர் உயர் விழுமியம். தூய வாழ்வே நல்லொழுக்க வாழ்வாக மிளிர்கின்றது.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" - திருக்குறள்

நல்லொழுக்க வாழ்வு, ஆன்மிக வாழ்வு, விழுமிய வாழ்வு, அறவாழ்வு என்பன சைவவாழ்வு ஆகும். சைவ விழுமியங்கள் சைவ வாழ்வுக்கு ஆதாரசுருதியாக அமைகின்றன.

சிவம் என்னும் செம்பொருளின் வடிவங்களாக உண்மை, நன்மை, செம்மை, அழகு, கருணை, அஹிம்சை, சாந்தம், நடுநிலைமை, என்பனவும் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்பற்று என்பது சிவம் குறிக்கும். இப்பண்புகளில் பற்றுவைத்தலாகும்.

சிவமாம் தன்மை என்பது சிவத்தின் தன்மைகள் வயப்படுதல் சைவத்தின் குறிக்கோள், சிவத்தைப் பற்றுதல், சிவமாந் தன்மை பெறுதல், என்பவற்றின் மூலம் மக்களை மண்ணில் நல்ல வண்ணம் வாழச் செய்து பிறவிப் பயனை எய்தச் செய்தலாகும்.

**மனித்தப் பிறவி**

"மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"

என்கிறார் அப்பர் அடிகள்.

கிடைத்தற்கரிய மனிதப் பிறவி எமக்கு கிடைக்கப் பெற்றமை, சிவநெறியில் நின்று விழுமிய வாழ்வை வாழ்வதற்கு கிடைக்கப் பெற்ற அரியவாய்ப்பு.

சைவ விழுமியங்களை அறிந்து, அவற்றை வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுவதற்கு சிவபெருமானால், எம்மீது அவர்கொண்ட கருணையின் நிமித்தம், நமக்கு உவந்தளிக்கப் பட்டதே இந்த மனித்தப் பிறவியாகும்.

"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே"

என்னும் தேவாரப் பாடலடியை அடிக்கடி நினைத்துக் கொள்ள வேண்டியது எமது கடமை. இறைவனுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும். இறைவனை விசாரித்து, அவன் விரும்பியவற்றில் ஈடுபட்டும், அவனால் விலக்கப்பட்டவற்றை நாமும் விலக்கியும் வாழ்தல் இறைவனுக்கு நாம் செலுத்தும் நன்றியாகும்.

"கடவுளால் விரும்பப்படுபவைகளாவன:

இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய் தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாம்.

கடவுளால் வெறுக்கப்படுபவைகளாவன :

கொலை, புலால்உண்ணல், களவு, கள்ளுணல், வியபிசாரம், பொய், செய்ந்நன்றி மறத்தல் முதலிய தீமைகளாம்."

என்று நாவலர் பெருமான் அவர் எழுதிய நான்காம் பால பாடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடவுள் விரும்பியவற்றை வாழ்க்கையில் அனுசரித்தலும், வேண்டாதவற்றை துறத்தலும் விழுமிய வாழ்க்கை முறையின் இலட்சணங்கள்.

துறவறம் போற்றுதலுக்குரிய அறமாக பேசப்படுகின்றது. எவ்வெவற்றை துறத்தல் அறம் என்பதாகும் என்பதற்கு விடைகாணப் படல் வேண்டும். துறத்தல் என்பதற்கு விலக்குதல் அல்லது நீக்குதல் எனப்பொருள் கொள்ளலாம்.

காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் என்பன மனிதரிடம் காணப்படுகின்ற தீய குணங்கள், அவை உட்பகைவர்கள். விழுமியங்களுக்கு விரோத மானவை. அவற்றை முறையே ஆசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால் கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் எனத் தமிழ்ப் படுத்திக்கூறலாம். அவற்றை அவை பாட்டில் வளர்ச்சி பெற விட்டால் விழுமியங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில் செறிய விடாது தடுத்து விடும். பாவங்களின் பெருக்கமும் துன்பங்களின் பெருக்கமும் தங்கு தடையின்றி நிகழ்ந்து கொண்டே இருக்கும்.

வாழ்க்கைச் சீர்கேடுகள், சீரழிவுகள் தவிர்க்கப்படமுடியாதன வாகிவிடும். அரிதாகக் கிடைக்கப் பெற்ற மனிதப் பிறவியின் குறிக்கோள்கள் அடையப்படாமல் போய்விடும். வாழ் நாட்கள் வீணாட்களாகக் கழிந்து விடுவதுடன், துன்பம் துயர்கள் நிறைந்தன வாகவும் வந்துவிடும். எனவே, குறித்த ஆறுதீக் குணாங்களையும் சீராக்கம் செய்யவேண்டியது இன்றியமையாததாகும். அவை மீளவும் எழுச்சிபெற விடாது தடுக்கப்படவேண்டும்.

இந்த ஆறு தீக்குணாங்களையும் சீராக்கிச் சீரமைப்பதற்கு சைவ விழுமியங்கள் பெருந் துணையாகின்றன. சீராக்கம் பெற்ற பின் இவ் ஆறு குணங்களும் நலம் பயக்கும் உயர்குணங்களாக மாற்றம் பெறுகின்றன. ஆசை, போதும் என்ற நிறை மனமாகவும்: சினம் பொறுமை, சகிப்புத்தன்மை ஆகவும்: கடும்பற்று ஈகை, ஒப்புரவு ஆகவும்: முறையற்ற பால்கவர்ச்சி கற்பு ஒழுக்கம், பிறர்மனை விழையாமை ஆகவும்: உயர்வு - தாழ்வு மனப்பான்மை சமத்துவம், பிறர்நலம் பேணல், மனிதநேயம் ஆகவும்: வஞ்சம் மன்னிப்பு, கருணை, அமைதி, சாந்தம், அஹிம்சை ஆகவும் தன்மாற்றம் பெறுகின்றன. இந்த உயர் நற்பண்புகள் யாவும் விழுமியங்கள் எனப்படுகின்றன.

தீய குணங்கள், தீய ஒழுக்கங்கள், தீய செயல்கள் என்பனவற்றைத் துறத்தல், அறம் ஆகும். துறவறம் என்று போற்றப்படுவதும் இதனையே என்பது உணர்தற்பாலது. துறவறம் குறித்து நிற்கும் உண்மைப் பொருளை உணரப்பெறின், துறவறமும் சைவவிழுமியம் என்பது உணரப்பெற்றுவிடும்.

இவ்வாறே கொலை, களவு, கள், காமம், பொய் என்னும் ஐம்பெரும் பாதகங்களையும் துறந்து வாழ்தல், துறவற வாழ்வு ஆகும். அது சைவ விழுமியம் எனக் கொள்ளப்படுகிறது.

**இறைநம்பிக்கை**

இறைவன் ஒருவன் உளன். சைவ சமயத்தவர் இறைவனை சிவபெருமான் என்று அழைக்கின்றனர். பரமபதியாகிய சிவ பெருமான் என்றும் உள்ளவர், எல்லாம் அறிபவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் வல்லவர். ஒப்பு, உயர்வு அற்ற பெருந்தலைவர். "அவனின்றி ஓர் அணுவும் அசையாது. இந்த உலகத்திற்கு கருத்தா சிவபெருமான். உயிர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக, அவற்றின் விடுதலைக்காக, அவர்கள் மீதான அளப்பருங் கருணையினால் படைத்தல் முதலிய ஐந்தொழில்களைச் சிவபெருமான் செய்கிறார். எல்லா உயிருள்ள உயிரற்ற பொருள்களுக்கும் மேலாளராக விளங்குகின்ற பரமபதியில் நம்பிக்கை கொள்வதும், அவருக்கு நன்றி செலுத்துவதும் எம் தலையாய கடமையாகும். அப்பொழுது விழுமியங்களை அனுசரித்து நல்வாழ்வு வாழ வழிபிறக்கும்.

கடவுள் என்னும் மெய்ப்பொருளை ஏற்றுக்கொள்பவர் வையத்துள் வாழ்வாங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்றனர்; விழுமிய வாழ்வு வாழ்கின்றனர்.

நின்றும், நடந்தும், இருந்தும், கிடந்தும் என்றும் கடவுள் நினைவோடு வாழும் போது, அது ஆன்மிக வாழ்வாக மலர்ச்சி பெற வாய்ப்பாகின்றது. ஆன்மிக வாழ்வு, சைவவிழுமியங்களை மேற்கொண்டு வாழும் வாழ்வு ஆகும். நம்பிக்கை வாழ்வின் ஆதாரம். "கடவுளை நம்பினார் கைவிடப்படார்," என்பதும் "நம்பினார் கெடுவதில்லை, நான்கு மறைத்தீர்ப்பு" என்பதும் உளங்கொள்ளற் பாலது. கடவுள் எமது செயற்பாடுகள் அனைத்தையும் கண்காணித்துக் கொண்டிருக் கிறார் என்பதை அறிந்து தெளிந்தவர்கள், எந்தக் கருமங்களையும் கடவுளை விசாரித்து, ஒப்புதல் பெற்றே ஆற்றுவர். அதனால் அவர்களின் வாழ்வுமுறை சைவ விழுமியங்களை மையப்படுத்தியதாகவே அமையும்.

அன்பே சிவம்: நீதியேசிவம்: உண்மையே சிவம்: நன்மையேசிவம்: செம்மையே சிவம்: அழகேசிவம்: தூய்மையே சிவம்: ஆனந்தமே சிவம்: பேரறிவே சிவம் எனச் சைவத் திருநூல்களாக விளங்கும் பன்னிரு திருமுறைகள், சைவ சித்தாந்த சாத்திரங்கள், ஏனைய சைவத் தோத்திர, சாத்திர நூல்கள் யாவும் உறுதியாகக் கூறுகின்றன. அந்த வகையில், அன்பு, நீதி, உண்மை, நன்மை, செம்மை, அழகு, தூய்மை, ஆனந்தம், பேரறவு என்பன சைவ விழுமியங்கள் ஆகின்றன. சைவ விழுமியங்களை தம் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுபவர்கள் சைவர்கள் ஆவர்.

**சைவர்களின் இலட்சணங்கள்**

"சுத்த சாட்குண்ணிய பரிபூரணராகிய பரமபதி சிவபெருமானே என்று துணிந்தவர் களாய், கொலை, களவு, கள்ளுணல், புலாலுணல், பிறன்மனை விழைதல், வரைவின் மகளிர் விழைதல், பொய்ச்சான் றுரைத்தல் முதலிய பாவங்கள் இல்லாதவர் களாய், இரக்கம், வாய்மை, கொடைமுதலிய புண்ணியங்களை உடையர்களாய், குருலக் கணங் குறைவற அமைந்த சைவாசாரியரை அடைந்து சிவதீட்சை பெற்றுக் கொண்டவர் களாய், விபூதி, ருத்திராட்சதாரணம், சந்தியா வந்தனம், ஸ்ரீ பஞ்சாட்சரசெபம், சிவத்தியானம், சிவாலய சேவை, சிவலிங்கபூசை, குருவாக்கிய பரிபாலனம், மாகேசுர பூசை முதலியன வற்றைச் சிவாகம விதிப்படி மெய்யன்போடு செய்பவர்களாய் உள்ளவர்களே சைவர் களென்று சொல்லப்படுவார்கள்."

நாவலர் பெருமான், திருத்தொண்டர் பெரியபுராண வசன முகவுரையில் மேற்கண்ட வாறு சைவர்கள் பின்பற்ற வேண்டிய சைவ விழுமியங்களைக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

மனிதர்கள் "பிறர் வயமுடையவர்களும், சிற்றறிவு சிறுதொழிலுடையவர்களுமாய் இருத்தலினாலே, நன்மை தீமைகளை உள்ளபடி அறியவும், தீமைகளை ஒழித்து நன்மைகளையே செய்யவும் வல்லவர் அல்லர். ஆதலால் தம்வயமுடையவரும் முற்றறிவுமுற்றுத் தொழிலுடைய வரும் ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளை வணங்கி. அவருடைய திருவருள் வசப்பட்டு ஒழுகுவார் களேயானால், அவர்கள் தீமைகளினின்று நீங்கி, நன்மைகளைச் செய்து, தம்மை வழிபட்டு உய்யும்படி அவர் அருள் செய்வார்." நாவலரின் இக்கருத்துக்கள் சைவ விழுமியங்கள் பிரவாகிப்பதற்கு ஊற்றாக அமைவதை எடுத்துக் காட்டுவனவாயும் அமைகின்றமை நோக்கற் பாலன. "அவனருளாலே அவன்தாள் வணங்கி", என்றவாறு சைவ விழுமியங்களை இனங்கண்டு கொள்வதற்கும், வாழ்வில் பயிற்சி செய்வதற்கும் கடவுளின் திருவருள் வேண்டற் பாலதாகும்.

கடவுளை நம்பி, வணங்கி, வழிபாடு செய்து, ஆன்மிக வழி நின்று வாழ்பவர்களை "இருள் சேர் இரு வினையும்" சேரா: மனக்கவலைகள் மற்றும் துன்பங்கள் அணுகமாட்டா: இன்பம், அமைதி, மகிழ்ச்சி அரவணைத்துக் கொள்ளும்: ஈற்றில் வீடு பேறும் அவர்களுக்கும் கிட்டும்.

**சைவத்திருநூல்கள்**

சைவத்தின் பொது நூல் வேதம்: சிறப்பு நூல் ஆகமம். கடவுளால் அருளப்பட்ட முதனூல் களாக அவை விளங்குகின்றன. அந்நூல்களில் மனிதர்கள் கைக்கொள்ள வேண்டிய ஆன்மிக விழுமியங்கள் எவை எனக் குறிப்பிடப் பட்டுள்ளன.

சைவத் தமிழ் மக்கள் சைவ விழுமியங் களை உணர்ந்து கொள்வதற்கும், அவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுவதற்கும் உறுதுணையாக அமையும் நூல்கள், "தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர் பெரியபு ராணம் என்பவைகளாம். இவைகள், சிவபிரா னது திருவருளினாலே பாடப்பட்டமையால், அருட்பாவென்று சொல்லப்படும். இவைகளுள் முன்னைய நான்கும் பதி, பசு, பாசமென்னுந் திரிபதார்த்தங்களின் இலக்கணத்தை உணர்ந்துஞ் சைவசித்தாந்த சாத்திரத்தின் அனுபவப்பயனாகிய தோத்திர ரூபமாய் இருக்கும். பின்னையதாகிய திருத்தொண்டர் பெரியபுராணம் சிவாகமங்களில் உணர்த்தப் படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களையும் அனுட்டித்து முத்தி பெற்ற மெய்யடியார் களுடைய அடிமைத் திறத்தை விளக்குவதாகிய சரித்திரரூபமாய் இருக்கும். ஆதலாற்றானே, இவைகளைந்தும் சைவத்துக்கும் சைவர் களுக்கும் இன்றியமையாப் பெருஞ் சிறப்பினவாயின".

- நாவலர் பெருமான் - பெரியபுராண வசனம்.

திருமந்திரம் சிறப்பாக சைவ விழுமியங் களை உணர்த்தும் தோத்திர, சாத்திர நூலாகும். திருக்குறள் அறம், பொருள், இன்பம் சார்ந்த விழுமியங்களை எடுத்துக் கூறுகின்றது.

தேவார திருவாசகங்கள் தமிழ் வேதம் எனப் போற்றப்படுகின்றன. சைவ விழுமியங்கள் இந்நூல்களில் பொதிந்து காணப்படுகின்றன, "நாலுபேர் சென்ற வழியில் செல்", "நாலுபேர் சொல்லைக் கேட்டு நட" - அவ்வாறு நடந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பொல்லாப்பும் இல்லை, என்று பெரியவர்கள் ஆலோசனை கூறுவதை அடிக்கடி கேட்கிறோம். இந்த நாலுபேர் யாவர், என்ற வினா அடுத்து எழுகின்றது. தமிழ் வேதம் அருளிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வருமே அந்த நாலுபேரும் என்னும் உண்மை உணரப்பட வேண்டியது. "எனதுரை, தனதுரையாக", என்னும் வாக்கின்படி நால்வரின் உரைகள் யாவும் சிவபிரான் உள்நின்று உணர்த்த அவர்களால் வெளிப்படுத்தப்பட்டவையேயாகும். சைவ விழுமியங்கள் யாவும் சிவபிரானால் அருளப் பெற்ற தெய்வீக விழுமியங்களேயாகும். "இன்பமேசூழ்க, எல்லோரும் வாழ்க"- சைவத்தின் விழுமிய வாசகம்

**விழுமியங்கள்**

தனியாளுக்கும் சமூகத்திற்கும் "உலகிற்கும் நலன்தரக்கூடியதும் விழுப்பம் நல்கத் தக்கதுமான மனித நற்பண்புகள்: நல்லொழுக்க, நன்னடத்தைச் சீலங்கள்: நன்மனப் பாங்குகள்: குணநலப்பண்புகள் என்பவற்றை உள்ளடக்கியதாக விழுமியங்கள் உள்ளன. நல்ல பண்பட்ட வாழ்க்கை வாழ்வதற்கு உறுதுணையாக வருபவை விழுமியங்கள். மனிதர்கள் சமூகத்தில் வாழ்வாங்கு வாழவும், நல்ல வண்ணம் பிறர் நலம் வண்ணம் பிறர் நலம் பேணி வாழவும் நெறிப்படுத்துபவை, விழுமியங்கள். மனிதரில் ஆன்மிக, ஒழுக்க, சமூக, பண்பாட்டு வளர்ச்சியை உறுதிப்படுத்தி, மனிதரை விலங்கு நிலையிலிருந்து, மனித நிலைக்கு உயர்த்தி, ஈற்றில் தெய்வீக நிலையை அடையச் செய்ய உதவுபவை, விழுமியங்கள். அதி உன்னத தெய்வீக, ஆன்மிக மற்றும் மனிதப் பண்புகளே விழுமியங்கள். அவை மனித வாழ்க்கைக்கு விழுப்பம் - மேன்மை, உயர்வு, உன்னதம் - தருவதால் விழுமியங்கள் எனப்படுகின்றன.

அனைவர்க்கும் பொதுவான பிரதான விழுமியங்களாக, விளங்குவன, அன்பு, நீதி, உண்மை, அஹிம்சை, சாந்தி, நடுநிலைமை, பணிவு, அடக்கம், பொறுமை, சகிப்புத்தன்மை, தயை, இரக்கம், ஈகை, ஒப்புரவு, பிறர் நலம் பேணல், பகிர்ந்துண்ணல், சமத்துவம், அருள், தூய்மை, நட்பு, இனிமை, எளிமை, செய்ந்நன்றியறிதல், கடமை, கண்ணியம், நன்னடத்தை, பொறுப்புடைமை, நட்பு, தர்மம், நேர்மை என்பன, இவற்றை வாழ்க்கையில் மேற்கொண்டு வந்தால் ஒரு பொல்லாப்பும் நேராது. இவையாவும் சைவ விழுமியங்களேயாகும்.

மனித விழுமியங்கள் காலதேச வர்த்தமானங்களைக் கடந்து நிலைத்து நிற்பன. மனித வாழ்க்கை விழுமியங்களின் அடிப்படையில் அமையும்போது வாழ்க்கையில் அமைதி, பரஸ்பரம், நல்லுறவு, மகிழ்ச்சி, நிறைவு, உடல் நலம், நீளாயுள், நிறை செல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம், ஆகிய அனைத்தும் கிடைக்கப் பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

சைவ விழுமியங்களுள் தலையாயது அன்பு ஆகும் எனத் திருமுறைகள் கூறுகின்றன. அன்பே சிவம், இறைவனுக்கு அன்பு செய்தல் என்பது இறைவன் உறைகின்ற கோயில்களான உயிர்களிடத்து, அன்பு செய்தல் மூலமே நிறைவேற்றப் படுகிறது. அன்பு தான் அறத்தின் அடிநிலை, அன்பு தான் இன்ப ஊற்று, அன்பினால் ஆகாதது ஒன்றுமில்லை. கருணை, தயை, இரக்கம், பணிவு, அடக்கம், பிறர் நலம் பேணல், அஹிம்சை என்பனயாவும் அன்பின் விரிவாக்கங்களே "அன்புடையர் என்பும் உரியர் பிறர்க்கு' என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

அஹிம்சை என்பது எவ்வுயிர்க்கும் உறுகண் செய்யாமை ஆகும். மனத்தாலோ, பேச்சாலோ, செயலாலோ உயிர்கள் வருந்தும்படி தீங்கு செய்யாமை அறம். கொல்லாமை என்னும் அறம் சைவத்தில் மிக விதந்து பேசப்படுகிறது. "கொல்லான் புலாலை மறுத்தானைக் கை கூப்பி எல்லா உயிருந்தொழும்" என்பது வள்ளுவர் வாக்கு. எல்லா உயிர்களுக்கும் உயிர்வாழும் உரிமை உண்டு. அவ்வுரிமையைப் பறித்தல் ஆகாது என்பது சைவ விழுமியம் ஆகும்.

அருள் எல்லா உயிர்கள் மீதும் பேதம் இல்லாமல் கருணை செய்தல் ஆகும். "அருட்செல்வம் செல்வத்துள் செல்வம்" என்பது வள்ளுவர் வாய்மை மொழி "மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு. இல்லென்ப தன்னுயிர் அஞ்சும் வினை. என்றும் வள்ளுவர் உறுதிமொழி பகர்ந்துள்ளார். திருவருள் தான் இறைவனின் சக்தி. சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" - திருவருட்பயன். அன்பும் அருளும் பிரிக்கமுடியாதவை. ஞானிகள் அன்பைப் பெருக்கி, திருவருள் கனிந்து, அருளாளர்களாகிச் சிவமாந்தன்மையை எய்துகின்றார்கள்.

நீதி சிவத்தின் தன்மையாகும். "நீதி வழுவா நெறிமுறையில்" தம் வாழ்க்கையை இட்டுச் செல்பவர் சைவர்கள், சைவர்களாக நாம் ஒவ்வொருவரும் தன்மாற்றம் பெறவேண்டும். "மேன்மை கொள் சைவநீதி" உலகெங்கணும் விளங்க வேண்டும். அப்போது தான் உலகம் மனிதர்கள் வாழத்தகுந்த இடமாகவும் அமைதிப் பூங்காவாகவும் திகழும் நிலை ஏற்படும்.

அறிவு மக்களின் பண்பாட்டை உயர்த்திச் சிவமாந்தன்மையை எய்த உதவுகின்றது. கல்விக்குப் பயன் அறிவு, அறிவுக்குப் பயன் ஒழுக்கம் என்பார் நாவலர் பெருமான். துன்பங்களுக் கெல்லாம் அறியாமையே காரணம் என்பர் பெரியோர். "அறிவினான் ஆகுவதுண்டோ, பிறிதின் நோய் தன்நோய் போல் போற்றாக்கடை" - குறள். அறிவு பயன்தரு அறிவாக விளங்குவது எப்போ தெனில், பிற உயிர்களின் துன்பங்களைத் தன் துன்பங்களாகக் கருதி. நீக்கி வைத்து அவ்வுயிர்களைக் காப்பாற்றும் போதேயாகும். என்பது இக்குறள் தரும் பொருள். "அறிவாவது நல்லதன் நலனும், தீயதன் தீமையும்

சக்தி பின்னம் இலான் எங்கள் பிரான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளவாறு உணர்தல்" என நச்சினார்க் கினியர் அறிவுக்கு வரையறை தந்துள்ளார். கண்ட, கேட்ட விடயங்களைப் பகுத்து ஆராய்ந்து, நல்லது எது, கெட்டது எது என்று தெளிதல் அறிவின் பாற்பட்டது. அறிவை மறைப்பது ஆணவம். "நான்" எனும் தற்பற்று, "எனது" எனும் பொருட்பற்று என்பவற்றை ஆணவம் மனிதரில் ஏற்படுத்துகின்றது. அறியாமையின் விளைச்சல்; துன்பங்கள் அறுவடை செய்யப்படுகின்றன. உயிர், சார்ந்ததன் வண்ணம் ஆகிறது. சிவத்தைச் சார்ந்து உயிர் நிற்கும் போது அறிவு ஒளியைப் பற்றிக் கொள்கிறது. சைவ சித்தாந்தம் தரும் முடிவு இதுவாகும். சிவ ஒளியாகிய அறிவின் உதவியால், புண்ணியம் செய்யத் தக்கது, பாவம் விலக்கத்தக்கது என்பதை நாம் அறிய வல்லவர்கள் ஆகின்றோம். "புண்ணியம் ஆம், பாவம் போம்". ஔவை வாக்கு - கடவுள் கருத்தறிந்து, அறிவை விருத்தி செய்து, பயன்படுத்த வேண்டும், அந்த அறிவு சைவ விழுமியம் ஆகும்.

கடவுளை விசாரித்து, கடவுளின் கருத்தறிந்து, கடவுள் வழிநின்ற மகான்கள் நல்ல வழிகளை வகுத்துத் தந்துள்ளனர். சைவ விழுமியங்களாக அவை விளங்குகின்றன. வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, உலகநீதி என்பவற்றிலும், ஆத்தி சூடிமுதல் திருக்குறள் வரையிலான நீதி நூல்களிலும், பன்னிரு திருமுறைகள், பதினான்கு சாத்திரங்கள் ஆகிய தோத்திர சாத்திர நூல்களிலும், மற்றும் சைவப் புராணங்கள், காப்பியங்கள், இதிகாசங்கள் முதலிய சைவ இலக்கிய நூல்களிலும் சைவ விழுமியங்கள் விரவிக் காணப்படுகின்றன.

உண்மை உயர் சைவ விழுமியம் ஆகும். உள்ளத்தால் பொய்யாமை உண்மை, வாக்கினால் பொய் சொல்லாமை வாய்மை, மெய்யினால் பொய்யாமை மெய்ம்மை எனப்படும்.

தூய்மை எனும் சைவ விழுமியம் நடைமுறையில் பேணப்பட வேண்டியது. அகத்தூய்மை, புறத்தூய்மை என இருவகைப் படும். "புறந்தூய்மை நீரால் அமையும், அகத்தூய்மை வாய்மையால் காணப்படும்" என்கிறார் வள்ளுவப் பெருமான். சுத்தம் சுகம் தரும். அழுக்காறு பேராசை, சினம், கடுஞ் சொல், வெறுப்பு என்பன மன அழுக்குகள், அவற்றை அகற்றிவிட்டால் மனத்தூய்மை சொல்தூய்மை, செயல்தூய்மை ஏற்பட்டு விடும். உள ஆரோக்கியம் மன அடக்கம், புலனடக்கம் என்பவற்றில் தங்கியுள்ளது. அகப் புறத்தூய்மை உள உடல் ஆரோக்கியத்திற்கும் ஆன்மிக வாழ்வுக்கும் இன்றியமையாதன.

இவ்வாறு, சைவ விழுமியங்களைப் பேணி, செய்யத் தகுந்தவற்றைச் செய்து, தவிர்க்க வேண்டியவற்றைத் தவிர்த்து ஆன்மிக நெறியில் வாழ்க்கையை இட்டுச் செல்பவர்கள், உலகியல் நலன்களை இம்மையிலும், வீடுபேற்றினை அம்மையிலும் பெற்றுக் கொள்வதற்கு உரியவராவர்.

"இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய தீட்சை பெற்றுச் சைவ சமயத்தவராக வாழ்வோம்

**சைவப்புலவர் ஆனந்தி ஜெயரட்ணம்** B.A. (Pera) M.A.

காணிப் பதிவாளரும், மேலதிக மாவட்டப் பதிவாளரும்

மேலதிக உதவிப் பதிவாளர் நாயகமும், வவுனியா மாவட்டம்

சைவ சமயத்தவனாய்ப் பிறந்த ஒருவன் உண்மையாகவே சைவ சமயத்தவனாகக் கொள்ளப்படுவதற்கு அவன் சமய தீட்சை பெற்றிருத்தல் அவசியம். சமய தீட்சை பெற்றவனே உண்மையில் சைவசமயி, அவனே சமயச் சடங்குகளைச் செய்யவும் அவற்றுக்கு உதவி செய்யவும் அருகதை உடையவன்.

தீ என்றால் கொடுத்தல் என்றும் க்ஷாஎன்றால் கெடுத்தல் என்றும் பொருள்படும். எமது ஆன்மாவைப் பிணித்துள்ள கன்மம் முதலான மலங்களைக் கெடுத்து அறிவைக் கொடுப்பதே தீட்சை ஆகும். தீட்சை என்பது இம்மைக்கும் மறுமைக்கும் பயனளிப்பது. தீட்சை பெற்றவரே சமய அனுட்டானம், பஞ்சாட்சர ஜெபம், உருத்திராக்கம் அணிதல், சிவபூசை செய்தல் முதலாம் சமயக் கிரியைகள் செய்யத் தகுதியுடைவர். தீட்சை பெறாதவர் இக் கிரியைகளைச் செய்தால் உரிய பயன் கிட்டாது. எனவே ஒருவர் தாம் இப் பிறவியில் ஆற்ற வேண்டிய கடமைகளுக்கும் மறுபிறவியில் நற்பேறு எய்துவதற்கும் உரிய கிரியைகளை ஆற்றுவதற்கும் அவன் சமயதீட்சை பெற்றிருத்தல் அவசியம்.

சைவசமய ஆசார அனுட்டானங்களில் பற்றுக் கொண்ட ஏழு வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் முதலாவது தீட்சை எனக் கூறப்படும் சமய தீட்சையைப் பெற்றுக் கொள்ளலாம். முதலாம் தீட்சையைப் பெற்று ஆசார அனுட்டானங்களில் சிறந்து விளங்கும் ஒருவன் விரும்பின் இரண்டாம் தீட்சை எனப்படும் விசேட தீட்சையைப் பெற்றுக் கொள்ளலாம். விசேட தீட்சையைப் பெற்ற ஒருவர் தினமும் விதிப்படி சிவபூசை செய்ய வேண்டும். சமயதீட்சையும் விசேட தீட்சையும் பெற்று நாள்தோறும் விதிப்படி சிவபூசை செய்து வரும் சாதகன், இப் பிறவிப் பெருங்கடலைக் கடந்து முத்திப்பேறடைவதை நோக்காகக் கொண்டு நிர்வாண தீட்சையைப் பெற்றுக் கொள்ளலாம். தைப்பூசம், சிவராத்திரி, ஐப்பசி வெள்ளி போன்ற புண்ணிய தினங்களில் தீட்சையைப் பெற்றுக் கொள்ளுவதற்குச் சிறப்பான நாட்களும் நேரங்களும் பற்றி, பஞ்சாங்கத்திலே சொல்லப்பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்சையானது வழங்கப்படும் முறைக்கு அமைய நயன தீட்சை, பரிச தீட்சை, வாசக தீட்சை, மானச தீட்சை. யோக தீட்சை, சாத்திர தீட்சை என ஆறு வகைப்படும். இத் தீட்சை முறைகள் யாவும் ஓமகுண்டம் அமைத்து, ஓமம் வளர்த்து, நெய் ஆகுதி செய்து செய்யப் படும்போது ஔத்திரி தீட்சை எனவும் பெயர் பெறும்.

சற்குருவின் அருட்பார்வையால் வழங்கப் படுவது நயனதீட்சையாகும். மீன் தனது பார்வையாலேயே தனது முட்டைகளைப் பொரித்து குஞ்சுகளை வெளிவரச் செய்வது போல, குருவின் பார்வையும் சீடனை மலநீக்கம் செய்து, சிவவிளக்கம் பெறச் செய்யும். சீடனின் தலையில் கைவைத்து ஆசிகூறி வழங்கப்படும் தீட்சை, பரிச தீட்சை ஆகும். இறைவனே அப்பர் சுவாமிகளின் தலையில் தனது திருவடிகளைச் சூட்டி பரிசதீட்சை வழங்கியதாகப் புராணங்கள் கூறும்.

சிவமூல மந்திரமாகிய பஞ்சாட்சரத்தையும் சங்கிதா மந்திரங்களையும் சீடனது காதில் உபதேசித்து ஆசீர்வதிப்பது வாசக தீட்சை. மெய்கண்டார் முதல் உமாபதி சிவாசாரியார் வரையான சந்தான பரம்பரை. வாசக தீட்சை வழிவந்த குருசீட பரம்பரையாகும்.

ஞானாசிரியராகிய குரு தமது யோக சித்தியால் மாணவனது மனத்துள் பிரவேசித்து அவனது மனதைச் சுத்திசெய்து ஞானம் வழங்குவது மானசதீட்சை ஆகும். குளத்தில் வாழும் ஆமை, குளக்கரையில் தான் இட்ட முட்டைகளை குளத்தில் இருந்தவாறே நினைத்து பொரிக்கச் செய்யுமாம். அது போன்றதே மானச தீட்சை.

குரு தனது யோக பலத்தால், சீடனது உடலினுள் புகுந்து அவனது ஆன்மாவை சிவவிளக்கம் பெறச் செய்து. பின் மீளுதலே யோக தீட்சை ஆகும். இயமம், நியமம் முதலாகிய அட்டாங்க யோகத்தை உபதேசித்தலும் யோகதீட்சையாம்.

வேதம். ஆகமம், சித்தாந்த சாஸ்திரங்கள் ஆகிய நூல்களை மாணவனுக்கு பயிற்று வித்து ஞானம் பெறச் செய்தல் சாத்திர தீட்சையின் பாற்படும்.

இவை மட்டுமன்றி, திருவிழாக் காலங்களில் சுவாமி வீதியுலா வரும்போது. பக்தர்களுக்கு தனது அருட்காட்சியால் சாம்பவ தீட்சை அளிப்பதாக நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வாறு தீட்சை எந்த வகையாக இருப்பினும், அதன் பயன் இம்மையில் நோயற்ற, அமைதியும் நிம்மதியும் நிறைந்த வாழ்வும், மறுமையில் பேரின்பப் பெருவாழ்வும் வழங்கும் என்பது ஆன்றோர் கண்ட உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலப்பதிகாரம் புலப்படுத்தும் சைவநெறி

**டாக்டர் மா. வேதநாதன்** M.A.,Ph.D.,

தலைவர், இந்துநாகரிகத்துறை, இணைப்பாளர், சைவசித்தாந்தமுதுகலைமாணி,
உயர்பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

தமிழர் சிந்தனைகளை வெளிப்படுத்தும் செந்தமிழ் இலக்கியங்களுள் சிலப்பதிகாரம் தனிச்சிறப்புடையது. கி.பி. 2ம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கூறப்படும் இந்நூல் சமண சமய துறவியான இலங்கோவடிகளால் இயற்றப் பட்டது. தமிழின் முதல் காப்பிய மாகவும், முத்தமிழ் காப்பியமாகவும் ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றாகவும் கருதப்படும் இவ்விலக்கியம் தமிழ் மக்களின் வாழ்வியல் முறைகளையும் வழிபாட்டு நெறிகளையும் வெளிப்படுத்தும் ஒரு சிறந்த சமய சமுதாய இலக்கியமாகவும் அமைகின்றது. புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்ற மூன்று காண்டங்களும் முப்பது காதைகளுமாகத் தொடர் நிலைச் செய்யுட்களால் அமைந்து விளங்கும் இத்தமிழ்ப் பண்பாட்டு இலக்கியத்தில் சமண சமய கருத்துக்கள மட்டுமன்றி இந்து சமய நெறிகள் மற்றும் பண்பாட்டு மரபுகள் பற்றிய அரிய குறிப்புக்களும் இடம்பெற்றுள்ளன. தமிழ்நாட்டு மக்கள் தங்களுக்குள் சமய பேதம் பாராட்டாமல் அவரவர் போக்கில் வழிபாடுகளை நிகழ்த்தியதை இந்நூல் நன்கு உணர்த்தி நிற்கின்றது. சமய சமரசத்துடனும் சமய பொது நோக்குடனும் விளங்கும் இத்தமிழ்க் காப்பியத்தில் இடம்பெறும் சிவநெறியாகிய சைவ நெறி தொடர்பான விடயங்களை எடுத்துக்காட்டும் நோக்கமாக கொண்டதாக இக்கட்டுரை அமைகின்றது.

## சைவநெறி - ஒரு விளக்கம்

சிவனைப் பரம்பொருளாகக் கொள்ளும் சிவநெறியே சைவநெறி எனப்படும். சைவப் பிரிவுகள் அனைத்திற்கும் சிவனே அடிப்படை முழுமுதலாவார். 'சிவ' என்னும் சொல் சிலப்பதிகாரத்திலும் 'சைவ' என்னும் சொல் மணிமேகலையிலும் முதன் முதலில் இடம்பெற்றுள்ளன. சைவம் சிவத்துடன் சம்பந்தமுடையது என்பதை தமிழில் திருமந்திரமே முதலில் குறிப்பிடுகின்றது. இதன்படி சிவத்துடன் சம்பந்தமுடைய கடவுளர்களும் வழிபாட்டு முறைகளும் பிறவும் சைவநெறி என்பதற்கான வரைவிலக் கணத்துக்குள் அடங்குவதாகச் சொல்லாம். இதன் காரணமாக சைவத் திருமுறையுள் விநாயகர், முருகன் என்போருக்கான பாடல்களும் இடம்பெற்றுள்ளன. சைவநெறி வேதநெறிகளுடன் இணைந்துள்ளதனால் அதனை "வைதீக சைவம்" என்று கந்தபுராணம் குறிப்பிடுகிறது. இதனையே "வேதநெறிதழைத் தோங்க மிகுசைவத்துறை விளங்க" என்று பெரியபுராணம் சுட்டி நிற்கின்றது. எந்நாட்டவர்க்கும் உரிய இறையை தென்னாட்டவர் 'சிவன்' என்று சொல்லி வழிபடுவர். இதனை மணிவாசகரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தென்னாடுடைய சிவனே போன்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று குறிப்பிடுவதால் அறியலாம். இந்த வழித்தடத்தில் கந்தபுராணமும் உலகமெலாம் மேன்மை கொள் சைவநீதி விளங்க வேண்டுமென்று குறிப்பிடுகின்றது. சைவநெறி முழுமுதற் கடவுளாகிய சிவனைச் "சைவன்" என்றும் வழங்கும். இதனால் சிவநெறியே சைவநெறி என்பதும் அறியப்படும். சிவ சைவநெறியின் தாக்கத்தின் காரணமாகவே சிவம் 'சைவம்', 'சிவகதி' போன்ற சொற்கள் சமண இலக்கியங்களிலும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்.

சிலப்பதிகாரத்தில் சிவநெறி சிறந்து விளங்கியதன் காரணமாகவே சிவாலய வழிபாடு அக்காலத்தில் நடைபெற்றதெனலாம். சிவனைத் திணைவழித் தெய்வங்களி லொன்றாகச் சிலப்பதிகாரம் கூறாதவிடத்தும் புகார் நகரத்திலும், மதுரையம்பதியிலும் சிவபெருமானுக்கும் மற்றும் முருகன், பலதேவன், திருமால், இந்திரன். என்போருக்கும் கோயிலமைத்தும் வழிபட்டும் வந்தார்கள் என்பதைப் பின்வரும் சிலப்பதிகார அடிகள் உறுதி செய்கின்றன.

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்" 2

"நுதல் விழிநாட்டத்து இறையோன் கோயிலும்
உவணச் சேவல் உயர்த்தோன் நியமமும்
மேழிவலன் உயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்"3

மேலேயுள்ள "பிறவா யாக்கைப் பெரியோன்", "நுதல் விழிநாட்டத்து இறையோன்" எனக் குறிப்பிடும் சிலப்பதிகார வரிகள் சிவபெருமானைக் குறித்து நிற்கின்றன. புகாரிலும் மதுரையிலும் முருகன், திருமால், இந்திரன், பலராமன் ஆகிய கடவுளர்களுக்கும் கோயில்கள் காணப்படுகின்ற போதும், அக்கோயில்களை இளங்கோவடிகள் வரிசைப்படுத்தும் போது சிவன் கோயிலை முதற்கண் வைத்துக்கூறியது சிலப்பதிகார காலத்தில் அவ்விரு நகரங்களிலும் சிவநெறியாகிய சைவநெறியே முதன்மைச் சிறப்புற்றிருந்ததைப் புலப்படுத்துகின்றது எனலாம். சிவனைப் பெரியோன் எனச் சுட்டுவது சைவநெறிக்கடவுளுக்கு அக்காலத் தில் இருந்த பெருமையை மட்டுமன்றி சைவநெறியின் உயர்வையும் நன்கு புலப்படுத்துவதாக உள்ளது. மேலும் சிவன் பிறவான், இறவான், ஆதி அந்தம் இல்லாதவன் என்ற சிந்தாந்த சைவ முகிழ்ப்பையே "பிறவாயாக்கைப் பெரியோன்" என்ற சொற்தொடரால் இளங்கோ அடிகள் குறிப் பிடுகின்றார். கண்ணகிக்கும் கோவலனுக்கும் திருமணம் நடந்த பின்னர் அவர்களிருவரும் பள்ளியறையில் சந்தித்த முதல் நாள் இரவில் கோவலன் கண்ணகியின் உறுப்பழகை வருணிக்கும் முறை தெய்வீக உவமைகளை உள்ளடக்கியதாகவுள்ளது. முதலில் கண்ண கியின் நெற்றியை வெறும் பிறையோடு ஒப்பிடாமல் சிவபெருமான் சடாபாரத்தில் உள்ள பிறைச்சந்திரனுடனும் உவமையாகக் குறிப்பிடு கின்றான். அதன் பின்னரே அவளின் இடையழகைத் தேவர் கோமானின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வச்சிராயுதத்தோடும், கண்ணழகை முருகனின் கைவேலோடும் பிணைத்துப் பேசுகின்றார் இளங்கோவடிகள். இந்தத் திருவுருவ வருணனையை உற்று நோக்கும் போது முதலில் சிவப்பிறையுடன் அவள் திருநுதலை ஒப்பிட்டமை இளங்கோ அடிகள் சிவநெறி மேல்நிலைப்பாடு பெற்றிருந்த காலத்தில் வாழ்ந்தவராதல் கூடும் என கருதமுடிகின்றது.

சிலப்பதிகாரக் காப்பியத்தில் இறவாத புகழோடு நின்று விளங்கும் மாங்காட்டு மறையவன் என்னும் வேதியன் வைணவக் கடவுளை வழிபடுபவனாகக் காணப்படினும் சித்தத்தைச் சிவன்பால் வைத்த சிவநெறியாள ராகவும் விளங்குகின்றான். மூன்று கிளை களாகப் பிளவுகளாகப் பிரிந்து செல்லும் வழியைக் குறிப்பிடுங்கால் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளாகிய சிவபெருமான் திருக்கரத்தில் விளங்கித் தோன்றும் வடித்த முக்கிளைச் சூலாயுதத்தையே உவமையாக அமைத்துக் கூறுகின்றான். இது சிலப்பதி காரத்தில்

"பிறைமுடிக்கண்ணிப் பெரியோன் ஏந்திய
அறைவாய்ச் சூலத்து அருநெறி கவர்க்கும்"

எனவரும்,

இதன்கண் உள்ள "பிறைமுடிக் கண்ணிப் பெரியோன்" என்பது சிவபெருமானைக் குறிப்பதாகும். சிலப்பதிகார காலத்தில் சிவழிபாடு சாதாரண மக்கள் மத்தியிலும் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தமையினாற்றான் சாதாரண வழிப்பாதைப் பிரிவைக்கூட சிவனது திரிசூலத்துடன் இளங்கோ அடிகள் ஒப்பிடு கின்றாரெனலாம்.

சிவமும் சக்தியும் ஒருவரிலிருந்து மற்றவரைப் பிரிக்க முடியாத வகையில் அர்த்தநாரியாக விளங்குகின்றார்கள். இது சிவநெறியின் தனிச்சிறப்பாகும். சிவமும் சக்தியும் ஒன்றென்பதும் சைவநெறியின் தாற்பரியமாகும். இதனால் தான் சிவபெருமானுக்கு உரியவளாக மதிக்கப்படும் கொற்றவையெனும் துர்க்கை. சிவபெருமான் செய்த செயல்களையெல்லாம் செய்தவளாக வைத்து மதிக்கப்படுகின்றாள், அதனால் தான் சிவபெருமான் நஞ்சுண்டதாகச் சொல்லப்படும் செய்தியைக் கொற்றவைக்கு ஏற்றிக் கூறியுள்ளார். இதனை இளங்கோவடிகள்,

"விண்ணோர் அமுதுண்டு சாவஒருவரும்
உண்ணாத நஞ்சுண்டு இருந்தருள் செய்குவாய்"

என்று கூறுவது நயக்கத்தக்கது. விண்ணோர்கள் அமுது உண்டார்கள் நீயோ அமுது உண்ணவில்லை. அமுது உண்ட வர்கள் உயிரோடு இருப்பதும் எதிர்பார்க்கப் படுவது. நஞ்சுண்டவர்கள் மாய்வதும் எதிர்பார்க்கப்படுவது. விண்ணோர்கள் நஞ்சுண்ணவில்லை. ஆயினும் இறந்து பட்டார்கள். நீயோ நஞ்சுண்டு உயிரோடு இருக்கிறாய், உயிரோடு இருப்பது மாத்திர மல்லாமல் மற்றையோருக்கும் அருள் சுரக்கின்றாய், உன்னுடைய பெருமை இருந்தவாறு என்னே! "என்று பொருள் செய்யக் கூடிய வகையில் இவ்விரண்டு அடிகளைத் திட்பமாகவும் நுட்பமாகவும் இளங்கோவடிகள் அமைத்திருப்பது சிவநெறியைச் சிறப்பிக்கவே யெனலாம்.

சிவநெறியாம் சைவநெறி செல்வாக்குப் பெற்று விளங்கியதன் காரணமாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானுடைய தெய்வீக வரலாற்றுப் பெருமைகளையும் வீரதீரச் செயல்களையும் கொற்றவைக்கும் ஏற்றிக் கூறுகின்றவராக இளங்கோ அடிகள் காணப்படுகின்றார். இதனை அவர் நஞ்சுண்டு கறுத்த கண்டத்தினள், பாம்பை நாணாகப் பூட்டிமகாமேருமலையினை வளைத்தவள், நச்சரவினைக் கச்சையாகக் கட்டியவள், சூலம் ஏந்தியவள், யானைத் தோல் போர்த்தவள், புலித்தோல் அணிந்தவள் என்றெல்லாம் கொற்றவையை வருணிப்பதால் அறியலாம். இது சிலப்பதிகாரத்துள்.

"நஞ்சு உண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்து
அரவு நாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்"
துணை எயிற்று உரகச் கச்சு உடை முலைச்சி
வளையுடைக்கையில் சூலம் எந்தி
கரியின் உரிவை போர்த்து அணங்கு ஆகிய
அரியின் உரிவை மேகலையாட்டி
சிலம்பும் கழலும் புலம்புஞ் சீறடி
வலம்படு கொற்றத்து வாய்வாய்கொற்றவை"

என வருகின்றது.

சேரன் செங்குட்டுவன் பிறருக்கு வணங்காத தன் திருமுடியால் சிவன் சேவடிகளைத் தலைமேற் கொண்டு வணங்கி வலம் வந்தான் என்ற சிலப்பதிகாரச் செய்தி அக்காலத்தில் சிவபெருமானே மிகவும் உயர்ந்த கடவுள் என்பதைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றனது. அத்துடன் அவன் ஒரு சிவபக்தன் என்பதையும் புலப்படுத்துகின்றது. சிலப்பதிகாரகாலத்தில் சிவன் மிக மேலான வனாக விளங்கினான் என்பதற்கு இந்த ஆதாரம் குறிப்பிடப்பாலதாக உள்ளது. அவன் சிவனை வலம் வந்து வழிபட்டான் என்பது சிலப்பதிகாரத்தில்.

"இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி வலங்கொடு"

என வருதலால் அறியலாம்.

சிவபெருமானது சேவடியைத் தன் மணிமுடியில் ஏற்கனவே வைத்துக் கொண்டதனாற் போலும் மக்கள் கொடுத்த திருமாலின் சேடத்தைத் தன் தடந்தோளில் தரித்துக் கொண்டு போருக்குப் புறப்பட செங்குட்டுவன் ஆயத்தமாகின்றான், இது சிலப்பதிகாரத்தில்.

"சேடம் கொண்டு சிலர் நின்று ஏத்த
தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணி முடி வைத்தலின்
ஆங்கது வாங்கி அணிமணிப் புயத்துத்
தாங்கினன் ஆகித் தகைமையின் செல்வழி"

எனவரும்.

இதில் வரும் 'செஞ்சடைக்கடவுள்' சிவபெருமான் என்பதில் ஐயப்பாடு எழ நியாயமில்லை. மன்னர் செங்குட்டுவனின் சிந்தைக்கினிய கடவுளாகத் திருமாலைவிடச் சிவபெருமானே இருந்தார் என்பதையும் உணர முடிகிறது. மன்னர் எவ்வழியோ குடிகளும் அவ்வழி என்ற பழமொழிக்கு ஏற்பச் செங்குட்டுவன் சைவனாக விளங்கியதால் சேர நாட்டு மக்களுள் பலரும் சைவர்களென்பது தெளிவு.

சிவநெறியின் அச்சாணியாக விளங்கும் ஐந்தெழுத்து மந்திரம் பற்றி முதன் முதலில் குறிப்பிடும் தமிழ் நூல் சிலப்பதிகாரம் ஆகும். இந்த ஐந்தெழுத்துக்களை "மந்திரம் " என்றும் அவை வேதத்தில் வருவதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதியகாரம் குறிப்பிடுகின்றது. இது சிலப் பதிகாரத்தில் "அருமறை மருங்கின் ஐந்தினும் எட்டினும் மந்திரம் இரண்டும்" என வருதலால் அறியப்படுகின்றது.

செங்குட்டுவன் கண்ணகிக்கு எடுத்த கோயிலில் அவளது சிலையை வைத்து வழிபாடு வகுக்கும் வேளையில் நடுக் கல்லிற்குக் கடவுளை மங்கலம் செய்வதற்கு முன்னால் தன் வழிபடு கடவுளாகிய சிவபெருமானையே அவன் வணங்கினான் என்பது சிலப்பதிகாரத்தில்

"இமையவர் உறையும் இமையச் செல்வரைச்
சிவமயச் சென்னித் தெய்வம் புரசி" 11

என வருகின்றது.

எனவே சிவவழிபாட்டிற்குப் பின்புதான் கண்ணகியின் படிமத்திற்கு அணிகலன்கள் பூட்டப்பட்டு அருச்சனை செய்யப்பட்டதென்பது தெளிவாகின்றது.

சக்தியைப் போற்றும் போது.

"ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரிஉடுத்து"12

போன்ற வருணனைகள் இடம் பெறுவதை நோக்கும் போது. சிறப்புற்றிருந்த சிவ வழிபாட்டுடன் சக்தி வழிபாடானது சக்தி பின்னமிலான் எங்கள் பிரான் எனக் கூறத்தக்க வகையில் பிணைந்திருந்த தன்மையினைப் பிரதிபலிக்கின்றது.

"சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" எனும் சித்தாந்த சைவநெறியின் முகிழ்ப்பை சிலப்பதிகாரத்தில் கண்டின்புற முடிகின்றது. சித்தாந்த சைவநெறி புலப்படுத்தும் இந்த அர்த்தநாரீஸ்வர வடிவமே சிலப்பதிகாரத்தில்.

"கங்கை முடிக்கு அணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை உருவாய் மறை ஏத்தவே நிற்பாய்"

என்றும்

"திருநிலைச் சேவடி சிலம்புவாய் புலம்பவும்
பரிதரு செங்கையிற் பகுபறை யார்ப்பவுஞ்
......................................................
துமையவளொருதிறனாக வோங்கிய
விமையவ னாடிய கொட்டிச் சேதம்" 14

என்றும் வருகின்றது.

சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள சேரன் செங்குட்டுவனோடு தொடர்புறும் செய்தி களாலும் சிலப்பதிகார சிவநெறிச் சிறப்பைப் புரிந்து கொள்ள முடிகின்றது. சிவபெருமான் அருளினால் வஞ்சிமா நகரின் கண் சேரன் செங்குட்டுவன் தோன்றினானெனக் கூறப் பட்டுள்ளது.

"செஞ்சடைவானவன் அருளினில் விளங்காதை
வஞ்சித் தோன்றிய வானவ கேளாய்"15

சைவசமயிகள் என்பதற்குத் திருநீறு பூசியிருத்தல் ஓர் உன்னதமான குறியீடு ஆகும். சைவர்கள் திருநீற்றைச் சிவசின்னங்களுள் சிறந்ததாகக் கொள்வர். சிவசின்னமாகிய திருவெண்ணீறு அணியும் சைவவாழ்வியல் சிலப்பதிகார காலத்தில் நிலவியதையே இளங்கோ அடிகள் 'சடையின ருடையினர் சாம்பற் பூச்சினர்" என்ற வரியில் குறிப்பிடுகின்றார்.

## முடிவுரை

செந்தமிழ் மொழியிலுள்ள பண்டைத் தமிழ்க் காப்பியங்களுள் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் மாட்சிமை வாய்ந்ததாகத் திகழ்கின்றது. சிலப்பதிகாரம் ஒரு சமணசமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியமாக விளங்குகின்ற போதும், சமய சமரசமும். சமயப் பொதுநோக்கும் இவ் விலக்கியத்தின் தனிச்சிறப்புக்களாகவுள்ளன. சமண சமய இலக்கியம் படைத்த இளங்கோ அடிகளை சைவச்சான்றோர் வரிசையிலும் கொள்ள முடியும். சிலப்பதிகார காலத்தில் சிவநெறி சிறந்து விளங்கியதை அக்காலத்தில் சிவவழிபாட்டுக்கெனச் சிவன்கோயில் முதன்மைச் சிறப்புடன் அமைக்கப் பட்டிருந்ததால் அறியமுடிகின்றது. சைவ சமயிகள் முத்திநெறியைச் சுட்டுவதற்குப் பயன் படுத்தும் 'சிவகதி' என்னும் சொல்லையே சமணசமயத்தினரும் சிலப்பதிகார காலத்தில் பயன் படுத்தியுள்ளனர். இது அக்காலத்தில் சிவநெறிக் கொள்கையே செல்வாக்குப் பெற்று விளங்கியதைப் புலப்படுத்துவதாகவுள்ளது. சிவனையும் சக்தியையும் பிரிவின்றி ஒருவராகப் பார்க்கும் சைவசித்தாந்த நெறியின் தொன்மைக் கருத்துக்கள் சிலப்பதிகாரத்தில் உள்ளன. இதன் காரணமாகவே சிவனின் தெய்வீக வரலாற்றுச் செய்திகள் பல சக்திக்கும் உரித்தாக சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. சிவநெறியின் பெருமையைச் சுட்டவே சிலப்பதிகாரம் 'சிவனைப் பெரியோன் என்று குறிப்பிடுகின்றது. சிவநெறியைச் சிறப்பிக்கும் ஐந்தெழுத்து மந்திரம். சிவசின்னமாகிய திருவெண்ணீறு, சிவநெறியாகிய சைவ நெறியே சிவசக்தியை இணைக்கும் அர்த்தாரீஸ்வர வடிவம் என்பனபற்றிய அரிய செய்திகள் சிலப்பதிகாரத்தில் உள்ளன. சிலப்பதிகாரகால இந்துசமய நெறிகளுள் சிவநெறியாகிய சைவநெறியே பலவற்றாலும் முதன்மைப்படுத்தப்பட்டிருந்ததை சிலப்பதிகாரம் நன்கு உணர்த்தி நிற்கின்றது. இவ்வகையில் தமிழ்நாட்டில் பண்டைக்காலத்தில் சிவநெறி எனும் சைவநெறி உயர்ந்து சிறந்து விளங்கியதை நன்கு புலப்படுத்தும் மிகவும் தொன்மையான முதற்தமிழ் முத்தமிழ்க் காப்பியமாக சிலப்பதிகாரம் விளங்குகின்ற தெனலாம்.

**அடிக்குறிப்புகள் :**

1. சிலப்பதிகாரம், புகார்க் காண்டம், நாடு காண்காதை, 180
2. மேலது, இந்திரவிழவூரெடுத்த காதை, 169 - 173
3. மேலது, மதுரைக்காண்டம், ஊர் காண் காதை, 7-10
4. மேலது, புகார் காண்டம், மனையறம்படுத்த காதை, 37 - 41
5. மேலது. மதுரைக்காண்டம் காடு காண் காதை 72 - 73
6. மேலது, வேட்டுவவரி 153 - 154
7. மேலது. 57 - 64
8. மேலது. வஞ்சிக்காண்டம் கால்கோட்காதை 57
9. மேலது, 63 - 67
10. மேலது, மதுரைக்காண்டம் காடுகாண் காதை, 128-129
11. மேலது. வஞ்சிக்காண்டம் நடுகற்காதை 226-227
12. மேலது, மதுரைக்காண்டம் வேட்டுவ வரி, 99
13. மேலது. 109 - 110
14. மேலது, நடுகற்காதை 67 - 75
15. மேலது. வஞ்சிக்காண்டம் கால்கோட் காதை 98-99

**துணைநூல்**

இளங்கோ அடிகள்,

சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும். உ.வே. சாமிநாதையர் (தொ.ஆ.) தமிழ்பல்கலைக்கழக வெளியீடு தஞ்சாவூர், 1985



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ நெறிவழிவந்த கவினுறுகலைகள்

கலைமாமணி சைவப்புலவர் பொன். தெய்வேந்திரன் S.L.E.A.S
ஓய்வு நிலை உபஅதிபர் ஆசிரியகலாசாலை

சிவநெறியே சிந்திக்கின் திருப்பெருகு சிவஞானம் சித்திக்கும் என்பது தவராஜ சீலர்களும், திருவருட் செல்வர்களும் புகட்டிய உண்மை. புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம் நன்னெறி ஒழுக வழிகாட்டுவது சிவனெறி என்பது ஆன்றோர் கூற்று, அதனாலேயே அப்பரடிகள் இதனை மெய்நெறி என்றார். திரிபுரமெரித்த விரிசடைப் பெருமானை நாம் காலம் கடந்த கடவுள் என்று கொள்ளும் போது ஞாலத்தின் தொழிற் பாடே தடையிலா விடையைக் காட்டி நிற்கின்றது. இதுவே பஞ்சபூத சேர்க்கை. இப்பாரில் வாழும் மக்கள் யாவரும் சீரிய முறையில் சிந்தித்தும் வந்தித்தும் வாழ இந்நெறி வழிகாட்டும் என்பதே அடியவர் முடிபு. முன்னோர் காட்டிய முறையில் பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகனான சிவ பெருமானை மனம் மொழி மெய்யால் வழிபடுவதே சிறப்பு. சிவாயநம என்று சிந்திப்பவர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை என்பதை உணர்தல் வேண்டும். சிவநெறியே எம்மை ஆடவும் பாடவும் தூண்டுகின்றது.

கைலாசநாதனே சாம கானப்பிரியன். தும்புரு, நாரதர் வீணை மீட்ட, நந்தி மத்தளம் கொட்ட, பூத கணங்கள் கூத்தாட, எம்பெருமானின் திருநடனம் எப்படி அமைந்தது என்பதைப் புராணம் பேசும். முத்தமிழ் வளர்த்த முழு முதற் கடவுளல்லவா? "கண்ணுதற்பெருங் கடவுளும் கழகமோட மர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்ப சுந்தமிழ்" என்று திருவிளையாடற் புராணக் கூற்றால் முச்சங்க ஆய்வில் பெருமானும் அமர்ந்தார் என்பது புலனாகிறது. அன்பு, அறம், அருள் மூன்றும் சிவநெறியே. இயல், இசை, நாடகம் மூன்றும் முத்தமிழே. "முத்தமிழும் நான்மறையுமானான் கண்டாய்" அப்பர் கூற்று கவினுறு கலைகள் இப்புவியில் மிளிர முதற்காரணம் சிவநெறியே என்று கொள்ளலாம்.

நீண்ட நேரம் எழுதினால் கைவலிக்கும், பார்க்கின் கண்வலிக்கும், நடந்தால் கால் வலிக்கும், காதோ! கேட்டுக் கொண்டே யிருக்கும். எமக்கு இருப்பது இரு காதுகள், அவை எதையும் கேட்காது இருக்காது. அஸ்வதரன், கம்பரதன் என்று இருகாந்தர்வர். சிறந்த பாடகர்கள். பெருமானும் வீணை வித்துவான். "வேயுறு தோழிபங்கன், விடமுண்ட கண்டன், மிக நல்ல வீணை தடவி" என்று புகழ்ந்தாரே சம்பந்தர். ஒருவர் பாட்டைக் கேட்டு இரசிக்க ஆள் வேண்டுமே? கந்தர்வர் இருவரும் நீண்ட தவமிருந்தனர். இறைவன் காட்சி தந்தார். என்ன வேண்டும்? கந்தர்வரோ எம் இசையைக் கேட்டு மகிழ வேண்டும். பெருமானும் மனமிரங்கி அவ்விருவரையும் இருதோடுகளாக்கி தம் திருச்செவிகளில் அணிந்து கொண்டாராம். எம் இறைவனே இசைவடிவானவன். தென் மொழியாம் தமிழ் இசை கலக்கும் போது தேன்மொழியாகும் இயலில் செந்தமிழ், நாடகத்தில் பைந்தமிழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைக்கே தன்வாழ் நாளை அர்ப்பணித்த தமிழன் முதற் கண்டது முழவு, பின்பு குழல், பின்பு யாழ் கொலைக்கருவியாகியவில்லையே யாழ் கலைக்கருவி ஆக்கிப் பெருமை பெற்றவன். "தமிழ்" அமிழ்து. காரணம் "ழ" கரம். "முழ வினும், குழலிலும், யாழிலும் "ழ" கரம் தான் அழ கூட்டி இசைத்தமிழைக் காட்டுகின்றது. நனிசிறந்த முறையில், தமிழன் சிவ நெறி சார்ந்து ஆராதித்த கவின்கலைகள், பலவித பரிணாம வளர்ச்சியுடன், பிரமாண முறையில், காலத்திற்கேற்ற மாற்றங் களுடன், என்றும் பரவி விரவி நிற்பதும் சிவநெறி யாலேயே. பிறவா யாக்கைப் பெரியோன் கோயில் முன்றிலில், சிவன் பார்வதிவேடம் புனைந்து சாக்கையன் குழுவினர் ஆடிய தையும், சேரன் முன் ஆடியதையும் சிலம்பு பெரிதும் வியந்து பேசும். அன்று தொட்டு இன்று வரை, தமிழ்க் கலைகள் வளர புராணங்களே காரணம்.

மறையாகிய திருமுறைகள், கூத்து, நாடகம், நாட்டிய நாடகம் என அனைத்திலும் புராணவரலாறே காட்டப்படுகின்றது.

புராணங்கள் புளுகுமூட்டை, என்று கூறும் அவ நெறியாளர்களை என் செய்ய? கடிகாரத்தின் உட்பாகங்களைச் சீர்செய்ய, திருத்துநர் பாவிக்கும் பூதக்கண்ணாடி போன்றதே புராணங்கள், பெருமானுடைய பரத்துவத்தையும், மகத்துவத்தையும், வேத நுண் பொருள்களையும் அறியவும் தெளியவும் வைப்பதே புராணங்கள். சிவநெறி சார்ந்த தமிழன் வாழ்வில் என்றும் இரண்டறக் கலந்து நிற்கும் கலைகள். என்றோ மொட்டவிழ்ந்து விட்டது. விலங்கு வேட்டையில் பறை முழக்கிய முன்னோன், மந்தைமேய்க்க குழலிசைத்த இடையன், இறைவன் மகிழ்வுக்காக யாழ் மீட்டிய அடியவர்கள் எத்தன்மை வாய்ந்த வர்கள்? "இன்னிசை வீணையர், யாழினர் ஒருபால்" என்பது திருவாசகம். தருமிக்கு எழுதி உவந்த பாட்டால் இயலுக்கு முகவுரை, விலங்கை விரட்ட ஒப்பனை செய்தவன் கூத்திற்கு முகவுரை, ரம்பை, ஊர்வசி நடனத்திற்கு முகவுரை, பாணபத்திரனுக்காகப் பாடியது இசைக்கு முன்னுரை.

தை நீராடல், பூம்பந்தாடல், ஊஞ்சலாடல், கானல் வரி, வேட்டுவவரி, குரவைக் கூத்து, கரகம் , காவடி என்று இன்னோரன்ன கலைகள் வளர்ந்ததும் சிவநெறியின் மிளிர்ச்சி யாலேயே, இவையாவும் இறைவனுக்குச் சமர்ப்பணமே. இல்லையேல் "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்", "பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக," "ஏழிசையாய் இசைப் பயனாய்" என்று புகழ முடியுமா? இறைவனே "எனக்கு அர்ச்சனை பாட்டேயாகும்" என்றாரே? தேவனுக்கு சூட்டிய ஆரம் ஆகையால் தேவாரம் ஆயிற்று. பூமாலை புனைந்து ஏத்தித் தொழுதவர்கள் பாமாலையும் சூட்டி மகிழ்ந்தனர். பாடிப்பரவுவார் பிணி தீர்ப்பார் இறைவன். கவின் கலைகள் நிலை பெற சிவநெறி நின்று பக்தியால் பலகாலும் அவன் பாத கமலங்களைப் பற்றிப் பாதக மலங்கள் அற்றுப் போகப் புகழ்பாடிச் சிவ நெறியில் நிற்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடபக்கொடியே சைவக்கொடி

**விடைக் கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா**

சைவம். கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே தோன்றிய சிறப்புக்குரியது. எல்லாச் சமயங்களுக்கும் முன்னே தோன்றிய சைவ சமயத்தைப் பின்பற்றி வந்த சைவர்கள் சைவ சமயக் கோட்பாடுகளைக் கைக்கொண்டு ஒழுகி வந்தனர். சைவத்துடன் ஒன்றிணைந்தது தமிழ்மொழி. சிவ வழிப்பாட்டின் ஊடாக சைவமும் தமிழும் சேர்ந்த கலாசார மேம்பாட்டை செழுமைப்படுத்துவது சைவர்களின் கடமையாக அமைந்துள்ளது. சைவம் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயமாகும். பஞ்சமாபாதகங்களை அறவே ஒழிக்கும் சமயம் மட்டுமல்ல, மக்களை நல்வழிப்படுத்தி மன அமைதியை ஏற்படுத்தவும் பிறரை மதிக்கவும். பெரியோரை வணங்கவும் வழிகாட்டும் சமயமாக சிறப்புப் பெறுகிறது.

சிவநெறியின் முதல்வனாம் சிவபெருமான் ஆதியும் அந்தமும் இல்லாதவன். ஒப்பில்லா முதல்வன், தேவர்களின் தலைவன். தென்னாடுடைய சிவன் என்றும் எந்நாட்டவர்க்கும் இறைவனாகவும் போற்றப்படுபவர். அடியவர்களின் பாவத்தை நீக்கி அருள் பாலிப்பவர். இடபத்தை வாகனமாகவும் காவலனாகவும் கொண்டவர். இடபத்தையே தனது கொடியாகவும் வைத்திருக்கிறார். இத்தகைய பெருமை மிக்க கொடியே சைவக் கொடியாகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

உலகிலே ஒவ்வொரு நாடும் தமது தனித்துவத்தைப் பேணும் வகையில் தனிக்கொடி அமைத்து அதனைப் பறக்க விடுவது நீண்டகாலமாகவே நடைமுறையிலுள்ள வழக்கமாகும். தத்தம் நாடுகளில் பொலிந்து விளங்கும் வனப்பையும், வளத்தையும் சித்தரிக்கும் வகையிலான இலச்சினை பொறிக்கப்பட்டதாக அந்தந்த நாட்டுக் கொடிகள் விளங்குகின்றன. அதுவே தேசியக் கொடியாக முக்கியத்துவம் பெறுகிறது.

இவ்வாறு நாடுகள் மட்டுமல்ல, ஒவ்வொரு சமயத்தினரும் அவர்களது தனித்துவத்தையும் சிறப்பையும் பேணும் வகையில், தங்களுக்கே உரித்தான கொடிகளைப் பயன்படுத்தி வருகின்றனர். அந்த வகையில் பாரம்பரியமிக்க சைவசமயத்தின் சின்னமாக நந்திக்கொடியான இடபக்கொடி விளங்குகிறது.

முழுமுதற் கடவுளான சிவனுக்குரிய கொடி இடபக்கொடி என்பதால், அதுவே உலகின் முதற்கொடியாகவும் முக்கியத்துவம் பெறுவதை சிறப்பாகச் சொல்லாம். இது ஒரு சிவ சின்னம் என்ற வகையிலும், சைவத்தின் தனித்துவத்தை எடுத்துக் காட்டுவதாலும் சிவனுக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தப்படும் வணக்கமும் மதிப்பும் இடபக் கொடிக்கும் செலுத்தப்பட்டு, சைவப் பெருமக்களால் போற்றித் துதிக்கப்படுகிறது. "ஏற்றுயர் கொடியுடையான்" என்ற பெருமையும் சிவனுக்கு உண்டு. பன்னிரு திருமுறைப் பாடல்களிலே இடபக் கொடியின் பெருமை பக்திச் சுவையுடன் சொல்லப் பட்டுள்ளது. "சேவார் கொடிச் சிவனே" என்கிறார் மாணிக்கவாசகர். இவரது திருப்பள்ளி எழுச்சி பாடலிலும் "ஏற்றுயர் கொடியுடையாய் எனையுடையாய் எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே" என்று சிறப்பித்திருக்கிறார். தருமமே இடபக் கொடியில் எழுந்தருளி யிருப்பதாக சொல்லப்படுகிறது. சிவனடி யார்களுக்கு ஆறுதல் கொடுக்கும் வெற்றி கொடியே இடபக்கொடி என்று சொல்லாம்.

ஒரு நாட்டில் நடைபெறும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளில் தேசியக்கொடி ஏற்றப்பட்டு எவ்வாறு போற்றி மதிக்கப்படுகிறதோ, அதுபோல சைவசமய விழாக்களிலும் வைபவங்களிலும் இடபக் கொடியும் ஏற்றி வைக்கப்படுவதன் அவசியம் இப்போது உணரப்பட்டுள்ளதுடன் அவ்வித மாகவே ஏற்றப்பட்டும் போற்றப்பட்டும் வருகிறது. உயர்ந்து நின்று காற்றில் அசைந்தாடிப் பட்டொளி வீசிப் பறக்கும் போது இறை சிந்தனையை பரப்பிக்கொண்டிருப்பது போலவே தோன்றுகிறது.

நீண்ட காலமாகவே இடபக்கொடியின் மகத்துவமும், தத்துவச் சிறப்புகளும், அதன் அத்தியாவசியமும் பலருக்குத் தெரியாமலிருந்து வந்தன. ஏற்கனவே, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இடபக் கொடிகளை பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கி வந்ததன் மூலம் அதன் தனித்துவம் பலராலும் அறியப்பட்டது. அண்மைக்காலமாக அகில இலங்கை இந்து மாமன்றம், கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம் போன்ற நிறுவனங்கள் ஊடாக இடபக்கொடியின் பெருமைகள் அறியச் செய்யப்பட்டு இலவச மாகவே அவை விநியோகிக்கப்பட்டும் வருகின்றன. இது விடயத்தில் அடியேனின் பங்களிப்பு முற்று முழுதாக வழங்கப்படு வதையிட்டு மனநிறைவு கொள்கின்றேன்.

இடபக்கொடியின் அவசியத்தையும், இதன் முக்கியத்துவத்தையும் பலரும் அறியச் செய்ய வேண்டும் என்ற நன்னோக்கம் கருதி, அதன் சிறப்புக்களைச் சொல்லும் அறிஞர் பெரு மக்களது பல கட்டுரைகளைத் தொகுத்து, கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் (2008) நூலொன்றும் அடியேனால் வெளியிட்டிருப்பது ஒரு காத்திரமான முயற்சியாகவே அனைவ ராலும் போற்றப்படுகிறது.

சைவம் ஒரு உண்மையான சமயம் என்பதை நாயன்மார்கள் பல சந்தர்ப்பங்களில் பலவிதமான அற்புத நிகழ்வுகளின் ஊடாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் ஏற்பட்ட மதமாற்றங்கள் மக்களுக்கு அதிக தீமைகளை விளைவித்தன. அவ்வவ் வேளைகளில் தோன்றிய நாயன்மார்கள் சைவத்தின் மகிமையையும், உண்மைத் தன்மையையும் எடுத்துக்காட்டிப் பாடிய பாடல்களையே திருமுறைப் பாடல்களாக நாம் காண்கிறோம். சைவத்தின் பேருண்மையை அறிந்து அதனை வாழ்வியலால் தழைக்கச் செய்து வந்த மக்களின் கலாசாரத்தில் பிற்காலத்தில் அந்நிய ஆதிக்கத்தின் உட்பிரவேசமும் இடையூறும் சைவத்தையும் அதன் சான்றுகளையும் அழிக்கும் நிலையை உருவாக்கிவிட்டன. ஆனாலும் ஆறுமுக நாவலர் போன்ற சைவப் பெரியோர்களின் வருகையும், அவர்களது பங்களிப்பும் சைவத்தை மீண்டும் புத்துயிர் பெறச் செய்தன. அண்மைக் காலத்தில் கூட, சைவம் என்றும் இந்து என்றும் சொல்லிக் கொண்டும், தங்களை அவதார புருஷர்களாக வெளிப்படுத்திக் கொண்டும், நவீன யுகத்திற்கு ஏற்ற வகையில் இளம் சமுதாயத்தினரை தங்கள் வலைக்குள் வசப்படுத்தி, ஒரு போலியான ஆன்மீக உணர்வினை தோற்றுவித்து வெறும் மாயை வடிவிலான அருட்சக்தியை வழங்கிக் கொண்டும், அதன் ஊடாக மாயாஜால வடிவிலான போலி அற்புதங்களையும் செய்துவரும் இன்றைய நவீன அருளாளர் களை சைவம் என்றுமே ஏற்றுக்கொள்ளாது. இவர்கள், தங்களை தெய்வநிலைக்கு உயர்த்தி, வணக்கத்திற் குரியவர் களாகவும் இன்னொரு வகையில் சித்தர்கள் போன்றும் தங்களை வெளிப்படுத்திக் கொண்டிருக் கிறார்கள். இது சைவத்திற்கு மட்டுமல்ல, இந்து மதத்திற்கே அவமான மாகும். இடபக் கொடியினை ஏற்றிவைத்து சைவத்திற்கு உரிய மதிப்பளிக்கும் சைவப் பெருமக்கள் அனைவரும் இத்தகைய நவீன அருளாளர் களை என்றுமே, பொருட் படுத்தக் கூடாது.

இடபக்கொடியை ஆலயங்களில் மட்டுமல்ல, வீடுகளிலும், பாடசாலைகளிலும், இந்து மத நிறுவனங்களிலும் ஏற்றவேண்யது அவசிய மாகிறது. இடபக்கொடி பறக்கும் இடத்தில் சிவபெருமானே எருந்தருளி அருள்புரிகிறார் என்பது தத்துவம்.

"நந்தியருளாலே மூலனை நாடிப் பின்
நந்தியருளாலே சதாசிவம் ஆயினேன்
நந்தியருளாலே மெய்ஞானத்தை நண்ணினேன்
நந்தியருளாலே நானிருந்தேன்" என்கிறார் திருமூலர்

நந்தியின் நலன் பெற்றால் இறைவனின் சகல வளமும் பெறலாம் என்பது உண்மை. சைவ மக்கள் அனைவரும் நற்பேறுகளடைய இடபக் கொடியை ஏற்றிவைத்தல் வேண்டும். சிவனை நினைவூட்டவும் அவனருளைப் பெறவும் இடபக்கொடி ஒரு வெற்றிக் கொடியாக என்றென்றும் துணை நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

சைவப்புலவர்கள் சைவம் பிரகாசிக்க சைவநாதம் வாழ்க

# சக்திவேல் ஹாட்வெயர்




**மல்ரிலாக் கலர் வங்கி**

கட்டடத்தேவைக்கான அனைத்துப் பொருட்கள், பெயின் வகைகள், மாபிள் வகைகள், மின்சாரப் பொருட்கள் என எல்லாவற்றையும் ஒரே கூரையில் மலிவாகப் பெற்றுக்கொள்ள









**SAKTHIVEL HARD WHEYER**

*K.K.S. Road, Kondavil West, Kodavil (Inuvil)*

*Tel: 0214921213, 0213006130*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

**சைவப்புலவர்கள் சைவம் பிரகாசிக்க சைவநாதம் வாழ்க**

**போன் விற்பனை மற்றும் பழுதுபார்த்தல்,**
**ஏனைய உபகரணங்கள் விற்பனையில்**
**முன்னணி நிறுவனம்**

# வானகம்



# VAANAHAM PHONE CITY

No.64 / 16, Stanley Road, Jaffna.
Tel: 021 222 8990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதிடம்

சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் கோ.சொ. கோவிந்தராஜன்
சோதிடர், அந்தணரல்லாத இந்துக்குரு

சோதிடம் வேதங்களில் இருந்து பிறந்தது. இதை நாம் பயபக்தியுடன் பின்பற்றினால் நன்மையுண்டு. பஞ்சாங்கம் எமக்கு உதவி செய்யும். இயற்கையை மதித்து நாள்பார்த்து காரியம் செய்ய வேண்டும். குழந்தைக்கு பால் பருக்க, அன்னப்பிராசனம் செளரம் விவாகம் சீமந்தம் இவைகளுக்கு பஞ்சாங்கத்தில் கூறிய படி நடப்பது உத்தமம். அமாவாசை அட்டமி நவமி மரண யோகங்களில் காரியம் தவிர்க்க வேண்டும்

இன்னும் எண்ஜோதிடப்படி கூட்டு எண் 5, 8 வந்தால் விவாகம் செய்யக்கூடாது. கூட்டு எண் 5 வந்தால் பிரயாணம் செய்ய சிறப்பைத் தரும். விவாக காரியங்களில் படுபட்சி நாட்கள் ஜென்மத்பிரிய நட்சத்திங்கள் பார்த்து கணவன் மனைவிக்கு எண் பொருத்தமும் பார்ப்பது நன்று 1க்கு 4ம் 8ம் 3ம் பொருந்தும். இதேபோல் 2க்கு 7பொருந்தும் 3க்கு 6நல்லது. 5க்கு 8 நல்லது. 9க்கு 3,6 நல்லது. 2க்கு 9 ஐச் செய்யக் கூடாது. 2, 7, 4 விவாகரத்து செய்யும் எண்கள், இவை களுக்கு சோதிடருடன் கலந்து ஆலோசித்து செய்ய வேண்டும். கைரேகையில் ஆயுள் புத்திரேகை சேராவிட்டால் குடும்பபிரிவு வரும் எண், ஜாதகத்தை அனுசரிக்கவும். மற்றும் கோசாரத்தில் சந்திரனுக்கு குரு 1, 2, 5, 7, 9இல் வரும்வேளை விவாகம் செய்யலாம். ஜாதகத்தில் குரு இருந்த வீட்டில் குருவர அல்லது சுக்கிரன் இருந்த வீட்டில குரு வர விவாகம் நிச்சயம். நாகதோஷங்களைப் பார்த்து நாகம்மாளுக்கு நேரத்தி செய்யவும், ஜாதகத்தில் 5ஆம் இடம் 7ம் இடத்தில் ராகு கேது இருப்பது நாகதோஷம். வெளிநாடுகள் போவதற்கு மேடம், கடகம், துலாம், மகரம் 10ம் அல்லது 12ம் வீடுகளாக வந்தால் துணியலாம். குருபகவான் 8, 6, 12 இல் வரும் போது கஷ்டம் கொடுப்பார். அப்போது வியாழனுக்கு (தட்ஷணாமூர்த்திக்கு) நேர்த்தி செய்யவும், இதை கவனத்தில் கொள்ளவும். ஜென்மத்தில் 1ம் இடம் சீதை சிறை இருந்ததும், தீதிலா ஒரு மூன்றிலே துரியோ தனன் தலைபோனதும், ஆறிலே சத்திய மாமுனி இருகாலிலே தளை பூண்டதும், இன்னும் எட்டிலே வாலி பட்டமிழந்ததும், ஈசனார் பத்திலே தலையோட்டில் இரந்து உண்டதும், பன்னிரண்டிலே இராவணன் பட்டமிழந்து போம் படியானதும் என கூறுவர். இவற்றை எழுத இங்கு இடம் அதிகம் என்பதால் சுருக்கமாகக் கூறியுள்ளேன்.

இன்னும் கேசரியோகம் சந்திரனுக்கு 1, 4, 5, 7, 10இல் வியாழன் இருப்பது. சந்திரன் குரு சேர்ந்திருப்பது குருசந்திர யோகம் இவைகள் நன்மை தரும். லக்னத்தில் சிறந்தது விருச்சிகம், டாக்டர் பொறியியல் வரும், மீனம் ஆசிரியர் டாக்டர் ஆகலாம். கன்னி பணிவானது, தனு லக்கினம் துணிச் சலானது, டாக்டர் வக்கீல் தொழில். 5ம் வீட்டில் சூரியன், குரு இருந்தால் சிவபக்தன் செவ்வாய் இருப்பது முருகபக்தன் புதன், சனி விஷ்ணு பக்தன். சந்திரன், வெள்ளி, ராகு அம்பாள் பக்தன், கேது இருப்பது ஆஞ்சநேயர் பக்தன், கோசார வியாழன் சந்திரனிலிருந்து பார்ப்பது லக்னத்தில் இருந்தும் வியாழனை பார்ப்பது நன்று. சுக்கிரன், சனி சேர்க்கை செவ்வாய், சனி சேர்க்கை, பிரம்ம சாரியோகம் விவாகம் பிந்தும். 9வது அதிபதி 10வது அதிபதி சேர்க்கை தர்மகர்மாதியோகம் உதயத்தில் குரு சந்திரன் கடகலக்னம் இராமசந்திர மூர்த்திக்கு அப்படியே, ஓர் சிறிய பகுதி எழுதியுள்ளேன் பயன்பெறவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் சைவ சமயம்

**சைவப்புலவர் சித்தாந்தபண்டிதர் சு. தேவமனோகரன்** B.A, Dip, M.A., MED , SLEAS III
உதவிக்கல்விப் பணிப்பாளர் தெல்தெனியா

இலங்கையில் சைவசமயம் மிகவும் பழமை வாய்ந்தது. இலங்கையிலுள்ள பஞ்ச ஈஸ்வரங்கள் இதற்குச் சான்றாகும். சைவ சமயத்தை நிலை நிறுத்துவதில் ஆலயங்களின் பங்கு முக்கியமானது. மலையகத்தில் சைவ சமய வளர்ச்சிக்கு ஆலயங்கள் நிலைக் களனாக அமைந்துள்ளன. ஆலயங்கள், பாடசாலைகள். இந்து நிறுவனங்கள் சைவ சமய வளரச்சிக்கு உயர் பங்களிப்பைச் செய்கின்றன.

ஆலயங்களில் சமய வழிபாடுகள் முறையாக இடம் பெறுகின்றன. மகோற்சவங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. மக்கள் சமய நம்பிக்கையுடன் ஆலயங்களில் வழிபடுகின்றனர். கண்டியில் கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயம், மாத்தளையில் முத்துமாரி அம்மன் ஆலயம். நுவரெலியாவில் ஆஞ்சநேயர் ஆலயம் பிரசித்தி பெற்ற ஆலயங்களாக விளங்குகின்றன. ஆகம முறையிலமைந்த ஆலயங்கள் ஆகம முறையில் அமையாத ஆலயங்கள், என்ற வேறுபாடின்றி இங்குள்ள ஆலயங்கள் சமயப்பணியையும் சமூகப் பணியினையும் செய்து வருவது கண்கூடு. அறநெறிப் பாடசாலைகள் பெரும்பாலும் ஒவ்வொரு ஊரிலுமுள்ள ஆலயங்களில் நடைபெற்று வருகின்றன.

பாடசாலைகளில் காலைக் கூட்டம் சைவ சமய ஆராதனைகளுடன் ஆரம்பிக்கின்றன. சைவ சமய பாடம் கற்றல் கற்பித்தல் பணி சிறப்பாக நடைபெறுகின்றன. மாணவர்கள் பொதுப் பரீட்சைகளில், விவேகாநந்த சபைப் பரீட்சைகளில் சிறந்த பெறு பேறுகளைப் பெற்று வருகின்றனர், சமய விழாக்கள் நவராத்திரி விழா நன்கு ஒழுங்கமைக்கப்பட்டுச் செய்யப் படுகின்றன.

ஆலயங்களில் மாத்திரமன்றிப் பாடசாலை களிலும் அறநெறிப் பாடசாலைகள் நடைபெறு கின்றன. வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் மூலமாகவும் சமய விழாக்களினூடாகவும் சமய கலாசார விழுமியப் பண்புகள் வளர்க்கப்படுகின்றன.

இந்து கலாசார மன்றங்கள், இசை நடன வகுப்புகளை நடத்துவதற்கான ஒழுங் கமைப்பைச் செய்து வருகின்றன. இசை, நடன, கலை விழாக்கள் நவராத்தரி விழாக் களினூடாக சமய பண்பாட்டு அம்சங்கள் வளர்க்கப்படுகின்றன.

ஆசிரிய ஆலோசகர்கள், சமயம் தொடர்பான கல்விப் பணிப்பாளர்கள், இந்து கலாசார அமைச்சு, அகில இலங்கை இந்து மாமன்றம். இந்து கலாசார திணைக்களம். சைவ சமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சிக்கு கருத்தரங்கு நடத்துவது, பாடநூல் களை வழங்குவது, ஆலோசனை வழங்கு வது போன்ற பணிகளில் முனைப்புடன் செயலாற்றுகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆத்மஜோதி முத்தையா அவர்கள் நாவலப்பிட்டியைக் களமாகக் கொண்டு சைவசமயப் பணியை மிகச் சிறப்பாக வளர்ப்பதற்குத் தன்னை அர்ப்பணித்துச் செயலாற்றியுள்ளார். அக்காலப் பகுதியில் பணியாற்றிய ஆரிசியர்களும் சமயம் வளர்ப்பதில் பங்காற்றியுள்ளனர்.

இன்றைய நிலையில் பாடசாலைகளில் சைவசமயப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் குறைவாக உள்ளனர். சமய ஆராதனைகளில் சிவபுராணம் சொல்லிக் கொடுக்க வேண்டும். மாணவர்கள் தேவார திருவாசகங்களை மனனம் செய்வது ஊக்கப்படுத்த வேண்டும். குருபூசை தினங்கள், சமய முக்கியத்துவம் வாய்ந்த தினங்கள் அநுட்டிக்கப்பட வேண்டும்.

சைவ சமய பாரம்பரியக் கலைகளான கரகம், கும்மி, போன்ற கலைகள் இன்றும் ஆலய விழாக்களில் இடம் பெற்று வருவதனைக் காணலாம். திருவெம்பாவைப் பூசை நேரடி அஞ்சல் கண்டி கட்டுக் கலை செல்வ விநாயகர் ஆலயத்தில இருந்து இடம்பெறுவது வழமையாகும்.

மேலும் சமய விழிப்புணர்வும் சமய பண்பாட்டு விழுமிய அம்சங்களை மேம படுத்தும் செயற்பாடுகள் அவசியமானது. அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் சைவப்புலவர் பரீட்சை நடத்தும் போது மலையக சைவ சமய ஆர்வலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்று அவர்களை ஊக்குவித்து வருவது சிறப்பம்சமாகும். சமய வளர்ச்சி சமூக வளர்ச்சிக்கு அடிப்படையானதாகும்.

**"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"**

## சமயகுரவர்கள் சிதம்பரத்துள் வழிபடச் சென்ற வாயில்கள்

| | | |
|---|---|---|
| 1. நிலம் | (பிருதுவி) | - திருவாரூர், காஞ்சி |
| 2. நீர் | (அப்பு) | - திருவானைக்கா |
| 3. தீ | (தேயு) | - திருவண்ணாமலை |
| 4. காற்று | (வாயு) | - திருக்காளத்தி |
| 5. ஆகாயம் | (வான்) | - சிதம்பரம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலத்தில் சித்தாந்த நெறிநிற்போம்

**சைவப்புலவர் விஜயதர்சினி ஜோதிநாதன்** - லண்டன்

மானிடராகிய நாம் இப்பிறப்பில் எமது நல்வினை, தீவினைப் பயன்களால் இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றோம். உயிர்கள் வினையின் பயனாலேயே பிறவிகள் எடுக்கின்றன. முன்பு செய்த வினைகளை அந்தந்த உயிர்களுக்கு ஊட்டுவிப்பவன் இறைவனே. உயிர்களானவை மலங் களினால் பீடிக்கப்பட்டிருப்பதால் தாம் செய்த வினைகளை அறியமுடிவதில்லை. இதனா லேயே பல பிறவிகள் எடுக்கின்றன.

"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்" என மாணிக்கவாசக சுவாமிகளும் பாடியுள்ளார். இப்படிப் பல பிறப்புக்கள் எடுத்த உயிரானது தனது நிலையை, தனது இயல்பை மானிடப் பிறப்பெடுக்கும் போதுதான் உய்த்துணரு கின்றது. நாம் செய்யும் காரியங்களை நல்லது எது, தீயது எது எனப் பகுத்தறியும் பண்பு எமக்கிருக்கின்றது. எமக்குப் புலப்படும் வினை நல்வினை, தீவினை என இருவகைப்படும். இவைகளே புலப்படாத நிலையில் புண்ணி யங்கள், பாவங்களாக எமை அடைகின்றன. தமக்குரிய காலங்களில் இன்பம், துன்பம் என எம்மை ஆட்டி வைக்கின்றன. வாழுங் காலத்தில் ஒருவர் நல்ல செயல்களைச் செய்யவும், தீயனவற்றை விலக்கவும் எமக்கு ஒழுக்க நெறிகளைக் காட்டுபவை சைவசமய நெறிகளே. இவை எமது நல்வாழ்வுக்கு வழிகாட்டியாக விளங்குகின்றன.

நாம் பூசைகள், வழிபாடுகள், கிரியைகள் தான தருமங்கள் மூலம் புண்ணியங்களை அடையலாம். இவை பற்றிய விளக்கங்களை எமக்குத் தருபவை வேத ஆகமங்களும், தேவார, திருமுறைகளும், சித்தாந்த சாஸ்திரங்களும் ஆகும். பூசைகள், வழிபாடுகள் என்பவற்றால் சிறந்த முறையில் வாழ்ந்து காட்டிய நாயன்மார் வரலாறுகளும், எமக்கு இவற்றின் முக்கியத்துவங்களை உணர்த்து கின்றன.

இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொருவரும் தத்தமது தீவினையின் பயனை அனுபவிக் கின்றனர். மனச் சஞ்சலங்களும், வறுமை, துன்பங்களும், நோய்களும் என்று பலவகையான இடைஞ்சல்களுள் அவதிப் படுகின்றனர். சொந்த இடங்களில் இருந்த காலகட்டங்களில் அமைதியான சூழல், ஆலய வழிபாடுகள், பூசைகள், தியானங்கள் என்று ஒவ்வொருவரும் தமது நேரங்களை நல்ல முறையில் பயன்படுத்தினார்கள். காலச் சுழற்சியில் மக்கள் பல்வேறு திசைகளிலும் திசைமாறிப் போய் நிம்மதியிழந்து தவிக் கின்றனர். எதிர் காலச் சந்ததியினரும், சமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுமியங்களும், ஆலயச் சூழலினால் கிடைக்கப்பெறும் பயன்களும் இன்றி வாழும் நிலை தோன்றுகின்றது. இவற்றிற்கு முக்கிய காரணங்கள் ஒவ்வொரு மக்களுக்கும் கிடைக்கப்பெறும் வேலைப்பளு, நேரம் இன்மை, வருவாய்க்கு மீறிய செலவு ஆகும். இவற்றில் இருந்து விடுபட சிறிது நேரத்தை யேனும் ஒதுக்கி ஆலய வழிபாட்டிலும், சமய சாஸ்திரங்களில் புதைந்துள்ள நல்ல விடயங்களை அறிந்து பின்பற்றுவதிலும் செலவிடலாம்.

பொய்மையைப் பெருக்கி பொழுதினைச் சுருக்கும் இக்காலச் சூழலில் மெய்ந் நெறியாகிய சித்தாந்த நூல்களை இன்றைய இளை யோருக்கு, சித்தாந்த சாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்றவர்கள் கற்றுக் கொடுக்க முன்வருதல் வேண்டும். அதில் கூறப்பட்டுள்ள தத்துவஞான உண்மைகளை உணர்ந்து படிப்பதற்கு இளைஞர்களும் முன்வர வேண்டும்.

சித்தாந்தம் என்பது சிந்தித்து தெளிந்த முடிவு ஆகும். ஆன்மீகம் தொடர்பான பல்வேறு கருத்துக்களையும் ஆராய்ந்து சிந்தித்து முடிந்த முடிவாகக் காணப்பட்டது. சைவ சித்தாந்த மாகும். சித்தாந்த சாஸ்திரங்கள் கூறுவது பதி, பசு, பாச உண்மைகள் ஆகும். இறை வனுக்கும், உயிர்களுக்கும், உயிர்களைப் பிணைக்கும் பாசங்களுக்கும் உள்ள தொடர்புகளை விளக்குகின்றன.

நின்ற சிவம் ஒன்று, அதனைத் தேர்தல் ஞானம், நிகழ் போதம் தேர்ந்தனைத் தெளிதல் என்றும் பதின்நான்கு சாஸ்திரங்களில் முதல் நூலாக விளங்கும் சிவஞான போதம் விளக்குகின்றது. பதி, பசு, பாச உண்மை களையும், பிரபஞ்ச உற்பத்தி, திதி, ஒடுக்கம் ஆகியவற்றை நிகழ்த்தும் இறைவன் இவற்றால் பயனடையும் உயிரையும், இவற்றிற்கு ஏதுவான பாசம் முதலியவற்றின் பிரமாணம், இலக்கணம், சாதனம், பயன் அனைத்தையும் விளக்குவது சிவஞான போதமாகும். இதற்கு வழி நூலாக அமைந்த சிவஞான சித்தியார், சிவஞான போதத்திற்கு விரிவாக ஆக்கப்பட்ட விரிவுரையாகும். இவ்வரிய நூலும் சிவஞானத்தை அடைவ தற்கான வழிகளைக் கூறுகிறது. இவற்றிற்குச் சார்பு நூலாக அமைந்த சிவப்பிரகாசம், அதன் பெயருக்கேற்ப ஒளி என்று தொடங்கும் இதன் காப்புச் செயுளில் நூலின் பயன் மல நீக்கமும் சிவப்பேறும், சிவஞானம் ஒளிவடிவம் கொண்டதால் இருள் மலம் நீங்கும் என்பதும், திருவடிப் பேற்றால் கொடியவினை நீங்கும் என்பதையும் வலியுறுத்துகின்றது.

இந் நூல்கள் போலவே மற்றைய நூல்களும் பதி, பசு, பாசம் பற்றி விளக்கு கின்றன. இவற்றுள் இன்னுமொரு சிறப்பான நூலாக உண்மை விளக்கம் அமைகிறது. இதன் சிறப்பு மாணவர் ஒருவர் வினாக்களைக் கேட்க குருவானவர் விடை கூறும் முறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளது. இது சித்தாந்த சாஸ்திரங்களைக் கற்கும் மாணவர்களுக்கும் சிறந்த நூலாகும்.

**"அவன் அவள் அதுவெனும் அவை மூவினைமையின் தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்**

**அந்தம் ஆதி என்மனார் புலவர்.**

(சிவஞான போதம்)

அவன், அவள், அது என்று சொல்லப்படும் உலகத் தொகுதி (தோன்றுதல் நிலைபெறுதல், ஒடுங்குதல்) இவை மூன்றும் ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டு சங்கார காலத்தில் சங்கரிக்கும் கடவுளிடத்தில் ஒடுங்கும். ஒடுக்கப்பட்ட ஆன்மாக்களின் ஆணவ மலம் பரிபாகப் படாமையில் மீண்டும் கடவுளிடத்திலிருந்து அவை தோன்றும். ஆகவே இவற்றுக்கெல்லாம் கருத்தாவாக உள்ளவர் கடவுளே. மூல முதல்வனாகிய சிவனே. இந்த இறைவன் நடத்தும் விளையாடல்களே ஐந்தொழில்களும், உயிர்களைப் படைத்து, காத்து, அழித்து, அருளி, மறைக்கும் இறைவனின் செயல்கள் ஆன்மாக்கள் இறைவனை அடைந்து முத்தியின்பத்தைப் பெறுவதற்காகவே. முத்தியடைய ஞானத்தை உணர்த்தி வீடுபேற்றை இறைவன் அருளுகின்றான். இச் செயலைச் சக்தியே உயிர்களிடத்தில் உடனாய் நின்று செய்கிறது. மலங்களைச் செயற்படுத்தி அவற்றின் வழியில் நின்று உயிர்களைச் செலுத்துகின்றது. பிறப்பு. இறப்புக்களையும் இன்ப துன்பங்களையும் மாறி மாறிக் கொடுக்கின்றது.

முத்தியடையும் வழியாகிய ஞானத்தைத் தருவது மந்திரங்களுள் தலையாயதுவான திருவைந்தெழுத்து மந்திரமாகும். இவற்றின் இருப்புக்களையும், ஓதும் முறைகளையும் வழிபாடு, பூசைகள், கிரியைகள், தீட்சைகள் மூலம் நாமடையும் பயன்களையும் அறிய வேண்டியது அவசியம். மனச் சஞ்சலங்கள், வறுமை, துன்பம், நோய்களிலிருந்து விடுபட சித்தாந்த நெறிவழியே நடத்தல் வேண்டும்.

## முத்தித் தலங்கள் ஏழு

| | |
|---|---|
| 1. திருவாரூர் | - பிறக்கமுத்தி |
| 2. சிதம்பரம் | - தரிசிக்கமுத்தி |
| 3. காசி | - இறக்கமுத்தி |
| 4. திருவண்ணாமலை | - நினைக்க முத்தி |
| 5. மதுரை | - கேட்க முத்தி |
| 6. காஞ்சீபுரம் | - வசிக்கமுத்தி |
| 7. கேதாரம் | - நீராடமுத்தி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

அகில இலங்கை சைவப்புலவர் சங்கப் பொன்விழா மலர் சிறப்புற மனமுவந்து வாழ்த்துகின்றோம்.



# சீமாட்டி

[புடவைக்கடல்]

**அனைத்துப் புடவைகளின் மொத்த சில்லறை வியாபாரிகள்.**

# SEEMATI

Dealers in Textiles & Fancy Goods.
No. 122, Power House Road, Jaffna.
Tel: 021-2222196, Fax: 021 2222102

Branch : Mangai Silks, Modern Market,
No. 15, Power House Road, Jaffna.

*With best compliments from:*

**சைவப்புலவர்கள் சைவம் பிரகாசிக்க சைவநாதம் வாழ்க**



பூமாலைகள், சாத்துப்படி அலங்காரம்,
பூந்தண்டிகை பூச்சப்பறம், முத்துச்சப்பறம்,
அன்னச்சோடனை, சொக்கட்டான் பந்தல்,
வில்லுப்பந்தல், பூமணவறைகள், வாகனம்
செய்தல், யாகசாலைகள் அமைத்தல்
திரைச்சீலைகள் செய்தல், தேர், சப்பறம்
அமைத்தல் என்பவற்றுக்கு நாடுங்கள்

# தாசன் பந்தல்

**மல்லாகம் வடக்கு, மல்லாகம்**

**உரிமையாளர். க.வரதாசன்**
**மாவிட்டபுரம். 0776392636**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கப் பொன்விழா மலர்
சிறப்புற மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

**அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**



66 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
தொ.பே.இல. 2899



*With best compliments from:*

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கப் பொன்விழா மலர்
சிறப்புற மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

**கணேசன் ஸ்ரோர்ஸ்**





உடுபுடவைகள்
கல்யாணப்பட்டுச்சாறிகள்
கிடைக்குமிடம்

201, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.இல: 0212222830



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவவாழ்வு வாழ்வோம்

சைவப்புலவர் கந்த. சத்தியதாசன் M.A (சைவசித்தாந்தம்)

வாழ்வெனும் மையல்விட்டு,
வறுமையாம் சிறுமை தப்பித்,
தாழ்வெனும் தன்மையோடும்,
சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெறல் அரிது, சால
உயர் சிவ ஞானத்தாலே
போழ் இள மதியினானைப்
போற்றுவார் அருள் பெற்றாரே.

என்பது சிவஞான சித்தியார் உணர்த்தும் செய்தி. இதன் பொருள், செல்வத்தினால் உண்டாகும் மயக்கத்தை ஒழித்து, வறுமையால் உண்டாகும் சிறுமையில் நின்றும் நீங்கி, பணிவுப்பண்போடு சைவ சமயத்தில் பொருந்துதல் என்னும் புண்ணி யத்தை பெறுதல் மிகவும் அரிதாம். மேலான சிவனருளாலே சிவபெருமானை வழிபடுவோர் அவனருளைப் பெற்று மலங்களைப் போக்கி முத்திப் பேறு பெறுவர்.

ஆகவே பெறுதற்கரிய பேறாகிய சைவ சமயத்தில் பிறந்த நாம் புண்ணியம் செய்தவர்களே. இப்புண்ணியம் தொடரவும், அவனருளாலே அவன் தாள் வணங்கவும் தக்கவகையில் நாம் சைவ வாழ்வு வாழவேண்டும்.

நாவலர் பெருமான் "இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது நாம் சிவ பெருமானை வணங்கி முத்தயின்பம் பெறும் பொருட்டேயாம்" என்று அறுதியிட்டுச் சொல்கின்றார். ஆதலால் நமது சமய அறிவு, சிவசின்னாங்கள், சமயதீட்சை, சைவ உணவு, சைவப் பண்பாட்டுடை, சைவ வழிபாடு, தலயாத்திரைகள், நோன்புகள், தான தர்மங்கள், தொண்டு செய்தல் ஆகிய நெறிமுறைகளை அறிந்து அதன்படி வாழ்வாங்கு வாழ வேண்டும்.

## நமது சமயத்தை அறிதல்

நமது சமயம் சைவசமயம், அதுசிவ சம்பந்தம் உடையதால் சைவம் எனப்படும். சிவபெருமானே முழுமுதற் கடவுள் ஆவார். அவர் என்றும் உள்ளவர். எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர், அவரின்றி ஒன்றும் அசையாது என்பதை அறியவேண்டும். நம்ப வேண்டும் நமது சமயத்தை அறிவதற்குரிய முதல் நூல்கள் வடமொழி வேதாகமங்களும், தமிழ்மொழி பன்னிரு திருமுறைகளும் சித்தாந்த சாத்திரங்களும் ஆகும். ஆதலால் வட மொழியும், தமிழ் மொழியும் எமக்கு இருகண்கள் போன்றவை. முதல் நூல்களும் அப்படியே இந்த நூல்களைக் கற்றும், கற்றவர்களிடம் கேட்டும் நமது சமய உண்மைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

## சைவ சமய சின்னாங்கள்

சைவசமயத்துக்குரிய புறத்தில் அணியக் கூடிய சின்னங்கள் விபூதியும் உருத்தி ராக்கமும், அகத்திலே இருக்க வேண்டிய சின்னம் பஞ்சாட்சரம். சுத்தமான பசுவின் சாணியை அக்கினியினால் கட்டுவருவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநீறு எனும் விபூதி. இது பசுவாகிய ஆன்மாவின் மல கன்மங்களைச் சிவாக்கினியிலே சுட்டுவரும் சிவப்பேற்றின் அடையாளமாகும். ஆதலால் திருநீறு "காண இனியது கவினைத் தருவது பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை தருவது" என்பது சம்பந்தப் பெருமான் வாக்கு. சைவர்களின் நெற்றியில் எந்நேரமும் திருநீறு இருக்க வேண்டும். இருந்தால் துன்பம் எதுவும் தொடராது.

உருத்திராக்கம் உருத்திரனது கருணையாகிய கண்ணீரைக்குறிக்கும். உருத்திராக்கம் அணிந்தால் சிவபெருமானுடைய கருணை எந்நேரமும் எங்கள் மீது இருக்கும். சமய ஓதினால் தீட்சை பெற்றவர் இதனை அணியலாம்.

பஞ்சாட்சரம் நமசிவாய எனும் ஐந்தெழுத்து மந்திரம், எந்நேரமும் எல்லாரும் இதனை மனதால் நினைந்து ஓதிக் கொள்ள வேண்டும். ஓதினால் எல்லா நலமும் சித்திக்கும்.

**சமய தீட்சை**

சைவசமயப் பெற்றார்க்குப் பிள்ளையாகப் பிறந்தாலும் ஏழுவயதில் சமய தீட்சை பெற வேண்டும். சமய தீட்சை பெற்றவரே சைவசமயியாவார். எந்தக் கிரியையில் பங்கு பற்றுவதற்கும், தீட்சைபெற்றிருக்க வேண்டும். தீட்சை பெறாதவர் செய்யும் எந்தக் கிரியைகளிலும் பலன் கிடைக்காது. ஆலயத்தில் சங்கற்பம் செய்வதற்கோ பெற்றார்க்கு இறுதிக் கடன் செய்வதற்கோ தகுதியில்லை. அத்துடன் உருத்திராக்கம் தரித்தல் பஞ்சாட்சர செபம் செய்தலாலும் பயனில்லை. ஆதலால் ஏழுவயதில் தீட்சை பெறத் தவறியோரும் இதனையறிந்து தீட்சை பெற வேண்டும்.

**சைவ உணவு**

சைவன் என்பவன் எப்போதும் பிற உயிர்களில் கருணை உள்ளவன். பிற உயிர்களைத் துன்புறுத்தாமல், கொல்லாமல், கொன்றதைத் தின்னாமல் இருப்பான். "கொல்லான்புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்" என்ற வள்ளுவர் வாக்கின் படி வாழ்பவனாயிருக்க வேண்டும். மரக்கறி உணவு ஆதலால் சைவ உணவு என்று கருதமுடியாது. உணவைச் சமைக்கும் போதும், உண்ணும் போதும், பிறர்க்கு விருந்தளிக்கும் போதும் சிவசிந்தனையுடன் செய்ய வேண்டும். அதுவே சைவ உணவாகும்.

**சைவப் பண்பாட்டு உடை**

ஒவ்வொரு இனத்தவர்களுக்கும், சமயத்தவர்களுக்கும் அவரவர் பண்பாட்டுக் கேற்ற உடையும் உண்டு. ஆள்பாதி ஆடைபாதி என்பது பழமொழி. ஒருவரது உடையைக் கொண்டு அவரது சமயத்தையும் பண் பாட்டையும் அறியலாம். சைவ சமயத்தவர்கள் ஆண்கள் வேட்டியும், பெண்கள் சேலை, முழுப்பாவாடை சட்டையும், அணிந்து கொண்டை போட்டு பூச் சூடுவதே பண்பாடு. உத்தியோக வேலைத் தலங்களில் அதற்கெனச் சீருடை இருப்பது போல சைவ விழாக்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய வழிபாடுகள், திருமண நிகழ்வுகளில் சைவப் பண்பாட்டுடை இன்றியமையாதது.

**சைவ வழிபாடு**

வீட்டில் காலையும் மாலையும் சுவாமி அறையில் குடும்ப அங்கத்தவர்கள் சேர்ந்து சுவாமிப் படத்துக்குப் பூவைத்துத் தீபமேற்றித் திருமுறைகள் பாடி, நாமார்ச்சனை தியானம் முதலான வழிபாடுகள் நியமமாகச் செய்தல் வேண்டும். ஆலய வழிபாட்டிலும் சைவப் பண்பாட்டுடையில் தூய்மையாகச் சென்று வழி பாட்டு நெறிமுறைகளின்படி வழிபட வேண்டும். தினமும் போகாவிட்டாலும் வெள்ளி, செவ்வாய், மற்றும் விரத காலங்களிலும் உற்சவ காலங் களிலும் விதிப்படி வணங்க வேண்டும்.

**தல யாத்திரை**

மூர்த்தி தல தீர்த்த மகிமையுள்ள சிவாலயங்களுக்கு யாத்திரை செய்து வழிபட வேண்டும். வாழ்வில் ஒருமுறையல்லப் பலமுறை தலயாத்திரை செய்யும் வாய்ப்பைக் குடும்ப உறுப்பினர்கள் எல்லோரும் பெற வேண்டும். பாடல் பெற்ற தலங்களின் புண்ணிய தீர்த்தங்களில் ஆடி வழிபட வேண்டும்.

**விரதங்கள்**

சைவசமயத்தவர்க்குரிய விரதங்கள் மாதந்தோறும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அவை வார, நட்சத்திர, திதி, என்ற வகையில் உள்ளன. சிவபெருமான், உமாதேவியார், விநாயகர், முருகன், நவக்கிரகங்கள் என்ற வகையில் அவரவர் குல தெய்வங்களுக்குரிய விரதங்களை அனுட்டிக்க வேண்டும்.

விரதகாலத்தில் "மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம். வாக்குக், காயங்களால் திரிகரண சுத்தியுடன் இறைவனை வணங்க வேண்டும்.

**தான தர்மங்கள்**

தனக்காக வாழ்வன விலங்குகள், தனக்காகவும், பிறர்க்காகவும் வாழ்பவனே மனிதன். ஆதலால் பிற உயிர்களுக்கும் மனிதருக்கும் உதவுதல் வேண்டும். நலிந்தோர்க்கும் சிவனடியார்க்கும், பொதுப் பணி செய்பவர்களுக்கும் உணவு, உடை, பொருள் என்பன கொடுத்தலே தர்மம். சிவாலயம், பாடசாலை, சிறுவர் முதியோர் இல்லங்கள், சைவவித்தியசாலைகள் என்ப வற்றுக்குத் தானம் செய்தல் வேண்டும்.

**தொண்டு செய்தல்**

இறைவனுக்கும், சிவனடியார்க்கும் செய்யும் பணிகள் தொண்டு எனப்படும். ஆலயங்களில் செய்யப்படும் சரியைத் தொண்டுகள் இறைவழிபாடேயாகும். 'என் கடன்பணிசெய்து கிடப்பதே' என்ற அப்பர் சுவாமிகள் வாக்கின்படி நாம் ஒவ்வொருவரும் வாழ வேண்டும்.

**சைவ விழுமியங்கள்**

உண்மை பேசுதல், அன்பு செய்தல், கருணை புரிதல், பொறுமை காத்தல், பிறர்க்குதவுதல், அடக்கமுடைமை, தர்மம் செய்தல், கடவுள் நம்பிக்கை, நல்வினை செய்தல் முதலான நற்பண்புகள் எல்லாம் சைவ விழுமியங்களே. சைவ விழுமியங்களைப் பேணி வாழும் வாழ்வே சைவ வாழ்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு

## சங்கத்தை வளர்த்த சான்றோர்கள்

## அகில இலங்கைச் சைவப்புலவர் சங்க உத்தியோகத்தர்கள் (1960 - 2010)

### தலைவர்கள்:

| | |
|---|---|
| சைவப்புலவர் வித்துவான் வ. செல்லையா | 1960-1973 |
| சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர் வ. கந்தசாமி | 1973-1985 |
| சைவப்புலவர் பண்டிதர் இ.திருநாவுக்கரசு | 1985-1997 |
| சைவப்புலவர் வித்துவான் ச. சச்சிதானந்தசிவம் | 1997-1998 |
| சைவப்புலவர் சைவசித்தாந்தபண்டிதர் இ. செல்லத்துரை | 1998-1999 |
| சைவப்புலவர் சைவசித்தாந்தபண்டிதர் மு.திருஞானசம்பந்தபிள்ளை | 1999- இன்றுவரை |

### செயலாளர்கள்

| | |
|---|---|
| சைவப்புலவர் வித்துவான் ச. சச்சிதானந்தசிவம் | 1960-1985 |
| சைவப்புலவர் சைவசித்தாந்தபண்டிதர் மு. திருஞானசம்பந்தபிள்ளை | 1985-1999 |
| சைவப்புலவர் சைவசித்தாந்தபண்டிதர் வ. கந்தசாமி | 1985-1999 |
| சைவப்புலவர் சைவசித்தாந்தபண்டிதர் செ. கந்த. சத்தியதாசன் | 1999-2002 |
| சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் சு. செல்லத்துரை | 2003-2008 |
| சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் கந்தசத்தியதாசன் | 2008- இன்றுவரை |

### பொருளாளர்கள்

| | |
|---|---|
| சைவப்புலவர், பண்டிதை, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி | 1960-1973 |
| சைவப்புலவர் செல்வி சிந்தாமணி சின்னத்தம்பு | 1973-1985 |
| சைவப்புலவர் நா.க தங்கரத்தினம் | 1985-1997 |
| சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் | 1998-2002 |
| சைவப்புலவர் சி. நந்தகுமார் | 2002- இன்றுவரை |

### பரீட்சைச் செயலாளர்கள்

| | |
|---|---|
| சைவப்புலவர் சைவசித்தாந்தபண்டிதர் இ.செல்லத்துரை | 1960-1998 |
| சைவப்புலவர் சைவசித்தாந்தபண்டிதர் வ.கந்தசாமி | 1999-2007 |
| சைவப்புலவர் சித்தாந்தபண்டிதர் சு. செல்லத்துரை | 2008- இன்றுவரை |

### போஷகர்கள்

| | |
|---|---|
| பண்டிதமணி, கலாநிதி, சி. கணபதிப்பிள்ளை | 1960- அமரராகும்வரை |
| சைவப்புலவர்மணி த. குமாரசுவாமிப்பிள்ளை | 1960- அமரராகும்வரை |
| சைவபூசணம் நம சிவப்பிரகாசம் | 1960- அமரராகும்வரை |
| சைவப்புலவர் கா. அருணாசல தேசிக மணி | 1964- அமரராகும்வரை |
| சைவப்புலவர் வித்துவான் வ. செல்லையா | 1973- அமரராகும்வரை |
| சைவப்புலவர், பண்டிதை, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி | 1995- அமரராகும்வரை |
| சைவப்புலவர் சைவசித்தாந்தபண்டிதர் இ.செல்லத்துரை | 1999- இன்றுவரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தால் கௌரவப்பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பெற்றோர்.**

**சைவபூஷணம்.**

| | |
|---|---|
| மல்லாகம் | நம. சிவப்பிரகாசம் அவர்கள் |
| சென்னை | கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜெகநாதன் அவர்கள் |
| இளவாலை | சி. கார்த்திகேசு அவர்கள் |
| வேலணை | வே. பேரம்பலம் அவர்கள் |
| சிறுப்பிட்டி | இ. செல்லத்துரை அவர்கள் |
| கந்தர்மடம் | வ. கந்தசாமி அவர்கள் |

**சித்தாந்தவித்தகர்**

| | |
|---|---|
| ஏழாலை | மு.ஞானப்பிரகாசம் அவர்கள் |
| இளவாலை | மு.வயிரவப்பிள்ளை அவர்கள் |
| கொழும்பு | சிவம் கருணாலய பாண்டியனார். அவர்கள் |
| கொக்குவில் | ஆ. சபாரத்தினம் அவர்கள் |

**சைவப்புலவர்மணி**

| | |
|---|---|
| கொக்குவில் | த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் |
| இளவாலை | வ. செல்லையா அவர்கள் |
| மட்டக்களப்பு | இ. கிருஷ்ணபிள்ளை அவர்கள் |
| மட்டக்களப்பு | வ. சித்திவிநாயகம் அவர்கள் |
| சிறுப்பிட்டி | இ. செல்லத்துரை அவர்கள் |

**சித்தாந்தசிகாமணி**

| | |
|---|---|
| மட்டக்களப்பு | -கா. அருணாசல தேசிகமணி அவர்கள் |

**சைவப்புரவலர்**

| | |
|---|---|
| யாழ்நகர் | - இ. வைத்திலிங்கம் (எஞ்சினியர்) அவர்கள் |
| இளவாலை | - க. வேலுப்பிள்ளை அவர்கள் |
| மட்டக்களப்பு | - பி.றி. அரசன் அவர்கள் |
| வேலணை | - எஸ். அருணகிரி அவர்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க அமைப்புவிதிகள்

பெயர் : அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்

விலாசம் : 153 கே.கே.எஸ் வீதி, கொக்குவில்

பதிவு இல : HA/4/J/25 - 30.09.1960

ஆரம்பம் : 1960.09.30 (சார்வரிவருடம் புரட்டாதி 15 வெள்ளி) விஜயதசமிநாள்

எல்லைப் பிரதேசம் : சைவத்தமிழர் வாழும் நாடுகள் எல்லாம்

நோக்கம் :

i) சைவப்புலவர் வகுப்புகள், சைவப்புலவர் தேர்வுகள் நடத்துதல்

ii) சைவசித்தாந்தம், சைவத்திருமுறை, சைவச் சான்றோர். வரலாறு சார்ந்த சஞ்சிகைகள் நூல்கள் வெளியிடல்

iii) சிவதீட்சை, சைவவாழ்வியல் நடைமுறைகளை வழிப்படுத்துதல்

iv) சைவச் சான்றோர்களுக்கு, சைவபூஷணம், சித்தாந்த வித்தகர், சைவப்புரவலர் பட்டங்கள் வழங்கிக் கௌரவித்தல்.

v) திருமுறைப்பண்ணிசை வகுப்புக்கள் நடத்துதல்.

vi) சைவசமய நாடகம், நடனம், ஓவியம், சொற்பொழிவு, புராணபடனம், திருமுறைப் பண்ணிசை, கதாப்பிரசங்கம் முதலான போட்டிகளை நடாத்திப் பரிசு வழங்குதல் மூலம் சைவக்கலைகளை வளர்த்தல்.

vii) சைவமகா நாடுகள், பட்டமளிப்பு விழாக்கள் நடத்தல்

viii) சைவ அறிஞர்களை உருவாக்குதல், ஆதரித்தல்

ix) தல யாத்திரைகளை மேற்கொள்ளுதல்

x) சைவப்புலவர்களுக்கு வேலைவாய்ப்புத் தேடிக் கொடுத்தல்

செயற்குழு : தலைவர் ஒருவர், உபதலைவர்கள் இருவர் செயலாளர் ஒருவர், உபசெயலாளர் ஒருவர், பொருளாளர் ஒருவர், தேர்வுச் செயலாளர் ஒருவர், தேர்வு உப செயலாளர் ஒருவர், சைவப்பிரசாரகர் ஒருவர், போஷகர்கள் சங்கவளர்ச்சிக்கு அரும் பாடுபட்ட பிரமுகர்கள் மூவர் அல்லது அதற்குமேல்.

வருடாந்தப் பொதுக்கூட்டம் : இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சித்திரை மாதத்தில் நடைபெறும். இதில் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படுவர்.

செயற்குழுக் கூட்டம் : இருமாதங்களுக்கு ஒருமுறை செயற்குழுக்கூட்டம் நடைபெறும். இதில் அங்கீகரிக்கப்படும். தீர்மானங்களே செயற்படுத்தப்படும். பெரும்பான்மை வாக்குகள் மூலம் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.

சைவமகாநாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பட்டமளிப்பும் | : | ஆண்டு தோறும் சித்திரை மாதத்தில் சைவமாநாடும், பட்டமளிப்பும், பரிசளிப்பும் நடைபெறும். |
| அங்கத்தவர் | : | சைவப்புலவர் பட்டம் பெற்றவர்கள் மட்டுமே அங்கத்தவர்களாகச் சேர்த்துக்கொள்ளப் படுவர். |
| சந்தா | : | வருடாந்தம் 100ரூபா ஆயுட்கால அங்கத்தவர்கள் 500 ரூபா |
| நிதி | : | அங்கத்தவர் சந்தா, பரீட்சைக் கட்டணங்கள் மற்றும் விழாக்கள் நடத்தப்படும்போது பெறப்படும் நன்கொடைகள். |
| வங்கிக் கணக்கு | : | இலங்கை வங்கி யாழ் கிளைக் கணக்கில் பொருளாளருடன் தலைவர், அல்லது செயலாளர் ஒப்பமிட்டுக் கணக்கை (சேமிப்பு) நடத்துவர். |

## சைவப்புலவர் வகுப்பு

இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் தேர்வுகளுக்குத் தோற்றவுள்ளோர்க்கு உதவும் வகையில் ஆண்டு தோறும் ஆவணி மாதம் முதல் சித்திரை மாதம் வரை சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் சைவப்புலவர் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

எவ்வித நயமும் கருதாமல் "ஞான தானம்" என்ற வகையில் இலவசமாகவே கற்பிக்கப்படுகின்றது. அத்துடன் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்கு அரிதான நூல்களும் கொடுக்கப்படுகின்றது.

இவ்வகுப்புக்கள் பரீட்சையை நோக்கமாகக் கொண்டனவாயினும் சைவப்புலவர் ஆசார அனுட்டான வாழ்வியல் பண்புகளை நடைமுறைப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டன.

திருமுறையோதல் சிவசின்னம் தரித்தல், சமய தீட்சை பெறல் அனுட்டானம் பார்த்தல், சமய சொற்பொழிவாற்றல் ஆய்வுக்கட்டுரை எழுதுதல் முதலான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

சைவப்புலவராக வருபவர் ஒவ்வொருவரையும் சைவ வாழ்வு வாழ்பவராயும் சைவசமயப்புலமைமிக்கவராகவும் மலரவைப்பதே இவ்வகுப்பின் இலட்சியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் சைவப்புலவர் தேர்வுகள் விதிகளும் பாடவிதானமும்

## அ. தேர்வு விதிகள்

**01. இடமும் காலமும்**

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் தேர்வுகள் வருடந்தோறும் ஏப்ரல் மாதத்தில் வரும் 3ஆம் வாரத்தில் வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் தேவை ஏற்படின் வெளிநாட்டிலும் நடைபெறும். போதிய விண்ணப்பங்கள் இல்லாத தேர்வு நிலையங்கள் மாற்றியமைக்கப்படும்.

**02. விண்ணப்பங்கள்**

தேர்வுக்குத்தோற்ற விரும்புவோர் வருடந்தோறும் நவம்பர் மாதம் 30ஆந் திகதிக்குப் பிந்தாமல் உரிய படிவத்தில் தலைவர், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம், 153, கே.கே.எஸ். வீதி, கொக்குவில். என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவத்தினையும் பாடவிதானத்தையும் மேற்படி விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**03. தேர்வுக் கட்டணம்**

இளஞ்சைவப்புலவர் அல்லது சைவப்புலவர் தேர்வுக்கு ரூபா 500 தேர்வுக் கட்டணப் பணமாகும். தேர்வுக் கட்டணப் பணம் காசுக்கட்டளை (M.O) அல்லது அஞ்சற் கட்டளை (P.O) ஆகத் தேர்வு விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும். கட்டளைகள் யாவும் கொக்குவில் தபாற்கந்தோரில் மாற்றும் வகையில் குறிக்கப்படவேண்டும்.

**குறிப்பு:-** விண்ணப்பப்படிவத்தினையும் கட்டணத்தையும் நேரிலும் சமர்ப்பிக்கலாம்.

**04. பிந்திய விண்ணப்பங்கள்**

பிந்திய விண்ணப்பங்கள் வருடந்தோறும் ஜனவரி 31 ஆம் திகதி வரையும் ஏற்கப்படும். பிந்திய விண்ணப்பங்களுக்கு அவ்வத்தேர்வுக்குரிய கட்டணப் பணத்தோடு ரூபா 50/= மேலதிகமாகக் கொடுக்கப்படவேண்டும்.

**05. தேர்வினின்றும் விலகுதல்**

தேர்வுக்கு விண்ணப்பம் அனுப்பிய பின் ஏற்புடைக் காரணம் பற்றி அவ்வருடத் தேர்வுக்குத் தோற்றமுடியாதவர் தேர்வுத் தினத்திற்கு இரு கிழமைக்கு முன் எழுதி விண்ணப்பித்தால் கட்டணமின்றி அடுத்துவரும் தேர்வுக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர். நோய்காரணமாயின் வைத்திய அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வுரிமை ஒரு முறைக்குமேல் தொடர்ந்து வழங்கப்படமாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**06. தகுதி (தேர்வு எழுதும் முன் சமயத் தீட்சை பெற்றிருத்தல் வேண்டும்)**

(அ) இளஞ்சைவப்புலவர் தேர்வுக்குத் தோற்றுவோர் பின்வரும் தகுதிகளில் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

- சைவபரிபாலன சபை சைவசித்தாந்த பிரவேச, பால பண்டிதர் பரீட்சையில் சித்தி
- ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அல்லது தேசிய கல்வியியற் கல்லூரி இறுதிப் பரீட்சையில் சித்தி
- கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை (A/L) (இந்துசமயம்/ சைவசமயம் உட்பட) சித்தி
- சைவசமய அறிவும் அனுட்டானங்களும் உடைய 40 வயதுக்கு மேற்பட்டோர்.

(ஆ) சைவப்புலவர் தேர்வுக்குத் தோற்றுவோர் கீழ்வரும் தகுதிகளில் ஒன்றினைப் பெற்றிருக்க வேண்டும்.

- இளஞ்சைவப்புலவர் தேர்வு
- சித்தாந்த பண்டிதர் தேர்வு (சைவபரிபாலன சபை)
- பாலபண்டிதர், பண்டிதர் தேர்வு (ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம்)
- பல்கலைக்கழகப்பட்ட இறுதித் தேர்வு

**07. பாடங்களும் சித்தியும்**

தேர்வுகள் இளஞ்சைவப்புலவர் தேர்வு, சைவப்புலவர் தேர்வு என இருவகைப்படும். ஒவ்வொரு தேர்வுக்கும் இலக்கணம், இலக்கியம், சாத்திரம், வரலாறு, உரைநடை என 5 பாடங்களுள் ஒவ்வொரு பாடவினாப் பத்திரங்களுக்கும் மதிப்பெண் 100

5 பாடங்களிலும் தனித்தனி 35/-க்குக் குறையாமல் மதிப் பெண் பெற்று மொத்தத்தில் 175-249 வரை பெறுவோர் மூன்றாம் வகுப்பிலும், 250-374வரை பெறுவோர் இரண்டாம் வகுப்பிலும் 375க்கு மேற் பெறுவோர் முதலாம் வகுப்பிலும் சித்தி பெற்றவராகக் கருதப்படுவர் எக்காரணங்கொண்டும் நூனசித்தி வழங்கப்படமாட்டாது.

**08. தேர்வுப் பெறுபேறுகள்**

வருடந்தோறும் யூலை மாதம் முடிவதற்குள் பத்திரிகைகளில் வெளியிடுவதோடு தோற்றியோருக்கும் அறிவிக்கப்படும்.

**09. சான்றிதழ் பத்திரமும் பட்டமும்**

தேர்வுப் பெறுபேறுகள் வெளியானபின் நேரடுத்துவரும் அகில இலங்கை சைவப்புலவர் சங்க வருடாந்த மகாநாட்டில் வழங்கப்படும். சைவப் புலவர் பட்டத்திற்குத் தரப்படும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்க வேண்டும்.

**10. பரிசில்கள்**

இரண்டு வகைத் தேர்வுகளிலும் முதலாம் பிரிவில் முதலாம், இரண்டாம், மூன்றாம் ஆளாகச் சித்திபெறுவோருக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்.

**குறிப்பு:** கடந்தகால மாதிரி வினாத்தாள்களையும் வேண்டிய சில நூல்களையும் பெற விரும்புவோர் தலைவருடன் தொடர்பு கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆ. பாடவிதானம்

## 01. இளஞ் சைவப்புலவர் தேர்வு

### i) இலக்கணம்:

1. நன்னூற் காண்டிகை (நாவலர்)
2. யாப்பருங்கலக்காரிகை
3. தண்டியலங்காரம் (பொதுவியல் பொருளியலில் மட்டும்)

### ii) இலக்கியம்

1. திருமுருகாற்றுப்படை
2. 9 ஆந் திருமுறை முழுவதும்
3. கந்தபுராணம், தட்சகாண்டம் முழுவதும்
4. திருக்குறள் - அறத்துப்பால் முழுவதும்
5. சுந்தரர் தேவாரம் முழுவதும்

### iii) சாத்திரம்

1. திருவுந்தியார்
2. திருக்களிற்றுப்படியார்
3. உண்மைநெறி விளக்கம்
4. திருவருட்பயன்
5. கொடிக்கவி
6. வினாவெண்பா

### iv) உரை நடை

1. சமயக்கட்டுரை (பண்டிதமணி திரு.சி. கணபதிப்பிள்ளை)
2. பெரியபுராண வசனம் (ஆறுமுகநாவலர்)
3. ஆறுமுகநாவலர் சரித்திரம்
4. சைவக்கிரியை விளக்கம் (திரு. சு. சிவபாதசுந்தரம்)
5. சிவாலய தரிசனவிதி (ஆறுமுகநாவலர்)

### v) வரலாறு

இதிகாசங்கள், புராணங்கள், தர்மசாஸ்திரங்கள் ஆகியவற்றில் காணப்படும் மரபுகள், நான்கு புருடார்த்தங்கள், கிரியைகள், திருக்கோயில் அமைப்பு, திரு விழாக்கள், இலங்கையில் சைவசமய வளர்ச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02. சைவப்புலவர் தேர்வு

i) **இலக்கணம்**

1. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியம்)
2. தொல், சொல்லதிகாரம் (சேனாவரையம்)
3. செந்தமிழ் இலக்கணம் i,ii,iii (பண்டிதர் க. நாகலிங்கம்)
4. நன்னூல் விருத்தி

ii) **இலக்கியம்**

1. பெரியபுராணம் (திருநாவுக்கரசர் புராணம் முழுவதும்)
2. திருவாசகம் முழுவதும்
3. சம்பந்தர் தேவாரம் முழுவதும்
4. 10ஆந் திருமுறை முழுவதும்

iii) **சாத்திரம்**

1. சிவஞானபோதச் சிற்றுரை
2. சிவஞானசித்தியார் சுபக்கம்
3. சிவப்பிரகாசம்
4. உண்மை விளக்கம்
5. சங்கற்ப நிராகரணம்

iv) **உரைநடை**

1. இரண்டாம் சைவ வினாவிடை (ஆறுமுகநாவலர்)
2. நான்காம் பாலபாடம் (ஆறுமுகநாவலர்)
3. திருக்குறளின் உட்கிடை சைவசித்தாந்தமே (க. வச்சிரவேலு முதலியார்)
4. சித்தாந்த விளக்கில் சைவக்கிரியைகள் (பண்டிதர் மு. கந்தையா)
5. பெரியபுராண சூசனம். (ஆறுமுகநாவலர் கலாநிதி பண்டிதர் மு. கந்தையா)

v) **வரலாறு**

இலங்கையில் சைவக் கோயில்கள், வேதம், சிவாகமம், இறைவனின் திருவுருவங்கள், கட்டடக்கலை, சிற்பக் கலை, இசைக்கலை, நடனக்கலை, இலங்கையின் சைவ சமயவளர்ச்சி, சைவம் வளர்க்கும் நிறுவனங்கள் (சைவபரிபாலனசபை, சைவவித்தியா விருத்திச் சங்கம், விவேகானந்தசபை, அகில இலங்கைத் திருமுறை மன்றம் சைவப்புலவர் சங்கம் போன்றன)

**மு. திருஞானசம்பந்தபிள்ளை**
தலைவர்
அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்,
153, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.
021 2223458

**சு. செல்லத்துரை**
தேர்வுச் செயலாளர்
16, இரத்னாகர பிளேஸ்,
தெகிவளை, ஸ்ரீலங்கா.
0112 739238



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ சிவமயம்

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

# அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்

**சைவப்புலவர் / இளஞ்சைவப்புலவர் தேர்வு விண்ணப்பப் படிவம்** **இல.**

| | |
|---|---|
| 1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் | திரு. திருமதி. செல்வி |
| 2. அஞ்சல் முகவரி | |
| 3. தகப்பன் / கணவன் பெயர் | |
| 4. சமயம் | |
| 5. தொழில் | |
| 6. வயது :- பிறந்த ஆண்டு மாதம் திகதி | |
| 7. தற்போதுள்ள அதிகூடிய கல்வித் தகைமை<br>உதாரணம் : A/L, B.A.<br>(இளஞ்சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர்) | |
| 8. தேர்வுப் பதிவுத்தொகை<br>அனுப்பிய தபாற்கந்தோர் காசுக்கட்டளை இலக்கம்<br>திகதி | |
| 9. சமய தீட்சை பெற்றுள்ளீரா? அப்படியானால்<br>தீட்சாகுருவின் பெயர், முகவரி, தீட்சை பெற்ற<br>இடம், ஆண்டு, மாதம் | |

**மேற்கூறிய விபரங்கள் முழுவதும் உண்மையென உறுதியாய்ச் சொல்கின்றேன்.**

..........................................................................

விண்ணப்பம் செய்பவர் கையொப்பம்

10. சான்றிதழ்

திரு. ........................................................................ அவர்கள் ..........................................

தேர்வுக்கு தோற்றுவதற்கு வேண்டிய தகுதிகள் அனைத்தும் உடையவர் என உறுதியளிக்கின்றேன்.

............................................................ ..........................................................

பதவி உறுதிப்படுத்துபவர் கையொப்பம்

முகவரி : ............................................................ திகதி : ...............................

............................................................

............................................................

* உறுதிப்படுத்துபவர் சைவப்புலவர் சங்க உறுப்பினராய் அல்லது சைவசித்தாந்த பண்டிதராய் அல்லது சைவப்புலவராய் அல்லது சைவப் பாடசாலை அதிபராய் இருத்தல் வேண்டும்.

* அதிகூடிய கல்வித் தகைமைச் சான்றிதழின் பிரதியை இணைக்குக.
இளஞ்சைவப் புலவர் : ரூபா 500, சைவப்புலவர் : ரூபா 500

வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கப் பொன்விழாவில் சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் பட்டம் பெறுவோர்

## சைவப்புலவர்

### 2009

1. திரு. த. சக்திவேல் - பருத்தித்துறை
2. திரு.சி. ரமணராசா - அளவெட்டி
3. செல்வி த. வினோ - சாவகச்சேரி

### 2010

1. திரு. சு. துஷ்யந் - மட்டக்களப்பு
2. திரு. வை. கோகிலன் - ஜேர்மனி
3. திருமதி . ஜோ. விஜயதர்சினி இலண்டன்
4. திருமதி. கோ. சந்திரா - ஜேர்மனி
5. திருமதி. ச. ஜெயலட்சுமி - கொழும்பு
6. செல்வி. ந. பிருந்தா வனிதை - சாவகச்சேரி

## இளஞ்சைவப்புலவர்

### 2009

1. திருமதி. ஞா. சிவானந்த ஜோதி - மட்டக்களப்பு
2. திரு. கோ. சசிபாலன் - யாழ்ப்பாணம்
3. திரு. செ. விஜயகுமார் - யாழ்ப்பாணம்
4. திருமதி. ச. ஜெயலட்சுமி - கொழும்பு
5. செல்வி. இ. சவுந்தரி - நானாட்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

1. திருமதி. சி. சரோஜினிதேவி - திருகோணமலை
2. செல்வி சீ. தங்கரத்தினம் - திருகோணமலை
3. திருமதி. ஜெ. ஸோபனா - வாழைச்சேனை
4. செல்வி. ஞா. ஞானலோகேஸ்வரி - வவுனியா
5. செல்வி. நே. டிஹாசி - வாழைச்சேனை
6. செல்வி. யோ. யோகினி - வாழைச்சேனை
7. செல்வி. இ. ஜீவகலா - வாழைச்சேனை
8. செல்வி. அ. துஷாந்தினி - வாழைச்சேனை
9. செல்வி. இ. ரஜிப்பிரியா - கல்குடா
10. திருமதி. யோ. தவலெட்சுமி - வாழைச்சேனை
11. திரு. ப. பிரசாத் - யாழ்ப்பாணம்
12. செல்வி. கே. விமலா - வாழைச்சேனை
13. செல்வி. ரா. யரனியா - மட்டக்களப்பு
14. செல்வி. சி. நிர்மலசாந்தி - மட்டக்களப்பு
15. திருமதி. கு. சிவகங்கா - கொழும்பு
16. செல்வி. கை. ரஜீதா - தெல்லிப்பழை
17. செல்வி. ப. பிரபா - யாழ்ப்பாணம்
18. செல்வி. இ. ரஞ்சிதா - யாழ்ப்பாணம்

## சைவப்புலவர் தேர்வுக்குத் தகவல் தருவோர்

| | | |
|---|---|---|
| மட்டக்களப்பு | - சைவப்புலவர் சா. தில்லைநாதன் | : 065 - 2223052 |
| கண்டி | - சைவப்புலவர் சு. தேவமனோகரன் | : 077 - 6936597 |
| கொழும்பு | - சைவப்புலவர் சு. செல்லத்துரை | : 011 - 2739238 |
| யாழ்ப்பாணம் | - சைவப்புலவர் மு.தி. சம்பந்தபிள்ளை | : 021 - 2223458 |
| இலண்டன் | - செல்லத்துரை நாவரசன் | : 0044. 7956497291 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பில் நடைபெற்ற
## பொன்விழாச் சைவக்கலைப் போட்டிகளில் பரிசு பெறுவோர்

**பேச்சு**

1. பெரியண்ணன் எழில்வாணி - புனித அந்தோனியார் மகளிர் ம.வி. கொழும்பு -3
2. இன்பராஜ் லக்ஷனி - சைவமங்கையர் ம.வித். கொழும்பு - 6
3. செல்வநாயகம் செல்வநிதி - இந்துக்கல்லூரி, இரத்மலானை

**பஞ்சபுராணம்**

1. சுதாகரன் நாராயணி - சைவமங்கையர் ம.வி. கொழும்பு - 6
2. கணேசன் டிலூஜன் - இந்துக்கல்லூரி, பம்பலப்பிட்டி
3. ஜயராஜன் அஜந்தி - சைவமங்கையர் ம.வி. கொழும்பு - 6

**கதாப்பிரசங்கம்**

1. ரமேஷ் சுலக்ஷனி - இந்துக்கல்லூரி, இரத்மலானை.
2. சுகுமார் கார்த்தீபன் - இந்துக்கல்லூரி, முகத்துவாரம்

**சைவசமய விநாடிவினா**

1. சேனாதிராஜா கோகிலப்பிரியா - சைவ மங்கையர் ம.வி. கொழும்பு - 6
2. பாலகிருஷ்ணன் சதீஸ்குமார் - இந்துக்கல்லூரி, இரத்மலானை
3. ஜெயசீலன் ப்ரியதர்சினி - புனித அந்தோனியார் மகளிர் ம.வி. கொழும்பு - 3

**புராணபடனம்**

1. பாலகிருஷ்ணன் சதீஸ்குமார், இரத்தினசாமி தேவரட்ணம் - இந்துக்கல்லூரி, இரத்மலானை.
2. தர்மபாலன் குஞ்சரன், தர்மபாலன் சௌமியன் - இந்துக்கல்லூரி, பம்பலப்பிட்டி.

**அபிநய நடனம்**

1. சச்சிதானந்தன் கீர்த்தனா, சுதாகரன் நாராயணி - சைவமங்கையர் ம.வி. கொழும்பு -6
2. கணேஸ் சரண்யா, தங்க வேலு சுபாகரி - புனித அந்தோனியார் மகளிர் ம.வி. கொழும்பு- 03

**இசைநாடகம்**

1. தெய்வேந்திரன் லவன்ஜா, இரவிச்சந்திரன் டிலக்ஷன், இராசசிங்கம் பிரபாத் அர்ஜீன், சத்தியமூர்த்தி தனுஷன் - இந்துக்கல்லூரி, இரத்மலானை
2. ஞானசேகரன் தனுசியா, பரமேஸ்வரன் அகானா, தனுஷிகா சித்திரசேனன், லோகநாதன் சுரவிணா - சைவ மங்கையர் மகாவித்தியாலயம் கொழும்பு- 06.

பெருமையும் சிறுமையும் தான்தா வருமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழா நிகழ்ச்சி நிரல்

உ
சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

## அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்

# பொன்விழாச் சைவமாநாடு

### காலம்

விகிர்தி வருடம் புரட்டாதி மாதம்
17ஆம் நாள் 2010-10-03
ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி
தொடக்கம் இரவு 7.00 மணிவரை

### இடம்

கொழும்புத் தமிழ்ச்சங்கம் சங்கரப்பிள்ளை மண்டபம்

### தலைவர்

சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை
அவர்கள்
(சங்கத் தலைவர்)

### திருமுன்னிலை

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
23 ஆவது குருமகா சந்நிதானம்
**சீர்வளர் சீர் சிவப்பிரகாச பரமாசாரிய
சுவாமிகள்**

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமகா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்தபரமாசாரிய
சுவாமிகள்**

*சைவ நன்மக்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.*

**விழாக் குழுவினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை 9.00 மணி

**சைவப்புலவர், வித்துவான் வ. செல்லையா அரங்கு**

- *மங்கல விளக்கேற்றல்*

  திரு. த. முத்துக்குமாரசுவாமி அவர்கள்

  (அதிபர் – பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி)

  பசுப்பாதுகாவலன் கு. கங்கைவேணியன் அவர்கள்

  திரு. எஸ். வின்சேந்திரராஜன் அவர்கள் (தொழிலதிபர்)

  சமூகப்புரவலர் மா.சுப்பிரமணியம் அவர்கள்

  திரு.சு.பொ. நடராசா அவர்கள்

  (தொழிலதிபர் அண்ணா தொழிலகம்)
- *கொடியேற்றல் :*
- *கொடிக்கவி பாடுதல் :*

  திருமதி. ஹம்சானந்தி தர்மபாலன் அவர்கள்
- *திருமறை ஓதல்:*

  சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக்குருக்கள் அவர்கள்

  (தலைவர், இந்து குருமார் அமைப்பு)
- *திருமுறை ஓதல்:*

  திருவாவடுதுறை ஆதீனப்பன்னிரு திருமுறைப் பயிற்சி மைய மாணவர்கள்
- *வரவேற்புரை :*

  சைவப்புலவர் ஹேமலோஜினி குமரன்

  (உதவிப்பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்)
- *அருளாசியுரை :*

  குருமகா சந்நிதானங்கள்

- *திருநீற்றுக்காப்பு, நடராசர் வழிபாட்டுப்படம் வழங்கல்*
- *தலைமையுரை :*

  சங்கத் தலைவர்
- *வாழ்த்துரைகள் :*

  திரு. டி. எம். சுவாமிநாதன் அவர்கள்

  (அறங்காவலர், பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்)
- *தொடக்கவுரை :*

  திருமதி. சாந்தி நாவுக்கரசன் அவர்கள்

  (பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்)
- *பட்டமளிப்புப் பேருரை :*

  கலாநிதி. மா. வேதநாதன் அவர்கள்

  (தலைவர் - இந்துநாகரிக பீடம், இணைப்பாளர் சைவ சித்தாந்த முதுகலைமாணிக்கற்கை நெறி, யாழ். பல்கலைக்கழகம்)
- *சைவப்புலவர், இளஞ் சைவப்புலவர் பட்டமளிப்பு :*

  2009, 2010 தேர்வுகளில் சித்திபெற்றவர்களுக்கு
- *சைவநாதம் - பொன்மலர் வெளியீட்டுரை :*

  பேராசிரியர். ப. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள்
- *மலர்ப்பிரதிகள் வழங்கல்*
- *சைவநாதம்-நயப்புரை :*

  திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்கள்

  (செயலாளர், கலை இலக்கியக் களம்)
- *சிறப்புரை :*

  செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள்

  (தலைவர்,தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்)
- *நன்றியுரை :*

  திரு. செல்லையா நவநீதகுமார் அவர்கள்

  (திருவாவடுதுறை ஆதீனச் சமயப்பரப்புநர், விழா இணைப்பாளர்)
- *திருமுறை ஓதல் :*

  சைவப்புலவர் செ.கந்த. சத்தியதாசன்

  (செயலாளர்)

அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை : 3.00 மணி

## சைவப்புலவர்
## அருணாசல தேசிகமணி அரங்கு

- *தலைவர் :*
  சைவப்புலவர் சா. தில்லைநாதன் அவர்கள்
  (சங்க உப. தலைவர்)

திருமுன்னிலை
குருமகா சந்நிதானங்கள்

- *மங்கலவிளக்கேற்றல் :*
  திரு. மு. கதிர்காமநாதன் அவர்கள்
  (செயலாளர், உலக சைவப்பேரவை–இலங்கைக் கிளை)

  விடைக்கொடிச்செல்வர். சின்னத்துரை தனபாலா அவர்கள்

  திரு. இ. சற்குருநாதன் அவர்கள்
- *திருமுறை ஓதல் :*
  சைவப்புலவர் கா. கமலநாதன் அவர்கள்
- *வரவேற்புரை :*
  சைவப்புலவர் சி. நந்தகுமார் அவர்கள்
  (சங்கப் பொருளாளர்)
- *அருளாசியுரைகள் :*
- *தலைமையுரை :*
  விழாத்தலைவர்
- *வாழ்த்துரைகள் :*
  திரு. க. ஜெகதீசன் அவர்கள்
  (உபதலைவர், விவேகானந்தசபை)

  திரு. தி. செந்தில்வேள் அவர்கள்
  (அறங்காவலர், பேலியகொடை,
  பூபாலவிநாயக தேவஸ்தானம்)
- *தொடக்கவுரை :*
  கலாநிதி கு. சோமசுந்தரம் அவர்கள்
  (ஓய்வுநிலைக்கல்விப்பணிப்பாளர்)

- *கருத்தரங்கு : சைவநீதி*
  *கல்வியில் சைவநீதி*
  சைவப்புலவர் சு. தேவமனோகரன் M.A
  (ஆசிரிய ஆலோசகர், கண்டி)

  *கடமையில் சைவநீதி*
  சைவப்புலவர் இ. நித்தியானந்தன் B.A.
  (கலாசார உத்தியோகத்தர், வவுனியா)

  *சமூகப்பணியில் சைவநீதி*
  சைவப்புலவர் சு. துஷ்யந் M.A.
  (விரிவுரையாளர், மட்டக்களப்பு)

  *ஆயைப்பணியில் சைவநீதி*
  சைவப்புலவர் செ. குணபால சிங்கம்
  (வீரகேசரி, உதவி ஆசிரியர்)
- *பொன்விழாச் சைவக்கலைப் போட்டிப் பரிசளிப்பு :*
- *விருதுவழங்கல் : பெறுவோர்*
  சைவசித்தாந்த முதுகலைமாணிப்பட்டம் பெற்ற சைவப்புலவர்கள்
- *கலைவிழா :*
  பொன்விழாச் சைவக்கலை போட்டிகளில் முதற்பரிசு பெற்ற நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| புராணபடனம் | : திருப்பெருவடிவம் |
| பேச்சு | : சைவத்தின் தொன்மையும் செம்மையும் |
| பண்ணிசை | : பஞ்சபுராணம் ஓதல் |
| கதாப்பிரசங்கம் | : மெய்கண்ட தேவநாயனார் |
| அபிநயநடனம் | : அப்பர் சுவாமிகளின் பாடல்களுக்கு அபிநயம் |
| இசை நாடகம் | : யாருக்குச் சொந்தம் |

- *நிறைவுரை :*
- *நன்றியுரை:*
  சைவப்புலவர் கந்த. சத்தியதாசன் அவர்கள்
  (சங்கச் செயலாளர்)
- *திருமுறை ஓதல் :*
  இளஞ்சைவப்புலவர் திருமதி. சி. ஞானசூரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஐரோப்பிய சிவ நெறிக் கழகம்
# SIVA NERI KAZHAGAM - EUROPE

பதிவு இலக்கம : Uk-6921119

முகவரி : 44, Iphall Road, Ilford, Essex, IG1 2JF,UK

மின்னஞ்சல் : sivaneri@gmail.com தொலைபேசி : 00447529318840

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்

ஐரோப்பாவில் நடாத்தும்

## சைவப்புலவர் பொன்விழா ஆண்டு நிறைவும்

## சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும்

## சிவநெறிச் சான்றிதழ் வழங்கலும்

காலம் : 24.10.2010 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணி

இடம் : Schrebergarten (neben Sportanlage )
Rudolf Herbig weg 15, 41540 Dormagen / Horrem
(02133289000 - 02218303186 - 00447529318840 - 015123895757)

*தலைவர்*

**சிவஸ்ரீ சந்திரசேகர ரவீந்திரநாதக் குருக்கள்** அவர்கள்

(Hamm ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பிரதமகுரு)

## நிகழ்ச்சிகள்

மாலை

| | | |
|---|---|---|
| 4.00 | ஆரம்பம் | : விசேட பூசை வழிபாடு |
| 4.15 | மங்கல விளக்கேற்றல் | : திருமதி ரவீந்திரநாதக் குருக்கள் அவர்கள் |
| 4.20 | வரவேற்புரை | : சைவப்புலவர் திரு சி.தங்கரத்தினராசா அவர்கள் |
| 4.25 | தலைமையுரை | : |
| 4.35 | சிறப்புரை | : |
| 4.45 | **பொன்விழா மலர் வெளியீடு** | |
| 4.50 | வெளியீட்டுரை | : தமிழ்மணி .K.K. அருந்தவராசா அவர்கள் |
| 5.20 | முதற் பிரதி பெறல் | : |
| 5.30 | பட்டமளிப்புச் சிறப்புரை | : ஆய்வாளர் திரு.சூ.யோ.பற்றிமாகரன் அவர்கள் |
| 5.45 | பட்டமளிப்பு உரை | : |
| 6.00 | **பட்டமளிப்பு 2010** | **: பட்டம் பெறுவோர்** |
| 6.10 | 1. சைவப்புலவர் - திரு வைரவன் கோகிலன் அவர்கள் | |
| 6.15 | 2. சைவப்புலவர் - திருமதி.சந்திரா கோகிலன் அவர்கள் | |
| 6.20 | **சிவநெறித் தேர்வு (2009) சான்றிதழ் வழங்கலும்** | |
| | **சைவப்புலவர் பொன்விழா ஆண்டு கலைப்போட்டிகளுக்கான பரிசில் வழங்கலும்** | |
| 6.55 | நன்றியுரை | : திருமதி சந்திரா கோகிலன் அவர்கள் |
| 7.00 | விழா நிறைவு. | |

ஆர்வலர்கள் அனைவரையும் விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கைச் சைவப்புலவர்
சங்கப் பொன்விழாவும் சைவ மாநாடும்
சிறப்புற வாழ்த்துகிறோம்...




உற்சாகத்திற்கும்
ஊக்குவிப்புக்கும்
அருந்துங்கள்
அண்ணா கோப்பி



குழந்தைகளுக்கும்
கர்ப்பிணித் தாய்மார்களுக்கும்
சிறந்த போஷாக்கான
உணவு ஜீவாகாரம்



பற்களின் வெண்மைக்கு
அண்ணா பற்பொடி

ESTD 1959

ANNA அண்ணா

# அண்ணா தொழிலகம்
## இணுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப்புலவர் பொன்விழா
சிறப்புற வாழ்த்துகிறோம்...



லிங்கன் கூல்பார்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கயிலாயம்



அப்பர் சுவாமிகள் அருளிச் செய்த

## போற்றித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org